வரு. 76 இல. 29 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

28 பக்கங்கள் 100/-






தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2024 ஜுலை 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

July 28 Sunday, 2024






/ Thinakaran.lk / ThinakaranLK

02
சுகாதார சேவை பற்றிய போதிய அறிவற்றவர்கள் அதனை விமர்சிக்கக்கூடாது



05
எதிர்க்கட்சியினர் சிம்மாசனத்தில் அமர்ந்தால், நாட்டில் மீண்டும் வரிசை யுகம் உருவாகும்!



14
அமெரிக்க ஜனாதிபதி தேர்தலும் இஸ்ரேலிய பிரதமரது விஜயமும்



24
எல்.பி.எல். வெற்றி எதிர்காலத்தின் கையில்



## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக ரணில் நேற்று முதல் முறையாக அறிவிப்பு

**“ஒன்றாக வெல்வோம் – காலியில் நாம்” பொதுக் கூட்டத்தில் நேற்று தெரிவிப்பு**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக நேற்று முதல் முறையாக அறிவித்தார்.

அதற்கான கட்டுப் பணத்தை ஏற்கனவே கட்டியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

காலி மாநகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற “ஒன்றாக வெல்வோம் – காலியில் நாம்” பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். இங்கு 06



## புலிகள் மீதான தடையை 6 மாதங்களுக்கு நீடித்த EU

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்துள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றிய பேரவை பயங்கரவாதத்துக்கு எதிராக போராடுவதற்காக பட்டியலில் இணைக்கப்பட்ட அமைப்புகள் குறித்து மீளாய்வு செய்துள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, மேலும் ஆறு மாதங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டிருக்கும் என தெரிவித்துள்ளது. தடை செய்யப்பட்ட அமைப்புகள் நபர்களின் நிதிகளை முடக்கலாம் என தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, அந்த அமைப்புகள் தனி நபர்களுக்கு நிதி வழங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.



## IGP யின் பணி இடைநிறுத்த உத்தரவை வலுவற்றதாக்கவும்

**சபாநாயகரிடமும் பாராளுமன்றிடமும் பிரதமர் கோரிக்கை**

பிரதமரின் முழுமையான உரை 09 ஆம் பக்கம்

## ரணிலின் பொருளாதார நிலை மாற்றத்துக்கு

# அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒப்புதல்

**"அரச நிதி முகாமைத்துவ சட்டமூலங்கள் எந்தவித எதிர்ப்புமின்றி சகல கட்சிகளாலும் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது"**

அரச நிதி முகாமைத்துவம், பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலங்கள் வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார செயற்பாட்டுக்கு பாராளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் வழங்கிய அங்கீகாரமென பொருளாதார, அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அரச நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார நிலை மாற்றம் ஆகிய இரு சட்டமூலங்களும் கடந்த 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன. மேற்படி சட்டமூலங்கள் மீதான விவாதம் 25 ஆம் திகதி முழு நாள் விவாதமாக சபையில் முன்னெடுக்கப்பட்டதுடன் விவாதத்தின் முடிவில் திருத்தங்களுடன் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதற்கான வாக்கெடுப்பை எந்தக் கட்சியும் கோரவில்லை. இதன் மூலம் 06

## SLPP எம்.பிக்கள் 40க்கு மேற்பட்டோர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியில் உள்ள சுமார் 40க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தாமாகவே முன்வந்துள்ளதாக அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் “ஒன்றாக வெல்வோம் – காலியில் 06

## ஜனாதிபதி தேர்தல் செப்டெம்பர் 21 இல்

**ஓகஸ்ட் 15 இல் வேட்புமனு தாக்கல்**



புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்பு ஓகஸ்ட் 15ஆம் திகதி 06

## அதிக விலைக்கு பாண் விற்றால் ஆபத்து!

**நாடு முழுவதும் தீவிர சோதனை**



பாண் மற்றும் பேக்கரி உற்பத்திகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 450 கிராம் பாணின் விலையும் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், குறைக்கப்பட்ட புதிய விலையில் 06

## தேர்தலுக்கான நிதியை வழங்க திறைசேரி தயார்

**நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு**



ஜனாதிபதி தேர்தலுக்காக தேர்தல் ஆணையாளர் கோரும் பணத்தை வழங்க திறைசேரி தயாரென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த வரவு, செலவு திட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக (10 பில்லியன்) 1,000 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாக 06

## ஜனாதிபதியாக மீண்டும் ரணிலே வர வேண்டும்

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**



ஜனாதிபதியாக மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவே தெரிவு செய்யப்பட வேண்டுமென்று தாம் விரும்புவதாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். 06

## தேசிய சபை கூடியே இறுதி தீர்மானம்

**CWC தலைவர் செந்தில் தெரிவிப்பு**



ஜனாதிபதி தேர்தலில் தங்களது ஆதரவு தொடர்பில் கட்சியின் தேசிய சபை கூடி தீர்மானிக்குமென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## எங்கள் கருத்து...

### அன்று ஒதுங்கிக் கொண்டோர், இன்று பேசுகின்ற வீண் பேச்சு!

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருகின்றது. அரசியல் கட்சிகள் அனைத்தும் உஷாரடைந்து விட்டன. ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குபவர்கள் மாத்திரமன்றி, ஏனைய அனைத்துக் கட்சிகளுமே பரபரப்படைந்திருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்தாத கட்சிகளும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அதிக கரிசனை காண்பிப்பதைக் காண முடிகின்றது. தென்னிலங்கை பெரும்பான்மையின அரசியல் கட்சிகள் மாத்திரமன்றி, சிறுபான்மையின கட்சிகளும் இத்தேர்தல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேச நாடுகளாலும் உன்னிப்பாக நோக்கப்படுகின்றது. இதற்கான காரணம் எமது நாட்டில் இரண்டு வருட காலத்துக்கு முன்னர் நிலவிய பொருளாதார நெருக்கடி ஆகும்.

சுதந்திர இலங்கையின் வரலாற்றை எடுத்துக் கொள்வோமானால், அது போன்றதொரு பொருளாதார வீழ்ச்சியானது முன்னர் ஒருபோதுமே நிலவியதில்லை. முன்னைய ஆட்சியாளர்களின் தவறான 06



07
ஓகஸ்ட் 04ஆம் திகதி ஞாயிறன்று
பித்ரு தோஷம் நீங்கும் ஆடி அமாவாசை தினம்



06
இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 570,000 வலி நிவாரணி மாத்திரை
தமிழகம், இராமநாதபுரத்தில் பறிமுதல்

## நடிகர் தர்ஷன் பெயரில் வீதி

**இறக்குவானையில் நண்பர்கள் ஏற்பாடு**




இறக்குவானையிலுள்ள வீதி ஒன்றுக்கு இலங்கையின் பிரபல நடிகரான தர்ஷன் தர்மராஜின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அண்மையில் மரணமான நடிகர் தர்ஷன் தர்மராஜின் 06



06
த.மு.கூ. அரசியல் குழு ஓகஸ். 2 இல் கூடுகிறது
அதன் பின்னரே இறுதி முடிவு -மனோ

**'மீண்டும் பாடசாலைக்கு செல்வோம்'**



கண்டி, மதீனா மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் 'மீண்டும் பாடசாலைக்கு செல்வோம்' நிகழ்வு நேற்று சனிக்கிழமை கல்லூரியில் அதிபர் ஜனாப் ஏ. ரஹீம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் 1998ஆம் ஆண்டு மாணவர்களினால் பாடசாலை ஆசிரியர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (படம்: மாவத்தகம நிருபர்)

# இலவச சுகாதார சேவையை குற்றம்சாட்டுவது மறைமுகமாக தனியார் சுகாதார சேவையை ஊக்குவிப்பதாகவே அமையும்

## பொறுப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்துகிறார் Dr த. சத்தியமூர்த்தி



**இறுதி யுத்தத்தின்போது மக்களோடு மக்களாக நின்று மக்கள் சேவைசெய்து ஒரு கதாநாயகனாக மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் த. சத்தியமூர்த்தி. யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் பணிப்பாளராகப் பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலை மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் பற்றி தினகரன் வாரமஞ்சரிக்காக மனம் திறந்து பேசுகின்றார்...**

***நீங்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகப் பதவியேற்றது முதல் அங்கு ஏற்பட்ட சாதகமான மாற்றங்கள் எவை? குறிப்பாக நீங்கள் தனிப்பட்ட ரீதியில் உங்கள் வெளிநாட்டுத் தொடர்புகள் மூலம் மேற்கொண்ட முன்னேற்றங்கள் எவை அரசின் மூலம் அங்கு நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திகள் எவை?***

எனக்கான வெளிநாட்டுத் தொடர்புகள் என்பது குறிப்பிடத்தக்களவில் இல்லை. இதுகாலவரையில் அங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் அபிவிருத்திகள் எல்லாமே அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டவைதான். அது முக்கியமானது. 2015 அக்டோபரில் நான் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகப் பதவியேற்றதன் பின்னர், வைத்தியசாலையின் உள்ளகக் கட்டமைப்பில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விபத்து மற்றும் சிகிச்சைப் பிரிவுக்கென ஆறு மாடிக் கட்டடத்தை அரசு கட்டித் தந்திருக்கின்றது. விபத்து சத்திரசிகிச்சைப் பிரிவு. கண் விடுதி. நரப்பு சத்திரசிகிச்சைப் பிரிவுகள் என ஏறத்தாழ 300 படுக்கைகள் கொண்ட கட்டடத்தொகுதியை அரசு கட்டித்தந்தது.

சிங்கப்பூர் பொது வைத்தியசாலை மற்றும் குவைத் இளவரசரின் உதவியுடன் 600 மில்லியனில் புனர்வாழ்வு நிலையமொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

இவை தவிர, வைத்தியசாலையின் உள்ளக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் வைத்தியசாலையில் தாதியர்களுக்கெனக் கட்டப்பட்ட விடுதியும் ஒன்று. நரம்பு சிகிச்சை விடுதி, இருதய சத்திர சிகிச்சை விடுதி என்பன இரண்டும் தற்போது பாவனையில் உள்ளன. தாதியர் பயிற்சிக் கல்லூரியில் புதிய கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டிருக்கின்றது.

***சிகிச்சைகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?***

உட்கட்டமைப்பு மேம்பாடென்பதும் ஒரு வகையில நோயாளர்களின் சிகிச்சைகளை மேம்படுத்துவதற்கானதுதான். ஆனால் அதற்கு நவீன உபகரணங்களும் அவசியம் அந்தவகையில் ஒவ்வொரு வருடமும் பல மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்களை அரசு வழங்கி வருகின்றது. அதில் முக்கியமானது DSA என்ற உபகரணம். சத்திர சிகிச்சைக் கூடம், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு என்பவற்றுக்குத் தேவையான உபகரணங்களை அரசு தொடர்ச்சியாக வழங்கி வந்திருக்கின்றது.

***நவீன வசதிகளுடன் வைத்தியசாலை இற்றைப்படுத்தப்பட அவற்றைக் கையாளும் வகையில் நன்கு பயிற்றப்பட்ட ஆளணியினர் போதியளவில் இருக்கின்றனரா?***

ஆளணியிலும் பாரிய மாற்றம் இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்டிருக்கிறது. நான் பதவியேற்கும்போது 205 ஆகவிருந்த வைத்தியர்களின் எண்ணிக்கை தற்போது 325ஆக அதிகரித்திருக்கின்றது. அதேபோல தாதியர்களின் எண்ணக்கையும் 407 இல் இருந்து. 732ஆக அதிகரித்திருக்கின்றது. நான் வரும்போது 60 வைத்திய நிபுணர்கள் கடமையாற்றினார்கள். தற்போது வைத்தியசாலை மற்றும் மருத்துவ பீடம் இரண்டிலுமாக, சுமார் 115 மருத்துவ நிபுணர்கள் கடமையாற்றுகின்றார்கள். கடந்த எட்டு வருடங்களில், இருதய சத்திர சிகிச்சைப்பிரிவு பிளாஸ்திக் சத்திர சிகிச்சை பிரிவு கஸ்ரோ என்ரோலஜி பிரிவு என்பவும் அவற்றுக்கான விசேட வைத்திய நிபுணர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்

***அப்படியானால் மேலதிக சிகிச்சைக்காக தென்பகுதி வைத்தியசாலைகளுக்கு வடபகுதி நோயாளர்களை பரிந்துரை செய்வதற்கான தேவை தற்போது வெகுவாகக் குறைந்திருக்கின்றது எனக் கொள்ளலாமா?***

நிச்சயமாக. கடந்த வருடத்தில் மாத்திரம் 130 பேருக்கு நாங்கள் இருதய சத்திர சிகிச்சை மேற்கொண்டிருக்கிறோம். அந்தவகையில் இலங்கையில் நாங்கள் 4ஆம் இடத்தில் இருக்கின்றோம். இருதய சத்திரசிகிச்சைகளில் முதலாமிடத்தில் கொழும்பு வைத்தியசாலையும் இரண்டாமிடத்தில் கண்டியும் மூன்றாமிடத்தில கராப்பிட்டிய வைத்தியசாலையும் நான்காமிடத்தில் யாழ்ப்பாண வைத்தியசாலையும் உள்ளன.

கண் சத்திர சிகிச்சைகளை அதிகளவில் செய்வது யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைதான். அந்தவகையில் இலங்கையில் எங்களது வைத்தியசாலைதான் முன்னணியில் இருக்கின்றது. கொழும்பு கண்ணாஸ்பத்திரியை விடவும் அதிகளவிலான சத்திரசிகிச்சைகளைச் செய்கின்றோம். அன்ஜியோகிராம் பரிசோதனைகள் மற்றும் ஸ்டென்டிங் என்பவற்றிலும் இலங்கையில் மூன்றாவதாக சேவை வழங்கும் மருத்துவமனையாக நாங்கள் இருக்கின்றோம். எங்களது அதிநவீன விபத்து சிசிக்சைப் பிரிவையும் குறிப்பிட்டாக வேண்டும். எந்தவொரு விபத்து நேர்ந்தாலும் உடனடியாக சிகிச்சையளிக்கக் கூடிய வகையில் எங்கள் வைத்தியர்கள் குழாம் 24 மணிநேரமும் தயார் நிலையிலேயே இருக்கின்றனர். முன்னர் தலைக் காயங்கள் ஏற்பட்ட நோயாளர்களை; நாங்கள் கொழும்புக்குத்தான் அனுப்புவது வழக்கம். அது மிகவும் ஆபத்தானது, ஏனெனில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்ல குறைந்தது 7, 8 மணிநேரங்கள் தேவை. இடையில் என்ன வேண்டுமானாலும் நடைபெறலாம். ஆனால் இப்போது எவ்விதமான தலைக்காயங்களையும் கையாளும் வல்லமையுடன் எங்களது மருத்துவர்களும் தாதியரும் தயார் நிலையில் இருக்கின்றார்கள். இலங்கையின் 4ஆவது தேசிய வைத்தியசாலையாக ஆவதற்கான எல்லா அடிப்படைத் தகுதிகளையும் எங்கள் வைத்தியசாலை கொண்டிருக்கின்றது.



வெளிநாடுகளில் உள்ள சில அமைப்புகள் எங்களுக்கு சில உபகரணங்களை தந்திருக்கின்றன. உதாரணத்துக்கு லப்ரஸ் கோப். இரண்டுநாட்களுக்கு முன்னரும் லண்டனில் உள்ள நிறுவமொன்று 3 !/2 கோடி ரூபா பெறுமதியான ஸ்கேனிங் இயந்திரத்தை வழங்கியிருந்தது.

**மேலைத்தேய நாடுகளில் காத்திருப்புப் பட்டியல் என்பது நீண்டது. இங்கிலாந்தில் இருந்து. கனடாவில் இருந்தெல்லாம் இங்கு வந்து சிகிச்சை பெற்றுவிட்டுச் செல்கின்றார்கள்**

***பொதுவாகவே நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட மருந்து பொருட் தட்டுப்பாடு மற்றும் மருத்துவர்களின் வெளியேற்றம் என்பனவற்றால் யாழ். போதனா வைத்தியசாலையும் பாதிக்கப்பட்டதா, அவ்வாறாயின் அப்பாதிப்புகள் எவை?***

மருத்துவ நிபுணர்கள் சிலர் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். ஆனால் அது எங்களை கடுமையாகப் பாதிக்கவில்லை. மருத்துவர்களைப் போலவே சில தாதியர்களும் வெளியேறியிருக்கின்றார்கள். ஆனால் எங்களை அதிகளவில் பாதித்தது மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடுதான். அதிலும் குறிப்பாக சில மருத்துவ உபகரணங்கள் மற்றும் கருவிகளுக்கு ஏற்பட்ட பற்றாக்குறை அல்லது தட்டுப்பாடு எங்களை பாதித்தது. சில சத்திர சிகிச்சைக்கான விசேட உபகரணங்களுக்கே தட்டுப்பாடு நிலவியது. அதனால் சில சத்திரசிகிச்சைகள் பிற்போடப்பட்டன. அதுவொரு சிக்கலைக் கொண்டு வந்தது. ஆனால் அவ்வளவு தட்டுப்பாடுகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் யாழ். போதனா வைத்தியசாலையில்தான் இவ்வருடம் அதிகளவிலான கண் சத்திரசிகிச்சைகள் நிகழ்ந்துள்ளன. மருந்துத் தட்டுப்பாடென்பது இப்போதும் இருக்கின்றது. அமைச்சு எங்களுக்கு விநியோகிக்க வேண்டிய மருந்துப்பொருட்களில் 20 தொடக்கம் 40 விதமான மருந்துப் பொருட்களுக்கு காலத்துக்குக் காலம் பற்றாக்குறை நிலவும். கடந்த காலங்களில் இந்த எண்ணிக்கை 150 ஆகவிருந்தது. இப்போது 20 40 ஆகக் குறைந்து விட்டது. இன்னும் ஒருசில மாதங்களில் அதுவும் நிவர்த்தி செய்யப்பட்டுவிடும்.

***யாழ். போதனா வைத்தியசாலை மீது சிலர் தற்போது முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகளில் ஒன்று சத்திர சிகிச்சைகள் உரிய நேரத்தில செய்யப்படுவதில்லை என்பது. இந்த உபகரணப் பற்றாக்குறையும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாமா?***

மருத்துவ உபகரணங்கள், சில சத்திரசிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் இடுப்பு மற்றும் முழங்கால் மூட்டு அல்லது முள்ளந்தண்டு போன்றவற்றுக்கு மேற்கொள்ளப்படும் சத்திரசிகிச்சைகளுக்கு பொருத்தப்பட சில கருவிகள் தேவைப்படும் குறிப்பாக முழங்கால் சில்லு மாற்று சிசிகிச்சைக்கு தேவையான உபகரணங்களுக்கு பற்றாக்குறை நிலவியது. கடந்த காலங்களில் தான் அந்த நிலைமை நிலவியது. இந்த உபகரணப் பற்றாக்குறையால் சத்திரசிகிச்சைகள் நாங்கள் மேற்கொள்ளாதபோது பொதுமக்கள் தனியார் மருத்துவமனைகளையே நாடுகின்றனர். இனிமேல் அவ்வாறான நிலை ஏற்படாது.

கொரோனா மற்றும் பொருளாதார சரிவு காரணமாக எங்களால் ஒரு சீரான நிர்வாகத்தை மேற்கொள்ள முடியவில்லை. அதற்கு முக்கிய காரணம் அப்போதிருந்த மருந்துத் தட்டுப்பாடு. சிலவேளைகளில்

**இலங்கையின் 4ஆவது தேசிய வைத்தியசாலையாக ஆவதற்கான எல்லா அடிப்படைத் தகுதிகளையும் எங்கள் வைத்தியசாலை கொண்டிருக்கின்றது**

அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் இருந்தநோயாளிகளிடம் சில மருந்துகளை வெளியே வாங்கி வருமாறு சொல்லியிருக்கின்றோம்.

இப்போது அவ்வாறில்லாமல் நாங்களே அவற்றை கொடுக்கின்றோம். ஆனால் அவ்வாறு மருந்துத் தட்டுப்பாடு காரணமாக தனியார் மருத்துவமனைகளை நாடியவர்கள் பெரும் பணத்தை செலவிட்டிருக்கிறார்கள். அதுபெரிய அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கும். அனேகருக்கு அது கட்டுப்படியானதல்ல. இந்த மருந்துத் தட்டுப்பாடும் உபகரணம் இல்லாமையால் சில சத்திரசிகிச்சைகளை எங்களால் மேற்கொள்ள முடியாமல் போனதும் பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியிருக்கும். அதனை மறுப்பதற்கில்லை. ஆனால் இனிமேல் அந்நிலை தொடராது.

தலைக்காயங்களுக்கான சத்திர சிகிச்சைகள் யாவற்றையுமே தற்போது நாங்கள் செய்கின்றோம். அது மாத்திரமல்ல குழந்தைகள் பிறந்த பின்னரான பராமரிப்பு மற்றும் அவற்றுக்கான சத்திரசிகிச்சைகள் எல்லாமே இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுக்காக எவருமே கொழும்புக்குச் செல்வதில்லை.

***இவை பற்றி பெரிதளவில் மக்களுக்கு தெரியவராமைக்கு என்ன காரணம்.?***

ஒரு மூன்றாம்நிலை சுகாதார பராமரிப்பு மருத்துவமனையாக கொழும்பு, கண்டி வைத்தியசாலைகளுக்கு அடுத்ததாக நாங்களும் கராப்பிட்டிய வைத்தியசாலையும் ஒரே மட்டத்தில் இருக்கின்றோம். விசேட சேவைகளை வழங்கும்போது அது பொது மக்களுக்குத் தெரியவருவதில்லை. உதாரணமாக 520 கிராம் எடையுடன் பிறந்த குழந்தையை 72 நாட்கள் வைத்திருந்து உரிய சிகிச்சைகள் வழங்கி பராமரித்து சுகதேகியாக அக்குழந்தையை நாங்கள் ஆக்கியிருக்கின்றோம். அது ஒரு சாதனைதான், ஆனால் நாங்கள் அதனை பிரபலப்படுத்த விரும்பவில்லை. ஏனென்றால் அது அந்த தாய்க்கும் குழந்தைக்கும் பல வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எண்ணி மருத்துவ ஒழுக்கத்துக்கு அமைய செயற்படுகின்றோம். மாறாக அது வெளியேதெரிய வரும்போது அந்த குழந்தையை 500 கிராம் பிள்ளை என்றே பிற்காலத்தில் அழைக்கத் தொடங்கி விடுவர், தற்போதைய சமூக ஊடகங்களின் செயற்பாடு அவ்வாறுதான் உள்ளது.

உண்மையில் எங்கள் பலவீனம் எங்கள் அபிவிருத்தி செயற்பாடுகள், சாதனைகள் குறித்து ஊடகங்களுக்கு நாங்கள் இற்றைப்படுத்துவதில்லை என்பதுதான்

இலங்கையின் முதலாவது நீரிழிவு நிலையம் எங்கள் மருத்துவமனையில்தான் அமைக்கப்பட்டது.

***அப்படியானால் உண்மையில் எதற்கும் காத்திருக்கத் தயாரில்லாத நோயாளிகளின் மனப்பாங்குதான் இங்கு பிரச்சினைக்குரியது எனக்கூறலாமா?***

உண்மைதான் மக்களின் எண்ணப்பாங்கில் மாற்றம் வரவேண்டியதுதான் அவசியமானது. ஹேர்னியா என்றாலும் உடனடியாக சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்று நினைக்கின்றனர். சிறிய கட்டியானாலும் உடனே அப்புறப்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றனர். காத்திருப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. சத்திரசிகிச்சையென்பது சிக்கலானது. அதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

மேலைத்தேய நாடுகளில் காத்திருப்புப் பட்டியல் என்பது நீண்டது. இங்கிலாந்தில் இருந்து. கனடாவில் இருந்தெல்லாம் இங்கு வந்து சிகிச்சை செய்துவிட்டுச் செல்கின்றார்கள். குறிப்பாக அரச மருத்துவமனைகளில். காரணம் அங்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டும் என்பதால். சத்திரசிகிச்சை எப்போது மேற்கொள்ளப் பட வேண்டும் என்பதை நாங்கள் சரியாகக் கணித்துத்தான் அதற்கு நாள் குறிக்கின்றோம். வெளிநாடுகளில் ஏதாவதொரு மருத்துவ அவசரம் என்றால் அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவுக்குத்தான் செல்லலாம். சாதாரண ஒரு மருத்துவரை அவர்கள் சந்திக்க வேண்டும் என்றால் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

***அவ்வாறானால் எங்களது பொருளாதார நிலைமைதான் இன்னமும் திறம்பட மருத்துவசேவையை வழங்குவதில் தடையாக உள்ளது எனலாமா?***

நிச்சயமாக. இங்கு சுகாதார சேவையில் மருத்துவர்களுக்கு அடுத்தபடியாக உள்ளவர்களுக்கான சம்பளம் ஒப்பீட்டளவில் மிகக் குறைவானதாகவே இருக்கின்றது. எனவே அவர்கள் ஈடுபாட்டுடன் சேவை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. வாழ்வில் தினமும் போராடும் ஒரு தரப்பினரை வைத்து நாங்கள் பணி செய்ய வேண்டும். இக்காலத்தில் புதிதாக ஆளணியினர் உள்வாங்கப்படவில்லை. கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காலத்தில் வீட்டில் இருந்தபடியே படித்தனர், அலுவலகப் பணிகளைச் செய்தனர். ஆனால் சுகாதார சேவைகளை அவ்வாறு செய்ய முடியாதே. சூம் செயலியில் சுகாதாரத்துறையினர் இயங்கவியலாது. எனவே சுகாதாரத் துறையை ஏனைய எந்தத் துறையுடனும் ஒப்பிடமுடியாது. இதில் அவலம் என்னவென்றால் சுகாதாரத்துறையில் இந்தக் குறைபாடுகள் எல்லாம் தோல்விகளாகச் சித்தரிக்கப்படுகின்றன. மருத்துவர்கள் நாட்டை விட்டுச் சென்றது, மருத்துவர்கள் தவிர்ந்த ஏனைய ஆளணியினருக்கான போதிய வருமானமின்மை, ஆட்சேர்ப்புகள் நடைபெறாமையென்பன எல்லாமே மருத்துவசேவை திறம்பட இயங்க முடியாமைக்கான மறைமுகக் காரணங்கள்.

சமூக ஊடகங்கள் இந்த அடிப்படையான பிரச்சினைகள் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். இலங்கை இலவச சுகாதார சேவைகளை வழங்கும் நாடு. தனியார் மருத்துவ சேவை அபிவிருத்தியடைந்தாலும், இலவச சுகாதார சேவைக்கு இடையூறு நிகழ்ந்தால் அது ஆபத்தானது. திடீரென ஓரிரவில் எல்லாவற்றையும் மாற்ற இயலாது. இங்கு பொருளாதாரம் மேம்பட்டாலே சுகாதார சேவை பெருமளவு முன்னேற்றம் கண்டுவிடும். எல்லாவற்றுக்கும் அடிப்படை பொருளாதாரம். ஆனால் ஒப்பீட்டளவில் எங்கள் சுகாதார சேவை நல்ல நிலையிலேயே இருக்கின்றது. எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் ஆண்களுக்கு 77 ஆகவும் பெண்களுக்கு அது 80 ஆகவும் இருக்கின்றது. தென்னாசிய நாடுகளில் அது முதலாவதாக இருக்கின்றது. தாயிறப்பு, பிள்ளைகளின் இறப்பு வீதம் என்பன குறைவாக உள்ளன. ஆனால் எங்கள் முறைமை இற்றைவரைக்கும் நன்றாகவே உள்ளது. அதனை எங்கள் அண்டை நாடுகளுடன்தான் ஒப்பிடவேண்டும். பிரித்தானியாவுடனோ கனடாவுடனோ அல்ல. இலவச சுகாதரா சேவையை குற்றம் சாட்டுவது மறைமுகமாக தனியார் சுகாதார சேவையை ஊக்குவிப்பதாகவே அமையும். நேற்று நான் சாவகச்சேரி மருத்துவமனைக்கு சென்றேன். அங்குள்ள மருத்துவர் ஒருவருடன் உரையாடியபோது. அவர் மிகவும் விரக்தியுற்றிருந்தார். பொது மருத்துவ சேவைகளில் இருந்து வெளியேறுமளவுக்கு விரக்தியுற்றிருந்தார். இலவச சுகாதார சேவைகளின் அடிப்படையை அறியாமலே வெறுமனே விமர்சிக்கவோ குற்றம்சாட்டவோ கூடாது. இலவச மருத்துவ சேவையைப் பலப்படுத்திய பின்னரே சிஸ்டம் சேஞ் பற்றிக் கதைக்க வேண்டும். திறமையின்மை பொதுவாக இருக்கின்றது. அது நிவர்த்திக்கப்பட வேண்டும். அர்ப்பணிப்பு இன்னமும் அதிகரிக்க வேண்டும். இலவச சுகாதார முறைமையக் கட்டியெழுப்புவதென்பது அவ்வளவு இலகுவானதல்ல. உதாரணமாக கொழும்பில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வரும் ஒருவருக்கு இடையில் என்ன நோய் ஏற்பட்டாலும் வழியில் குறைந்தது 15 பொது மருத்துவமனைகள் உள்ளன. சிகிச்சைபெற. எனவே அந்த சேவையை வெறுமனே சமூக ஊடகங்களில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதன் மூலம் உடைத்துவிடக்கூடாது.

**கடந்த வருடத்தில் மாத்திரம் 130 பேருக்கு நாங்கள் இருதய சத்திர சிகிச்சை மேற்கொண்டிருக்கிறோம்**

தற்போது யாழ்ப்பாணத்தில் சில சமூக ஊடகங்கள் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதால் நோயாளிகள் மருத்துவத்துறையினரை சந்தேகக் கண் கொண்டுபார்க்கும் மனோநிலை காணப்படுகின்றது. அவ்வாறு சந்தேகத்தோடு வருபவரிடம் மருத்துவரால் தனது சேவையை வழங்க முடியாது. அந்நிலை மருத்துவர்களை மேலும் மனதளவில் விரக்தியடையச்செய்யும். மருத்துவர்கள் பெருமளவில் வெளிநாடு செல்லத் தலைப்பட்டுள்ள இவ்வேளையில். வெளிநாடு களிலும் அவர்களுக்கான வசதிகளும் வாய்ப்புகளும் உள்ள நிலையிலும் மக்களை தவறாக வழிநடத்தக்கூடாது.

***ஆனாலும் மருத்துவத்தை ஒரு சேவையாக நோக்கும் மனப்பாங்கு தற்போது குறைவடைந்துள்ளதா?***

அது எல்லா சேவைகளிலும் இருக்கின்றது. இப்போதும் மருத்துவ சேவையை மிகுந்த அர்ப்பணிப்போடு செய்யும் அனேகர் இருக்கின்றனர். அவ்வாறானவர்கள் இருக்கும்வரை அதன் மகத்துவம் கெடாது.

***யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளிகள் தங்கள் குற்றச்சாட்டுகளை, அதிருப்திகளைப் பதிவதற்கான வசதிகள் உள்ளனவா?***

நிச்சயமாக உள்ளன. அதற்கென ஒரு வட்ஸ் அப் இலக்கமுள்ளது அதுபோலவே. மின்னஞ்சல் ஊடாகவும் தங்கள் முறைப்பாடுகளை நோயாளர்கள் பதியலாம் முறைப்பாடுகள் முறைப்படி விசாரிக்கப்பட்டு அவர்களுக்கு பதிலளிக்கப்படுகின்றது.

வாசுகி சிவகுமார்...

வார இறுதி கேள்வி

# ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சி நிரல் அறிமுகம்; ஒரு வரலாற்று நடவடிக்கை



திருடராய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற ஒரு பாடல் வரி கேட்பதற்கு இனிமையாக இருந்தாலும் நடைமுறையில் இது சாத்தியமாகாது. திருட்டை ஒழிக்க வேண்டுமாயின், கடுமையான சட்டங்கள் வேண்டும். வலுவான சட்டக் கட்டமைப்பு வேண்டும். இங்கே திருடர் என்று சொன்னவுடன் சாதாரணமாக வீடு புகுந்து திருடர்களை விட மக்களின் பணத்தைத் திருடும், வீண்விரயம் செய்யும், ஊழல், மோசடியாளர்களைப் பிடிக்க வேண்டும் என்பது இலங்கை மக்களின் மிக நீண்டகால கோரிக்கையாக இருக்கிறது.

இப்போது திருடர்களைப் பிடிக்கவும் முடியும். சிறையில் அடைக்கவும் முடியும். அதற்கான சட்டக் கட்டமைப்பு வலுப்படுத்தப் பட்டுள்ளது.

"மோசடி, ஊழல் மற்றும் விரயம்" என்பது இலங்கை அரசியல் அரங்கில் மிகவும் பிரபலமான சொற்பிரயோகங்களாக உள்ளன. கடந்த மூன்று தசாப்தங்களாக இந்த நாட்டில் நடைபெற்ற அனைத்து தேசிய தேர்தல்களிலும் ஊழல், மோசடி மற்றும் வீண்விரய ஒழிப்பு என்பது ஒரு முக்கிய அரசியல் கோசமாக இருந்து வந்துள்ளது.

1994 ஜனாதிபதித் தேர்தலின் போது 'அத்த கையோரை காலிமுகத் திடலில் நிறுத்தி தண்டிப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டது முதல் 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவருவது வரை அனைத்துக் கட்சிகளினதும் எதிர்க் கட்சிகளினதும் கோஷங்களில் ஊழலுக்கு எதிரான செயற்பாடே முதன்மை பெற்றிருந்தது என்றால் அது மிகையல்ல. ஊழலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனாதிபதிகள் பலர் பதவிக்கு வந்த போதிலும், ஊழலுக்கு எதிரான வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்படும் வரை காத்திருக்க நேரிட்டது.

2015 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தில் முதல் தடவையாக இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான சட்டம் வலுப்படுத்தப்பட்டது. 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் சட்டம் வலுவிழந்த போதிலும், 2022ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆட்சியை மேம்படுத்தி, மோசடியை புறந்தள்ளி, அரச நிதி மற்றும் கடன் நிலைத்தன்மையை மீண்டும் நிறுவுவதையும் பொருளாதாரத்தை அதன் பிரதான பொறுப்பாக மாற்றுவதையும் தனது பிரதான பொறுப்பாக ஏற்று 21 ஆவது அரசியலமைப்பின் ஊடாக மீண்டும் அதனை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தார்.

அத்தோடு நின்றுவிடாது, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் கீழ், இலங்கை அரசாங்கம் மார்ச் 2023 இல் ஆளுகை கண்டறியும் மதிப்பீட்டிற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைக் கோரியது. இவ்வாறாக, சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்திற்கு நிர்வாக முறையை மேம்படுத்துவதற்கும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் பரிந்துரைகளை வழங்கியிருந்தது. அந்த பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 2023ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க இலஞ்ச ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு பாடுபட்டார்.

அதேசமயம், ஊழலுக்கு எதிரான ஐ.நா சமவாயத்தின் நிதிச் செயற்பாட்டு செயலணியின் தரங்களுக்கு ஏற்ப சொத்துக்களை மீட்பதற்கான பரந்த அதிகாரங்களைக் கொண்டதாக குற்றச் செயல்களினால் கொள்வனவு செய்த சொத்துக்கள் தொடர்பான சட்டவரைபு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பின்னணியில், நிர்வாகத் தீர்ப்பு மதிப்பீட்டின் தொழில்நுட்ப ஆதரவு அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு, ஊழல் ஒழிப்புக்கான சட்ட, நிறுவன மற்றும் மூலோபாய கட்டமைப்பிற்கு ஏற்ப 'ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சி நிரலை' அமுல்படுத்தும் நோக்குடன் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

உண்மையில், இது இந்த நாட்டில் ஊழலுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒரு வரலாற்று முக்கியமான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. ஊழலை ஒழிப்பதற்கான வலுவான பொறிமுறையை அது கொண்டுள்ளது. அதில் முதலாவது, 2023இல் இயற்றப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தின் முழு அமுலாக்கத்தையும் உள்ளடக்கியது. ஒரு செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், செயல் திட்டத்தின் முன்னேற்றத்தை ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் மதிப்பாய்வு செய்வதற்கும், செயல் திட்டத்திற்கு போதுமான பட்ஜெட் ஒதுக்கீடுகளை வழங்குவதற்கும் தேவையான ஏற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2025 – 2029 காலக்கெடுவுக்கான தெளிவான தேசிய ஊழல் எதிர்ப்பு திட்டத்தை உருவாக்குவதும் இந்த நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகத்தின் சட்டபூர்வ அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தை திருத்துதல் என்பனவும் இந்த தேசிய நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன், கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய சரியான பொறுப்புகளை நிறைவேற்றத் தவறிய பிரதம கணக்கியல் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளிடம் இருந்து அது தொடர்பான மேலதிக கட்டணத்தை வசூலிக்க கணக்காய்வாளர் நாயகத்தின் அங்கீகாரத்தையும் ஜனாதிபதி இந்தத் தேசிய நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கியுள்ளார்.

பயனுள்ள மற்றும் வெளிப்படையான சொத்து வெளிப்படுத்தல் மற்றும் பொறுப்பு இணக்க அமைப்பை நிறுவவும் இதில் முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி, சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட இணையதளத்தில் இந்த சொத்து அறிவிப்புகளை வெளியிட தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இந்த திட்டத்தை அரை ஆண்டு மற்றும் ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

சில 'கனவு நிதியமைச்சர்கள்' கறுப்புப் பணத்தை தூய்மையாக்கி நாட்டின் தேசிய வளர்ச்சியில் முதலீடு செய்ய சட்டங்களை கொண்டு வருவதாக கூறி வருகின்றனர். குற்றம் மற்றும் பணமோசடி மூலம் சம்பாதித்த சொத்துக்களை மீட்பதற்கான தேசிய மூலோபாயத்தையும் கொள்கைகளையும் உருவாக்க ஜனாதிபதி ரணில் நடவடிக்கை எடுத்திருக்கிறார். இதற்காக, இலஞ்ச ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள புதிய அதிகாரங்களின்படி, முறையான செயற்பாடுகளுக்குத் தேவையான ஆதரவை வழங்குதல், அத்துடன் புதிய விசாரணைகள் மூலம் முறையான வழக்குப்பதிவு மற்றும் தண்டனை வழங்குதல் மற்றும் அரசியல் ரீதியாக வெளிப்படும் நபர்களை அடையாளம் காணுதல் ஆகியவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த தேசிய நிகழ்ச்சி நிரல், ஊழல் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்குகளை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

அரச கொள்வனவில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், ஜனாதிபதி முன்வைத்த 'ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலில்' சர்வதேச தரத்திற்கு அமைவாக அரச பெறுகைச் சட்டத்தை (Public Procurement Law) அமுல்படுத்துவதும், ஒரு பில்லியன் ரூபாய்க்கு அதிகமான அரச கொள்வனவு (பெறுகைகள்) ஒப்பந்தங்களின் தகவல்களை வெளியிடுவதும் அடங்குகிறது.

வரி விலக்கு அளிக்கப்பட்ட மதிப்பீட்டில் அனைத்து விலக்கு அளிக்கப்பட்ட நிறுவனங்களையும் பகிரங்கப்படுத்தவும், முதலீட்டு ஊக்குவிப்பு நிபந்தனை செலவீனம் மற்றும் முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கும், முறையான செயல்முறை அமைக்கப்படும் வரை, மூலோபாய மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் பயிற்சி பெற்ற மற்றும் சுயாதீனமான ஊழியர்களை உருவாக்குவதற்கு அரச நிறுவனங்களைச் சீர்திருத்துவதற்கும் அரசாங்கத்திற்கு வருமானத்தைப் பெற்றுத் தரும் திணைக்களங்களில் குறுகிய கால ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பது போன்ற சாதகமான நடவடிக்கைகளும் இதில் அடங்கும்.



களனி பல்கலைக்கழக பொருளியல் கற்கைகள் பிரிவின்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
சுனந்தா மத்துமபண்டார.

(17 ஆம் பக்கம் தொடர்ச்சி)

இப்பொழுது
திருடர்களைப்
பிடிக்கவும் முடியும்
சிறையில்
அடைக்கவும் முடியும்

திருடர்களைப் பிடித்தல் என்பது பிரபலமான ஒரு தலைப்பாக இருந்தாலும், திருடர்களைப் பிடிக்கும் அளவிற்கு அல்லது அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்கும் அளவிற்கு போதுமான, சக்திமிக்க சட்டக் கட்டமைப்பு இதுவரை நமக்கு இருந்ததில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

இருப்பினும், ரணில் விக்ரமசிங்க அரசாங்கம், இந்த சட்டக் கட்டமைப்பில் இருந்த தடைகளை நீக்கி, ஊழலை இல்லாதொழிக்கும் வகையில் பரந்த அதிகாரங்களைக் கொண்ட அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இதற்காக அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்கும் "ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சி நிரல்" இப்பொழுது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வரும் காலங்களில் சொத்துக்களைப் பகிரங்கப்படுத்தாமல் இருப்பது, நிதி மோசடி, ஊழல் மற்றும் திருடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் வழக்குத் தொடுக்கும் முறைகளை அமுலாக்கல் மற்றும் ஒழுங்கமைத்தல் மூலம் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது கட்டாயமாக்கப்படும்.

பின்னாய்வு: ஜனாதிபதி செயலகம்
ps@presidentsoffice.lk

# போதையற்ற தேர்தல் தொகுதியாக மீண்டும் மாறுமா ஹோமாகமம?

போதையற்ற பிரதேசமாக இருந்த ஹோமாகமம தேர்தல் தொகுதிக்கு கெட்டகாலம் ஆரம்பித்துள்ளது. 13 கிலோ மீட்டர் பரப்பளவில் பிரம்மாண்டமாக நடைபெற்ற 'தர்ம ரஷ்மி', பொசன் நிகழ்வின் சூடு தணிவதற்கு முன்னரே அதற்கு கெட்ட காலம் ஆரம்பித்துள்ளது இலங்கை முழுவதற்குமான லேக்ஹவுஸ் பொசன் ஒளி விளக்கு கூடுகள் போட்டி இடம்பெற்ற அதே மைதானத்தில் முதற்தடவையாக ஹோமாகம தொகுதியில் வெளிநாட்டு மதுபான சாலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது பிடிபன சந்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அவுகன புத்தர் சிலைக்கு சில மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் தர்ம அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரேயொரு பல்கலைக்கழகமாக விளங்கும் பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் அவ்விடத்திலிருந்து சில மீட்டர் தூரத்தில் உள்ளது. அது மாத்திரமன்றி, இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்காக உயிர் தியாகம் செய்த போர்வீரர்களின் உழைப்பு மற்றும் நிதிப் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட இராணுவ விகாரை அல்லது பனாகொட போதிராஜாராம விகாரையும் அதற்கு அருகிலேயே அமைந்துள்ளது.

இன்று, பிடிபன கிராமம் இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு புதிதாக எழுதப்பட்ட அத்தியாயத்தின் தாயகமாக உள்ளது. ஹோமாகம அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன இதன் ஸ்தாபகராக உள்ளார்.

நாட்டில் எந்த ஒரு கிராமத்திலோ அல்லது நகரத்திலோ இவ்வாறான அபிவிருத்தி இடம்பெறவில்லை.

ஆயிரக்கணக்கானவர்களுக்கு தர்ம அறிவை வழங்கும் பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம், ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் வழிபடும் பனாகொட போதிராஜாராம விகாரை, தெற்காசியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி, நாடு முழுவதையும் சேர்ந்த சுமார் 13000 மாணவர்கள் உயர் கல்வி கற்கும் NSBM பசுமை பல்கலைக்கழகம், 4000 பல்கலைக்கழக மாணவர்களுக்கு தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பப் பீடம், அளவீட்டு மற்றும் தரநிலைகள் பணியகம், டெலிகாம் தரவுக் களஞ்சியம், முழு நாட்டு மாணவர்களுக்கும் பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் புத்தகக் களஞ்சியம் ஆகிய இவையனைத்தும் இணைந்து ஒரு கிராமம் நாடாக மாறிய பிடிபனவாகும்.

அங்கு பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி பயிலும் இளைஞர் யுவதிகளைக் கணக்கிட்டால் 35 ஆயிரத்துக்கும் மேலாகும். அவர்களில் பெரும்பாலானோர் நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பிரதேசங்களில் இருந்து பிடிபனைக்கு வந்து தங்கியிருப்பவர்களாகும்.

நாம் அந்த வெளிநாட்டு மதுபான சாலைக்குச் சென்று அங்கிருந்தவரிடம் பேச்சுக் கொடுத்தோம். “இந்த பாரினை நடத்துபவரைக் கொஞ்சம் சந்திக்க முடியுமா?”

“இல்லை, இல்லை. அது முடியாது”

“எமக்கு தொலைபேசி இலக்கம் கிடைக்குமா?”

“எமக்கு அவரின் தொலைபேசி இலக்கத்தை தரமுடியாது. இங்கு போன் இல்லை”





இன்று மாலை இதற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கை ஒன்று நடக்க உள்ளது. அதனால் ஒருவரும் அங்கிருக்கவில்லை.

நாங்கள் செய்த அடுத்த விடயம், இந்த பிடிபனவில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபான சாலைக்கு அருகில் உள்ள நிறுவனங்கள் தொடர்பில் அவதானத்தைச் செலுத்தியதாகும். இந்த மதுபான சாலைக்கு முன்னால் சிறிதுதூரம் ஹோமாகம நோக்கிச் சென்ற போது அங்கு ஹோமாகம டிப்போ உள்ளது. கொடகம திசையில் உள்ள சந்திப்பில் இராணுவ விகாரை உள்ளது. பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் அருகில் உள்ளது. அதற்குச் சற்று தூரத்தில் பிடிபன உத்தரராம விகாரரை உள்ளது.

இதேவேளை, நாம் பிடிபன வெளிநாட்டு மதுபான சாலை தொடர்பில் விடயங்களை அறிந்து கொள்ளச் சென்ற அதே தினத்தின் மாலையில் அதற்கெதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்குத் தலைமை தாங்கியது தற்போது ஹோமாகம மக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கி வரும் கலாநிதி பந்துல குணவர்தனவாகும்.

ஹோமாகம பிடிபன பிரதேசத்தில் வெளிநாட்டு மதுபானசாலை ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் எதிர்ப்பைத் தெரிவித்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் மகா சங்கத்தினர் ஹோமாகம பிடிபன அவுகன சிலைக்கு அருகில் அன்றைய தினம் மாலை சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் மக்களிடம் அமைச்சர் உரையாற்றினார்.

நீண்ட காலமாக ஹோமாகமவை அண்மித்த பகுதியில் வெளி நாட்டு மதுபான சாலைகளை ஆரம்பிக்க எவரும் சந்தர்ப்பம் வழங்காத நிலையில் ஹோமாகம பிரதேச செயலாளர் தன்னிச்சையாக செயற்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வெளிநாட்டு மதுபானசாலையை ஆரம்பிப்பதற்கு இடமளிக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரியப்படுத்தியிருந்த போதிலும் இது தொடர்பில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் இந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஹோமாகம பிடிபன பிரதேசத்தில் தற்போது பல கல்வி நிலையங்கள் மற்றும் பாலி பௌத்த பல்கலைக்கழகம் உட்பட பல பல்கலைக்கழகங்கள் உள்ளதாகவும், தினமும் இலட்சக்கணக்கான மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளுக்காக பிடிபன பிரதேசத்திற்கு வருவதால், மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் இவ்வாறு வெளிநாட்டு மதுபானசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தான் கடும் வருத்தத்தைத் தெரிவிப்பதாகவும் அமைச்சர் இதன்போது மேலும் கூறினார்.

கலாநிதி பந்துல குணவர்தன, மகா சங்கத்தினர் மற்றும் மக்கள் இந்த வெளிநாட்டு மதுபான சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சத்தியாக்கிரக நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பின்னர் நாம் தெரிந்து கொள்ள முயன்றது இந்த புதிய பிடிபன மதுபான சாலைக்கு அருகில் என்ன நிறுவனங்கள் உள்ளன என்பதைப் பற்றியாகும். மீகொட ஆயுர்வேத மருத்துவமனை, பிடிபன கனிஷ்ட வித்தியாலயம், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் (சென்டர் போர் டிபென்ஸ் ரிசேர்ச் என்ட் டெவலப்மென்ட்), அரசாங்கப் பாடநூல் களஞ்சியசாலை, பாதுகாப்பு அமைச்சின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி, அளவீட்டு அலகு தரநிலைகள் மற்றும் சேவைகள் திணைக்களம், NSBM பசுமைப் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழ் உள்ள கல்விப் பீடம் போன்றவற்றை எம்மால் அவதானிக்க முடிந்தது.








இங்கு மிகவும் ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், கடந்த ஜூன் மாதம் இந்தப் புதிய வெளிநாட்டு மதுபான சாலைக்கு எதிரே அமைக்கப்பட்டிருந்ததாகும். அது பொசன் பண்டிகைக்காக நிர்மாணிக்கப்பட்ட அலங்கார அமைப்பாகும். இந்த வருட பொசன் பண்டிகைக்கான தர்ம ரஷ்மி ஹோமாகம பொசன் வலயம் இடம்பெற்றது இந்த வெளிநாட்டு மதுபான சாலை அமைந்துள்ள பிரதேசத்திலாகும். இருபுறமும் வண்ணமயமான கூடுகள் அமைக்கப்பட்டருந்தன. இந்த பொசன் வலயம் பிட்டிபன தம்பே, மீகொட, தியகம, கொடகம, பனாகொட, ஹோமாகமவை போன்ற பிரதேசங்களை உள்ளடக்கியதாக 13 கிலோமீற்றர் வரை பரவியவாறு அமைக்கப்பட்டிருந்தது. ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்ட பொசன் பிரமாண்டமான அன்னதான நிகழ்வு பிடிபனவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிடிபன அறிவை மையமாகக் கொண்ட நகரம் என்று கூறப்படும், இதுபோன்ற இடத்தில் வெளிநாட்டு மதுபானக் கடையை திறப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதன் காரணத்தை தெளிவாக கற்பனை செய்து பார்க்க முடியும்.

இந்த பௌத்த பூமியில் மதுபான சாலைகளைத் திறப்பதை நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.

– ஹோமாகம பௌத்தப் பாதுகாப்பு சபையின் தலைவர் மாதோவிட்ட வஜிரபுத்தி தேரர்

“ஹோமாகம நிதானக் கொள்கை அமைச்சர் காமினி ஜயசூரியவின் காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஹோமாகம என்பது ஒரு பௌத்த நகரமாகும். ஜெயசூரிய அனகாரிக தர்மபாலவின் பேரன் ஆவார். தர்மபால, பதநீர் குடிப்பவனும், மாமிசங்கள் உண்பனும் கோழை என்று அந்தக் காலத்தில் கூறியிருந்தார். பதநீரும் சாராயமும் ஒன்றுதான். அனைத்தும் குடும்பக் கட்டுக்கோப்பை சீர்குலைக்கும் காரணிகளாகும். தற்போது சில காலமாக இருந்த ஹோமாகமவைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் மதுக்கடைகள் முளைத்து வருகின்றன. மீகொட பொருளாதார மத்திய நிலையத்தில் மதுபானசாலை அமைக்க முயன்றனர். ஹோமாகம போன்ற பௌத்த நகரத்தில் மதுபானசாலைகளைத் திறப்பதை அப்பகுதியின் சங்கரத்னாவாகிய நாங்கள் முற்றாக எதிர்க்கிறோம். இந்த வெளிநாட்டு மதுக்கடையை மூடுவதற்கு கலால் திணைக்களம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகிறோம்" என்றார்.

(09 ஆம் பக்கம் தொடர்ச்சி)

எம். எஸ். முஸப்பிர்



இலண்டன் கம்பன் கழகம் நடத்திய முதலாவது கம்பன் விழா அல்பேர்ட்டன் கல்லூரி மண்டபத்தில நடைபெற்றபோது தமிழருவி த.சிவகுமாரனின் நீண்டகால கம்பன் பணிகளுக்காக "இயல்வேந்தர்" விருதினை, கம்பன் கழகம் சார்பாக பொருளாளர் சி.ஞானசேகரம் வழங்கினார்.

## 'மலையகம் இங்கிருந்து எங்கே?' அட்டனில் வெளியீட்டு விழா

மலையக சமூகத்தின் உருவாக்கம் மலையக் தேசியம் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள்.

மலையகத்தின் கல்வி நிலை. சுகாதாரம், வீடமைப்பு, நாட்டார் பாடல்கள் என்று மலையகத்தின் அனைத்து அம்சங்களும் சார்ந்த தொகுப்பான. பீ.மரியதாஸ் எழுதிய. மலையகம் இங்கிருந்து எங்கே? என்ற நூல் வெளியீட்டு விழா இன்று 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அட்டன் சமூக நலன் நிறுவனத்தில் கவிஞர் சு.முரளிதரண் தலைமையில் நடைபெறும். சட்டதரணி ஏ.எஸ்.குமார் முதல் பிரதியை பெற்றுக்கொள்ள,

கொட்டகலை ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் ஜே.சற்குருநாதன் ஆசியுரையையும் பேராசிரியர் தை. தனராஜ், ஜி.போல் அந்தனி, கே. மெய்யநாதன், எம். ஆர். விஜயானந்தன், வீரகேசரி பிரதி ஆசிரியர் சிவலிங்கம் சிவகுமரன் ஆகியோர் நூல் பற்றி



கருத்துரைகளையும் வழங்குகின் றனர். எச்.எச் விக்ரமசிங்க வெளியீட்டுரையும் விரிவுரையாளர் எம். அகிலன் நன்றியுரையும், வழங்க நுலாசிரியர் பீ.மரியதாஸ் ஏற்புரையையும் வழங்குகின்றார்.

கலைஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை சார்பில் மு. நித்தியானந்தன், எச்.எச். விக்ரமசிங்க ஆகியோர் இந்த வரலாற்று ஆவணத்தை வெளியிட்டுள்ளனர்.

“செழுமையான மார்க்சிய ஞானம் கொண்ட மரியதாஸின் எழுத்துகள் மலையக எழுத்தில் தனி முத்திரை பதிப்பவை. தன்னை முன்னிலைப்படுத்தாத மாண்பு அவருடையது. தொடர்ந்த. அயராத, ஆழ்ந்த அவரது வாசிப்பு அவரின் எழுத்திற்குக் கனதி சேர்க்கிறது. அனைத்தையும் வரலாற்றுப் பின் புலத்தில் அணுகும் அவரின் ஆய்வு நோக்கு அவரது கட்டுரைகளுக்கு ஆழத்தைச் சேர்க்கிறது. நடைமுறை அரசியலையும் மலையகத்தின் புதிய அரசியல் தேவைகளையும் எழுச்சிகளையும் தனது மார்க்ஸிய தரிசனத்தில் பரிசீலித்து மரியதாஸ் தந்திருக்கும் இந்த நூல் நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அரசியல். சமூகக் கையேடு.

“மலையகம் இங்கிருந்து எங்கே?” என்று மரியதாஸ் எழுப்பும் கேள்வி நம் சமூகத்தின் கூட்டுக்குரல்.

நிகழ்கால அவலத்திலிருந்து நம் சமூகம் எழுந்து நிமிர்ந்து, ஒளியை நோக்கி நகரும் எழுச்சிசியின் எக்காளம்" பேராசிரியர் மு. நித்தியானந்தன் நூலாசிரியர் பீ.மரியதாஸ் பற்றி இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

எச்.எச். விக்ரமசிங்க







பம்பலப்பிட்டிய அருள் மிகு சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய 2024 ஆடிவேல் விழாவில் பிரம்மஸ்ரீ AGS சுவாமிநாதன் சர்மாவின் 'இசை அர்ச்சனை' குழுவினர் ஜூலை 21ஆம் திகதியன்று வழங்கிய சிறப்பு இசை நிகழ்ச்சியில் “மிருதங்க கலாவித்தகர்” 'செல்வன் சு. அரவிந்தன் சுப்பிரமணியம் சர்மா, “மிருதங்க கலாவித்தகர்” செல்வன் சு. அனந்த நாராயணன் சர்மா, செல்வி வாசுகி சுவாமிநாதன் சர்மா, செல்வி நந்தினி சுவாமிநாதன் சர்மா மற்றும் மிருதங்க வித்துவான் 'பிரம்மஸ்ரீ AGS சுவாமிநாதன் சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# எதிர்க்கட்சியினர் சிம்மாசனத்தில் அமர்ந்தால், நாட்டில் மீண்டும் வரிசை யுகம் உருவாகும்!

## நாட்டுக்காகக் களமிறங்கும் பொதுவேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குவார் –ஐ.தே.க பிரதித் தலைவரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவான் விஜேவர்தன

**நாட்டுக்காகக் களமிறங்கும் பொதுவேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதி–யின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவான் விஜேவர்தன தெரிவித்தார். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து எமக்கு வழங்கிய பிர–த்தியேக செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

**கே: அரசாங்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் இதுவரை நல்ல–தொரு அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது. இதனை நீங்கள் எவ்வாறு கருது–கின்றீர்கள்? நாட்டின் தற்போதைய நிலையை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

பதில்: உண்மையில், இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடியுடன் ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசியல் கட்சிகள் மீது மக்களுக்கிருந்த நம்பிக்கை உடைந்தது. தற்போது ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினால் அது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துள்ளது. நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவித்து, பொருளாதாரத்தை பலப்படுத்தி வரிசை யுகத்தை இல்லாதொழித்த திட்டத்தின் மீது மக்கள் நம்பிக்கை பெற்றனர். இந்த நாட்டுக்காக தன்னால் எதையும் செய்ய முடியும் என்பதை ஜனாதிபதி நிரூபித்துள்ளார். அவரால் மட்டுமே இந்த நாட்டை மீட்க முடியும் என்பதை நிரூபித்ததால் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

**கே: ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிப்பதாக எதி–ர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. இதில் உண்மை உள்ளதா?**

பதில்: அரசியலமைப்புக்கு உட்பட்டு அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவார். நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் குறைந்தது ஐந்து வருடங்களுக்குத் தொடர வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். நாங்கள் அதற்கு நன்கு தயாராக இருக்கிறோம். வாக்கெடுப்பை ஒத்திவைக்க மாட்டோம். அதற்கான அவசியமும் நமக்கு இல்லை. எமது கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அடிமட்டத்தில் கட்சியைப் பலப்படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் வெற்றிக்காக நாங்கள் ஒரு கட்சியாக தயாராக இருக்கிறோம். இந்நிலைமையின் அடிப்படையில் தேர்தலை ஒத்திவைக்குமாறு தொழிலதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டினாலும், தொழிலதிபர்களுக்கு ஜனாதிபதி மீது நம்பிக்கை உள்ளது. அதனால்தான் இதைத் தள்ளிப் போடச் சொல்கிறார்கள். தேர்தல் நடைபெற்றால் ஜனாதிபதி ஏற்படுத்திய ஸ்திரத்தன்மை போய்விடும் என அவர்களுக்கு அச்சம் உள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை.

**கே: இருந்தபோதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருப்பது பற்றி?**

பதில்: அவர் பொதுவேட்பாளராக தன்னை முன்னிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும். அவருக்கு பல கட்சிகள் ஆதரவு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றில் பொதுஜன பெரமுனவும் உள்ளடங்குகின்றது. மேலும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் அதில் உள்ளனர். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும் அல்ல, பொதுஜன பெரமுனவின் வேட்பாளரும் அல்ல. நாட்டின் வேட்பாளராகவே நான் அவரைப் பார்க்கிறேன். பொதுவேட்பாளராக களமிறங்குவதன் மூலம் அவரது தலைமையிலான தேசிய அரசாங்கத்திற்கு செல்ல முடியும் என நான் கருதுகின்றேன். அனைவரையும் ஒன்றிணைத்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அவர் எதிர்பார்த்துள்ளார். ஊடகங்களுக்கு முன்னால் விளையாடும் எதிர்க்கட்சியினர், மாலையில் எங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி ரணில் விக்கிரமசிங்க இல்லாமல் இதை யாராலும் செய்ய முடியாது என்று கூறுகின்றனர். அவரை பொது வேட்பாளராக முன்னிறுத்தி அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைக்க முடியும் என நான் நினைக்கின்றேன்.

**கே: தற்போதைய ஜனாதிபதி–யை ஆதரிக்க பொதுஜன பெரமுனவில் உள்ள சில தரப்பினர் இன்னமும் தயக்கம் காட்டுவதற்கான காரணம் என்ன?**

பதில்: அந்தக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலில் நம்பிக்கை வைத்துள்ளனர். ரணிலைத் தவிர வேறு வழியில்லை என்ற கட்டத்தில் பெரும்பான்மை இருப்பதாக நான் நினைக்கிறேன்.

**கே: நாடு இன்னமும் நெருக்க–டியான நிலையில்தான் இருக்கின்றது எனப் பொருளாதார வல்லுனர்களும் கூறி வருகின்றனர். உண்மையில் நாடு இன்னமும் வங்குரோத்து நிலையிலா உள்ளது?**

பதில்: இந்நாட்டில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க சிறிது காலம் எடுக்கும். குறிப்பாக வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வருவதற்கு நிச்சயமாக குறிப்பிட்ட காலம் தேவை. இது எளிதான பணி அல்ல. வங்குரோத்து நிலையை அடைதல் என்பது மிகவும் சிக்கலானதொரு விடயமாகும். இருப்பினும் இதிலிருந்து ஓரளவுக்கு விடுபட்டுள்ளோம். எப்படியிருந்தாலும், இந்தக் கடினமான காலங்களை நாங்கள் கடந்து வருகிறோம். பொருளாதாரத்தை வலுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். பொருளாதாரம் வலுவாக இருக்க வேண்டுமானால் தேர்தலில் மக்கள் நல்ல முடிவை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். இந்த நாட்டில் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வேறு எவரும் இல்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே தீர்வு காண முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

**கே: எதிர்க்கட்சிகளின் ஆதரவி–ன்றி ஐக்கிய தேசியக் கட்சி–யால் இன்று சர்வதேசம் கூட போற்றும் ஒரு நாட்டை கட்டியெழுப்ப முடிந்தது. அந்த இடத்திற்கான பயணத்தை விபரிக்க முடியுமா?**

பதில்: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏனைய நாடுகளின் தலைவர்களுடன் கொண்டுள்ள உறவுகள் மற்றும் சர்வதேசத் தலைவர்கள் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையை நாம் பார்க்க முடிகின்றது. சர்வதேச மாநாடுகளில் அவருக்கு மிகுந்த மரியாதை கிடைத்துள்ளது. இவ்வாறான தளங்களைச் சரியாகப் பயன்படுத்தி கலந்துரையாடல்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் அவருக்கு உள்ளது. அதுதான் இந்த வெற்றிக்குக் காரணம். கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி மறுசீரமைப்பிற்கு 4 ஆண்டு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அந்த நான்கு வருடங்களின் பின்னர் பொருளாதாரம் வலுப்பெற்று அதன் பின்னர் கடனை அடைக்க 2042 வரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இது நாட்டுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். சில திவாலான நாடுகள் மீண்டு வர 10 ஆண்டுகளுக்கும் மேலாக எடுத்துக்கொண்டன. ஆனால் நாம் அதிலிருந்து விடுபட இரண்டு வருடங்கள் எடுத்தது. இது சர்வதேச சமூகத்தால் கூட பாராட்டப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியதன் காரணமாகவே இந்நாட்டின் அபிவிருத்தி வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. நிறுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களும் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், இவ்வுலகில் அனைவரும் அறிந்த வர்த்தகர்கள் இலங்கையில் முதலீடு செய்ய எதிர்பார்த்துள்ளனர். இந்த நாடு நிலையான இடத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்று நினைக்கிறார்கள். இவ்வாறான முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்தால் இலங்கையின் பொருளாதாரம் வலுவடையும் என்பதை அவர்களால் பார்க்க முடிகிறது. கடந்த காலங்களில் ஏராளமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அவர்களுக்கு நாட்டின் மீது நம்பிக்கை இல்லை. இப்போது மீண்டும் நம்பிக்கை வந்துவிட்டது. நாடு வலுப்பெற்றால், பணக்காரர்கள் முதலீடு செய்தால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதைத்தான் நாம் செய்ய வேண்டும். அதுதான் அவருடைய தத்துவம்.

**கே: அரசாங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவு, எரிபொருள் விலை குறைப்பு, மின்சாரக் கட்ட–ணம் போன்ற சலுகைகள் தேர்தலை இலக்காக கொண்டு மக்களுக்கு வழங்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டை முன்வைக்கின்றன அல்லவா?**

பதில்: எதிர்க்கட்சிகள் எல்லாம் குற்றம் சாட்டுகின்றன. ஆனால் அவர்கள் இந்த நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பங்கெடுக்க அழைக்கப்பட்டனர்; அவர்கள் ஒருபோதும் இந்த நாட்டின் அப்பாவி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்றிணைந்ததில்லை. அவர்கள் அரசியல் செய்ய மட்டுமே விரும்பினர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தின் பலன்கள் மக்களுக்கு கிடைத்து வருகின்றன. தேர்தலுக்காகக் காத்திருந்து சலுகைகள் வழங்கப்பட்டதாகச் சொன்னாலும், ஜனாதிபதியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் பலன் தற்போது கிடைத்து வருகின்றது. அவரை விமர்சிக்காமல், நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் சிந்தித்து, இந்தப் பிரச்சினையில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

**கே: வெளிநாட்டுக் கடன்களை தள்ளுபடி செய்வது, கடனைத் திருப்பிச் செலுத்தும் காலத்தை நீட்டிப்பது போன்ற குற்றச்சாட்டுகள் அரசாங்கம் மீது முன்வைக்கப்படு–கின்றனவே. இது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: கடனை திருப்பிச் செலுத்த 2042 வரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சுமார் எட்டு பில்லியன் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய வெற்றி. இது விமர்சிக்க வேண்டிய விஷயமல்ல. தாங்கள் இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக செய்திருப்போம் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன, ஆனால் நாடு வீழ்ந்தபோது எதிர்க்கட்சி இல்லை. அவர்களிடம் ஒரு திட்டம் கூட இல்லை. வெறும் விமர்சனம் மட்டுமே. அவர்கள் சரியான திட்டத்தை முன்வைக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதியிடம் மட்டுமே அந்த திட்டங்களும் வேலைத்திட்டங்களும் உள்ளன. இதை வேறு யாராலும் செய்ய முடியாது.

**கே: தற்போதைய ஜனாதிபதியைத் தவிர வேறு எந்த வேட்பாளரும் நாட்டைக் கட்டியெழுப்பும் பணியைத் தொடர முடியாது என்கிறீர்களா?**

பதில்: கண்டிப்பாக முடியாது. அதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எதிர்க்கட்சியினர் இந்த சிம்மாசனத்தில் அமர்ந்தால், நாங்கள் மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்ல வேண்டியிருக்கும். இந்த சந்தர்ப்பத்தை மிகவும் கவனமாக அணுக வேண்டும். இவர்கள் எவருக்கும் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை பற்றி எந்த யோசனையும் இல்லை. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்று இவர்களுக்குத் தெரியாது. அவர்கள் ஆட்சியைப் பிடித்தால், இந்த நாடு எங்கே போகும் என்பதைப் பார்க்கலாம்.

# தமிழகத்தை முற்றாக புறக்கணித்த இந்திய வரவு செலவுத் திட்டம்!

## தோழமைக் கட்சிகளைத் திருப்திப்படுத்துவதற்கே முக்கியத்துவம் –எதிரணிகள் கடும் கண்டனம்!

**இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த மத்திய வரவுசெலவுத்திட்ட உரையில் தமிழ்நாடு, தமிழ் என்ற வார்த்தைகள் ஒருமுறை கூட இடம்பெறாத நிலையில், அதற்கு அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.**

நாடாளுமன்றத்தில் 2024-2025 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. இந்த பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே பீகார், ஆந்திராவை ஆளும் பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகள் தங்கள் மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசிடம் முன்வைத்தன. இந்தக் கோரிக்கைக்கு இணங்க ஆந்திரா, பீகாருக்கு பட்ஜெட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆந்திராவுக்கு ரூ. 15,000 கோடியும், பீகாரின் நெடுஞ்சாலை மேம்பாட்டுக்கு ரூ. 26,000 கோடியும் ஒதுக்கீடு செய்வதாக நிர்மலா சீதாராமன் அறிவித்தார். மேலும், பல்வேறு புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

இந்நிலையில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த மத்திய பட்ஜெட் உரையில் தமிழ்நாடு, தமிழ் என்ற வார்த்தைகள் ஒருமுறை கூட இடம்பெறவில்லை. வழக்கமாக திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியத்துடன் பட்ஜெட் உரை தொடங்கப்படும். இம்முறை அதுவும் தவிர்க்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ 2 ஆம் கட்ட திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, தாம்பரம் செங்கல்பட்டு விரைவுச் சாலை திட்ட ஒப்புதல், மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல் எதுவும் மத்திய பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

இந்த நிலையில், மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டதாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கருத்துத் தெரிவிக்கையில்,

"2024 ஆம் ஆண்டுக்கான பா.ஜ.க அரசின் பட்ஜெட் அறிக்கை ஒட்டுமொத்த இந்தியாவிற்கானதா? தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மட்டுமானதா? என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

"மத்திய அரசின் பட்ஜெட் கூட்டணிக் கட்சிகளை சமாதானப்படுத்தும் சலுகை அறிவிப்புகளாக மட்டுமே அமைந்துள்ளது. விவசாயம், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படைத்தேவைகளுக்கு போதிய நிதியை ஒதுக்காததது இந்திய மக்களின் நலன்மீதான பா.ஜ.க அரசின் அக்கறையின்மையை மீண்டும் வெளிப்படுத்துகிறது" என்றும் சீமான் தெரிவித்துள்ளார்.

"பட்ஜெட் உரையில் தமிழ்நாடு என்ற பெயரையே உச்சரிக்காத நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை வன்மையாகக் கண்டிக்கிறேன். மோடி ஆட்சியில் தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது. ஆட்சியை, பதவியை, அதிகாரத்தை தக்கவைக்க பா.ஜ.க அரசு எந்த நிலைக்கும் செல்லும் என்பதற்கு இந்த பட்ஜெட்டே ஒரு உதாரணம்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.



"2024-2025ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எந்தவிதமான புதிய திட்டங்களும் அறிவிக்கப்படாதது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது" என்று அ.தி.மு.கவின் பொதுச்செயலாளரும், தமிழக சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.




"இந்த பட்ஜெட் அறிக்கை வடமாநிலங்களையும், பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதே தவிர, ஒட்டுமொத்த இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியை சமநிலையோடு ஊக்குவிக்கக்கூடிய அறிக்கையாக இல்லை. குறிப்பாக தமிழகத்திற்கு எந்தவிதமான திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை என்பது, தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு உள்ள காழ்ப்புணர்ச்சியையே காட்டுகிறது" என்று எடப்பாடி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு எந்தவித திட்ட அறிவிப்புகளும் இல்லை என்று கண்டனம் தெரிவித்தார்.

தமிழகத்திற்கு திட்டங்கள் அறிவிக்கப்படாததை கண்டித்து, பிரதமர் நரேந்திர மோடியின் அனைத்து முதல்வர்கள் கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை எனவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

"மத்திய பட்ஜெட் தமிழகத்துக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஒருசில மாநில கட்சிகளைத் திருப்திப்படுத்த ஒருசில மாநிலங்களுக்கு மட்டுமே திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்த நாட்டுக்கானது அல்ல. பிகார், ஆந்திர மாநிலங்களுக்கான நிதிநிலை அறிக்கையாக உள்ளது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் குறித்த எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை. தமிழகத்தின் நலன் முழுமையாக புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு ரயில் திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. இரண்டு மிகப்பெரிய பேரிடரை சந்தித்த தமிழகத்துக்கு இதுவரை எந்தவித வெள்ள நிவாரணமும் அறிவிக்கப்படவில்லை. பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற சொல் கூட இடம்பெறவில்லை.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ள பிரதமர் நரேந்திர மோடியின் 'நிதி ஆயோக்' கூட்டத்தில் நான் பங்கேற்கப்போவதில்லை. அனைத்து முதல்வர்கள் கூட்டத்தை புறக்கணிக்கிறேன்" என்று மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

இது இவ்விதமிருக்க, இந்திய மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் மாநிலங்களுக்கு இடையே பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக் கூறி நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் கடந்த புதனன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

பட்ஜட் குறித்த விவாதத்துக்காக புதன்கிழமை காலை நாடாளுமன்றம் கூடியது. முன்னதாக, நாடாளுமன்ற வளாகத்தில் கூடிய இந்தியா கூட்டணி எம்பிக்கள், மத்திய பட்ஜட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற காங்கிரஸ் குழு தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, திமுக எம்.பிக்கள் கனிமொழி, திருச்சி சிவா, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பட்ஜட்டுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, “இந்த பட்ஜட் பா.ஜ.கவின் கூட்டாளிகளை திருப்திப்படுத்துவதற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் (பா.ஜ.க) யாருக்கும் எதுவும் கொடுக்கவில்லை. இது பாரபட்சமான பட்ஜட். இந்த பட்ஜட்டை நாங்கள் தொடர்ந்து எதிர்ப்போம்” எனக் குறிப்பிட்டார்.

## பீகார், ஆந்திரா மாநிலங்களுக்கு அதிகூடிய சலுகைகள்!

எஸ்.சாரங்கன்...

மாற்று வாக்களிப்பு நிலையம் தெரிவு

# ஓகஸ்ட் 01 க்கு முன் விண்ணப்பிக்கலாம்

ஜனாதிபதி தேர்தலில் வாக்காளர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தை தவிர மாற்று வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர்களுக்கு நியமிக்கப்பட்ட இடத்தில் வாக்களிக்க முடியாததற்கு நியாயமான காரணம் இருந்தால் மாற்று வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்களிக்குமாறு கோரலாமென தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவிப்பில் வலியுறுத்தியுள்ளது. இதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர், ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அல்லது அதற்கு முன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு படிவங்களை அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் விண்ணப்பதாரரின் குடியிருப்புப் பகுதி கிராம அதிகாரிகளால் சான்றளிக்கப்பட வேண்டும், இல்லையெனில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாதென தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின்

# வவுனியா பிராந்திய அலுவலகம் புதிய கட்டடத்துக்கு இடமாற்றம்

## ஓகஸ்ட் 3 முதல் 15வரை சேவை நிறுத்தம்

வவுனியா விசேட நிருபர்



குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி முதல் புதிய இடத்தில் இயங்கவுள்ளதாக, அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் காமினி மகா வித்தியாலயத்துக்கு முன்பாக மன்னார் வீதி, வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் இந்த அலுவலகம் இயங்கவுள்ளது.

தற்போது வவுனியா, வெளிச்சுற்று வீதியில் இயங்கி வரும் இந்த அலுவலகத்தின் உத்தியோகபூர்வ கடமைகள் ஓகஸ்ட் 2ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்படும்.

இதற்கமைய ஓகஸ்ட் 3ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலக சேவைகள் இடம்பெறாது.

புதிய கட்டடத்தில் நிறுவப்படும் இந்த அலுவலகத்தில் ஓகஸ்ட் 16ஆம் திகதி முதல் மீண்டும் பொது மக்களுக்கான சேவை முன்னெடுக்கப்படுமெனவும், குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

# த.மு.கூ. அரசியல் குழு ஓகஸ். 02 இல் கூடுகிறது

## அதன் பின்னரே இறுதி முடிவு மனோ



ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தலையடுத்து தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு தொடர்பில் கொழும்பில் நேரடியாகவும் மெய்நிகர் மூலமாகவும் கூட்டணியின் அரசியல் குழு கூட்டம் ஓகஸ்ட் 2 ஆம் திகதி கூடி தீர்மானிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தின்போது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஆராயப்பட்டு உத்தியோகபூர்வ தீர்மானங்கள் எடுக்கப்படுமென்றும் உத்தேச ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தில் இடம்பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழ் முற்போக்கு கூட்டணி பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் நலன் சார்ந்து ஏற்கனவே செய்து கொண்டுள்ள சமூக நீதி உடன்படிக்கையை மேலும் தரமுயர்த்துவது, அதன் சாராம்சங்களை ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெற செய்வது, ஐக்கிய மக்கள் கூட்டணியில் சட்டபூர்வமாக இணைவது தொடர்பாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் நகல் யாப்பை ஆராய்வது, இதையடுத்து இடம்பெறக்கூடிய பாராளுமன்ற தேர்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசியல் குழுவில் காத்திரமாக ஆராயப்படும் என்றும் கூட்டணி தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு;

# நாடு முழுவதும் பாதுகாப்பு வழங்க அவசர உத்தரவு

## இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதால் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள், நாட்டு மக்களுக்கும் நாட்டின் முழுமையான பாதுகாப்பையும் உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பாதுகாப்புத் துறை பிரதானிகளுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்குழு கூட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போதே, இவ்வாறு அவர் பணித்துள்ளார்.

பாதுகாப்பு படைகளின் ஆளணி பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா உட்பட முப்படைகளின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களினது பிரதானிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசியலமைப்பு மற்றும் நாட்டு பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடகாலமாக நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் போது கடுமையான பல தீர்மானங்களை மேற்கொள்ள நேர்ந்ததுடன், அந்தக் காலத்தில் தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கை பாதுகாத்து நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர முடிந்தமை தொடர்பாகவும் இராஜாங்க அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அவ்வாறு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சார்பாக நன்றி தெரிவிப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் கீழ்வரும் அனைத்து நிறுவனங்களினதும் நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 570,000 வலி நிவாரணி மாத்திரை

## தமிழகம், இராமநாதபுரத்தில் பறிமுதல்

## இந்திய ரூபாவில் 1 கோடி 80 இலட்சமென மதிப்பீடு

மன்னார் குறூப் நிருபர்



இலங்கைக்கு கடத்துவதற்காக தமிழ் நாட்டில் மானாங்குடி கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்திய மதிப்பில் ஒரு கோடி 80 இலட்சம் ரூபா பெறுமதியான 5 இலட்சத்து 70 ஆயிரம் வலி நிவாரணி மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இராமநாதபுரம், மானாங்குடி கடற்கரையிலிருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்த வலி நிவாரண மாத்திரைகள் திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் வெள்ளிக்கிழமை (26) பறிமுதல் செய்து, தலைமறைவான சந்தேக நபர் ஒருவரையும் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இராமேஸ்வரம், மண்டபம் வேதாளை மரைக்காயர் பட்டினம், மானாங்குடி உள்ளிட்ட கடற்கரையிலிருந்து தனுஷ்கோடி கடல் வழியாக கடல் அட்டை, மஞ்சள், இஞ்சி, வலி நிவாரணி மாத்திரைகள், கஞ்சா உள்ளிட்ட பொருட்கள் இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகின்றன.

கடல் வழியாக நடக்கும் கடத்தல் சம்பவங்களை தடுக்க மத்திய சுங்கத்துறை, கடலோர காவல் படை, கடற்படை மற்றும் மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வந்தாலும் அதையும் மீறி சமீப காலமாக அதிக அளவில் கடத்தல் சம்பவங்கள் நடைபெற்று வருகிறது.

திருச்சி சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவுக்கு போதைப்பொருள் இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலின்படி சுங்கத்துறையினர் மானாங்குடி வரை உள்ள கடற்கரை பகுதியில் தீவிர சோதனை நடத்தினர். இதன்போது இலங்கைக்கு கடத்துவதற்காக மானாங்குடி கடற்கரை பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 பெட்டிகள் கைப்பற்றப்பட்டன. அதை சோதனை செய்த போது அதில் வலி நிவாரண மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து பெட்டிகளை மண்டபம் சுங்கத்துறை அலுவலகத்துக்கு எடுத்து வந்து ஆய்வு செய்தபோது ஒரு பெட்டியில் 57,000 மாத்திரைகள் வீதம் 10 பெட்டியில் 05 லட்சத்து 70 ஆயிரம் மாத்திரைகள் இருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து வலி மாத்திரைகள் அடங்கிய பெட்டிகளை சரக்கு வாகனம் மூலமாக ராமநாதபுரம் சுங்கத் துறை தலைமை அலுவலகத்தில் எடுத்து வந்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய முதல் கட்ட விசாரணையில் வலி நிவாரணி மாத்திரைகள் இலங்கைக்கு வெள்ளிக்கிழமை இரவு படகு மூலம் கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்துள்ளதாகவும், இந்த கடத்தல் சம்பவத்தில் தொடர்புடையதாக கருதப்படும் சந்தேக நபர் ஒருவர் தலைமறைவாகி உள்ளதால் அவரை தீவிரமாக தேடி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

### SLPP MPக்கள்...

நாம்” என்ற தொனிப்பொருளில் நேற்று நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் அபிவிருத்திக்கு ஆற்றி வரும் பங்களிப்பு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அளித்துவரும் பங்களிப்பு மற்றும் நாடு மிகவும் நெருக்கடியான சூழலில் அதனை பொறுப்பேற்று திறம்பட செயற்பட்டமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் உள்ள பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு தன்னிச்சையாக ஆதரவு வழங்க முன் வந்துள்ளதாக அமைச்சர் மனசு நாணயக்கார தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தல்; இம்முறை தமிழரசு கட்சி வேட்பாளரை களமிறக்க போவதில்லை

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதில்லையென இலங்கை தமிழரசு கட்சி தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் போடியிடும் பிரதான வேட்பாளர்களுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகவும் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எனவே இம்முறை ஜனாதிபதி தேர்தலுக்கு மிகப்பெரிய வேட்பாளர் பட்டியல் தயாரிப்பதற்கான ஏதுநிலை உருவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது

### ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக...

தொடர்ந்து பேசிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடனான தற்போதைய உடன்பாடுகளை முன்னோக்கி நகர்த்த வேண்டும் என்றும், அந்த வரைவுக்கு முரணாக செல்ல முடியுமென எவராவது கூறினால், அவர்கள் நாட்டை ஆபத்தில் தள்ளிவிடும் பொய்யைத்தான் சொல்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை வெல்வதே எனது நோக்கமெனதெரிவித்த ஜனாதிபதி, தான் சவாலிலிருந்து ஒதுங்கியதில்லை என்றும் பேசாமல் என் கடமையைச் செய்தேன் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியும் அவ்வாறே நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வெற்றிக்காக காலியில் கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பெருந்திரளானோர் ஒன்று திரண்டிருந்தனர்.

நேற்றைய கூட்டத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலி மாவட்ட மக்களின் பெரும் பாராட்டையும் வரவேற்பையும் பெற்றார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை வெற்றி கொள்வதே தனது நோக்கமாகும் என்றும், அரசியல் பேதங்களை விடுத்து நல்லதொரு இலங்கையை உருவாக்க அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர்களான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, கலாநிதி ரமேஷ் பத்திரன, மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே, காலி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் சம்பத் அத்துகோரள மற்றும் தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இஷான் ரஹ்மான்ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# சுமந்திரன் எம்.பி. பயணித்த வாகனம் கிளிநொச்சியில் விபத்து

கிளிநொச்சி குறூப் நிருபர்



பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பயணித்த சொகுசு வாகனம் கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் விபத்துக்குள்ளானது. கிளிநொச்சி ஏ9 வீதியில் 155ஆம் கட்டை பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சொகுசு வாகனமும் எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினரின் வாகனத்துக்கும் மோட்டார் சைக்கிளுக்கும் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

ஆயினும் எவருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஜனாதிபதியாக...

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## எங்கள் கருத்து...

# அன்று ஒதுங்கிக் கொண்டோர், இன்று பேசுகின்ற வீண் பேச்சு!

பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாலேயே அத்தகைய அவலநிலைமைக்கு எமது நாடு உள்ளானது.

அக்காலத்தில் இலங்கையை 'திவால்' ஆகிப்போன நாடு என்று உலகமே கைவிட்டு விட்டது. இலங்கையைக் கைதூக்கி விடுவதற்கு ஒருசில நாடுகள் உதவிகள் புரிந்த போதிலும், அந்த உதவிகள் தற்காலிக நிவாரணமாகவே அமைந்திருந்தன. தினமும் கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக் கொண்டு எரிபொருள் கப்பலின் வருகையை எதிர்பார்த்திருக்கும் அவலத்தில் நாடு இருந்தது. குடும்ப வருமானம் இழந்து போனதால், அன்றாட உணவுக்கு மக்கள் அல்லல்பட்டனர். எரிபொருள் நிலையங்களில் இரவுபகலாக நீண்ட கியூவரிசையில் காத்துக் கிடந்தனர்.

பொருளாதார நெருக்கடியைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடியதன் விளைவாக அன்றைய ஆட்சியே அகன்று போனது.

பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த எமது நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்பதற்கு அரசியல் தலைவர்கள் எவருமே முன்வராத நிலையில், சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இலங்கையின் பொருளாதாரம் உலகமே ஆச்சரியப்படும் வகையில் மீண்டெழுந்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆற்றல், அனுபவம், ஆளுமை ஆகியவற்றின் காரணமாகவே இது சாத்தியமாகியது.

எமது நாடு பொருளாதாரத்தில் தொடர்ந்தும் வேகமான முன்னேறி வருகின்றது.

ஆனால் நாட்டைப் பொறுப்பேற்பதற்குத் தயங்கியவர்களும், பொருளாதார ஆலோசனை கூறாதவர்களும் இன்று வீரவசனங்கள் பேசுகின்றனர். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரத்தை முன்னேற்றப் போவதாக சூளுரைக்கின்றனர்.

எதிரணியினரின் வீரவசனங்களை கவனத்தில் கொண்டு, நிதானமாகச் சிந்தித்து முடிவு செய்ய வேண்டியவர்கள் மக்களாவர்.

### அரசியல் கட்சிகள்...

ஜனாதிபதியின் பொருளாதார முன்னெடுப்பை அனைவரும் ஏற்றுக்கொண்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரத்துக்கு பின்னர் இலங்கை 2001ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பாரிய நிதி நெருக்கடியை சந்தித்தது. அந்த சந்தர்ப்பங்களில் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி முறையே எதிர்மறை 1.4 மற்றும் எதிர்மறை 7.8 ஆக வீழ்ச்சி கண்டது.

அந்த இரண்டு நிலைகளிலும் இருந்த நாட்டின் பொருளாதார நிதி ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாடுபட்டார்.

கடந்த வருடம் முதல் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து நாட்டில் பல மாதங்களாக மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முடிவு கட்டி, நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளை ஒட்டுமொத்த சமூகமும் அங்கீகரித்திருப்பதை அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதையே இது காட்டுவதாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன் 2027ஆம் ஆண்டுவரை வெளிநாட்டு கடன்களை செலுத்தாமல் இருப்பதற்கான ஒப்பந்தங்களை செய்து, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சட்டமூலங்களை முன்வைத்து நாட்டை நேரடி பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் இதன் மூலம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவே விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### அதிக விலைக்கு...

பாணை விற்பனை செய்யாது அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சோதனைகளை மேற்கொள்ளுமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் டி.ஐ. உடுவர, புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

### தேர்தலுக்கான...

வும், தேர்தல் ஆணையாளர் அலுவலகம் சுமார் 8 பில்லியன் ரூபா மதிப்பீட்டை அனுப்பியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அச்சிடுதல், பாதுகாப்பு, எரிபொருள், வாக்குப்பெட்டிகள் போன்ற எந்தவொரு அவசர தேவைக்கும் பணத்தை வழங்க திறைசேரி தயாராக இருப்பதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி தேர்தல்...

காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெறுமென்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். வேட்புமனுவை தாக்கல் செய்வதற்கு முன் ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளரும் பாதுகாப்பு கட்டுப்பணம் செலுத்துவது கட்டாயமாகும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளருக்கு 50,000 ரூபாவும், ஏனைய வேட்பாளருக்கு 75,000 ரூபாவும் வைப்புத் தொகையாக கட்டுப்பணம் செலுத்துவது கட்டாயமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட தினமான கடந்த 26ஆம் திகதி முதல் கட்டுப்பணம் ஏற்றுக்கொள்வது ஆரம்பிக்கப்பட்டு ஓகஸ்ட் 13 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் நடைபெறும். கட்டுப்பணம் ஏற்பு ஓகஸ்ட் 14 மதியம் 12.00 மணியுடன் நிறைவடைகிறது.

கட்டுப் பணத்தை ஒப்படைக்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களைத் தவிர மற்றைய அனைத்து வேட்பாளர்களும் தாங்கள் சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்லது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பதை பாராளுமன்றச் செயலாளரின் கையொப்பமிடப்பட்ட சான்றிதழின் மூலம் நிரூபிக்க வேண்டியது கட்டாயமாகும்.

சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளைத் தெரிவிக்க ஓகஸ்ட் 15 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை ஒதுக்கப்பட்டுள்ளது, ஆட்சேபனைகளை எதிர்தரப்பு வேட்பாளர்கள் அல்லது எதிர்தரப்பு வேட்பாளர்களின் வேட்புமனுவில் கையெழுத்திட்டவர்கள் தெரிவிக்கலாம். அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டத்துக்கமைய தேர்தல் விதிமுறைகள் கடந்த 26ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாகவும், தேர்தல் ஆணைக்குழு பிறப்பித்துள்ள உத்தரவுகள் எதிர்காலத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படுமென்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

### நடிகர் அமரர் தர்ஷன்...

பிறப்பிடமான இறக்குவானையிலுள்ள வீதி ஒன்றுக்கே அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தர்ஷன் தர்மராஜின் பெயர் சூட்டப்பட்ட இவ்வீதியின் பெயர் பலகை திறப்பு விழா நேற்று (27) வெகு விமர்சையாக நடைபெற்றது. விழாவில் அரசியல்வாதிகள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நடிகர் தர்ஷன் தர்மராஜின் நண்பர்களின் முயற்சியால் இந்த வீதி திறக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். இலங்கையில் தமிழ் நடிகர் ஒருவரின் பெயர் முதல் தடவையாக வீதியொன்றுக்கு சூட்டப்படுகின்றமையும் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

# பித்ரு தோஷ சாபம் நீங்க அமாவாசை விரதத்தை கடைப்பிடியுங்கள்

## டாக்டர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா



ஆகஸ்ட் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினம் ஆகும்.

ஆடி அமாவாசை தினங்களில் குறிப்பாக கொழும்பில் முகத்துவாரம் சங்கமத்திலும் வெள்ளவத்தை கடற்கரை பகுதியிலும் கீரிமலை மற்றும் கடற்கரை ஓரங்களிலும் ஆற்றோரங்களிலும் தர்ப்பணம் செய்வது மிகவும் சிறப்பானதாகும். அதேவேளை அந்தணர்களுக்கு தானம் கொடுத்து பசு மாட்டுக்கும் அகத்திக்கீரை கொடுத்து சிவ வழிபாடு மேற்கொண்டு சிவனுக்கு மோட்ச வழிபாடு மேற்கொள்வதும் சிறப்பானதாகும்.

தந்தையை இழந்தவர்கள் முன்னோர்களின் ஆன்மாவை நினைத்து தர்ப்பணம் செய்வது சிறப்பானதாகும்.

சூரியன் வட திசையில் இருந்து தென் திசை நோக்கி (தட்சினாயம்) செல்லும்பொழுது முதல் வரும் அமாவாசை ஆடி அமாவாசை ஆகும். சாஸ்திரத்தில் இறந்தவர்கள் இறந்த திதியில் தான் பூலோகத்திற்கு நம்மை தேடி வருவார்கள் என சொல்லப்பட்டுள்ளது. இங்கு அமாவாசை அன்று பூலோகம் சென்றடைவார்கள்.

ஆகவே, இந்த நாட்களை விட்டு அவர்கள் பூமிக்கு வராத நாட்களில் அவர்களுக்கு உணவளிப்பதில் எந்த ஒரு பயனும் இல்லை.

இந்த சாஸ்திரங்களை முறையாக கடைப்பிடிக்காமல் விடுவதனால்தான் பித்ருதோஷமும், பித்ரு சாபமும் ஏற்படுகிறது.

பித்ருதோஷம், பித்ருசாபம் என்றால் இறந்தோர் நம்மை சபிப்பது கிடையாது. ஆனால், நமக்காக செய்யப்படும். காரியங்களை சரியாக செய்யவில்லையே, நமக்கான உணவு கிடைக்கவில்லையே என இறந்தவர்களின் ஆன்மா பெரு மூச்சுவிட்டால் கூட அது நம்முடைய பரம்பரையை தாக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இவ்வாறு இறந்தவர்களின் ஆன்மா எப்படி தன்னுடைய யாத்திரையை மேற்கொள்கிறது? அந்த சந்தர்ப்பத்தில் இறந்தவர்களுக்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி கருடபுராணம் விளக்கமாக சொல்கிறது.

ஆனால் இந்த கருடபுராணத்தை வீட்டில் படிக்கக் கூடாது. இறப்பு ஏற்பட்ட வீட்டில் மட்டுமே படிக்க வேண்டும் என்பது ஐதீகம்.

இறந்தவர்களது ஆசியை முழுமையாக பெற வேண்டும் என்றால், தர்ப்பணமும், திவசமும் முறையாக செய்யப்படுவதே உத்தமம் ஆகும்.

இறந்தவர்களுக்கு ஒரு மாதம் என்பது ஒரு நாளாக கருதப்படுகிறது. அந்த ஒரு நாள் அவர்கள் மறைந்து போன திதி அல்லது அமாவாசை தினம் மட்டுமே அவர்கள் உணவைத் தேடி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நாட்களில் மட்டுமே திவசம், தர்ப்பணம் செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

எனவே ஆடி அமாவாசை பூஜை செய்து இறந்தவர்களுக்கு சிவனோடு கலந்து இன்பமாய் வாழ சிவனை பிரார்த்தனை செய்யுங்கள்.

# பழனியில் முத்தமிழ் முருகன் மாநாடு

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024 தமிழ்நாட்டு அரசு இந்து அறநிலையத்துறையின் சார்பில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 24ஆம், 25ஆம் திகதிகளில் பழனியில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து செல்லவுள்ள முருகப்பெருமான் பக்தர்களுக்கு உதவ அகில இலங்கை இந்து மாமன்றம் முன்வந்துள்ளது. மாநாட்டுக்கு செல்லவுள்ள பக்தர்கள், அகில இலங்கை இந்து மாமன்ற தலைமை காரியாலயத்தின் 0112434990 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது உதவி செயலாளர் ஜெ.நிரோஷ்காந்தின் 077 7678858 என்ற வட்ஸ்அப் இலக்கத்தினூடாகவோ எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்திய விமான நிலையத்திலிருந்து பழனி செல்வதற்கான போக்குவரத்து, தங்குமிடம், உணவு வசதிகள் பக்தர்களுக்கு இலவசமாக வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் பேரூர் ஆதீனம் 25ஆம் குருமகா சந்நிதானம் கையிலை புனிதர் சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளாரின் அருளாணைப்படி அகில இலங்கை இந்து மாமன்றம் இந்த உதவியை செய்ய முன்வந்துள்ளது.


## வ/ப தெஹிவளை கல்கிசை - பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### பகிரங்க விலைமனுக்கோரல்

வ/ப தெஹிவளை - கல்கிசை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கோரல் பத்திரிகை அறிவித்தல் 2024.06.30ம் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கீழே தரப்பட்டுள்ள காணிக்காக மீண்டும் விலைமனுக்கோரல் 2024.08.15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

| காணியின் பெயர் மற்றும் அமைவிடம் | அமைவிடம் |
|---|---|
| இல.169, ஹைலெவல் வீதி, நுகேகொடை (நுகேகொடை அரச மரத்திற்கு முன்னால்) | 51.20 பேர்ச் |

**தலைவர்,**
**வ/ப தெஹிவளை - கல்கிசை ப.நோ.கூ சங்கம்**
**இல. 169, ஹைலெவல் வீதி, நுகேகொடை**

**தொடர்புகள் :**
**தலைவர் : 070 - 7940175**
**உப தலைவர் : 071 - 9909730**
**செயலாளர் : 071 - 6784584**



## களனிப் பல்கலைக்கழகம்

### மானிடப்பண்பாட்டியல் பீடம் - மொழியியல் துறை

### மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு டிப்ளோமா கற்கைநெறி 2024/2025

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை மொழியியல் துறையில் 2024.07.28 முதல் 2024.08.31 வரை பெற்றுக்கொள்ளலாம்.

மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் உரைபெயர்ப்பாளர்களுக்குத் தேவையான அறிவையும் பயிற்சியையும் வழங்குவதே இக்கற்கை நெறியின் பிரதான நோக்கமாகும்.

**கற்கைநெறி வடிவமைப்பு :** I. தமிழ் - சிங்களம் மொழிபெயர்ப்புக் கற்கைநெறி.
(விண்ணப்பதாரர்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும்)
II. ஆங்கிலம் - சிங்களம் மொழிபெயர்ப்புக் கற்கைநெறி.
(விண்ணப்பதாரர்கள் ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியினைக் கொண்டிருத்தல் வேண்டும்)

**கற்கைநெறிக்காலம் :** ஒரு வருடக் கல்வியாண்டு.
சனிக்கிழமைகளில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 4.00 வரை விரிவுரைகள் நடைபெறும். வகுப்பறை விரிவுரைகள் களனிப் பல்கலைக்கழகத்தில் (onsite) நடைபெறும். தேவை ஏற்படின் நிகழ்நிலை (online) முறை மூலம் நடைபெறும்.

**கட்டணம்:** ரூ. 70,000.00/- (எழுபதாயிரம் மட்டும்)

(முதலாம் தவணைக் கட்டணமாக ரூ.40,000.00 செலுத்தப்படல் வேண்டும். இரண்டாம் தவணைக் கட்டணமான ரூ.30,000.00 பதிவு செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.)

**விண்ணப்பிப்பதற்கான தகுதி:** க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அல்லது தேவைக்கேற்றவாறு 10 வருடங்களுக்குக் குறையாத தொழில்துறை அனுபவம்

**கற்கைநெறி ஆரம்பம்:** ஒக்டோபர் 2024.

**விண்ணப்பக் கட்டணம்:** விண்ணப்பக் கட்டணம் 750 ரூபாவை நிகழ்நிலை (online) விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்த பின்னர் காட்டப்படும் பற்றுச்சீட்டில் (receipt) உள்ள கணக்கு இலக்கத்திற்குச் செலுத்த வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:** https://hu.kln.ac.lk/depts/linguistics/ எனும் இணையதள பக்கத்தில் உள்ள கூகுள் படிவத்தை நிகழ்நிலை (Online) மூலம் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் மக்கள் வங்கியில் செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணத்திற்கான அசல் (original) பற்றுச்சீட்டுடன் பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் சான்றிதழ் ஆகியவற்றின் நகல் பிரதிகளை "ஒருங்கிணைப்பாளர், மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு டிப்ளோமா, மொழியியல் துறை, களனிப் பல்கலைக்கழகம், களனி" (Coordinator, Diploma in Translation and Interpretation, Department of Linguistics,University of Kelaniya, Kelaniya) என்ற முகவரிக்கு 2024.08.31 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Diploma in Translation and Interpretation – 2024/2025 "எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

கற்கைநெறிக்கான மாணவர்களின் சேர்க்கை வரையறுக்கப்பட்டிருப்பதனால் முழுமையற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பங்கள் பெறப்படும் வரிசைக்கு ஏற்ப முன்னுரிமை அளிக்கப்படும்.

கற்கைநெறிக்கான மேலதிக விபரங்களை மொழியியல் துறையின் 011-2908786 எனும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பை ஏற்படுத்தியோ அல்லது https://hu.kln.ac.lk/depts/linguistics/ எனும் இணையதளத்திற்குப் பிரவேசிப்பதன் ஊடாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்**
**2024.07.28**



## தேசிய ஆராய்ச்சி பேரவை
### கல்வி அமைச்சு
### அரச-தனியார் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டம்

### தனியார் துறையிலிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

தேசிய ஆராய்ச்சி பேரவையினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரச-தனியார் பங்காண்மையானது தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பதற்கான ஆராய்ச்சியை நடத்துவதற்காக அரச துறை மற்றும் தனியார் துறைகளுக்கிடையில் பங்காண்மையை உருவாக்குவதற்கு உத்தேசிக்கின்றது.

முன்னெடுத்தல், பங்காண்மை வகை, நிதியிடல் மற்றும் ஆவெவே உருமாதிரி ஆகியன அடங்கலான அ-த ப நிகழ்ச்சித் திட்டத்தின் மேலதிக விபரங்களை https://www.nrc.gov.lk/index.php/private-public-partnership-programe/ என்பதிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2024 செப்டம்பர் 27 ஆம் திகதி வரையும் ஆவெவே இன் சமர்ப்பித்தலானது (கையொப்பமிட்ட வன்பிரதி) ஏற்றுக் கொள்ளப்படும்.

எந்தவொரு மேலதிக தகவலுக்கு, கொழும்பு-07, வித்யா மாவத்தை, 120/07, தேசிய ஆராய்ச்சி பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலகருடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 011-2675176 தொலைநகல்: 011-2675136 மின்னஞ்சல்: ppp@nrc.gov.lk

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி பேரவை.**



## வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

### பொதுமக்களுக்கான அறிவித்தல்

**விநியோக முறைமையின் நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் திட்டம்**

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம் முன்மொழியப்பட்ட மின்சார நம்பகத்தன்மையை மேம்படுத்தும் திட்டம் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறது மற்றும் ஆர்வமுள்ள தரப்பினரை தங்கள் கருத்துக்களை வழங்குமாறு அழைக்கிறது.

LECO இலங்கையின் மேற்குப் பகுதியில் நீர்கொழும்பு, களனி, கோட்டே, நுகேகொட, மொரட்டுவ, களுத்துறை மற்றும் காலி ஆகிய கரையோர நகர்ப்புறங்களில் இயங்குகிறது, மேலும் தற்போது சுமார் 615,000 வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கி வருகிறது. மின்சார விநியோக வலையமைப்பின் விநியோக நம்பகத்தன்மை காலப்போக்கில் மோசமடைந்துள்ளது மற்றும் வாடிக்கையாளர்களின் எந்தவொரு எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யவில்லை என்பதை LECO அடையாளம் கண்டுள்ளது.

எதிர்கால தேவையைப் பூர்த்தி செய்யும் போது, விரும்பிய அளவிலான கணனி நம்பகத்தன்மையை அடைவதற்கான ஒரு பொறியியல் தீர்வை LECO அடையாளம் கண்டுள்ளது, இது விநியோக முறைமை நம்பகத்தன்மை வலுப்படுத்தும் திட்டம் (DSRSP) என பெயரிடப்பட்ட ஒரு மேம்பாட்டு திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது

- பகுதி 1 மற்றும் 2 - களனி, கோட்டே மற்றும் நுகேகொட பகுதிகளில் நிலத்தடி கேபளிடல் மற்றும் பெக்கேஜ் உப மின்நிலையம்
- பகுதி 3 மற்றும் 4 - கோட்டே, நுகேகொட, களுத்துறை மற்றும் மொரட்டுவ பகுதியில் 11kV Feeder மறுசீரமைப்பு

முன்மொழியப்பட்ட திட்டம் விரிவான பொது domain பணிகளை உள்ளடக்கியது, வீதிகள் நெடுகில் கேபிள்களை நிறுவுவதில் கவனம் செலுத்துகிறது. இம்முயற்சி பொதுமக்களுக்கு குறுகிய கால சிரமங்களையும் இடையூறுகளையும் தவிர்க்க முடியாத வகையில் ஏற்படுத்தும். இந்த சவால்களை திறம்பட நிர்வகிக்க, LECO விரிவான தாக்கக் குறைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தும்.

முன்மொழியப்பட்ட திட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் கருத்துகளின் முக்கியத்துவத்தை LECO அங்கீகரித்திருப்பதால், LECO சமூக உறுப்பினர்களின் கருத்தை ஆய்வு செய்வதற்கும், புலனாய்வு செய்வதற்கும் பொது மற்றும் பங்குதாரர்களின் கருத்துக் கணக்கெடுப்பை நடத்துகிறது.

திட்டம் தொடர்பான உங்கள் கருத்துகளையும் கவனங்களையும் LECO பொது முகாமையாளருக்கு தபால் மூலமாகவோ அல்லது spap@leco.lk எனும் மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது WhatsApp (+094704673180) மூலமாகவோ அனுப்பவும்.

கருத்துக்கள் 2024 ஆகஸ்ட் 12ஆம் திகதி முடிவுறுத்தப்படும்.

www.leco.lk

**பொது முகாமையாளர்,**
**வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03.**



## அரசகரும மொழிகள் திணைக்களம்
### மொழி ஆய்வுகூடம்

### சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் அந்நியநாட்டு மொழிப் பாடநெறிகளுக்காக மாணவர்களைப் பதிவு செய்தல் - 2024

- சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் அந்நியநாட்டு மொழிப் பாடநெறிகள், 2024 செப்டெம்பர் முதலாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- அதற்கமைய, 2024.08.31 ஆம் திகதி வரை மாணவர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
- விண்ணப்பப் படிவங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk எனும் இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

**விசாரணைகளுக்கு :- 0112 889 457**

**அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம்**
**அரசகரும மொழிகள் திணைக்களம்**






## பதிவாளர் நாயகம் திணைக்களம்
### உரித்துரிமை காப்புறுதி நிதியம்

### பாதிப்புகளை சீர்செய்தல்

நிலஅளவைத் திணைக்களம், காணி உரித்து நிர்ணயத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் ஒன்றிணைத்து, 1998 இல.21 உரித்துரிமை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் அரசினால் அளவை மேற்கொள்ளப்பட்டு காணியின் உரித்து நிர்ணயத்தை உறுதி செய்யும் உரித்துரிமை சான்றிதழைக் கொண்ட உங்களுக்கு உங்களது காணி சம்பந்தமாக ஏதேனும் முறையற்ற அல்லது பிழையான பதிவின் காரணமாக ஏற்படுகின்ற நஷ்டம் அல்லது இழப்பாயின் அந்நஷ்டத்தை அல்லது இழப்பை சீர் செய்து கொள்ள முடியும் என நீங்கள் அறிந்துள்ளீர்களா?

உரித்துரிமை காப்புறுதி நிதியம் அமைக்கப்பட்டுள்ளது

அதற்காகும் :

நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் மாத்திரம் உரித்துரிமை காப்புறுதி நிதியத்தின் மூலம் பாதிப்புகள் சீர்செய்யப்படுவதுடன் இங்கு,

ஏதேனும் தவறான அல்லது பிழையான உரித்துரிமை பதிவு சம்பந்தமாக பாதிப்பை சீர் செய்து கொள்வதற்கு அது இடம் பெற்று 03 வருடத்திற்குள் சீர்செய்வதற்காக உரித்துரிமை கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தல் வேண்டும்.

நீதிமன்ற வழக்குத் தீர்ப்பின் மூலம் சீர்செய்தலை செலுத்த வேண்டியதாக கட்டளை பிறப்பிக்கப்படும் வேளையில், நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு ஒன்றை சமர்ப்பித்து இருப்பின் அல்லாது, அந்நீதிமன்றக் கட்டளையில் குறிப்பிடப்படும் தினம் முதல் மூன்று மாதத்திற்குள் அச் சீர்செய்தல் மேற்கொள்ளப்படும்.

சீர்செய்தல் 03 மாதத்திற்கு மேற்பட்ட காலம் தாமதமாகும் சந்தர்ப்பத்தில், முழுமையான சீர் தொகையை செலுத்தி முடிக்கும் வரை மேற்படி சீர்செய்தல் தொகை அல்லது மீதியாகவுள்ள அதன் நிலுவையின் அடிப்படையில் சட்டரீதியான வட்டி செலுத்தப்படும்.

1998 இல. 21 எனும் உரித்துரிமை பதிவு செய்யும் சட்டத்தின், 58,59 மற்றும் 60ம் பிரிவு மற்றும் 1,616/23 மற்றும் 2009.08.24 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இதற்கான விதிமுறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்புகள்,

**முகவரி - பதிவாளர் நாயகம்**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**பத்தரமுல்ல**
**ஸ்ரீ லங்கா**

**தொலைபேசி : 0112889517**
**பெக்ஸ் : 0112889517**
**மின்னஞ்சல் : rgdtitle@gmail.com**
**இணையதளம் : www.rgd.gov.lk**

## பகுதி 1 - அழைப்புக் கடிதம்

**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு**

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

**இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை**

முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்

# தலைமன்னார் துறைமுக அபிவிருத்திக்கு ஒரு சாத்தியமான ஆய்வை மேற்கொள்வதற்கான ஆலோசனை சேவை

1. இலங்கை அரசாங்கம் தலைமன்னார் துறைமுகத்தை அதன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சிறிய கப்பற் சரக்கு பொதிகளுக்கான பயணிகள் மற்றும் கப்பற் சரக்கு செயற்பாடுகளை எளிதாக்கும் வகையில் அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையானது உத்தேச அபிவிருத்திக்காக உரிய அதிகாரிகளிடம் இருந்து உரிய அனுமதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இருப்பினும், குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் வளர்ச்சியின் தொழில்நுட்ப, நிதி மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவது அவசியமாகும். இதன் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர், தலைமன்னார் துறைமுக அபிவிருத்திக்காக ஒரு சாத்தியமான ஆய்வை மேற்கொள்வதற்காக புகழ்பெற்ற ஆலோசனை நிறுவனங்கள் அல்லது கூட்டமைப்பிலிருந்து முன்மொழிவுகளை இத்தால் அழைக்கின்றார்.
2. ஆர்வமுள்ள தரப்பினர் 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் பின்வரும் முகவரியில் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். ஆலோசகர்கள் மேலதிக விபரங்கள் மற்றும் எழுத்துமூலமான தெளிவுபடுத்தல்களை பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
   பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி),

   **திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு,**
   **இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை,**
   **45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு -1, இலங்கை.**
   **தொலைபேசி இல. +94(0) 112325575**
   **தொலைநகல் இல. +94(0) 112323055**
   **மின்னஞ்சல் முகவரி: cepd@slpa.lk**
3. 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 2.00 மணிவரையில் மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி மற்றும் பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆலோசகருக்கான அறிவுரைகள், ஒப்பந்த நிபந்தனைகள், விதிமுறைக் குறிப்புகள், தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளுக்கான நிலையான படிவங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஆகஸ்ட் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சில் இடம்பெறும்.
5. வளமுள்ள ஆலோசகர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவுகள் மற்றும் நிதியியல் முன்மொழிவுகளின் பிரகாரம் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS) முறையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுகளை ''தலைமன்னார் துறைமுக அபிவிருத்திக்காக ஒரு சாத்தியமான ஆய்வை மேற்கொள்வதற்காக ஆலோசனை சேவைகளுக்காக முன்மொழிவுகளை அழைத்தல்'' எனக் குறிப்பிட்டு 2024 ஆகஸ்ட் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

   **தலைவர்,**
   **அமைச்சு ஆலோசனை பெறுகைக்குழு,**
   **துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
   **இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**

   கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் தொழில்நுட்ப முன்மொழிவுகளைக் கொண்ட கடிதவுறை உடனடியாகத் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும்.
7. ஆலோசகர்களுக்கு ஏற்படும் முன்மொழிவுகளைத் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பில் ஏற்படும் செலவுகள் மற்றும் கிரயம் மற்றும் தள விஜயம் தொடர்பான செலவுகள் மற்றும் கிரயம் தொடர்பான எவ்வித செலவுகளுக்கும் இலங்கைத் துறைமுக அதிகார சபை பொறுப்புகூறாது.

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக்குழு (CPCM)**

---

## பெறுகை அறிவித்தல்

# லங்கா சதொச லிமிடெட்டுக்கு பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கல்

**LSL/PRO/05/123/Shopping Bags/2024**

**கேள்விமனு இலக்கம்**

லங்கா சதொச லிமிடெட்டுக்கு பொருள் கொள்வனவுப் பை (சொப்பின் பேக்) வழங்கலுக்காக உள்நாட்டு விநியோகஸ்தர்கள், உள்நாட்டு பிரதிநிதிகள், அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து 03 மாத காலத்திற்கு லங்கா சதொச லிமிடெட் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்பு மற்றும் தேவை:

| இலக்கம் | பொருட்களின் விபரம் | அளவு (நீளம் x அகலம் x தடை) | அங்கீகரிக்கப்பட்ட உச்ச எடை | அளவு | அளவி (கேஜ்)/ தடிமன் (மைக்ரோன்கள்) | உற்பத்தி பொருள் | அச்சிடப்பட்டது/ அச்சிடப்படாதது |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொருள் கொள்வனவுப் பை (நடுத்தரமானது) | (17" x 10 x 05") | 04 கிலோ | 15,000,000 | மைக்ரோன் 20க்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |
| 2 | பொருள் கொள்வனவுப் பை (நடுத்தரமானது) | (17" x 10 x 05") | 04 கிலோ | 15,000,000 | மைக்ரோன் 26க்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |
| 3 | கைப்பிடியுடனான பொருள் கொள்வனவுப் பை | (13" x 07" x04") | 02 கிலோ | 14,000,000 | மைக்ரோன் 20க்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |
| 4 | கைப்பிடியுடனான பொருள் கொள்வனவுப் பை | (13" x 07" x04") | 02 கிலோ | 14,000,000 | மைக்ரோன் 26க்கு மேல் | குறைந்த அடர்த்தி கொண்ட பொலித்தீன் (LDPE) | அச்சிடப்படாதது |

விலைமனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை ரூபா 3,000.00 (மீளளிக்கப்படாதது) கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2024 ஜுலை 29 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒகஸ்ட் 20ஆம் திகதி வரையான காலத்தில் கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்சோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 ஒகஸ்ட் 8ஆம் திகதி மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

விலைமனுக்களை 2024 ஒகஸ்ட் 20 ஆம் திகதி பி.ப. 12.00 அல்லது அதற்கு முன்னர் மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/123/Shopping Bags/2024"**. என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் உள்ளூரில் இயங்கும் உரிமம் பெற்ற வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட மொத்த கூறுவிலையிடப்பட்ட பெறுமதியில் இருந்து நிபந்தனையற்ற 1% விலைமனு பிணையை ஒன்றை (மீளளிக்கப்படும்) கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது 2024 ஒகஸ்ட் 20 ஆம் திகதி பி.ப. 12.00க்கு நிறைவடைவதோடு அதன் பின் விலைமனுதாரர்களின் முன்னிலையில் அவை உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்,
திலினி - 070 1560428

கேள்விமனு, ஒப்பந்தம் வழங்கப்படும் இறுதி முடிவு லங்கா சதொச லிமிடெட் பெறுகைக் குழு தலைவர் வசமானதாகும்.

தலைவர்,திணைக்கள பெறுகைக் குழு
லங்கா சதொச லிமிடெட் , இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் ,வீதி கொழும்பு 02

---

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

# விவசாய விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பினைத் தொடர சிறப்பு சேர்க்கையின் கீழ் மாணவ/மாணவிகளை இணைத்துக்கொள்ளல் கல்வியாண்டு 2022/2023

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் விவசாய விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பினைத் தொடர்வதற்கு அரச மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை விவசாய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பெலிஹுல்லோயாவில் அமைந்துள்ள, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தினால் நடாத்தப்படும் நான்கு வருட, விவசாய விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவத்தில் (சிறப்பு) பட்டப்படிப்பினைத் தொடர இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

**தகைமைகள்**

1. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மூதவையால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படும் விவசாயம்/விலங்கு பராமரிப்பு/ விவசாய வணிக முகாமைத்துவம் ஆகியவற்றில் இரண்டு அல்லது மூன்று வருட உயர் டிப்ளோமாவொன்றினை (NVQ – Level 4) நிறைவு செய்திருத்தல் வேண்டும். அத்துடன்
2. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மூதவையால் அங்கீகரிக்கப்பட்ட, விவசாயத் துறை அல்லது அதனுடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட அரசு/தனியார் நிறுவனத்தில்* 5 வருட பணி அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன்
3. 40 வயதிற்குக் குறைவாக இருத்தல். அத்துடன்
4. பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் போட்டித் தேர்வில் தேர்ச்சி பெறுவதோடு, நேர்காணலையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளுதல் வேண்டும். (போட்டித் தேர்வு மற்றும் நேர்காணல் என்பன ஆங்கில மொழி மூலமாக நடாத்தப்படும்.)
   - தனியார் நிறுவனம் எனப்படுவது, நிறுவனப் பதிவுத் திணைக்களத்தில் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் அல்லது அரச சார்பற்ற நிறுவனமென பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் அல்லது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மூதவையால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழில்முனைவோர் நிறுவனம் ஆகும்.

விண்ணப்பதாரர்கள் தத்தமது பணி அனுபவத்தை உள்ளடக்கிய அடைவுக் கோப்பொன்றினை (portfolio) தொழில் வழங்குநரினால் சான்றளிக்கப்பட்ட சேவைக் கடித வடிவில் சமர்ப்பிக்க வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் மட்டுமே பட்டப் படிப்பினைத் தொடரும் பொருட்டு இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்வி மற்றும் மாணவர் சேவைகள், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், த.பெ. இல-02, பெலிஹுல்லோயா என்ற முகவரிக்கு தத்தமது பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை (9" x 4"), அனுப்புவதன் மூலம் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது விண்ணப்பப்படிவத்தை www.sab.ac.lk/notices என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2024.08.21 ஆம் திகதிக்கு முன்னதாக மேலே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

**பதிவாளர்**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**

### விவசாய விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பிற்கான சிறப்பு சேர்க்கையின் கீழ் மாணவ/மாணவிகளை இணைத்துக்கொள்ளல் 2022/2023 கல்வியாண்டு

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 0002246976 இல் ரூ. 500 ஐ வைப்புச் செய்து பெற்றுக் கொண்டப் பற்றுச்சீட்டு என்பவற்றை 2024.08.21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்வி மற்றும் மாணவர் சேவைகள், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் த.பெ.இல: 02, பெலிஹுல்லோயா எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவம்**

**A பிரிவு - தனிப்பட்ட விபரங்கள்**

முழுப்பெயர்: ..............................................................

பிறந்த திகதி: ..............................................................

வயது: ..............................................................

நிரந்தர முகவரி: ..............................................................

தபால் முகவரி: ..............................................................

தொலைபேசி இலக்கம்: ..............................................................

இலங்கைப் பிரசையா: ..............................................................

சமயம்: ..............................................................

தே. அ. அ. இலக்கம்: ..............................................................

தற்போதைய தொழில்: ..............................................................

தொழில் வழங்குனரின் பெயர்: ..............................................................

நிறுவனத்தின் பெயர்: ..............................................................

**B பிரிவு – கல்வித் தகைமைகள் :**

**க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறு:**

| வருடம் | சுட்டெண் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**டிப்ளோமா:**

| வருடம் | நிறுவனம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

**C பிரிவு - தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் (விபரங்களைத் தரவும்)**

| பாடம் | நிறுவனம் | இலிருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**D பிரிவு - தொழில் தொடர்பான விபரங்கள் (விபரங்களைத் தரவும்)**

| கருத்திட்டம் | தொழில் தொடர்பான தகவல்கள் | இலிருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

**E பிரிவு - விண்ணப்பதாரரின் சான்று:**

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்பதோடு சரியானவை எனவும் சான்றளிக்கிறேன்.

என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தவறானவை என கண்டறியப்பட்டால், எனது பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதையும் நான் அறிவேன்.

பல்கலைக்கழகத்தின் உள்வாரி அல்லது வெளிவாரி மாணவர்களுக்குரிய அனைத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப செயற்படுவேன் என இத்தால் நான் ஒப்புக்கொள்கிறேன். எவ்வகையிலேனும் என்னால் ஒழுங்குமுறை மீறப்பட்டால், தேவையேற்படின் பல்கலைக்கழத்தினால் எனது பதிவு இரத்துச் செய்யப்படும் என்பதையும் நான் அறிவேன்.

**திகதி: ..........................................** ..................................................................

**விண்ணப்பதாரியின் கையொப்பம்**

**F பிரிவு - தற்போதைய தொழில் வழங்குநரினால் நிரப்பப்படல் வேண்டும் (ஏற்புடையதெனின் மட்டும்)**

திரு. /திருமதி. /செல்வி. .......................................................................... அவர்கள், எமது ........................................... ஆக ................................................ இல் ............. திகதி முதல் ........................ வரை சேவை புரிகின்றார் எனவும், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானங்கள் மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பினைத் தொடரத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை சேவையிலிருந்து விடுவிக்க இயலும் / இயலாது எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முன்னோக்கி மேலனுப்ப பரிந்துரைக்கின்றேன்.

**பெயர்: ..............................................................**
**பதவி: ..............................................................**
**திகதி: ..............................................................**

..................................................

**தொழில் வழங்குநரின் கையொப்பம்**



# பொலிஸ் மாஅதிபரின் பணி இடைநிறுத்த உத்தரவை செல்லுபடியற்றதாக்கவும்

## சபாநாயகரிடமும் பாராளுமன்றிடமும் பிரதமர் கோரிக்கை

### பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த வெள்ளிக்கிழமையன்று விசேட அறிக்கை சமர்ப்பித்து ஆற்றிய உரை

பிரதமர் என்ற ரீதியில் இன்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் சார்பில் இந்த விசேட பிரகடனத்தை செய்ய எதிர்பார்க்கிறேன். கௌரவ சபாநாயகர் அவர்களே, நீங்கள் பாராளுமன்றத்தில் இருக்கும் இந்த தருணம் மிகவும் முக்கியமான தருணமாகும். நம் நாட்டு மக்களுக்கும், நாட்டின் அரசியலமைப்புக்கும், பாராளுமன்றத்துக்கும் இது முக்கியமானது. பாராளுமன்றம் தனது மேன்மையை காப்பாற்றிக் கொள்ள செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

எனவே, இன்றைய இந்த நிலைமைக்கு வழிவகுத்த இலங்கைப் பொலிஸ் மா அதிபர், பெயர், ஊர் விபரங்களை குறிப்பிட நான் முயற்சிக்க வில்லை. அவர் பொலிஸ் மா அதிபராக பதவி வகித்த போது, பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான விடயங்கள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முழு அதிகாரம் கொண்ட தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்புடன் செயற்பட்டார். பொலிஸ் மா அதிபரை பணியிலிருந்து இடைநீக்கம் செய்து உயர் நீதிமன்றம் கடந்த ஜூலை 25ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. மேலும், அது குறித்த அடுத்தகட்ட விசாரணை நவம்பர் பதினோராம் திகதிக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் என்பது முழு நாட்டிற்கும் தெரியும். புதிய ஜனாதிபதி பதவியேற்க உள்ளார். அதுவரை நமது நாட்டின் தேர்தல் ஆணைக் குழுவுடன் பொலிஸ் மா அதிபர் செயற்பட்ட விதம், நமது நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக அவருக்கு அளிக்கப்பட்ட முக்கிய பணியை இடைநிறுத்துவது போன்ற முடிவும் நாடாளுமன்றத்திற்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சில விடயங்களை மட்டும் நான் இங்கு முன்வைக்கிறேன். அரசியலமைப்பில் பல அடிப்படை உரிமை வழக்குகள் உள்ளன. அது பற்றிய விவரங்களை ஹன்சார்ட் பதிவுக்காக இங்கு முன்வைக்கலாம். கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்பின் 4 ஆவது சரத்தின்படி, வாக்குரிமை என்பது மக்களின் இறையாண்மையின் ஓர் அங்கமாகும். எனவே, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கங்கள் அரசியலமைப்பின் 103(2) வது பிரிவில் கூறப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் மேற்படி மனு மீது இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை நடைமுறையில் இருக்கும் இந்த தடை உத்தரவு முறையாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் 2024 நவம்பர் 11 வரை தடை உத்தரவு அமுல்படுத்தப்படும் என்ற தற்போதைய சூழ்நிலையின் விளக்கத்தின் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பு அமைந்துள்ளது. இதன் போது தேர்தல் ஆணைக்குழுவின் கருத்துகள் பெறப்படவில்லை. அரசியலமைப்பின் பிரிவு 41(இ)ll இன் கீழ், ஜனாதிபதியின் பரிந்துரையின் பேரில் அரசியலமைப்பு பேரவை அங்கீகரிக்காத வரை, 14 நாட்களுக்கு மேல் தொடர்ந்து பொலிஸ் மா அதிபராக பணியாற்றுவதற்கு எவரையும் நியமிக்க முடியாது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வாறான நிலையில், தற்போதைய ஜனாதிபதியும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும்போது, பதில் பொலிஸ் மா அதிபர் ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுவார்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, ஜனாதிபதித் தேர்தல் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. வேட்புமனு தாக்கல் செய்யும் திகதியும் வாக்களிக்கும் திகதியும் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர், அரசியலமைப்பின் 41(இ) பிரிவின் கீழ் ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரை நியமிப்பார். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று, தற்போதைய பொலிஸ் மா அதிபரை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தன் பின்னரேயே, சட்டபூர்வமாக நீக்கும் அதிகாரம் கிடைக்கும். கௌரவ அவைத் தலைவரும் அதை சுட்டிக் காட்டினார்.

தற்போதுள்ள சட்டத்தில் ஜனாதிபதிக்கு பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்க எந்த ஏற்பாடும் இல்லை. ஏற்பாடுகள் ஏதும் இல்லாததால், ஜனாதிபதி வேறு ஒருவரை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிப்பார் என உயர் நீதிமன்றம் எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில், பொலிஸ் கட்டளைச் சட்டத்தை ஆரம்பம் முதல் இறுதி வரை வாசியுங்கள். நான் பொலிஸ் கட்டளைச் சட்டத்தை சபையில் முன்வைக்கிறேன். தெரியாவிட்டால் சென்று படியுங்கள். கடந்த முறையும் முன்னைய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் நாம் இந்த பிரச்சினையை எதிர்கொண்டோம்.

அதனால்தான் பொலிஸ் மா அதிபரை திடீரென பதவி நீக்கம் செய்ய முடியாது. அப்படி முடியும் என்று நினைப்பவர்களும் உண்டு. ஆனால் அப்படி செய்ய முடியாது. உயர்நீதிமன்றம் தற்போதுள்ள சட்டத்தையே பின்பற்ற வேண்டும். எனவே, பொலிஸ் கட்டளைச் சட்டம், மேற்படி பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின் நிர்வாகத்தை பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைத்துள்ளது. பொலிஸ் மா அதிபர் தனது பணிகளைச் செய்வதைத் தடை செய்ய எந்த சட்ட விதிகளும் இல்லை. எனவே, பொலிஸ் மா அதிபரின் கடமைகளை நிறைவேற்றுவதைத் தடுக்கும் வகையில் ஜனாதிபதியால் பதில் நியமனம் வழங்க முடியாது.

முன்னாள் பொலிஸ் மா அதிபரே இன்னும் அந்தப் பதவியை வகிக்கிறார். பதவி வெற்றிடமாக இல்லை.

பல்வேறு வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன. அத்துடன், பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட விதம் குறித்தும் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்புச் சபை பாராளுமன்றத்தின் கீழ் உள்ளது. பாராளுமன்றத்திற்கு சமாந்தரமானதே சட்டவாக்கம். இது பாராளுமன்றத்தின் நீட்சியாகும், அப்படியானால் பாராளுமன்றம் எதிர்பார்க்கும் விதத்தில் முழு பாராளுமன்றமே தலையிட வேண்டும்.

எனவேதான் அரசியலமைப்பு சபையின் எந்த முடிவும் பாராளுமன்றத்தின் முடிவாக மாறுகிறது. அது பாராளுமன்றத்தின் விருப்பத்தை தெரிவிப்பதாகும். அரசியலமைப்புச் சபையின் முடிவுகள் பாராளுமன்றக் கட்டுப்பாட்டிற்கு மட்டுமே உட்பட்டவை. அரசியலமைப்புச் சபையின் செயல்முறைகள் மற்றும் தீர்மானங்களில் பாராளுமன்றத்தைத் தவிர வேறு எந்த நிறுவனமும் செல்வாக்கு செலுத்த முடியாது.கௌரவ சபாநாயகர் அவர்களே, பலர் எண்களின் கூட்டுத்தொகையை கூட்டிக் கழித்தல் பற்றி வியாக்கியானம் செய்கின்றனர். நான் அதைப் பற்றி பேசவில்லை. அப்போது பேசவும் இல்லை. அரசியலமைப்புச் சபையின் உள்ளகத் தீர்மானங்கள் வெளிப்புறமாக எடுக்கப்பட மாட்டாது என்பதில் அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் நாங்கள் தெளிவாக உள்ளோம். எதிர்க்கட்சித் தலைவரும் உடனிருந்தார். நானும் அங்கே இருந்தேன். கௌரவ சபாநாயகர் இதன் தலைவராக உள்ளார். அதிகாரபூர்வ தலைவர். மற்ற உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

# ஆரோக்கியம் உங்கள் நிதிசார் மூலோபாய திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்

செயல்திறன் பயிற்சியாளரும் தொழிலதிபருமான யசஸ் ஹேவகே, 'AIA Voices' குறித்த தனது நுண்ணறிவைப் பகிர்ந்து கொள்கிறார்.

நிதித் திட்டமிடலைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, சேமிப்பு, முதலீடுகள் மற்றும் பிற நிதிசார் அம்சங்களை நாங்கள் அடிக்கடி கருத்தில் கொள்கிறோம். நாம் குறைந்த கவனம் செலுத்தும் பகுதியாக உங்கள் ஆரோக்கியம் காணப்படுகின்றது. உங்கள் நிதித் திட்டமிடலின் வருவாயை அனுபவிக்க நல்ல ஆரோக்கியம் தேவை என்பதால் இது முக்கியமானது என்று யசஸ் கூறுகிறார்.

முன்னாள் வங்கியியல் நிபுணராக திகழ்ந்த பின்னர் செயல்திறன் பயிற்சியாளர் மற்றும் தொழில்முனைவோராக மாறிய யசஸ் ஆயிரக்கணக்கான இலங்கையர்களுக்கு மிகவும் சமநிலையான வாழ்க்கை வாழ்வதற்கும் ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை வளர்ப்பதற்கும் வழிகாட்டியுள்ளார். 'AIA Voices' இல் பேசும் போதுவாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த விரும்பும் எவருக்கும் தனது சிறந்த குறிப்புகள் சிலவற்றைப் பகிர்ந்து கொண்டார்.

**ஆரோக்கியம் ஒருமுதலீடு:**

நிதித் திட்டமிடலில் சுகாதாரத் திட்டமிடலும் இருக்கவேண்டும், ஏனெனில் உடல்நலக்குறைவு நிதி இலக்குகளை சீர்குலைக்கும். பணத்தைச் சேமிப்பது ஒரு நல்லபழக்கம், ஆனால் அது நிலையான, நல்ல ஆரோக்கியத்தை விளைவிக்கும் பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளுடன் சேர்ந்து செல்லவேண்டும்.

**உடற்பயிற்சியும் மனதிற்கானது**

உடல் உடற்பயிற்சி உடலுக்கு நல்லது, ஆனால் இது மனதிற்கும் முக்கியமானது, ஏனெனில் இது நல்ல முடிவுகளை எடுப்பதற்குத்தேவையான சிந்தனைத் தெளிவை வழங்குகிறது. ஒரு எளிய நடை அல்லது சிறிய சைக்கிள் சவாரி மூலம் உங்கள் மனதை புத்துணர்ச்சி அடையச்செய்யலாம்.

**நல்லஉணவு சிறந்த ஆரோக்கியத்திற்கு பங்களிப்பு செய்யும்**

ஆரோக்கியமாக சாப்பிடுவது என்பது உங்கள் உணவு வேளைகளில் எப்போதும் கடுமையான மாற்றமாக இருக்கவேண்டியதில்லை. நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்பதில் கவனம் செலுத்துவது மற்றும் ஆரோக்கியமான உணவைக் கண்டறிய முயற்சியை மேற்கொள்வது தீர்வாக அமையும். உதாரணமாக, சத்தான காலை பானத்திற்காக நாடுமுழுவதும் கிடைக்கக்கூடிய உணவுச்சாலைகள் உள்ளன. பின்னர் உங்கள் மீதமுள்ள உணவுகளுக்கு, "லோ ப்ரவுன்" முறையாக இருக்கலாம், அது ரொட்டி, அரிசி அல்லது சர்க்கரை எதுவானாலும்.

**வெறுமனே உறங்காதீர்கள் - விண்ட் டவுன்**

ஒரு நல்ல இரவு தூக்கம் உடலுக்கும் மனதுக்கும் அதிசயங்களைச் செய்யும், மேலும் நீங்கள் வழக்கமான அல்லது தூக்கத்திற்குமுன் இதனை பின்பற்றினால் இன்னும் சிறப்பாக இருக்கும். ஒரு நேரத்தை அமைத்து அதை நோக்கி வேலை செய்யுங்கள். உங்கள் மின்னணுசாதனங்களை சுற்றி உங்கள் உடலை ஓய்வெடுக்க தயார் செய்யுங்கள்.

**உடற்பயிற்சி செய்வதற்கு எந்த இடமும் ஏற்றதே**

நாம் அனைவரும் பிஸியான வாழ்க்கையைக் கொண்டிருக்கிறோம், சில சமயங்களில் வேலைபளு காரணமாக உடற்பயிற்சியை தியாகம் செய்யவேண்டும் என்று தோன்றலாம். ஆனால் உடற்பயிற்சியை எங்கும், எந்தநேரத்திலும் செய்யலாம். சுவர் புஷ்-அப்கள் அல்லது சுவர் குந்துகைகள் போன்ற எளிய செயல்களை முயற்சிக்கவும், அவை எங்கும் செய்யப்படலாம் மற்றும் வியர்வை அல்லது சோர்வை ஏற்படுத்தாது.

**காப்பீடு என்பது ஒரு நிதி திட்டமிடல் கருவியாகும்:**

மருத்துவ அவசர நிலைகள் நீங்கள் கொண்டுள்ள எந்தவொரு நிதி இலக்குகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம். ஏனெனில் அது சேமிப்பை வெளியேற்றி வருவாயைத் தடுக்கலாம். மன அமைதியை அளிக்கும் போது எதிர்பாராத நிகழ்வுகளில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள காப்பீடு ஒரு சிறந்த வழியாகும். இது உங்களுக்கான ஒரு முதலீடு.

'AIA Voices' என்பது உடல், மன மற்றும் நிதி ஆரோக்கியம் மற்றும் ஸ்திரத்தன்மை மூலம் தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக இலங்கையின் முன்னணி மற்றும் வேகமாக வளர்ந்துவரும் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான AIA இன்சூரன்ஸின் ஒரு முயற்சியாகும். இது ஒரு அறிவைப் பகிரும் தளமாகும், நாம் அனைவரும் எவ்வாறு சிறந்த வாழ்க்கையை வாழலாம் என்பது குறித்த பெறுமதியான அனுபவ அறிவினை பகிர்ந்து கொள்ளும் ஊக்கமளிக்கும் இலங்கையர்களைக் கொண்டுள்ளது.




## போதை...

(04 ஆம் பக்க தொடர்ச்சி)

வரலாறு முழுவதும், ஹோமாகம மக்கள் நிதானக் கொள்கைக்கு மதிப்பளித்தனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் மாகம்மன பஞ்ஞானந்த தேரர்

"ஹோமாகம என்பது எமது மகாபோதி நிறுவனத்தின் தலைவராக இருந்த காமனி ஜயசூரியவின் சொந்த ஊராகும். இது ஒரு பௌத்த நகரம். ஜயசூரிய அங்கு இருக்கும் வரை ஹோமாகமவில் மாட்டிறைச்சி கடைகளுக்கு, மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதன் பின்னர், கலாநிதி பந்துல குணவர்தன நிதான சக்திக்கு தலைமை தாங்கினார். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பிடிபன வெளிநாட்டு மதுபான சாலையிலிருந்து எவ்வளவு மீற்றர் தொலைவில் பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகம் அமைந்துள்ளது என பாருங்கள். அவற்றிற்கு அருகில் இன்னும் எத்தனை பல்கலைக்கழகங்கள், பிரதான பாடசாலைகள், அரசு நிறுவனங்கள் உள்ளன? இலங்கையில் அதிக சதவீத பௌத்தர்களைக் கொண்ட நகரம் ஹோமாகம ஆகும். வரலாறு நெடுகிலும் அநாகரிக தர்மபாலவின் நிதானக் கொள்கையின்படி பௌத்த ஒழுக்கத்துடன் வாழ்ந்த மக்களாகவே ஹோமாகம மக்கள் இருந்துள்ளனர்.

இந்த மதுபான சாலைக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை ஹோமாகம மக்களும் அப்பகுதியின் சங்கரத்தினராகிய நாமும் கடுமையாக எதிர்க்கின்றோம். இதன் பின்னணியில் சிங்கள பௌத்த சக்தியை அழிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இருக்கலாம். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த அநியாயத்தை ஹோமாகம மக்களுக்குச் செய்ய வேண்டாம் என்று சொல்கிறோம்.

இந்த மதுபான உரிமத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என அப்பகுதியின் பக்தியுள்ள மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்" என்றார். மிக விரைவாக பிடிபன மதுபான சாலையை மூடி விடுங்கள். – பிடிபன உத்தராராம விகாரை உள்ளிட்ட விகாரைகளின் விகாராதிபதி மாதுலுவாவே தம்மிக தேரர்.

"காமினி ஜயசூரிய ஹோமாகம தொகுதியில் மாட்டிறைச்சிக் கடைகள், மதுபான சாலைகள் அனைத்தையும் மூடினார். ஹோமாகம என்பது 98% சிங்கள பௌத்தர்கள் வாழும் நகரமாகும். சமீபத்தில் தான் இந்த மதுபான சாலையைத் திறக்க முயன்றனர். இவ்வாறு புதிதாக திறக்கப்பட்ட இந்த மதுபான சாலையைச் சுற்றி தேசிய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அறநெறி பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்கள் உள்ளன. தயவு செய்து இந்த பிடிபன வெளிநாட்டு மதுபான சாலையை சீக்கிரம் மூடுங்கள் என ஆட்சியாளர்களை வற்புறுத்துகிறோம்" என்றார்.


## விலைக்கோரல் அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| விலைக்கோரல் இலக்கம் | 25/07/001/0042/001 |
| விலைக்கோரல் விபரம் | சிற்றுண்டி மற்றும் பலசரக்கு விற்பனை நிலையத்தை தொழிற்படுத்தல் அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் திணைக்களங்களுக்கு தேநீர் விநியோகம் என்பவற்றுக்கான பணி வழங்குநர் ஒருவரை இரு ஆண்டுகளைக் (02) கொண்ட காலப்பகுதிக்கு தெரிவுசெய்வதற்கான விலைக்கோரல் |
| விலைக்குறிப்பீட்டை மூடுதலும் திறத்தலும் | திகதி : 21.08.2024<br>நேரம் : 1430 மணி<br>அமைவிடம் : தலைமை அலுவலகக் கட்டடம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 |
| இடத்தைப் பார்வையிடுதலும் விலைக்குறிப்பீட்டிற்கு முந்திய கூட்டமும் | திகதி : 08.08.2024<br>நேரம் : மு.ப 9.00 தொடக்கம் மு.ப 11.00 வரை<br>அமைவிடம் : தலைமை அலுவலகக் கட்டடம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 |

ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் கீழேயுள்ள இணைப்பைப் பயன்படுத்தி விலைக்கோரல் ஆவணங்களைத் தரவிறக்கம் செய்யலாம்

https://www.cbsl.gov.lk/en/tenders

மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரைத் தொடர்புகொள்ளவும்
011 2398808 /011 2477279

பணிப்பாளர், அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி



## Ministry of Plantation Industries
## Rubber Research Institute of Sri Lanka

## VACANCIES

Applications are invited from the citizens of the Democratic Socialist Republic of Sri Lanka who possess the requisite qualifications to fill the following vacancy in the Rubber Research Institute of Sri Lanka.

### Deputy Director Research (Biology) (HM 1-3)

Please visit the Institute's Website (www.rrisl.gov.lk) for details.

**Application Procedure**

Applications prepared, according to the guidelines mentioned in the website, should be sent under registered post to reach the address given below on or before 12.08.2024. The post applied for should be mentioned on the top left corner of the envelope. Applicants from Government Departments / Corporations / Boards / Private Sector Establishments should forward applications through their respective Heads of Institutions.

Applications not conforming with the requirements given in the Website will be rejected.

**Director**
**Rubber Research Institute of Sri Lanka**
**Dartonfield**
**Agalawatta.**
24.07.2024

# பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழர்களின் ஒற்றுமை உலகுக்கு புலப்படும்

## முன்னாள் வடக்கு முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரன்



கட்சிகளுள் சிக்கல்கள் எழுவதை வைத்து தமிழ் மக்களிடையே சிக்கல்கள் எழுந்துள்ளதாகக் கருதக்கூடாது. நாம் யாவரும் தமிழர்களாகச் சிந்தித்தே தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க இருக்கின்றோம் என்கிறார் முன்னாள் நீதியரசரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன். தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய செவ்வியில் தமிழ் கட்சிகள் இணைந்து பொது வேட்பாளரை முன்னிறுத்துவது உறுதியே. என்றும் கூறினார்.

**கேள்வி : ஜனாதிபதித் தேர்தல் பிற்போடப்பட வேண்டும் என்று நீங்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கின்றீர்கள். அதுவும் தமிழர் தரப்பிலிருந்து தேர்தல் பிற்போடப்பட வேண்டும் என ஒலிக்கும் குரல் உங்களுடையதாகத்தானிருக்கும். இதற்கான முக்கிய காரணம் என்ன? இலங்கையின் பொருளாதாரத்தை அது மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கும் என்பதைத்தவிர வேறு காரணங்கள் இருக்கக்கூடுமா?**

பதில் : பொருளாதாரம் பாதிக்கப்படும் என்பதோடு இன்னுமொரு காரணம் இருக்கின்றது. அதனை வெளிக் கொண்டுவரலாமா வேண்டாமா என்று தடுமாறிக் கொண்டிருந்தேன். உங்கள் கேள்வியின் பின்னர் அந்தக் காரணத்தையும் சொன்னால் நன்மை பயக்கும் என்று நம்புகின்றேன்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கும் பெரும்பான்மை ஆதரவு கிடைக்காது என்று நம்புகின்றேன். வெற்றி பெறுபவர் நூற்றுக்கு ஐம்பது சதவிகித வாக்குகளைப் பெறவேண்டும். அவ்வாறான நிலையில் தற்போதிருக்கும் நிலைமையை சீர்கெடுக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் வந்தால் என்ன நடக்கும் என்று நினைத்துப் பார்க்கின்றேன். தமிழ் மக்கள் இம்முறை தமிழ் பொது வேட்பாளருக்கே பெரும்பாலும் வாக்களிப்பர். அந்த நிலையிலே தோற்பவர்கள் வெல்பவருக்கு இக்கட்டை ஏற்படுத்த எடுத்துக் கொள்ளும் ஆயுதம் “தமிழ் மக்கள் எமக்கு வாக்களிக்காததாலேயே நாம் வெற்றி அடையவில்லை” என்ற கோஷமாக இருக்கும்.

இவ்வாறான கோஷங்கள் மற்றும் செயல்களால் பொருளாதாரம் மோசமடையும். ஐ.எம்.எவ் கட்டாயமாக அடுத்த தவணைப் பணத்தைத் தரமாட்டார்கள். பதவி வகிப்பவர்கள் பிறநாடுகளை நாட வேண்டிவரும். அந்த நாடுகளிடம் எமது நாடு சரணடைய வேண்டிவரும். பலதையும் சிந்தித்தே தேர்தலைப் பின்போடுங்கள். தற்போதைய பொருளாதார நிலையை மேம்படுத்த வழி அமையுங்கள் என்றேன். மேலும் நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் சேர்ந்து சிந்தித்து நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்றும் கூறியுள்ளேன்.

**முன்னைய கூட்டுக்கள் போல் நேரத்திற்குத் தகுந்தவாறு உண்டாக்கப்பட்ட ஒன்றல்ல.**

**கேள்வி : குறிப்பாக ரணிலுக்கு இன்னமும் குறைந்தது இரண்டு வருடங்களாவது அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தீர்கள்?**

பதில் : சரியோ பிழையோ ரணில் பொருளாதார ரீதியாக பல நல்ல விளைவுகளை வெளிக்காட்டியுள்ளார். நாடு ஸ்திரமான நிலையில் உள்ளது. புதிதாக வருபவர்கள் தாம் இவரிலும் பார்க்க மேம்பட்டவர்கள் என்பதை வெளிக்காட்ட வேறு நடவடிக்கைகளில் இறங்குவார்கள். இதைப்பார்த்து ஜே.வி.பி தொழில் சங்கங்களை முடுக்கிவிடுவார்கள். நாடு அல்லோல கல்லோலப்படும். இதனால் முக்கியமாகத் தமிழ் பேசும் மக்களே பாதிக்கப்படுவார்கள்.

எல்லோரும் நான் ரணிலை ஆதரித்தே என் கருத்துக்களை வெளியிடுகின்றேன் என்று நினைக்கின்றார்கள். அது தவறு. நாடு செல்லக்கூடிய செல்வழியை அவதானித்தே முன்கூட்டி எச்சரிக்கின்றேன்.

**கேள்வி : தமிழ் மக்கள் பொதுச்சபை மற்றும் தமிழ் தேசிய கட்சிகள் என்பவற்றுக்கிடையிலான ஒப்பந்தமொன்று அண்மையில் கைச்சாத்தாகியுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்கான முக்கிய காரணம் என்ன?**

பதில் : இதுவரை காலமும் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களுக்கே வாக்களித்து வந்துள்ளார்கள். எனினும் அவர்கள் பதவிக்கு வந்ததும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தட்டிக் கழித்தே வந்துள்ளனர். இனிமேலும் அவர்களை நாம் நம்பிக்கெட வேண்டிய அவசியமில்லை. எமது முக்கிய குறை ஒற்றுமையின்மையே. பொது வேட்பாளரை நிறுத்துவதில் இம்முறை அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் சிவில் சமூக பிரதிநிதிகளும் முன்னிற்கின்றார்கள். இவர்கள் யாவரும் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒருங்கிணைந்தே தமது கருத்தை வெளியிட்டு வருகின்றனர். ஆகவே தமிழ் பொது வேட்பாளரை முன்வைத்து தமிழ் மக்களின் ஒற்றுமையை உறுதி செய்ய உள்ளோம்.

அடுத்தது எமது பொது வேட்பாளர் மூலம் நாம் சிங்கள மக்களையும் சர்வதேச மக்களையும் எம்மைத் திரும்பிப் பார்க்கச் செய்ய இருக்கின்றோம். எமது அவலங்களை உலகறியச் செய்வது மட்டுமல்லாமல் எமது தேசியப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவர என்ன செய்யலாம் என்று உலக நாடுகளுக்கு எடுத்துக் கூற இருக்கின்றோம். ஏற்கனவே நான் zoom மூலம் பன்னாட்டு அரச அலுவலர்களுடன் பேசி எமது நிலையை அவர்களுக்கு எடுத்துரைத்துள்ளேன். எமது பொது வேட்பாளர் கூடிய பலத்துடன் இதனைச் செய்யலாம். “மக்கள் வாக்கு” ஒன்று வேண்டும் என்று சர்வதேச நாடுகளை நோக்கிக் கூறலாம். அதற்கான காரணங்களை உலகறியச் செய்யலாம். ஆகவே நாங்கள் கைச்சாத்திட்டதற்குக் காரணம் செம்மையான ஒரு கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் தமிழ் பொது வேட்பாளரை அடையாளப்படுத்தி எமது கொள்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் ஊரறிய உலகறியச் செய்யும் நோக்குடனேயே.

**கேள்வி : பாராளுமன்றத்தில் அதிக பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் தேசிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளுமே இந்த ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்பது பின்னடைவாக அமையாதா?**

பதில் : இல்லை. ஏன் என்றால் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பாராளுமன்ற அங்கத்தவர் சிவஞானம் ஸ்ரீதரன் தான் எங்கள் தேசிய மகாநாட்டில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரைத் தேர்தலில் நிறுத்துவதை ஆதரித்து உரக்கப் பேசியுள்ளார். மாவை சேனாதிராஜாவும் தமிழ் பொது வேட்பாளர் சம்பந்தமாக சார்பாகவே பேசி வருகின்றார். தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையோர் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள்.

அடுத்து தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் இதுவரையான கருத்துக்கள் தமிழ் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதால் அடிபட்டுப்போயுள்ளன. அவர்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று கூறியது சிங்கள வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கப்படாது என்ற காரணத்தினாலேயே. ஒரு தமிழ் பொது வேட்பாளரை முன்வைத்து அவ்வாறு அவர்கள் முடிவு எடுக்கவில்லை.

ஆகவே தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதில் அவர்களுக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்?

ஆகவே அக்கட்சிகளின் பெரும்பான்மையோர் தமிழ் பொது வேட்பாளரை முன்நிறுத்துவதையே விரும்புகின்றார்கள்.

**தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையானோரின் ஆதரவு உண்டு**

**கேள்வி : இவ்வாறான கூட்டுக்கள் தமிழ் அரசியல் பரப்பில் இதற்கு முன்னரும் ஏற்பட்டுள்ளன. அனேகமானவை தேர்தலை மையமாகக் கொண்ட கூட்டுக்கள். அவ்வாறானதாகவே இதுவும் பார்க்கப்படலாமா?**

பதில் : இல்லை. தமிழ் சிவில் சமூகம் சிரமம் பாராது வடகிழக்கு முழுவதும் திரிந்து ஏற்படுத்திய ஒரு விழிப்புணர்ச்சியின் பலனாகவே ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அது பெரும்பான்மையான வட,கிழக்கு தமிழ் மக்களின் குரலாகவே ஒலிக்கும். இவர்களின் கூட்டு உண்மையானது. முன்னைய கூட்டுக்கள் போல் நேரத்திற்குத் தகுந்தவாறு உண்டாக்கப்பட்ட ஒன்றல்ல.

**கேள்வி : தமிழ் பொது வேட்பாளர் ஒருவரின் தேவையை வலியுறுத்துபவர்களில் நீங்களும் ஒருவர். தற்போதைய ஒப்பந்தத்தில் பிரதான இரண்டு தமிழ் கட்சிகள் கைச்சாத்திடாத நிலையில் பொது வேட்பாளர் சாத்தியப்படுமா?**

பதில் : கட்சிகளுள் சிக்கல்கள் எழுவதை வைத்து தமிழ் மக்களிடையே சிக்கல்கள் எழுந்துள்ளதாகக் கருதக்கூடாது. நாம் யாவரும் தமிழர்களாகச் சிந்தித்தே தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க இருக்கின்றோம். கட்சிகளாக முடிவெடுத்தல்ல. எது எவ்வாறிருப்பினும் தமிழ் அரசுக் கட்சி இது வரையில் எந்த முடிவும் எடுக்கவில்லை.

அதன் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவும் சிரேஷ்ட உறுப்பினர் ஸ்ரீதரனும் தமிழர்களாக முடிவெடுத்துவிட்டார்கள். பொது வேட்பாளரை முன்னிறுத்துவது உறுதியே.

**கேள்வி : தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் வடக்கின் செயற்பாடுகளில் கிழக்கு மக்களும் இணைக்கப்பட்டிருக்கிறார்களா?**

பதில் : ஆம். சிவில் சமூகத்தினர் கிழக்கின் முக்கிய மாவட்டங்கள் யாவற்றிலும் சுற்றுப் பயணம் செய்து வந்துள்ளார்கள். அரசியல் தலைவர்களையும் சந்தித்து வந்துள்ளார்கள். கிழக்கிலிருந்து பொது வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படக்கூடும் என்றே நான் நம்புகின்றேன்.

**கேள்வி : ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொது வேட்பாளராக யாரை நியமிப்பது என்பது தொடர்பிலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதா?**

பதில் : தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதால் பொது வேட்பாளரின் பெயரும் விரைவில் வெளியிடப்படும் என்று நம்புகின்றேன்.

**வாசுகி சிவகுமார்**


# எந்திரவியல் தொழில் நுட்ப நிறுவனம் கட்டுநாயக்க



தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைகளுக்கு
பயிலுநர்களை உள்வாங்கல்
2024 குழு

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
கல்வி அமைச்சு
திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி பிரிவு

- மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2024.07.26ஆம் திகதிய 2395இன் வர்த்தமானி அறிவித்தல் அல்லது www.iet.edu.lk இற்கு பிரவேசிக்கவும்
- எமது இணையதளத்தில் இருந்து குறித்த விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்தலை (Download) மேற்கொள்ள முடியும்.
- விண்ணப்பங்களை ஏற்கும் இறுதி திகதி 2024 ஒகஸ்ட் 30

NAITA

தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,
இலக்கம் 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை, ராஜகிரிய.



தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வேலைவாய்ப்பு

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கிருளபனையில் அமைந்துள்ள Apartment Complex இல் வசிக்கும் ஒரு சிறிய குடும்பம் ஒன்றுக்கு வேலை செய்வதற்கு ஊழியர் ஒருவர் தேவை. 50 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். மேலதிக தொடர்புகளுக்கு. தொ.பே. 077 7313478. 050089

கொழும்பு தலவத்துகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண் தேவை. சம்பளம் 40, 000 - 45, 000 அனுபவத்தின் அடிப்படையில் 55 வயதிற்குகுறைந்தவர்கள் , 0777584961, 0777456579 050288

**325 தொழில்துறை பொது**

எமது தொழிற்சாலைக்கு 18 - 40 வயதுக்குட்பட்ட ஆண்கள் தொழிற்சாலை ஊழியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். மாத சம்பளம் ரூ.40, 000/ - OT மற்றும் பிற கொடுப்பன வுகளுடன் ரூ.50, 000/ - க்கு மேற்பட்ட வருமானம் மதிய உணவுடன் தங்குமிடம் இலவசம். முகாமையாளர், Ice Cubis Private Limited, 9, Aluth Road, Hunupitiya, Wattala. 0776819009 050337

சவுன்ட்ஸ் லைட்டிங் LED திரை வழங்கல் நிறுவனத்தில் சேவைக்கு பயிற்சியளிக்கக் கூடிய இளைஞர்கள் தேவை.0707322815 050222

புறக்கோட்டையில் அமைந்திருக்கும் தருமண அழைப்பிதழ் மற்றும் அச்சக கடதாசி நிருவனத்திற்கு அனுபவம் உள்ளவர் மற்றும் அனுபவம் இல்லாதவர் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு. தொ.பே. 077 7313478 050076

புறக்கோட்டையில் அமைந்திருக்கும் திருமண அழைப்பிதழ் மற்றும் அச்சக கடதாசி நிருவனத்திற்கு சுத்திகரிப்பு உதவியாளர் தேவைப்படுகின்றார்கள். தங்கும் இடவசதிகள் இல்லை. மேலதிக தொடர்புகளுக்கு. தொ.பே. 077 7313478. 050084

புறக்கோட்டையில் அமைந்துள்ள அச்சக கடதாசி நிருவனம் ஒன்றிடகு Paper Cutter (Guillotione) இல் வேலை செய்வதற்கு ஒரு அனுபவமுள்ள ஊழியர் தேவைப்படுகின்றார். மேலதிக தொடர்புகளுக்கு தொ.பே. 077 7313478. 050091

வாகனம் செலுத்தவும் உணவு சமைக்கவும் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 60 - 70 வயதுள்ள நோயற்ற நேர்மையான ஒருவர் தேவை. 0761118152. 049330

### காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

களுபோவிலவில் 19.4 பே வீடு மற்றும் 2 மதிப்பீட்டு இலக்கங்களுடன் விற்பனைக்கு வைத்தியசாலை வீதிக்கு 20 மீற்றர் 10 நிமிட பயணத்தில் காலி வீதிக்கு, 7 படுக்கையறைகள் வீடு, மேல் மாடியானது கிளினிக், ப ற்சி கிச்சை மற்றும் கால்நடை மருத்துவம் நடத்துவதற்கு மருத்துவருக்கு உகந்தது, தரை மாடி கிளினிக் நட த்துவதற்கு, விலை 89, 0 00.000 ரூபா ஆதனமானது சிறந்த முகப்பு வீதியைக் கொண்டது. காணியானது இரண்டாக பிரிக்கலாம். கொள்வனவுக்காரருக்கு அரைவாசி மாத்திரமே வேண்டுமென்றால் அது பரிசீலிக்கப்படும் தொலைபேசி - 0777362600 050488



**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

நீர்கொழும்பு தளுபத, செ. அந்தோனி பாதையில் ஆலயத்திற்கு சிலாபம் வீதியில் 100 மீட்டர் தூரத்தில் 10.5 பேர்ச் இல் அமைந்த முழுமையான வீடு விற்பனைக்கு.(நீர்கொழும்பு மாநகர சபை எல்லையில் ) 0777 - 307773 , 072 - 3325225 050351

10 பேர்ச்சுக்கள் காணி விற்பனைக்குண்டு . கிறீன்வுட் டெரஸ் II கெரவலப்பிட்டிய , வத்தளை. தொலைபேசி - 077 7315173. 049868

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

கண்டியில் வீடு விற்பனைக்கு. மாநகர சபை எல்லைக்குள் வாவிக்கு, மாளிகாவைக்கு மற்றும் பாடசாலைகளுக்கு நடைதூரம். பலமாக கட்டப்பட்ட 3000 ச.அடி, 22 பேர்ச் காணி, 5 படுக்கையறைகள், 4 குளியலறைகள், அமரும் பகுதி, சாப்பிடும் பிரதேசம். இன்னும் பலவும். முன்னும் பின்னும் தோட்டம். Three-phase மின்சாரம் SLT Fibre Connection விடுதியாக மாற்றலாம். தொலைபேசி - 081-2219534. 044741

தினகரன் வாரமஞ்சரி

## சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு **330/-** ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## VALUABLE HOUSE WITH 10 PERCH LAND IS FOR SALE

For 15 million

- 02 Bedrooms • Living room
- 01 bathroom • 01 Servant Toilet • Kitchen
- Parapet wall right round the house • Clean water
- 800m to Colombo - Negombo Main Road • 700m to Kandana Mazenod College
- 500m to Kandana Railway station • 700m to Kandana Town

0761 352 170/ 0761 352 171
Address : No, 116/10, St.Mary's Road, Kandana.

## POLYCARBONATE SHEDS, ALL OTHER IRON WORKS AND HOUSE PAINTING

TRUSTED SERVICE OF SA CONSTRUCTION
saconstruction@gmail.com
+94 70 24 955 97 | +94 70 66 222 88

## BORALESGAMUWA

FACING COLOMBO - HORANA MAIN ROAD
50 PERCH LAND AVAILABLE FOR RENT

Vicinity of Sampath bank, Park etc. Probably the best business location in town. Electricity/ water available

PLS CALL : 0777 845 951

## Steam Boiler Fire Tube For Sale

5.4 Ton - 10 Bar - 3 Pass Furance Oil - Japanese Orgin
Low Usage
at Resonsble Price
(mint condition)

0707324344 / 011438202

## VALUABLE PROPERTY FOR SALE IN NAWINNA, NUGEGODA

- 20.1 Perches, 5,286 Sq.Ft. house
- 5 Rooms, 3 Washrooms, Large Hall
- 20 Feet Wide Road
- Close proximity to Maharagama, Wijerama, Nugegoda, Kalubowila
- Accessible to main Bus Stands, Schools, Hospitals, Supermarkets, High Level Road
- Calm, Quiet Environment
- Viewing Available on Appointment

Contact: 070 145 64 11
SELLING FOR LAND VALUE

## VICTORIAN GUEST Bandarawela

victorianbungalow.lk
2km Away from Railway Station & Bandarawela Town

බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...

Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available

077 3 711 196 | 070 2 536 896

## HOUSE OF GLASS

Tempered Glass

- Shower Cubicals
- Shop front in all colours & designs
- Flat & in bent glasses
- Tempered glass mirrors

S/S Shower Fittings
With quality S/S Fittings We Supply Island wide
Home Improvement Company

No. 23, Alfred House Gardens, Colombo 03.
Tel/ Fax - 011 25 955 04 | Mobile - 0777 26 49 99
Email - houseofglass_info@yahoo.com

## Sun Lanka SANY

Brand New stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

## ANURADHAPURA

80 PERCH COMMERCIAL LAND

IDEAL FOR HOTEL PROJECT

Bordering Aalankulama Lake/ Paddy field/ D-family-Celstar Hotels on Kurunegala Road Sharwasthipura

3.5 kms to Sri Maha Bodiya and New town Carpet Road, **Clear deed**

Rs. 500,000/- per perch

CALL
0702 33 84 84, 071 8 640 640

## APSARA GLOBAL HOLDINGS

තාර දැමීම
Email- asankasameera417@gmail.com
0778 383 834

## Servisco

THE ULTIMATE SERVICE PROVIDER
077 385 35 40
011 4 367 267
මළ අපද්‍රව්‍ය ප්‍රවාහනය
Domestic & Industrial Sewage/ Waste Water Disposing

## FUNCTION HALLS

GIHAN'S BEACH RESORT - DEHIWALA

| | |
|---|---|
| Wedding Functions | Homecoming Functions |
| Office Parties | Birthday Parties |
| Christmas Parties | Private Parties |
| Outdoor Catering | All Kinds of Special Occasions |

STARTING FROM Rs. 2,800.00

BOOK NOW:
0718712795, 0774745333, 0112 729967, 0112 729971
Web Site - www.gihansbeach.com
Facebook - Gihans Beach Resort

## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Toyota Hilux 2011 HL2 brand new imported, 2500cc intercooler Turbo diesel, Manual transmission, 4wd, Rs 10,800,000/- first owner, 0777 840 141 KUS - 01

DON'T TEXT & DRIVE



Toyota Vitz 2017/2018 Edition 2 wp CBC full option, automatic transmission, push start Rs 8,475,000 0777 840 141 KUS - 2



Mitsubishi Atrage 2015 first owner, 1200cc Automatic transmission, push start, beige leather interior, alloy wheels, new tires, United motors maintained, done 81000km Rs 7650000 0777840141 KUS - 3

வாரமஞ்சரி போட்டோ குறும் விளம்பரம்
Amal - 077 7 270 443
Kumara - 077 7 270 683



Nissan Xtrail 2015 hybrid petrol, fully loaded, 4wd, first owner, sunroof, power boot etc Rs. 11,700,000/- 0777 840 141 KUS - 4



Hyundai H1 Starex 2015 model registered 2018 wp PJ full option, 2500cc common rail turbo Diesel, 6 speed manual transmission, Dual AC, 7 seater, fridge, brand new 17" alloys & tires, only done 42000km Rs 12 million 0777840141 KUS - 5



Sangyoung Rexton 2014 imported & maintained through Micro Cars, fully loaded version, black leather interior with electric memory seats, Tiptronic transmission, 4wd, Dual AC, 18" alloy wheels, new tires, Lenovo android multi media player with R cam, multi function steering, cruise control, Sunroof, first owner immaculate condition Rs. 11,800,000/-. 32A Mirihana Road Nugegoda. 0779 232 207, 0779 232 207 KUS - 6



Ford Everest 2013 jeep full option, brand new imported, 2500cc intercooler turbo diesel, automatic transmission, alloys wheels, new tires,Dual AC, 7 seater, Rs 9850000 0779232207 KUS - 7



VW Transporter 35-1985 brand new imported, 8 seater, Power steering, 1990cc Petrol, alloy wheels, all 4 independent suspension, mint condition Rs 4500,000 32A Mirihana Road nugegoda 0777840141 KUS - 8

## வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (கோட்டைக் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347 / 011 2 429 342

## Looking for Your Life Partner..,

Gather with, SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

Pay online and save your precious time
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch

E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# ஜனாதிபதித் தேர்தலில் பலமுனைகளிலும் களத்தில் இறங்கும் வேட்பாளர்கள்!



**ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்கு மிகவும் குறைந்த–ளவு நாட்களே காணப்படும் நிலையில், சில அரசியல் கட்சிகள், குறிப்பாக பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவை இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்க முடியாமல் தடுமாறி வருகின்றன.**

பொதுஜன பெரமுனவைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியாக இருந்தாலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர் விடயத்தில் அக்கட்சிக்குள் மாற்றுக் கருத்துகள் இருப்பது பகிரங்கமாகியுள்ளது.

இந்த நிலையில் இவ்வார ஆரம்பத்தில் பொதுஜன பெரமுனவின் கூட்டமொன்று அவர்களின் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து உறுப்பினர்கள் தமக்கிடையில் காணப்படும் மாறுபட்ட கருத்துகளை முன்வைத்திருந்தனர். ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, கஞ்சன விஜேசேகர போன்றவர்கள் தமது நிலைப்பாட்டை இக்கூட்டத்தில் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளனர். எனினும், அன்றைய கூட்டத்தில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

உரிய நேரத்தில் சரியான தீர்மானம் எடுக்கப்படும் என அக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது கூறியிருந்தார். அதேபோன்றதொரு நிலைப்பாட்டையே அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவும் தெரிவித்திருந்தார்.

மறுபக்கத்தில், எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன நாட்டின் பல பகுதிகளில் ஆர்வத்துடன் பேரணிகளை நடத்தி, கணிசமான மக்களை ஈர்ப்பதற்கான பிரசாரப் பணிகளை முடுக்கி விட்டுள்ளன.

தேர்தலில் தங்களுக்கு வாய்ப்பு அதிகம் என இரு கட்சிகளும் கருதுகின்றன. ஊழலை ஒழித்தல் மற்றும் நாட்டில் சட்டம் ஒழுங்கை உறுதி செய்தல் போன்ற பொதுவான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே அவர்களின் பிரசாரங்கள் அமைந்துள்ளன. பொருளாதாரக் கொள்கையில் அவை முதன்மையாக வேறுபடுகின்றன.

இந்த இரு கட்சிகளினதும் பொருளாதார அணுகுமுறையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி அமைப்பது குறித்த செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளது. இருந்தபோதும், ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கப்படும் பட்சத்தில் இக்கட்சியில் பிளவு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



## வடக்கு, கிழக்கு தமிழ்–முஸ்லிம் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு தெளிவில்லை!

ஏனெனில், ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பெரும்பாலானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தவர்களேயாவர். அது மாத்திரமன்றி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் பல வருடங்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இயங்கியவர்கள் என்பதால், மீண்டும் தாய்க்கட்சியுடன் இணைவதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகின்றது. தமது பழைய உறுப்பினர்கள் பலர் மீண்டும் தம்முடன் இணைந்து கொள்ளவிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது.

இதனால், ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களை முன்னெடுக்கும் அதேநேரம், கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதி பக்கம் சேர்ந்துவிடாமல் இருப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகளையும் எடுக்க வேண்டிய நிலைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் தள்ளப்பட்டுள்ளது.



அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதிநிதித்துவம் செய்யும் ஐக்கிய தேசியக் கட்சியும் தேர்தலுக்குத் தன்னைத் தயார்படுத்தத் தொடங்கியுள்ளது. கடந்த தேர்தல்களில் பாரிய பின்னடைவைச் சந்தித்திருந்த அக்கட்சி அடிமட்டத்திலிருந்து கட்சியைக் கட்டியெழுப்பத் தொடங்கியுள்ளது. புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு கட்சியை மறுசீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அது மாத்திரமன்றி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராகக் களமிறக்கி அதற்கான தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொதுவேட்பாளராக நிறுத்தி அவருக்கு ஆதரவு வழங்கும் தரப்பினரைக் கொண்ட பாரியதொரு கூட்டணியை உருவாக்கி தேர்தலில் குதிப்பதே அவர்களின் திட்டமாக உள்ளது. இதற்கு பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அதிருப்தியாளர்கள், வடக்கு, கிழக்கில் உள்ள சிறுபான்மை அரசியல் தலைவர்கள் எனப் பலரினதும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான பிரயத்தனங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை எதிர்க்கட்சியிலிருந்து எவரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு இந்தச் சவாலை ஏற்று, நாட்டை மீட்டெடுப்பதில் ரணில் விக்கிரமசிங்க முக்கிய பங்காற்றியுள்ளார். எரிபொருள், எரிவாயு என அனைத்துக்கும் காணப்பட்ட நீண்ட வரிசைகள் யாவும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, மக்கள் சாதாரண வாழ்க்கையை வாழ்வதற்கான சூழல் தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என்பது மக்களுக்குப் புரிய ஆரம்பித்துள்ளது.

இதனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏன் இன்னுமொரு பதவிக்காலத்துக்கான ஆணையை வழங்கக் கூடாது என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றமையையும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது இம்முறை ஜனாதிபதித் தேர்தல் பலமுனைப் போட்டி கொண்டதாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவருக்கிடையில்கடுமையான போட்டி நிலவுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படாதபோதும், செப்டெம்பர் மாதத்தின் மூன்றாவது அல்லது நான்காவது வாரத்தில் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளே அதிகம் காணப்படுகின்றன. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் அரசியல் கட்சிகள் தமது பிரசாரங்களைத் தீவிரப்படுத்தும்.

தென்னிலங்கை அரசியல் நிலைவரம் இவ்வாறானதாக இருக்கையில் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம் அரசியல் தரப்புக்கள் தமது தெளிவான நிலைப்பாட்டை இன்னமும் அறிவிக்கவில்லை. மதில்மேல் பூனை போல அவர்கள் அமைதி காத்து வருகின்றனர்.

மக்களின் அலை எந்தப் பக்கம் வீசுகின்றதோ அந்தப் பக்கம் தமது ஆதரவை வழங்குவது என்ற அவர்களின் நீண்டகால உத்தி இம்முறையும் பயன்படுத்தப்படலாம் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது. இருந்தபோதும், தேர்தல் திகதி குறித்த அறிவிப்புடன் அரசியல் களம் மேலும் சூடுபிடிக்கும் போதுஒவ்வொருவனரினதும்நிலைப்பாடு பகிரங்கமாகும்.

**பி.ஹர்ஷன்...**



## காஸா யுத்தத்தின் எதிரொலி:

# யெமன் மீது முதன்முறையாக இஸ்ரேல் விமானத் தாக்குதல்!

**யெமன் மீது இஸ்ரேல் முதற்தடவையாக கடும் விமானத் தாக்குத–ல்களை திடீரென நடத்தியுள்ளது. காஸா மீதான யுத்தத்தைத் தொடங்கி ஒன்பது மாதங்களாகியுள்ள சூழலில், இஸ்ரேலில் இருந்து 1800 கிலோ மீற்றர் அப்பால் உள்ள யெமனின் ஹுதைதா துறைமுக–த்தின் மீது இத்தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது.**

இத்துறைமுகத்தின் எண்ணெய் சேமிப்பு களஞ்சியங்கள், மின் நிலையம் என்பவற்றை இலக்கு வைத்து கடந்த சனியன்று (20.07.2024) மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் 06 பேர் கொல்லப்பட்டதோடு, 83 பேர் காயமடைந்துள்ளனர். அத்தோடு எண்ணெய்க் களஞ்சியங்களில் இருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தொன்களுக்கும் மேற்பட்ட எண்ணெய் எரிந்து அழிந்துள்ளதோடு, பல பாரந்தூக்கிகளும் அலைத்தடுப்பணைகளும் சேதமடைந்துள்ளன என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட நிறுவனமொன்றின் சிரேஷ்ட நிபுணர் அல் பாஷா குறிப்பிட்டுள்ளார்.

காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோரி இஸ்ரேலின் தென்பகுதி மீதும் இஸ்ரேலுடன் தொடர்புள்ள கப்பல்கள் மீதும் ஏவுகணை மற்றும் ட்ரோன் (ஆளில்லா விமானம்) தாக்குதல்களை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் முன்னெடுத்து வரும் ஹூதிக்கள் கடந்த வெள்ளியன்று (19.07.2024) திடீரென இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவ்வின் மத்திய பகுதியில் அமைந்துள்ள கட்டடமொன்றின் மீது ட்ரோன் தாக்குதலை நடத்தினர். அதனால் ஒருவர் கொல்லப்பட்டதோடு, 10 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே ஹுதைதா துறைமுகத்தின் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இஸ்ரேலின் யெமன் மீதான விமானத் தாக்குதலும் ஹூதிக்களின் டெல் அவிவ் மீதான ட்ரோன் தாக்குதலும் உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன. அதிலும் இஸ்ரேல் ரடார், அயன்டோம் உள்ளிட்ட அதிநவீன வான் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை கொண்டிருந்தும் ஹூதிக்களின் ட்ரோன் மத்திய டெல் அவிவ் வில் தாக்குதல் நடத்தியமை அதிக பேசுபொருளாகின.

அதேநேரம் வான் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுத்த இஸ்ரேல், யுத்த விமானங்களை ரோந்து மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தியுள்ளது. அத்தோடு இந்த ட்ரோன் வான் பரப்புக்கள் பிரவேசித்தும் முன்னெச்சரிக்கை சமிக்ஞை, அயன்டோம், ரடார் என்பன செயற்படாமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விரிவான விசாரணைக்கும் இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

சில போரியல் நிபுணர்களின் கருத்தின் படி, அயன்டோம், ரடார் உள்ளிட்ட ஆகாய பாதுகாப்பு கட்டமைப்புக்களில் பதிவாகாதபடி தாழப்பறக்கக்கூடிய வகையில் இந்த ட்ரோனை ஹூதிக்கள் கையாண்டிருக்கலாம்.

இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் டானியல் ஹகரி, 'இத்தாக்குதலுக்கு ஈரானிய தயாரிப்பான சமாட் 3 ட்ரோனின் மேம்படுத்தப்பட்ட வகை பயன்படுத்தப்பட்டுள்ளது' என்றுள்ளார். சமாட் 3 ட்ரோன் என்பது சுமார் 8 ஆயிரம் மைல் தூரம் 1500 கிலோ கிராம் வெடிபொருட்களை சுமந்தபடி ஐந்து மணித்தியாலயங்கள் பறக்கக்கூடியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

டெல் அவிவ் மீது ஹூதிக்களின் இந்த ட்ரோன் தாக்குதல் இடம்பெற்ற மறுநாள் சனிக்கிழமை பின்னேரமே எப் 35, எப் 15 உள்ளிட்ட 12 யுத்த விமானங்களைப் பயன்படுத்தி இத்துறைமுகத்தின் மீது சரமாரியான தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டது.

சோவியத் ரஷ்யாவின் ஆதரவுடன் 1961 இல் நிர்மாணிக்கப்பட்ட இத்துறைமுகம் செங்கடல் கரையில் மூலோபாய மையத்தில் அமைந்துள்ளது. யெமனுக்கான மனிதாபிமான உதவிகளதும் வர்த்தகப் பொருட்களதும் பிரதான நுழைவாயிலாக விளங்குகிறது இத்துறைமுகம்.

இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட தீ 12 மணித்தியாலயங்களுக்கும் சுடர் விட்டெரிந்துள்ளது. அங்குள்ள துறைமுகத்தின் செயற்பாடுகள் இரண்டு நாட்களாக செயலிழந்திருந்தது. மின் நிலையம் தாக்குதலுக்கு இலக்கானதால் அப்பகுதியே இருளில் மூழ்கி இருந்தது.





அதிர்ச்சியை ஏற்படுத்திய டெல் அவிவ் மீதான ஹூதிக்களின் ட்ரோன் தாக்குதல்!

இதேவேளை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் இராணுவத் தளபதியும் இராணுவ கட்டளை தளத்தில் இருந்து இத்தாக்குதலை நேரடியாக அவதானித்த அதேநேரம், 'இத்தாக்குதலின் ஊடாக ஹூதிகளுக்கு தெளிவான செய்தி வழங்கப்பட்டுள்ளதாகவும் தேவைப்பட்டால் எந்த இடத்திலும் தாக்குவோம்' என்றுள்ளார் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட்.

இத்தாக்குதலையிட்டு ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்திய ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸ், பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் குடிமக்களின் உள்கட்டமைப்பு வசதிகளை சேதப்படுத்தும் தாக்குதல்களைத் தவிர்க்க சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சவுதி அரேபிய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் துர்கி அல் மல்கி, 'இத்துறைமுகத்தின் மீதான தாக்குதலில் நாம் சம்பந்தப்படவில்லை' என்றும் 'எமது வான்பரப்பைப் பயன்படுத்த எவருக்கும் அனுமதி வழங்க மாட்டோம்' என்றும் 'மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## தீப்பிழம்பான ஹுதைதா துறைமுக எண்ணெய்க் களஞ்சியங்கள்!

ஆனபோதிலும் ஹுதைதா துறைமுகத்தின் மீதான தாக்குதலைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஹூதிக்கள் மறுநாளான ஞாயிறன்று தென் இஸ்ரேல் மீது பிளாஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலை நடாத்திய போதிலும், அதனை தாக்கி அழித்துவிட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டிருக்கிறது.

காஸா மீதான யுத்தத்தை நிறுத்துமாறு கோரி யெமனின் ஹூதிக்கள், இஸ்ரேலின் தென்பகுதியிலுள்ள ஈழட் துறைமுக நகர் மீது தாக்குதல்களை தொடங்கினர். சில நாட்கள் கடந்த நிலையில், செங்கடல் வழியாக இஸ்ரேல் துறைமுகங்களுக்கு பயணிக்கும் சரக்குக் கப்பல் மீது தாக்குதல் நடாத்தப்படும் என்ற ஹூதிக்கள், அதே ஒக்டோபர் 19 ஆம் திகதி 'கலெக்ஸி லீடர்' என்ற கப்பலை கடத்திச் சென்றதோடு யெமனின் பாப் அல் மண்டெப் நீரிணை மற்றும் செங்கடல் வழியாக இஸ்ரேல் பயணிக்கும் கப்பல்கள் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர். இற்றைவரையும் 100 இற்கும் மேற்பட்ட கப்பல்களை அவர்கள் தாக்கியுள்ளனர்.

ஹூதிக்களின் தாக்குதல்களால் செங்கடல் ஊடான சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதையில் பாதுகாப்பற்ற நிலை உருவானது. அதனால் பெரும்பாலான சரக்குக் கப்பல் நிறுவனங்கள் இப்பாதையைத் தவிர்க்கலாயின. இதன் விளைவாக இஸ்ரேல் துறைமுகங்களுக்கு வருவாய் வீழ்ச்சியடையத் தொடங்கியதோடு, வட ஆபிரிக்க, ஐரோப்பிய சந்தைகளிலும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாயின. அதனால் அமெரிக்கா தலைமையில் செங்கடல் வழியாகப் பயணிக்கும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கை இவ்வருடம் ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கேற்ப, ஜனவரி 13 ஆம் திகதி முதல் ஹூதிக்களின் இராணுவ கட்டமைப்புக்கள் மீது அமெரிக்க_பிரித்தானிய கூட்டணி விமானத் தாக்குதல்களை ஆரம்பித்தது. இதன் ஊடாக ஹூதிக்கள் பல மிழக்கச் செய்யப்பட்டுள்ளனரென அமெரிக்க மத்திய கட்டளை தலைமையகம் அறிவித்தது.

ஆன போதிலும் ஹூதிக்களின் தாக்குதல்கள் குறைந்ததாக இல்லை. பாப் அல் மண்டெப் நீரிணை ஊடாக பயணித்த கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடாத்தத் தொடங்கிய ஹூதிக்கள் செங்கடல், ஏடன் வளைகுடா, அரபுக்கடல், இந்து சமுத்திரம் எனத் தாக்குதல்களை விரிவுபடுத்தியுள்ளனர். இதன் விளைவாக செங்கடல் வழியான கப்பல் போக்குவரத்து பாதையைப் பெரும்பாலான சரக்குக் கப்பல்கள் தவிர்த்துக் கொண்டுள்ளன.

அதேநேரம் ஈழட் துறைமுக நகர் மீது தாக்குதல்களை நடாத்தி வந்த ஹூதிக்கள், ஈராக் போராளிக்குழுக்களின் ஒருங்கிணைப்புடன் இஸ்ரேலின் ஹைபா துறைமுகத்தின் மீதும் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். கடந்த ஜூன் பிற்பகுதியில் ஹைபா துறைமுகத்தின் மீது நடத்திய தாக்குதல்களில் 4 கப்பல்கள் சேதமடைந்ததாக துறைமுக வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இவ்வாறான சூழலில் காஸாவில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை குறித்து அதிக எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டிருந்தன. அந்த சமயத்தில் ஹிஸ்புல்லாஹ்வைப் போன்று ஹூதிக்களும் 'ஹமாஸ் ஏற்றுக்கொள்ளும் யுத்தநிறுத்தத்தை நாங்களும் ஏற்றுக்கொண்டு இஸ்ரேல் மீதான தாக்குதல்களை நிறுத்துவோம்' என்று அறிவித்தனர்.

ஆனால் பேச்சுவார்த்தை முடிவுற்றும் யுத்தநிறுத்தம் ஏற்படவில்லை. காஸா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. இந்தச் சூழலில் தான் டெல் அவிவ்வின் மத்திய பகுதியில் அமெரிக்க கிளை தூதரக அலுவலகத்திற்கு கிட்டிய தூரத்திலுள்ள கட்டடத்தின் மீது ஹூதிக்கள் ட்ரோன் தாக்குதலை நடத்தினர். அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் ஹுதைதா துறைமுகத்தின் மீது தாக்குலை மேற்கொண்டிருக்கிறது. இது மத்திய கிழக்கில் போர்ப்பதற்றத்தை உருவாக்கியுள்ளது.



**மர்லின் மரிக்கார்...**

**ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான வேளை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், அரசியல் களம் பரபரப்பாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போகும் மூன்று பிரதான வேட்பாளர்கள் யார் என்பது ஓரளவுக்கு உறுதியாகியுள்ள போதும், தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது தொடர்பான விடயமும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.**




# தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்குவது தமிழினத்துக்கு தீர்வைப் பெற்றுத் தருமா?

## தமிழ் சிவில் சமூகத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு–கிழக்கு தமிழ் மக்களின் திரிசங்கு நிலைமை!

வார இறுதி

## அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

இது தொடர்பில் அண்மையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருப்பது இத்தீவிரத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் தமிழ் சிவில் சமூகத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர்கள் என்பது புதியதொரு விடயமல்ல. இதற்கு முன்னரும் சிலர் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். குமார் பொன்னம்பலம் 1982ஆம் ஆண்டு போட்டியிட்டிருந்ததுடன், 1999ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டும் என்பதில் கடுமையான நிலைப்பாட்டில் இருந்தார்.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளராக சிவாஜிலிங்கம் 2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் தனித்துப் போட்டியிட்டிருந்தார். இவருக்கு ஒரு சில வாக்குகள் மாத்திரமே பதிவாகியிருந்த நிலையில், இம்முறை தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற கருத்தாடல் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வந்தது.

இந்த யோசனையை முதலில் முன்வைத்தவர் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியைச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆவார். இவருடைய இந்த யோசனையை அவர்கள் இணைந்து ஏற்படுத்தியுள்ள கூட்டணி ஏற்றுக் கொண்டிருந்தது. அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் போது, தென் பகுதி வேட்பாளருக்குச் செல்லும் தமிழ் வாக்குகளைப் பிரிக்க முடியும். இதன் ஊடாக பேரம் பேசும் சக்தியை தமிழ்த் தரப்பு ஏற்படுத்த முடியும் என்பது அவர்களின் நிலைப்பாடாக இருந்தது.

இவ்வாறு விதைக்கப்பட்ட யோசனை குறித்த கருத்தாடல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன், சிவில் சமூக அமைப்புக்கள் இவ்விடயத்தை முன்னகர்த்திச் சென்றன. பல்வேறு தரப்பினரையும் சந்தித்த சிவில் சமூக அமைப்புகள் பொதுவேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாகச் செயற்படத் தொடங்கின. இதன் பலனாவே பொதுவேட்பாளர் தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

'தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு' எனும் பெயரில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகங்களின் ஒன்றிணைப்பான தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில், தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்ற ஏழு கட்சிகளின் பிரதிநிதிகளும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இதில் கைச்சாத்திட்டனர்.



கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கு வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். எனவே, தமிழ் மக்களின் நிலைமையையும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்தும் வகையிலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது, தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பதால் பொது வேட்பாளர் யார் என்பது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு விரைவில் அறிவிப்புக்கள் வெளியாகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒட்டுமொத்த நாடும் பாரியதொரு அமைப்பு மாற்றமொன்றை எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய எந்தவொரு வேட்பாளரும் ஐம்பது வீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொள்வாரா என்ற சந்தேகம் இருப்பதாக அரசியல் அவதானிகள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதன் அடிப்படையில் நோக்கும் போது வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சிறுபான்மை மக்களின் வாக்குகள் தீர்மானிக்கும் சக்தியாக மாறுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின் தமிழர்கள் தமது நீண்டகாலப் பிரச்சினையை உலகிற்குப் பறைசாற்றுவதற்கான ஓர் தளமாக இந்தப் பொதுவேட்பாளர் விவகாரம் அமையும் என்பது அதனை முன்னெடுத்துச் செல்பவர்களின் நிலைப்பாடாக உள்ளது.

தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் வடக்கு, கிழக்கில் உள்ள பொதுமக்களின் ஒட்டுமொத்த கோரிக்கையா என்றதொரு கேள்வி இங்கு காணப்படுகின்றது. இதற்குப் பிரதான காரணம் வடக்கு, கிழக்கு மக்களை அரசியல் ரீதியாகப் பாராளுமன்றத்தில் அதிக பிரதிநிதித்துவம் செய்கின்ற பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த ஒப்பந்தத்தில் இன்னமும் கைச்சாத்திடவில்லை.



தமிழரசுக் கட்சியில் உள்ள ஒரு சில உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் இந்த முயற்சிக்கு ஆதரவாகக் கருத்துக்களை முன்னெடுத்தாலும், கட்சி என்ற ரீதியில் தமது நிலைப்பாட்டை இன்னமும் எடுக்கவில்லை. மறுபக்கத்தில் தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை ஒட்டுமொத்தமாக மறுத்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர், ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் முற்று முழுதாகப் புறக்கணிக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய நபர்கள் மீது நம்பிக்கை இல்லையென்பதை வெளிப்படுத்த தமிழ் மக்கள் இதனைப் புறக்கணிக்க வேண்டும் என்பது அவர்களுடைய கருத்தாக அமைந்துள்ளது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கோரிக்கையா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

ஒரு சில அரசியல் கட்சிகளினதும், சிவில் சமூக அமைப்புக்களினதும் கோரிக்கை போன்றே இது தென்படுகின்றது.

கடந்த காலங்களில் தென்னிலங்கையிலிருந்து போட்டியிட்ட வேட்பாளர்களுக்குத் தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தாலும், அவர்களின் பிரச்சினைகள் எவற்றுக்கும் தெரிவான ஜனாதிபதிகள் தீர்வுகளை வழங்கவில்லையென்பது நிதர்சனம்.

இருந்தபோதும், அதற்கு மாற்றுத் தீர்வு பொது ஜனாதிபதி வேட்பாளரா என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகவே உள்ளது. ஏனெனில், பாரியதொரு மாற்றத்தை நாடு எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் நடத்தப்படும் தேர்தல் என்பதால் வாக்குகளைச் சிதறடிக்கும் இதுபோன்ற முயற்சிகள் பலவீனமான ஒரு வேட்பாளரையும் பலப்படுத்துவாக அமைந்துவிடும். அதற்கும் அப்பால் இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் தேர்தல் காலத்தில் இனவாதம் என்பது அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் துரும்பாகியுள்ளது.

எனவே, தமிழ் பொதுவேட்பாளர் என்ற விவகாரம் தென்னிலங்கையிலுள்ள இனவாத அரசியல் சக்திகளுக்கு அவல்பொரி போன்றதாகிவிடும். இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சக்திகள் தமக்கு எதிரானவர்களை வீழ்த்துவதற்கான அரசியல் ஆயுதமாக இந்த தமிழ் பொதுவேட்பாளர் விவகாரத்தைக் கையில் எடுக்க முடியும். கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்குக் கிடைத்த அனுபவமும் இதுவே.

குறிப்பாக இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நாட்டைக் காப்பாற்ற வேண்டும், நாடு பிரிந்துவிடப் போகின்றது என்ற கோஷங்களை அடிப்படையாகக் கொண்டே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. இனவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அவ்வாறான பிரசாரத்துக்கு ஈர்க்கப்பட்டு 69 இலட்சம் பேர் வாக்களித்திருந்தனர். இதுபோன்றதொரு நிகழ்வு மீண்டும் ஏற்படுவதற்கு தமிழ் பொதுவேட்பாளர் விடயம் வித்திட்டு விடக்கூடாது.

அதற்காக, மீண்டும் மீண்டும் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு ஆதரவளித்து தமிழ் மக்கள் ஏமாந்து போவதா என்ற கேள்வி முன்வைக்கப்படலாம். ஏமாந்து போவது என்பதற்கு அப்பால் நடைமுறைச் சாத்தியமான முறையில் விடயங்களை அணுகி, அதிலிருந்து நிலைமைகளை தமிழ் இனத்துக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதே சமயோசிதமானதாக அமையும்.

சரி... தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதாகவே இருக்கட்டும், இதனால் தமிழ் மக்களின் பிரச்சினையை எவ்வாறு நடைமுறைச் சாத்தியமான முறையில் தீர்க்க முடியும்?

ஏனெனில், தமிழ்க் கட்சிகள் மத்தியில் இதுவரை ஒற்றுமை இல்லை. பேரம் பேசும் சக்தியாக தமிழ் அரசியல் தரப்புக்கள் உருவாகாதவரை பொதுவேட்பாளர் போன்ற காய்நகர்த்தல்கள் எவ்விதமான பலனையும் தமிழர்களுக்கு வழங்காது. இதனைவிடுத்து, தமிழர் அரசியல் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து பாரிய கூட்டணியொன்றை உருவாக்கி, தென்னிலங்கை வேட்பாளர்கள் அனைவருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரக்கூடியவர் என நம்பிக்கை கொள்ளக் கூடிய ஒருவருக்கு ஆதரவை வழங்கி, தென்னிலங்கை அரசியலில் பேரம் பேசும் சக்தியொன்றை உருவாக்குவது நடைமுறைச் சாத்தியமானதா இருக்கும். இது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும், அபிலாஷைகளையும் தீர்ப்பதற்கு வழிவகுக்கும்.

---




# ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பினை வெளிக்கொணர்ந்த எழுத்துலகச் சிற்பி



தமிழக மக்களால் ஈழத்து நவீன இலக்கியங்களும்; அறியப்படவேண்டும், போற்றப்படவேண்டும் என்ற தேசியப் பற்றுக் காரணமாக சிற்பி 'ஈழத்துச் சிறுகதைகள்' என்ற ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுதியை 1958இல் வெளிக்கொணர்ந்தார். இந்தத் தொகுப்பு வெளிவந்தபோது ஈழத்து இலக்கிய உலகம் பெருமை கொண்டது. தன்னை ஒருக்கால் சிலிர்த்துக்கொண்டது. இலக்கிய உலகில் ஓர் அற்புதம் நிகழ்ந்து விட்டதைப்போல வியப்படைந்தது எனக் குறிப்பிட்டுள்ளார் செங்கை ஆழியான்.

இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்திலிங்கம், வ.அ.இராசரத்தினம், கனக செந்திநாதன், வரதர், இராஜ அரியரத்தினம், சகிதேவி தியாகராஜா, சு.இராஜநாயகன், தாழையடி சபாரத்தினம், கே.டானியல், செ.கணேசலிங்கன் ஆகியோரது சிறுகதைகள் இந்த ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பில்; அடங்கியுள்ளன.

சிற்பி அவர்கள் எழுதிய முதற்சிறுகதை 'மலர்ந்தகாதல்' 1952இல் சுதந்திரனில் வெளிவந்தது. 1955இல் உதயம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப்போட்டியில் இவரது 'மறுமணம்' என்ற சிறுகதை முதற்பரிசினைப் பெற்றது. இருந்தபோதிலும் தான் வெளிக்கொணர்ந்த ஈழத்தின் முதலாவது சிறுகதைத் தொகுப்பில் அவர் தனது சிறுகதை எதனையும் சேர்த்துக்கொள்ளவில்லை என்பது சிற்பியின் இலக்கியப் பண்புக்குச் சிகரமிடுவதாய் அமைந்தது.

1958ஆடி முதல்1966 ஆவணி வரை எட்டு வருடகாலம் இலக்கிய உலகில் சிற்பி அவர்கள் வெளியிட்ட கலைச்செல்வி சஞ்சிகை பவனிவந்தது. ஈழத்து இலக்கிய வரலாற்றில் அதிகூடிய புகழ்பூத்த எழுத்தாளர்களைத் தனது கலைச்செல்வி மூலம் உருவாக்கியவர் சிற்பி.

செங்கைஆழியான், செம்பியன் செல்வன், செ.யோகநாதன், யாழ் நங்கை, சா.வே.பஞ்சாட்சரம், பெனடிக்ற்பாலன், சாந்தன், வே.குமாரசாமி, மயிலன், பொ.சண்முகநாதன், மு.பொன்னம்பலம், தி.ஞானசேகரன், மு.கனகராஜன், பா.சத்தியசீலன், மட்டுவிலான், கவிதா, பாமாராஜகோபால், கானமயில்நாதன், து.வைத்திலிங்கம், வி.க.ரட்னசபாபதி, இமையவன், செ.கதிர்காமநாதன், முனியப்பதாசன் ஆகியோர் கலைச்செல்விப் பண்ணையில் வளர்ந்தவர்களே" எனச் சிற்பி பதிவுசெய்துள்ளார்.

1933இல் காரைநகரில் சிவஸ்ரீ சு.சிவசுப்பிரமணிய ஐயர், ஸ்ரீமதி சௌந்தரம்மாள் தம்பதிக்கு மகனாகப் பிறந்த சிற்பியின் இயற்பெயர் சிவசரவணபவன். இவர் தனது ஆரம்பக் கல்வியை கந்தரோடை தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் பெற்றவர். இலண்டன் இன்ரர் பரீட்சையில் சித்திபெற்றவர். சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் கலைமாணி பட்டம் பெற்றவர். பின்னர் யாழ். பல்கலைக் கழகத்தின் முதுமாணி பட்டம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில் புலமையுள்ளவர். ஈழத்துச் சஞ்சிகையாளர் வரிசையில் இவரே அதிகூடிய கல்வித்தகைமை கொண்டவர். சிற்பி அவர்களின் மனைவி பெயர் சரஸ்வதி.

திருநெல்வேலி செங்குந்தா கல்லூரியில் ஆசிரியராகவும் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றியவர் சிற்பி.

இவர், சிறுகதை, நாவல், கவிதை கட்டுரை, விமர்சனம், நாடகம், வானொலி நாடகம் ஆகிய துறைகளில் எழுதியவர்.



இவரது சிறுகதைத் தொகுதிகளாக 'நிலவும் நினைவும்', 'சத்திய தரிசனம்' 'நினைவுகள் மடிவதில்லை' ஆகியவை வெளிவந்துள்ளன. 'உனக்காகக் கண்ணே' இவர் எழுதிய நாவலாகும்.

2015இல் தனது 82ஆவது வயதில் 09-11-2015 அன்று சிற்பி அமரரானார்.

ஞானம் சஞ்சிகையில் அவர் தொடராக எழுதிய 'கலைச்செல்விக் காலம்' பின்னர் நூலாக வெளிவந்து அரச தேசிய சாகித்திய விருதினை 2017 இல் பெற்றுக்கொண்டது. அவர் அமரராகிய நிலையில் அவ்விருதை அவரது மனைவி சரஸ்வதி அம்மா பெற்றுக்கொண்டார்.



# ரணிலின் யதார்த்தமான நடைமுறையே நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டது

## புதிய சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரத்ன

**நான் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் அல்ல.**
**ரணில் எனக்கு உதவி செய்தார். நானும் ரணிலுக்கு உதவி செய்தேன்.**
**எனது பேச்சைக் கேட்க இன்றும் அதிகமானோர் விரும்புகிறார்கள்.**

ஒரு காலத்தில் இலங்கையின் இடதுசாரி அரசியலின் பிரபலமிக்கவராகவும், கல்வியியலாளராகவும் இருந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, தனது 81வது வயதில் அண்மையில் காலமானார். இரண்டு வருடங்களுக்கு முன்னர், 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி கலாநிதி கருணாரத்ன சிலுமின பத்திரிகைக்கு விசேட நேர்காணல் ஒன்றை வழங்கியிருந்தார். அதன்போது கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்த கருத்துக்களை இங்கு மீண்டும் தருகிறோம்.

இலங்கை சமசமாஜ கட்சியின் தீவிர தரப்பினர் கூட்டணிக்கு எதிராக சமசமாஜக் கட்சிக்குள் போராட்டத்தை ஆரம்பித்ததன் காரணமாக 1972இல் நடைபெற்ற சம்மேளனத்திலிருந்து கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து புதிய சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. இந்த தீவிரக் குழுவின் அமைப்பு 1970 டிசம்பர் 5ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அக்பர் மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஆரம்பமாகியது. இந்தக் குழுவில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, கலாநிதி நளிந்த சில்வா, விரிவுரையாளர் சுமணசிறி லியனகே உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டிருந்ததோடு, மார்க்ஸ்வாதம் என்ற பெயரில் சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்பட்டது. கலாநிதி விக்ரமபாகுவின் தலைமையில் செயற்பட்ட இந்த தீவிரக் குழுவுடன் கலாநிதி குமார் டேவிட், கலாநிதி சாந்த த அல்விஸ் போன்ற கலாநிதிகளும் இணைந்து கொண்டனர். சமசமாஜ கட்சியின் 1972ஆம் ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு வெளியேறிய இடதுசாரிப் போக்குக் குழுவான வாசுதேவ நாணயக்கார, ஹோமாகம எட்வின் கொத்தலாவல, இரத்தினபுரி வைத்தியர் அர்ச குலரத்தினம், யாழ்ப்பாணம் ஏ. கே. அண்ணாமலை போன்ற முன்னணி இடதுசாரி மற்றும் 1976ல் கூட்டணி அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் ஒஸ்வின் பெர்னாண்டோ, ரொனி பெரேரா, ஜே. டி. சில்வா, சரணபால சில்வா போன்ற தொழிற்சங்கத் தலைவர்களும் இதில் இணைந்து கொண்டனர். 1977ம் ஆண்டு வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் ஒன்று கூடிய இவர்கள் இதனை புதிய சமசமாஜக் கட்சி எனப் பெயரிட்டதோடு, 1979ம் ஆண்டு விக்கிரமபாகு அதன் பொதுச் செயலாளரானார்.

1943 மார்ச் 08ஆம் திகதி பதுளை லுணுகம பிரதேசத்தில் பிறந்த விக்ரமபாகு கருணாரத்ன ஆரம்ப கல்வியை மதுகம ஆனந்த வித்தியாலயத்திலும் பின்னர் கொழும்பு ஆனந்தா கல்லூரியிலும் கற்றார். அவரது தாயின் பெயர் சமிலா கொதலாவல மற்றும் தந்தை முதியான்சேலாகே கருணாரத்னவாகும். அவருக்கு நான்கு சகோதர சகோதரிகள் உள்ளனர். பேராதனை பல்கலைக்கழகத்தில் மின்பொறியியல் பட்டதாரியான இவர் பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஒக்ஸ்போர்ட் ஆகிய பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக ஆனார். 1970ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான அவர் 1978ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் பணி இடைநிறுத்தத்திற்கு உள்ளானார். 1982ஆம் ஆண்டில் மீண்டும் பணியில் இணைந்து கொண்ட விக்கிரமபாகு மீண்டும் அதே வருடத்தில் பணியிலிருந்து விலக்கப்பட்டார். கலாநிதி விக்ரமபாகு மீண்டும் பணியில் இணைந்து கொள்வதற்கான தீர்மானத்தை 2002ஆம் ஆண்டில் மேற்கொண்ட போதிலும் 2014ஆம் ஆண்டு வரைக்கும் அது நிறைவேறவில்லை. சுமார் 50 வருடகால அரசியல் வாழ்வைக் கொண்ட தற்போது 80 வயதான பேராசிரியர் விக்ரமபாகு இன்னமும் புதிய சமசமாஜ கட்சியின் தலைவராவார். மனைவி மங்கலிகா தொடம்வல மற்றும் அவர்களது ஒரே மகள் நிலோகா கருணாரத்ன ஆகியோர் தொழில் ரீதியான சட்டத்தரணிகளாவர்.

இரண்டு பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியரான உங்களுக்கு இப்போது 80 வயதாகிறது. கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும் போது, ஏதேனும் அரசியல் கூண்டில் அடைபட்டுள்ளதைப்போல நீங்கள் எண்ணுகிறீர்களா?

இல்லை. நான் அவ்வாறு நினைக்கவில்லை. உழைக்கும் வர்க்கத்தினருக்காக நாம் சில பணிகளைச் செய்தோம். இந்தக் காலக்கட்டத்தில் நாம் வெற்றிகளைப் பெற்றுள்ள அதே நேரம் தோல்விகளையும் சந்தித்துள்ளோம். பல்வேறு நாசகாரச் செயல்களால் தோல்விகள் ஏற்பட்டன. மார்க்சியவாதத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம், தொழிலாள வர்க்கம் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தின் போராட்டத்தின் மூலம்தான் உலகம் முழுவதும் உள்ள அரசுகள் முன்னேறுகின்றன. வளர்ந்த நாடுகளில் கூட தொழிலாளி வர்க்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. உழைக்கும் மக்களின் உதவியால்தான் ஒரு நாடு முன்னேறிச் செல்கிறது. சமசமாஜ தத்துவங்கள்தான் ஒரு நாட்டிற்கு வெற்றியைப் பெற்றுத் தருகின்றன. எனவே, இந்த தத்துவம் புதிய வழியில் தொடர வேண்டும்.

இப்போது நீங்கள் ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்தவரா?

இல்லை. நான் ஐக்கிய தேசிய கட்சியின் அங்கத்தவனல்ல. நான் இன்னமும் புதிய சமசமாஜ கட்சியின் தலைவன். எனது சிரமங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறினேன். அவர் எனக்கு உதவினார்; நானும் அவருக்கு உதவி செய்தேன். அவரது சின்னத்தின் கீழ் நான் போட்டியிட்டேன். ஆனால் வெற்றி பெற முடியவில்லை. அவர் அதிகாரத்திற்கு வந்தார். கடைசியில் ஜனாதிபதியானார். அவர் ஜனாதிபதியாக வந்ததால்தான் இந்த நாடு இந்த நிலைக்கு எழுந்து வந்தது. அவர் முதலாளித்துவ தத்துவத்தினுள் இருந்தார். அவர் இப்போது ஜனநாயக ரீதியாகச் செயற்பட்டு வெற்றியடைந்து கொண்டு வருகின்றார்.

உங்கள் இரு தரப்புக்கும் இடையிலான உறவுகளை அறிய விரும்புகிறோம்....?

அவர் ஒரு யதார்த்தமான நபர். நான் எமது கொள்கை அறிக்கையை அவரிடம் கையளித்தேன். அவர் அதைப் படித்தார். அதேபோன்று அவரது வெற்றியை நாம் பார்த்தோம். இதன் காரணமாக, நான் மற்றவர்களையும் ஊக்கப்படுத்தினேன்.

அப்போது கல்வி அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவை உங்களை பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர் பதவியிலிருந்து நீக்குகின்றார். ஆனால் நீங்கள் மீண்டும் அவருக்காக களமிறங்கியுள்ளீர்களே.....?

அரசியல் என்பது அப்படித்தான். இவ்வாறான விடயங்கள் மிகவும் பொதுவானவையாகும். போராட்டங்களின் போது விழுந்து மீண்டும் எழுகிறோம். எனவே, புரிந்துணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர் செயல்படும் விதத்தைப் பார்த்து, அவர் சரி என்றால் சரி என்றும், பிழை என்றால் பிழை என்றும் சொல்கிறோம். நடைமுறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடு சரியானதும் வெற்றிகரமானதுமாகும். அதற்குத் தேவையான ஒத்துழைப்பை மாத்திரமே நான் வழங்குகின்றேன்.

ரணில் பாசிசத்திற்கு எதிரான தாராளமயத்தை ஏற்றுக்கொள்பவர் என்று நீங்கள் ஒருமுறை கூறியிருந்தீர்களே....?

ஜனாதிபதி ரணில் யதார்த்தமான தாராளவாத தத்துவத்தை கொண்டவர். அது சோஷலிசமாக இல்லாவிட்டாலும், நாட்டில் இடையூறு இல்லாமல் முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்புள்ளது. உழைக்கும் மக்களின் பலம் அதிகரிக்கும் போது, மீண்டும் சோஷலிசத்திற்கு செல்லுவதற்கான வாய்ப்பு உள்ளது.

நீங்கள் பல்கலைக்கழக மாணவராக இருக்கும் போதிருந்தே அரசியலில் ஈடுபட்டு வருகிறீர்கள். அக்காலத்திலிருந்தே ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயல்பட்டிருக்கலாமே?

ரணில் விக்கிரமசிங்க ஒரு தலைவராக வந்தது அண்மையில்தானே. அந்த காலங்களை விட வித்தியாசமான முறையில் அவர் இப்போது தலைவராக முன்னே வந்துள்ளார். சமீபத்தில்தான் நான் அவருடன் நெருங்கி செயற்படுகின்றேன். அப்போதுதான் புரிந்து கொண்டேன். அவரது யதார்த்தமான செயற்பாடுகளின் காரணத்தினால்தான் வீழ்ந்திருந்த நாட்டை நிமிர்த்த அவரால் முடிந்தது. தற்போது நாடு இருக்கும் நிலையிலிருந்து ஒரு அடியாவது முன்னேற்றிக் கொண்டு செல்வதற்கு அவரால் மட்டுமே முடியும்.

80 வருட உங்களது அனுபவத்திற்கு அமைய இவ்வாறான ஒரு நிலை எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ளதா....?

சில காலமாகவே ஊழல் நிறைந்த ஆட்சி இடம்பெற்றது. மஹிந்த ராஜபக்ஷ எனது நல்ல நண்பர். அவர் ஒரு சிறந்த ஆட்சியாளராக இருந்த போதிலும் அவரோடிருந்த மற்றவர்கள் அவ்வாறானவர்களல்லர். இதனால் நாடு மிகவும் பாதிப்புக்குள்ளானது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மூலமாக நாட்டில் முக்கிய பணிகள் இடம் பெற்றுள்ளதாக நீங்கள் பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொண்டிருந்தீர்களே....?

ஆம். நான் மஹிந்த ராஜபக்சவை மதிக்கிறேன். அவர் முற்போக்கான சோசலிசப் பணிகளைச் செய்தார். கடைசி காலத்தில் அவருடைய மற்றவர்கள்தான் எழுந்து நின்றார்கள். அவர்கள் நாட்டை நாசமாக்கிவிட்டார்கள். ரணில் விக்கிரமசிங்க ஜனநாயக ரீதியாகவும் யதார்த்தமாகவும் செயற்படுவதுடன் சர்வதேச பங்களிப்புடன் நாட்டை முன்னோக்கி உயர்த்துவதற்கு உழைக்கிறார்.

ஜனாதிபதி ரணிலுக்கு எதிராகவும் தற்போது போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒரு நாள் உங்களது பங்களிப்பையும் அதற்கு வழங்குவீர்களா?

ரணில் விக்கிரமசிங்கவை விரட்டிவிட்டு என்ன செய்வது, அல்லது அடுத்து யாரைக் கொண்டு வருவது என நாம் பேச வேண்டும். குறைபாடுகள் இருப்பின் அவற்றைச் சரி செய்து கொண்டு முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஜனாதிபதி ரணிலைத் தவிர நாட்டை இந்நிலையிலிருந்து மீட்டெடுக்கக் கூடிய தலைவர்கள் யாரும் இருக்கின்றார்களா?

சஜித் பிரேமதாச ஒரு தலைவரல்ல. அவருடைய கருத்துக்களில் தெளிவில்லை. எனினும் அவருக்கு வாக்கு வங்கி உள்ளது. சிலர் அவரது பேச்சுக்களால் ஈர்க்கப்படுகிறார்கள். ஆனால் அவருக்கு தெளிவான நோக்குகள் இல்லை.

*சுபாஷினி ஜயரத்ன*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*



**பேராசிரியர்**
**கே.ரீ.கணேசலிங்கம்**
**யாழ். பல்கலைக்கழகம்**

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலும் இஸ்ரேலிய பிரதமரது விஜயமும்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கமலாஹாரிஸ் வருகைக்குப் பின் முதன்மை பெறத் தொடங்கியுள்ளது. இதுவரையும் முன்னணியில் இருந்த முன்னாள் ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் பின்னுக்கு தள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. ஜனநாயகக் கட்சியின் ஆதரவு அதிகரித்துள்ளது. சடுதியான மாற்றத்திற்கு கமலாஹாரிஸின் வருகையே பிரதான காரணம் என்று கருதப்படுகிறது. கமலா ஹாரிஸ் ஓர் இந்திய பூர்வீகத்தைக் கொண்டவர் என்பதுடன் யூதரை திருமண உறவால் இணைந்துள்ளவர் என்ற கருதுகோளும் உள்ளது. அதனுடன் இணைத்தே இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் அமெரிக்க விஜயம் பார்க்கப்பட வேண்டும். இக்கட்டுரையும் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிஸ் தெரிவு செய்யப்பட்டதும் நெதன்யாகுவின் அமெரிக்க விஜயமும் (23.07.2024) எத்தகைய அரசியல் பிணைப்பை தருகிறது என்பதை தேடுவதாக உள்ளது.

அமெரிக்க தேர்தலுக்கான நிதியில் அமெரிக்க வாழ் யூதர்களின் பங்கு முக்கியமானது என்பது தெரிந்த விடயம். அதனால் அமெரிக்க ஜனாதிபதிகளை தேர்ந்தெடுப்பதில் யூதர்கள் செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்பதும் அதனால் அமெரிக்க இஸ்ரேலிய உறவு பலமானதாக உள்ளது என்பதும் தவிர்க்க முடியாத அரசியலாக உள்ளது. அதனடிப்படையிலேயே ஜோ பைடன் விலகியதும் கமலா ஹாரிஸ் வேட்பாளரானதும் நெதன்யாகுவின் வருகையும் சாத்தியமாகியுள்ளதாகவே தெரிகிறது. அதற்காக யூதர்கள் குடியரசுக்கட்சி வேட்பாளரை ஆதரிக்க மாட்டார்கள் என்று கூறிவிட முடியாது. யூதர்களைப் பொறுத்தவரை, இருவரில் வெற்றிபெறும் வேட்பாளரை அரவணைத்து செயல்படும் திறன் கொண்டவர்கள். இரு வேட்பாளரையும் யூதர்களில் இருபிரிவினர் ஆதரவு வழங்குவார்கள். வெற்றி பெறுபவரை தமது கையாளுகைக்குள் வைத்திருப்பார்கள். இது யூதர்களின் மரபார்ந்த அரசியலின் இருப்பாக உள்ளது.

ஆனால் தற்போதைய நிலையில் ஜனநாயகக் கட்சியினரது இஸ்ரேலுடனான நட்புறவானது பலமானதாக உள்ளது. ஜனாதிபதி ஜோ பைடனது இஸ்ரேல் தொடர்பிலான அணுகுமுறை தனித்துவமானது. இன்றைய நிலையில் இஸ்ரேலின் இருப்பை பாதுகாப்பதில் அமெரிக்காவின் பங்கு மிக அதிகமானது. அதற்கு பைடனும் ஜனநாயகக் கட்சியினரும் முக்கிய பங்காற்றியவர்கள். இதனை குடியரசுக்கட்சி மேற்கொள்ளாது என்று கருதமுடியாது. ஆனால் ட்ரம்ப்பைப் பொறுத்தவரை கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கப்பிரல் கட்டடம் மீது நிகழ்த்திய தாக்குதல் ஜோ பைடனின் ஆணுகுமுறைகள் மீதுகொண்டுள்ள விமர்சனங்கள் கடந்த காலத்தில் ஜனாதிபதியாக இருந்த போது அமெரிக்க நலனுக்கு எதிராக செயல்பட்ட விதம் என்பன அனைத்தும் ட்ரம்ப் மீதான வெறுப்பை அமெரிக்க மக்கள் மத்தியில் மட்டுமல்ல அமெரிக்க நிர்வாகத்தினரிடமும் ஏற்படுத்தியுள்ளது. அவரை அதிகம் நம்ப முடியாது என்ற விவாதம் உள்ளது. அதற்காக அமெரிக்க இஸ்ரேலிய உறவை ட்ரம்ப் பாதிக்கும் வகையில் செயல்பட்டதாகவோ எதிர்காலத்தில் செயல்படுவார் என்றோ அர்த்தமாகாது. குறிப்பாக ட்ரம்ப்பின் ஆட்சிக்காலத்திலேயே இஸ்ரேலுக்கு எதிரான எதிரிகள் இருநாடுகளாலும் வேட்டையாடப்பட்டனர். இஸ்ரேலின் இருப்புக்கான பலப்படுத்தலும் நிகழ்ந்துள்ளது. அது அமெரிக்க நலன்சார்ந்த நகர்வுகளாகவே நோக்கப்படுகிறது. அதே நேரம் அமெரிக்காவின் உலகளாவிய நலன்களை தோற்கடித்ததில் ட்ரம்ப்புக்கு பங்கிருந்ததாக தெரியவருகிறது. குறிப்பாக ரஷ்யா, சீனா, வட கொரியா என்பனவற்றைப் பொறுத்து ட்ரம்ப்பின் நிலைப்பாடு சற்று அமெரிக்காவின் ஏகாதிபத்திய நலனுக்கு எதிரானதாகவே அமைந்திருந்ததாக கருதுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி ஜனநாயகக் கட்சியின் காலத்தில் இஸ்ரேலின் வழித்தடத்தில் அமெரிக்க அணி செயல்படுவதும் குடியரசுக் கட்சியின் காலத்தில் அமெரிக்காவின் வழித்தடத்தில் இஸ்ரேல் நகர்வதையும் கடந்தகாலத்தில் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. இத்தகைய தன்மையே கமலா நெதன்யாகு கூட்டுக்கு காரணம் எனக் கருதலாம். இதனை விரிவாக நோக்குதல் பொருத்தமானது.

முதலாவது, கமலா ஹாரிஸ் நெதன்யாகு முரண்பாடு உள்ளதாக ஊடகங்கள் அதிகம் முதன்மைப்படுத்துகின்றன. இஸ்ரேலின் போர்நிறுத்த உடன்பாட்டை சாத்தியப்படுத்துமாறும் அதற்கு ஹமாஸ் அமைப்புடன் இணைந்து செயல்படுமாறும் கமலா ஹாரிஸ் உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. அது மட்டுமன்றி இஸ்ரேலிய பிரதமர் காங்கிரஸில் உரையாற்றும் போது ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்ளாது இருந்ததாகவும் கமலா ஹாரிஸும் கலந்து கொள்ளவில்லை எனவும் ஊடகங்களில் அதிகம் உரையாடப்படுகிறது. கமலா ஹாரிஸ் போர்நிறுத்த உடன்பாட்டை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஹமாஸ் பிடித்துவைத்துள்ள பிணைக் கைதிகளை மீட்டெடுக்க வேண்டும் என்வும் வலியுறுத்தியதாகவும் தகவல்கள் உண்டு. அனைத்துமே நிகழ்ந்துள்ளதாக இருந்தாலும் அடிப்படையில் இவை எதுவும் இஸ்ரேலிய அமெரிக்க உறவைப் பாதிக்கும் என்றோ இருநாட்டின் உறவும் முடிவுக்கு வந்துவிடும் என்றோ கருதிவிட முடியாது. இஸ்ரேலின் இருப்பானது அமெரிக்காவின் தயவிலானது. இஸ்ரேலின் இராணுவ பலமானது நேட்டோவின் கையிருப்பு ஆயுதத்திலானது. இஸ்ரேலின் மனித உரிமை மீறலானது அமெரிக்கா சார்ந்த மேற்குலகத்தின் அரவணைப்பிலேயே உள்ளது. கமலா ஹாரிஸ் நெதன்யாகு முரண்பாடு என்பதெல்லாம் ஊடக அரசியல் ஒரு பக்கம் அமைய மறுபக்கத்தில் அமெரிக்க இஸ்ரேல் அரசியல் என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஒருபோதும் அமெரிக்க - இஸ்ரேல் உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வொன்று நிகழ வாய்ப்பில்லை. அத்தகைய நெருக்கம் இரு நாட்டுக்குமானது. அதற்கு அடிப்படை அமெரிக்க வாழ் யூதர்களே. அதனடிப்படையிலேயே நெதன்யாகுவின் அமெரிக்க விஜயம் அமைந்துள்ளது.



இரண்டு, இந்தியப் பிரதமர் ரஷ்யாவுக்கு விஜயம் செய்த போது உக்ரைன் ஜனாதிபதி மட்டுமல்ல அனைத்து மேற்குலக ஊடகங்களும் மோடி மீது அதிக விமர்சனங்களை முன்வைத்தன. அதாவது புட்டினுடனான நட்பினை அருவருக்கும் புட்டின் மீதான விமர்சனங்களை இந்தியப் பிரதமர் மீதும் செலுத்தினார்கள். 39 ஆயிரத்திற்கு மேற்பட்ட பலஸ்தீனர்களை கொன்று குவித்த நெதன்யாகு மீது எத்தகைய விமர்சனமும் இன்றி ஊடகங்களும் தலைவர்களும் உரையாடும் தன்மையின் பிரதிபலிப்பு கவனிக்கப்பட வேண்டியது. இதுவே மேற்குலக ஜனநாயகம் மனிதாபிமானம் மற்றும் நீதிச் செயன்முறையாகவுள்ளது. இதுவே மேற்குலக ஜனநாயத்தின் கூட்டு உற்பத்தியாகும். அது மேற்கு நாடுகளுக்குரியது. தமது ஏகாதிபத்தியத்திற்கு ஆபத்து ஏற்படுத்தாத ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் கொண்ட அரசியல் உலகத்தையே படைத்துவருகின்றனர். இதனையே கீழைத் தேச நாடுகள் ஜனநாகம் என்ற விதிக்குள் இயங்குவதை பெரிதாக கருதுகின்றனர். இது வெள்ளைக்கார ஜனநாயகம் மனிதாபிமானம் மனித உரிமைகள் என்று குறிப்பிடுவதே பொருத்தமானது. இத்தகைய ஏமாற்றுதத்தனத்தின் கீழ் உலகம் இயங்குவதே உலகளாவிய கட்டமைப்பாக உள்ளது. ரஷ்ய ஜனாதிபதியை இனப்படுகொலையாளனாகவும் நெதன்யாகுவை நிரபராதியாகவும் மேற்குலகம் கருதுகிறது.

மூன்றாவது, அமெரிக்க காங்கிரஸில் இஸ்ரேலிய பிரதமர் உரையாற்றும் போது இரு நாட்டுக்குமான உறவின் முக்கியத்துவத்தை கோடிகாட்டியிருந்தார். ஹமாஸ் போன்ற பயங்கரவாத அமைப்புக்களை அழிப்பதற்கு இரு நாட்டினது உறவும் அவசியமானது. அதில் ஹமாஸை தோற்கடிக்கும் வரை போரை தொடரப்போவதாகவும் வெளிப்படுத்தியிருந்தார். ஆனாலும் இஸ்ரேலின் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் போர் நிறுத்த உடன்பாட்டுக்கு தயாராக இருப்பதாகவும் அறிவித்தார். தற்போது நடைபெறும் போர் நாகரிகத்திற்கும் காட்டுமிராண்டித்தனத்துக்கும் இடையிலானது என்றார் நெதன்யாகு. பலஸ்தீன போராட்டத்திற்கு ஈரான் ஆதரவளிக்கிறதெனவும் ஏறக்குறைய ஹமாஸ் அமைப்பு ஈரானின் பொம்மையாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இது இஸ்ரேலின் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக தெரிவிக்கின்றது. இதனை அமெரிக்க காங்கிரஸில் நெதன்யாகு முன்வைக்க முடியும் என்பதே அமெரிக்க இஸ்ரேலிய உறவின் தன்மையாகக் கண்டு கொள்ள முடிகிறது. நான்காவது, கமலா ஹாரிஸின் வெற்றி வாய்ப்பினை பாதிக்கும் ஒரு விடயமாக அவரது பூர்வீகம் அமைந்துள்ளதாக குடியரசுக் கட்சி வேட்பாளர் தெரியப்படுத்தி வருகிறார். அதற்கான வாய்ப்பு காணப்பட்டாலும் அவரது ஆதரவுத்தளம் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அவ்வாறே அமெரிக்க ஜனாதிபதி வரலாற்றில் பெண் எவரும் இதுவரை அத்தகைய பதவியை அடையவில்லை. இதில் கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றால் அது ஒரு வரலாற்று பதிவாக மாறும் என முன்னாள் ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டுள்ளார். அதனால் ஏற்படப் போகும் மாற்றம் ஒரு புறம் அமைய மறுபக்கத்தில் பெண்களின் தலைமைக்கு அமெரிக்கா இதுவரை முக்கியத்துவம் கொடுக்காத நிலையில் கமலா ஹாரிஸின் வெற்றி எத்தகையதாக அமையும் என்பதும் கவனத்திற்குரியது. குறிப்பாக அவரது பிறப்பும் அவர் ஒரு பெண் என்ற விடயமும் அவரை நெருக்கடிக்கு உள்ளாக்கலாம். அதனைக் கடந்தே தற்போதைய ஜனாதிபதி தேர்தலை அமெரிக்கர்கள் இஸ்ரேலியர்கள் நோக்குவதாகத் தெரிகிறது. எனவே அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கும் இஸ்ரேலியருக்குமான நெருக்கம் தனித்துவமானது. ஈரானை மையப்படுத்தியே இஸ்ரேல் செயல்பட்டாலும் முழுமையான அராபிய உலகத்தையும் இஸ்ரேலிய ஹமாஸ் போர் இலக்கு வைத்துள்ளது. அதற்கு அமைவான ஜனாதிபதியை முன்நிறுத்துவதே தற்போதைய நோக்கமாக உள்ளது. அதற்கு அமைவாகவே ஊடகங்களும் செயல்படத் தொடங்கியுள்ளன. ட்ரம்ப் மீதான ஊடகங்களின் வெறுப்பு கமலா ஹாரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் அதிகரித்துள்ளது. அத்தகைய மேற்குலகத்தின் விருப்புக்குள்ளேயே கமலாவின் வெற்றி வாய்ப்பு நிர்ணயிக்கப்படப் போகிறது.



இலங்கையின் முதலாவதும் மற்றும் ஒரே மின்சார இலக்ட்ரோனிக் மோட்டார் சைக்கிள் உற்பத்தியாளரான கே.டி. ரைஸ் எலக்ட்ரிக்கல் மோட்டார் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தம்மிக்க பெரேரா அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். தனது வியாபாரத்தின் மூலம் இலங்கைக்கு பெருமளவு டொலரினை கொண்டு வர முடிந்தாலும் சட்டரீதியான பிரச்சினைகள் காரணமாக அது தடைபட்டுள்ளது என தம்மிக பெரேரா ஜனாதிபதியிடம் தெரிவித்ததோடு, இதற்குத் தேவையான சட்டப் பின்புலத்தை துரிதமாக ஏற்படுத்தித் தருவதற்கான இணக்கத்தை ஜனாதிபதி தெரிவித்தார்.

இத்தொழிற்சாலையை பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ராஜித சேனாரத்ன நேரில் பார்வையிட்டதை அடுத்து, இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதோடு, இத்தாலியில் இருந்து வந்த தம்மிக்க பெரேரா நாட்டில் டொலர் இல்லாத சந்தர்ப்பத்தில் பில்லியன் கணக்கான முதலீடுகளை இலங்கைக்கு கொண்டு வந்ததாக ராஜித சேனாரத்ன ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார். சிநேகபூர்வ சந்திப்பின் பின்னர் டாக்டர் ராஜித சேனாரத்ன, கே.டி. ரைஸ் இலக்ட்ரிக்கல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி தம்மிக்க பெரேரா மற்றும் கே.டி. ரைஸ் இலக்ட்ரிக் வர்த்தக குழுமத்தின் நிறுவன செயலாளர் திருமதி ரெஷிகா பெரேரா ஆகியோர் ஜனாதிபதியுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# ரணிலின் பெயரை முன்மொழிந்தவர் பிரசன்ன

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற யோசனையை இதன் போது முன்வைத்தவர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவாகும். கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களும் தங்களது கைகளைத் தூக்கி அந்த யோசனையை அங்கீகரித்தார்கள்.

"இனிமேல் உங்களால் தப்பி ஓட முடியாது. ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவே வேண்டும்" என அமைச்சர் பிரசன்ன கூறியதைக் கேட்டு ஜனாதிபதிக்கு சிரிப்பு வந்தது. "ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற பிரேரணை இங்கு நிறை



வேற்றப்பட்டுள்ளது. நான் இதற்கான பதிலை சரியான நேரத்தில் தருவேன்" என ஜனாதிபதி தனது உரையின் போது குறிப்பிட்டார்.

சஹனின் வீட்டுக்குச் சென்ற ரணில்.

பிரசாரக் கூட்டம் முடிவடைந்து கதிர்காமம் செல்வதற்கு ஜனாதிபதி ஏற்கனவே திட்டமிட்டிருந்தார். எனினும் கூட்டம் முடிந்த உடனேயே ஜனாதிபதி ரணில் நேராகச் சென்றது கடவத்தையில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சஹனின் வீட்டுக்காகும்.

அந்த நேரத்தில் வீட்டில் இருந்தது பாராளுமன்ற உறுப்பினர் சஹனின் மனைவி, மகள் மற்றும் இன்னும் சிலர் மாத்திரமேயாகும்.

பிரசன்னவின் மனதை ஆறுதல் படுத்திய ரணில்.

"நான் 77ல் தேர்தலில் போட்டியிட்ட போதும் கடவத்தையில் இவ்வளவு கூட்டத்தை கூட்ட முடியாது போனது" என ஜனாதிபதி அவர்களிடத்தில் கூறினார்.

"சேர், இந்த கூட்டத்திற்காக என்னை விட கஷ்டப்பட்டது அமைச்சர் பிரசன்னவே" என பாராளுமன்ற உறுப்பினர் சஹன் அமைச்சர் பிரசன்னவைக் காட்டியவாறு கூறினார்.

"சேர், நான் அரசியலுக்கு அழைத்து வந்தவர்கள் இன்று என்னைத் தாக்குகின்றனர். கட்சி எதிர்த்த போதும் நான் அவர்களுக்கு நொமினேசன் வழங்கினேன். அப்போது அமைச்சர் சுசில் சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர். இதைப்பற்றி அவருக்கு நன்றாகத் தெரியும்" என அமைச்சர் பிரசன்ன உணர்ச்சி வசப்பட்டு கூறினார்.

"ஆம். அவைகளைப் பற்றி பெரிதாக நினைக்க வேண்டாம். அரசியலில் இவ்வாறான விடயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்" என ஜனாதிபதி அமைச்சர் பிரசன்னவின் மனதை ஆறுதல் படுத்தும் வகையில் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பது ஜனாதிபதி தேர்தலுக்கு மாத்திரமே என்பதால் கண்டிப்பாக ஜனாதிபதி தேர்தல் நடக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதி அளித்துள்ளார்.

"இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் மாத்திரம்தான். ஏனைய தேர்தல்கள் அடுத்த வருடம்தான்" என இதன்போது ஜனாதிபதி கூறியுள்ளார்.

அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பொதுஜன பெரமுனவிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார்.

மொட்டுவின் மாவட்டத் தலைவர்கள் 12 பேர் ரணிலுக்காக களத்தில் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு அபேட்சகர் ஒருவர் நிறுத்தப்பட்டால் அதற்கெதிராக செயற்படுவது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 12 மாவட்டங்களின் தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கடந்த 22ஆம் திகதி இரவு கொழும்பு மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவரின் இல்லத்தில் இடம்பெற்றதாக அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பான்மை கருத்துக்கு எதிராக சென்று கட்சி வேறு ஒரு வேட்பாளரை நியமித்தால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க இதன்போது அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 75 மொட்டுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அவர்கள் பெற்றுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாவட்ட மட்டத்தில் அந்த பாராளுமன்ற உறுப்பினர்களை சம்பந்தப்படுத்திக் கொண்டு அந்த மாவட்டங்களின் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திஸ்ஸ குட்டியாராச்சியின் பின்னே சென்ற அமைச்சர் பிரசன்ன.

செவ்வாய்கிழமை பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் பேசுவதற்காக நெலும் மாவத்தைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கலந்துரையாடலின் முடிவில் வெளியில் வந்த பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸகுட்டியராச்சி ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தார்.

இதற்கிடையில் அமைச்சர் பிரசன்ன திடீரென திஸ்ஸகுட்டியாராச்சியின் பின்னால் அமர்ந்து கொண்டார்.

இதனால் திகைத்து போன திஸ்ஸகுட்டியராச்சி தனது கதையை தொடர முடியாமல் தவித்தார்.

“அமைச்சர் அவர்களே, கட்சி இரண்டாக பிளவுபட்டுள்ளது தானே?" என ஊடகவியலாளர் அமைச்சர் பிரசன்னவிடம் கேட்டனர்.

“இன்னும் இல்லை... ஆனால் பெரும்பான்மையான கருத்துகளுக்கு எதிராகச் செயற்பட்டால் அது நடக்கும்" என்றார் அமைச்சர் பிரசன்ன.

“நீங்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறீர்கள்?”

"எனது நிலைப்பாட்டை நான் நாட்டுக்கு தெரிவித்துள்ளேன். எனினும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டிஆராச்சியின் நிலைப்பாடு என்னவென்று எனக்குத் தெரியாது. நான் சரியான நிலைப்பாட்டில் இருக்கிறேன்" என்று அமைச்சர் பிரசன்னா கூறினார்.

**எம். எஸ். முஸப்பிர்**

# தேசபந்துவின் பொலிஸ் மாஅதிபர் பதவியை இடைநிறுத்தும் உத்தரவின் பின்னணி



கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸ் மாஅதிபர் ஒருவர் தனது கடமையில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கும் இடைக்கால தடை உத்தரவு ஒன்று இலங்கை பொலிஸ் வரலாறு மற்றும் உச்சநீதிமன்ற வரலாற்றிலும் முதல் தடவையாக அண்மையில் பிறப்பிக்கப்பட்டது. பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றிய தேஷபந்து தென்னகோன் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைக்கு உச்ச நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் ஏகமனதாக அனுமதி வழங்கியுள்ளது.

பொலிஸ் மாஅதிபராக செயற்பட்ட சி. டி. விக்ரமரத்ன ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து அப்போதைய மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டார். அந்த நியமனத்தை சவாலுக்குட்படுத்தி பலதரப்புகளினால் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது, கொழும்பு காலி முகத்திடல் போராட்ட சமயத்தில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை, ஈஸ்டர் தற்கொலை



தாக்குதல் சம்பவத்தில் கடமையைச் செய்யத் தவறியமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் முறைப்பாட்டைச் செய்தேயாகும்.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒன்றின் சந்தேக நபராகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த தேசப்பந்து தேன்னகோன் பொலிஸ் சேவையின் உயர் பதவிக்கு பதில் கடமைக்காக நியமிப்பதற்கு எதிரான விடயங்களும் அந்த மனுவின் மூலம் முன்வைக்கப்பட்டிருந்தது. இதேவேளை, 2010ம் ஆண்டில் அப்போதைய நுகேகொட பிரதேசத்திற்கு பொறுப்பாக இருந்த தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவினால் கொடூரமாக தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாக 2023 டிசம்பர் 14 அன்று உச்ச நீதிமன்ற தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்களான குமுதினி விக்ரமசிங்க, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் உச்சநீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜாவினால் அறிவிக்கப்பட்ட அந்த தீர்ப்பின் மூலம் அந்த தாக்குதல் சம்பவத்தின் காரணமாக மனுதாரரின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரை மயானத்திற்கு அழைத்துச் சென்ற பின்னர், அப்போது அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் அத்தியட்சகர் தேஷபந்து தென்னகோன், மனுதாரரை இறப்பர் பட்டி ஒன்றினால் அடித்துள்ளதோடு, மனுதாரரை நிர்வாணமாக்கி பாம் வகை ஒன்றினைப் பூசுமாறு உத்தரவிட்டமை மனு விசாரணையின் போது தெரியவந்ததாக வழக்கு தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மனுதாரர் கைது செய்யப்பட்டு, சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டமை மற்றும் மனிதாபிமானமற்ற சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டமைக்காக தலா ஐந்து இலட்சம் ரூபா நட்டஈட்டுத் தொகையினை தனது சொந்த நிதியிலிருந்து அந்நபருக்கு வழங்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்ட போது பதில் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றிய தேஷபந்து தென்னகோன் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு சிவில் பிரஜைக்கும் அந்தத் தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அந்த பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக இந்த வழக்கு தீர்ப்பின் பிரதிகளை தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்திருக்கும் "ஸ்டார்" பொறுப்பின் சின்னங்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதோடு, அவை அதிகாரத்தினைக் காட்டும் ஆபரணங்கள் அல்ல என்றும் தீர்ப்பில் வலியுறுத்தப்பட்டது.

பதில் பொலிஸ் மா அதிபராக தேஷபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமைக்கு எதிரான மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மேற்படி தீர்ப்பு தொடர்பாக மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றில் விடயங்களைச் சமர்ப்பித்தனர். பொலிஸ் மாஅதிபர் பதவிக்கு தேசபந்து தென்னகோனின் பெயரை ஜனாதிபதி பரிந்துரை செய்திருந்தார். அந்த பரிந்துரைக்கு அமைவாக அந்த நியமனத்தை நிராகரிப்பதற்கு நான்கு அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர்கள் நடவடிக்கை மேற்கொண்டதோடு, இருவர் அந்த வேட்புமனுவுக்கு ஒப்புதல் அளித்தனர். இதற்கான வாக்கெடுப்பின் போது இரண்டு உறுப்பினர்கள் சமுகமளித்திருக்கவில்லை. அவ்வாறு சமுகமளிக்காத இரு உறுப்பினர்களும் வேட்புமனுவுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள் என தீர்மானிப்பதற்கு சபாநாயகர் நடவடிக்கை மேற்கொண்டார்.

அத்தகைய பதவிகளுக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் ஆதரவாகவும் எதிராகவும் சமமான வாக்குகள் கிடைக்கும் பட்சத்தில் தீர்க்கமான வாக்கினைப் பயன்படுத்தும் வாய்ப்பு அரசியலமைப்பு சபாநாயகருக்கு வழங்கியுள்ளது. அதனடிப்படையில், சபையில் சமுகமளிக்காத இரு உறுப்பினர்கள் உட்பட அந்தந்த வேட்புமனுவுக்கு அளிக்கப்பட்ட கட்சி மற்றும் எதிர்க்கட்சி வாக்குகளின் எண்ணிக்கை சமமானது என்பதைக் கருத்தில் கொண்டு, சபாநாயகர் தனது தீர்மானமிக்க வாக்கைப் பாவித்து அந்த நியமனப் பத்திரத்திற்கு ஆதரவளிப்பதாக அறிவித்தார். அதனடிப்படையில், உரிய வேட்புமனு நிறைவேற்றப்பட்டு தேஷபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித், மாற்றுக் கொள்கைக்கான நிலையம், பேராசிரியர் சாவித்திரி குணசேகர, நிரோஷன் பாதுக்க, ஹிருணிகா பிரேமச்சந்திர, இளம் ஊடகவியலாளர் சங்கம் உள்ளிட்ட பல தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் மேலும் ஒன்பது அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்தது இதனிடையேயாகும். இந்த மனுக்கள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பதில் பொலிஸ் மாஅதிபராக தொடர்ந்து செயல்படாத காரணத்தினால் தேஷபந்து தென்னகோனை அப்பதவிக்கு நியமித்தமைக்கு எதிரான மனுக்களை வாபஸ் பெறுவதற்கு மனுதாரர் தரப்பு நடவடிக்கை எடுத்தது. அதன்பிரகாரம் அந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

எனினும் அவர் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 09 மனுக்களையும் தொடர மனுதாரர் தரப்பு நடவடிக்கை மேற்கொண்டது. அதன்பிரகாரம், குறித்த மனுக்கள் தொடர்பான அடிப்படை விடயங்கள் தொடர்பான பரிசீலனை உச்சநீதிமன்றத்தில் ஆறு நாட்கள் இடம்பெற்றது.

இதன்போது மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலியா பீரிஸ், சுரேன் பெர்னாண்டோ, உபுல் ஜயசூரிய உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் நீதிமன்றில் ஆஜராகி, பொலிஸ் மாஅதிபராக தேசபந்து தென்னகோனின் நியமனம் சட்டத்தின் பிரகாரம் உரிய முறையில் மேற்கொள்ளப்படாததால், அவர் பொலிஸ் மா அதிபராகச் செயற்படுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

தேஷபந்து தென்னகோன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா இரண்டு நாட்களாக விடயங்களை முன்வைத்து அடிப்படை உரிமை மனுவினை முதல் சந்தர்ப்பத்திலேயே நிராகரிக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

பின்னர் 18ஆம் திகதி அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர்களின் கருத்துத் தெரிவிப்பதும், மனுதாரர்களின் எதிர் கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டதோடு, அந்த விடயங்கள் தொடர்பான பரிசீலனை அன்றைய தினம் இரவு சுமார் ஒன்பது பத்து மணி வரை வழக்கமான பணிக் காலத்தையும் தாண்டி இடம்பெற்றது. பின்னர் மனு மீதான விசாரணைக்கு அனுமதி வழங்குவதா இல்லையா என்றும், மனுதாரர்கள் கேட்கும் இடைக்கால தடை உத்தரவை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பான தீர்ப்பு வழங்குவதையும் ஒத்திவைப்பதற்கு உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது. இந்த தீர்ப்பு கடந்த 24ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வழங்க இருந்த நிலையில், அந்த நிகழ்வைப் பார்ப்பதற்கு வந்திருந்த சட்டத்தரணிகள், சட்டக்கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட தரப்பினர் காரணமாக உச்ச நீதிமன்றத்தின் 403ம் இலக்க நீதிமன்ற அறை நிரம்பி வழிந்தது. குறித்த மனு தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பார்த்த உச்ச நீதிமன்ற நீதியரசர்களான அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் ஏகமானதாக உத்தரவு உச்சநீதிமன்ற நீதியரசர் யசந்த கோதாகொடவினால் அந்த திறந்த நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இதன்போது குறித்த 09 அடிப்படை உரிமை மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபர் பதவி வகித்தல், பொலிஸ் மா அதிபர் பதவியில் செயற்படுதல் மற்றும் அந்தப் பதவி தொடர்பான அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் இடைக்காலத் தடை உத்தரவு அங்கு பிறப்பிக்கப்பட்டது.

இந்த இடைக்கால தடை உத்தரவு அமுல்படுத்தப்படும் காலப்பகுதியினுள் சட்டத்திற்கு அமைவாக பதில் பொலிஸ் மா அதிபராகத் தகுதியான ஒருவரை பெயரிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அடிப்படை உரிமைகள் மனு மீதான விசாரணைகள் முடிவடைந்து தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை இந்த இடைக்கால தடை உத்தரவு அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. பிரதிவாதியான தேஷபந்து தென்னகோனை பொலிஸ் மாஅதிபராக நியமித்ததன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக வலுவான வழக்குச் சான்றுகள் உள்ளதாக விடயங்களை மனுதாரர் தரப்பு முன்வைத்துள்ளதாக நீதிபதிகள் குழு தீர்மானித்துள்ளதாக நீதிபதி யசந்த கோதாகொட இதன்போது தெரிவித்தார். பொலிஸ்மா அதிபராக பதவி வகித்தல், அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் அந்தப் பதவி தொடர்பான அதிகாரங்களைப் பாவித்தல் போன்றவற்றிலிருந்து தேஷபந்து தென்னகோனை தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிப்பதாகவும், இந்த மனு மீதான விசாரணைகள் முடிவடையும் வரை இந்த இடைக்கால தடை உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கும் நீதிபதிகள் குழு ஏகமானதாக உத்தரவிடுவதாகவும் இதன் போது அறிவிக்கப்பட்டது. தேஷபந்து தென்னகோன் தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு இறுதி உத்தரவு அன்றி, அது தற்காலிக உத்தரவு மட்டுமேயாகும். மனு விசாரணையின் முடிவில், வழங்கப்படும் தீர்ப்பின் மூலம் இந்த இடைக்கால தடை உத்தரவை கலைக்கவோ அல்லது புதிய உத்தரவுகளை பிறப்பிக்கவோ சட்ட ரீதியான வாய்ப்புகள் உள்ளன.

**நெல்கா மெதகொரத**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# தேயிலைத் தோட்டங்களில் வெளியார் உற்பத்தி முறைமை



பொருட்களை உற்பத்தி செய்யும் உழைப்பாளர்களுக்கு உற்பத்திக் கருவிகளில் உரிமை இல்லாத பொறிமுறைமை முதலாளித்துவப் பொருளாதார முறை. இதில் உழைப்போரின் பங்கு உழைக்கும் சக்தியினை கூலிக்கு விற்பது மட்டுமே.

இப்பொறிமுறை பொருளாதார நெளிவு சுளிவுகளுக்கு ஏற்ப முதல் உடையோருக்குப் பொருத்தமான வடிவங்களை அறிமுகப்படுத்தும். அவ்வாறான ஒரு பொறிமுறைமையே வெளியார் உற்பத்தி முறைமை.

ஐரோப்பிய வல்லரசு நாடுகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஆசியா, ஆபிரிக்க நாடுகளில் பொருளாதார முறைமையினை தமக்கு வருவாய் தரும் முறையாக மாற்றி அமைத்தனர். குடியேற்ற நாடுகளின் பொருளாதார பண்புகளில் வீரியமாகத் தென்படுவது இந்த அம்சமே ஆகும். தமது வருமானதை பெருப்பிக்க அவர்கள் வர்த்தகப் பயிர்களை அறிமுகப்படுத்தினர்

இலங்கையில் போர்த்துக்கேயர் வாசனைப் பொருட்களுக்கும், யானைத் தந்தங்களுக்குமே முன்னுரிமைக் கொடுத்தனர். இலங்கை அரசர்களோடு செய்து கொண்ட பல ஒப்பந்தங்களின் முக்கிய கருப்பொருள் இவையே. இதில் ஓரடி மேலே போன ஒல்லாந்தர் கறுவா விளையும் பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த செயற்பாடே பிற்காலத்தில் முழு நாடும் அந்நியருக்குச் சொந்தமாவதற்கு மடை திறப்பானது.

ஆங்கிலேயர் இதற்காக முழு நாட்டையும் அடிமைப்படுத்தி வர்த்தகப் பயிர் பொருளாதார முறையை வளர்த்தெடுத்தனர். இதன் நீட்சியாக இன்றும் தேயிலையும், றப்பரும் இருக்கின்றன. இப்பயிர்ச் செய்கைக்கு இன்று சில சவால்கள், பிரச்சினைகள் எழுந்துள்ளன. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் காலத்துக்குக் காலம் தோன்றும் பிரச்சினைகள் இவை. இவை பொருளாதாரத்தின் கட்டமைப்பின் அடித்தளத்தினை அசைத்து விடா. ஆனால் முதலீட்டாளர்களின் வருவாயில் சிறு அதிர்வினை ஏற்படுத்தும். அதற்குப் பரிகாரம் என தமது லாபத்தினை உச்சமாகும் புதிய பொறிமுறைகள் அறிமுகப் படுத்தப்படும். குடியேற்ற ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருந்த கானா, கென்யா, ஐவரிகோஸ்ட், ஜாம்பியா போன்ற நாடுகளில் தான் வெளியார் உற்பத்திப் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது .

வெளியார் உற்பத்தி முறைமை ஒப்பந்தப் பண்ணை முறைமை என்றும் கூறப்படுகின்றது. உற்பத்தியில் நேரடியாக ஈடுபடுவோர், உற்பத்தி நிலத்திற்குச் சொந்தக்காரர் ஆகிய இரு தரப்பினர் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இடையிலான ஒப்பந்த ஏற்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பொறிமுறை இது. இந்தியாவின் சில பகுதிகளிலும், சில ஆபிரிக்க நாடுகளிலும் காணி உரிமை உள்ள உற்பத்தியாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றது. இலங்கையில் காணி உரித்து அற்றோருக்கும், குத்தகைக் காரர்களுக்கும் ஒப்பந்தம் இன்றி செயல்படுத்தப்படுகின்றது. பெருந்தோட்டங்களை பிராந்திய பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கு அரசாங்கம் குத்தகைக்குக் கொடுத்தபோது இவ்வாறான புதிய நடைமுறைகளை புகுத்துவதற்கான ஏற்பாடுகள் இருந்ததா என்று தெரியவில்லை.

"ஒப்பந்த பண்ணை முறை ஒரு வணிக/ வர்த்தக ரீதியான முன்மொழிவு" என்று கூறப்படுகின்றது. வணிகத்தில் லாப நோக்கமே உயிர் நாடி. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடிநாதமும் இதுதான். இதன் அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பான பொறிமுறையாக காணப்படுகின்றது. அதனால் உழைப்பாளர்களுக்கு விமோசனம் தரக்கூடியதாக இருக்க முடியாது." வாங்குவோருக்கும், விவசாயிகளுக்கு இடையிலான ஒப்பந்தத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படும் விவசாய உற்பத்தியே ஒப்பந்த விவசாயம் என என்று செபர்ட் (Andrew Shepard ) ஒப்பந்த விவசாயம் பற்றிய ஓர் அறிமுகம் என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். உற்பத்தியின் இலக்கு நுகர்வு பூர்த்தி மட்டுமல்ல லாப நோக்கும் கொண்டது என்ற உண்மையினை இதனோடு சேர்த்துப் பார்க்க வேண்டும். வணிக நோக்குடைய ஒப்பந்த விவசாயம் பொருளின் உற்பத்தியிலும், சந்தைப்படுத்தலிலும் நிபந்தனைகளை விதிக்கின்றது.

இலங்கை தேயிலைத் தோட்டங்களில் வெளியார் உற்பத்தி முறைமை நடைமுறைப் படுத்துவதனை ஆய்வு செய்தோர் "நிலத்தினதும், தொழிலாளியினதும் உழைப்புத் திறனை மேம்படுத்தலுக்கும், தேயிலைத் தோட்டங்களின் நிலைத்திருப்பிற்கும் மூலோபாயம் ஒன்று தேவைப்படுவதாகக் கூறியுள்ளனர். இந்த நோக்கிற்கான ஒரு கோட்பாடே வெளியார் உற்பத்தி முறைமை என்று கூறும் அவர்கள் இம் முறையினை பின் வருமாறு விளக்கியுள்ளனர்." தொழிலாளரின் பயன் முனைப்பான பங்குபற்றலோடு தோட்டத்தில் உள்ள தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு பூரணமாகப் பயன்படுத்தப்படாத அல்லது பயன் தராத காணித் துண்டு ஒன்று கொடுக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

தேயிலைக்காணியை நிர்வகிப்பதற்காக பசளை, பிற உள்ளீடுகள், தொழில்நுட்ப செயன்முறை நுண்ணறிவு போன்றவற்றை தோட்ட நிர்வாகம் கொடுக்கும்.பதிலாக அவர்கள் கொழுந்தினை தோட்ட நிர்வாகத்தினருக்கு கொடுக்க வேண்டும். வளர்ச்சி அடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் இம்முறைமை 15 % மான விவசாய வெளியீட்டினை அந்நாடுகளில் தருவதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது (Implementation of outgrower system in tea plantation ._A .W .Shyamalee &Nimal Wellala _Agricultural Economic Division ,T .R .I of Sri Lanka) என்று ஆய்வாளர் இருவர் குறிபிட்டுள்ளனர்.

நாட்டின் மொத்த குடித்தொகையில் 5%மான தோட்ட மக்கள் நகர, கிராம மக்களை விட மிகக் குறைந்த வருமானத்தைப் பெறும் இவர்கள், இலங்கையின் வறுமை ஒழிப்பு முயற்சிக்கு முக்கிய சவாலாக இருப்பதனை சுட்டியுள்ள உலக வங்கியின் கூற்றினை எடுத்துக் காட்டி, வெளியார் பொறிமுறை வருமானத்தை உயர்த்துவதோடு, தோட்டங்களில் இருந்து இடம் பெயர்வதனையும் குறைக்கும் என்று கூறியுள்ளனர்.

இந்த முறையால் மாதாந்த வருமானம் கூடும் என்பது சாத்தியமா என்று சந்தேகப் பட வேண்டியுள்ளது. காரணம், தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் காணியின் தன்மை பயிரிடப்படாத காணி எனில் பயிரிடமுடியாத காணியா எனும் கேள்வி எழுகின்றது. உச்ச லாபத்தினையே நோக்காகக்கொண்ட கம்பெனிக்காரர்கள் பயிரிடாமல் காணிகளை வைத்திருப்பார்களா? இக் காணிகளின் இன்னொரு தன்மை வளமற்று காணப்படுவது. இத்தகைய கனிகளில் எவ்வளவு உள்ளீடுகளைச் செய்தாலும் நல்ல விளைச்சல் கிடைக்காது.எனவே வருமானம் கூடும் என்பது நிச்சயமற்றது.

வெளியார் பயிர்ச் செய்கை ஒரு புதிய முறைமையாகையால் நோக்கினை அடைய சம்பத்தப்பட்ட எல்லா தரப்பினரின் முயற்சியும், பயனுறுதியுள்ள அவதானிப்பு முறைமையும் அவசியமானதோடு, பொருத்தமான பயிர்ச் செய்கை செயற்பாடுகளும், புரிந்துணர்வும் அவசியமென்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வெளியார் உற்பத்தி முறைமை ஒப்பந்த விவசாய செயற்பாடு என்று கூறப்படுகின்றது. இம் முறையினை விளக்கிய பாரி பாஉமன்(Pari baumann ) என்பவர், வெளியார் உற்பத்தியாளர்களும், ஒப்பந்தக்காரர்களுக்கும் இடையிலான அபாயத் தேர்வு (Risk) என குறிப்பிடுகின்றார். பொருளுடைமை சமூகத்தில் பந்தயத்தில் வெல்லக்கூடியவர்கள் முதலீட்டாளர்கள் (invester) என்பது தர்க்க ரீதியான முடிவாகும். ஒப்பந்தம்

பரஸ்பர சம்பந்தத்திற்கு மேலாக, சம்பந்தத்தின் வகைக் குறியானது என அவர் விவரித்துள்ளார். ஓர் ஒப்பந்தத்தின் அமைப்பும், நிருவகிப்பும் அதில் பதிந்துள்ள அரசியல், பொருளாதார சூழலிலேயே பெரிதும் தங்கியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

நடைமுறை அரசியல், பொருளாதாரச் சூழல் தொழிலாளர்களுக்குச் சாதகமானதல்ல. அரசியலில் தொழிலாளர்களுக்கு வாக்கு அளிப்பதனைத் தவிர்ந்த வேறு நிர்ணய பங்கு எதுவுமில்லை, சிறுபான்மை இன தொழிலாளர்களின் நிலைமை மேலும் மோசமானது. அவர்கள் மாற்றான் தாய் மனப்பாங்கோடு பார்க்கப்படுவதோடு, ஒதுக்கியும் வைக்கப்பட்டுள்ளனர். பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே அல்லற்படுவதனை போக்க அரசாங்கம் எவ்வித பரிகார ஏற்பாட்டினையும் செய்யாதது இதனைப் புலப்படுத்துக்கின்றது.

தோட்டத் தொழிலாளரின் கூலியினை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்த செயற்பாட்டில் மௌனப் பார்வையாளராக அரசாங்கம் நடந்து கொள்வது இதனை வலுப்படுத்துகின்றது. இதேவேளை நடப்பில் உள்ள பொருளாதாரக் கட்டமைப்பு சுரண்டல் மூலதன அழுத்தத்தில் அமிழ்ந்து உள்ளதனை மனத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய சூழலில் தொழிலாளர்களுக்கு விமோசனம் அளிக்கக் கூடியதாக இம் முறைமை செயற்பட முடியுமா?

பாரி பாஉமன் இரு சாராருக்கும் இடையிலான ஒப்பந்தம், தெளிவானதாக (clarity) உரிமைகளையும்,பொறுப்புகளையும் விளக்குவதாக இருக்க வேண்டும் என்கிறார். தொழிலாளர்கள் கல்வியறிவு குறைந்தோராகவும், முதலீட்டாளர்கள் கல்வியறிவு கூடியோராகவும் இருக்கின்ற யதார்த்த நிலையில் ஒப்பந்தத்தின் தெளிவு எவ்வாறு இருக்குமென்று யூகிக்க முடியும். ஒப்பந்தத்தின் பொருள்கோடல் வழு படக்கூடியது (vulnerable) என்று பாரி பாஉமன் கூறியுள்ளது இத்தகைய ஐயத்தினை வலுவாக்குகின்றது.

இதற்கு உதாரணமாக 18 பக்கங்களைக் கொண்ட சாம்பியாவின் ஆவணம் ஒன்றினையும், கென்யாவின் தேயிலை மேம்பாட்டு அதிகார சபை முறைப்படியான (formal) ஒப்பந்தத்தினைக் கொண்டிராமல் வெளி உற்பத்தியாளர்கள் செயற்திட்ட அதிகாரிகளின் நல்லெண்ணத்தில் தங்கி இருக்க வேண்டியுள்ளதனையும் அவர் எடுத்துக் காட்டி உள்ளார்.

இவ் விளக்கத்தின் அடிப்படையில் வெளியார் உற்பத்தி முறைமை தொழிலாளர்களுக்குச் சாதகமானதல்ல என்பதனைப் புரிந்து கொள்ளலாம். இலங்கையில் வெளியார் உற்பத்தி முறைமை அமுலாக்கலைப்பற்றி ஆய்வு செய்த தேயிலை ஆராய்ச்சி நிறுவன ஆய்வாளர்கள் (Implementation of outgrower system in tea plantation W .W .Shyamalee & Wellala) இதற்கான சில வழிகாட்டல் ஏற்பாடுகளைக் குறிப்பிட்டுள்ளனர். அவை :

1. சம்பளப்பட்டியலிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு முன்னுரிமை
2. காணி அபிவிருத்தி செய்யப்படுவதற்குப் பொருத்தமான நீண்டகால குத்தொகை ஏற்பாடு.
3. வேறு பயிர்கள் பயிரிடப்படக் கூடாது.
4. கட்டடங்கள் அமைக்கப்படுவது அனுமதிக்கப் படாது.
5. போதுமான உச்சவருமானத்தை ஈட்டக் கூடியதாக காணி அபிவிருத்தி செய்யப்படும் வரை வாழ்வாதாரத்திற்குப் போதுமான வருமானத்தைப் பெறத்தக்கதாக மாதம் ஒன்றுக்கு வேலை வழங்குதல்.
6. செலவு மீளப் பெறும் அடிப்படையில் பொருட்களை (Materials) விநியோகிக்கப்படுவதோடு தொழில்நுட்ப நுண்ணறிவினை நிர்வாகம் வழங்க வேண்டும்.
7. தேயிலை ஆணையாளரின் (Tea controlar) சூத்திரத்திற்கு ஏற்ற அல்லது கூடிய விலைக்கு கொழுந்தினை கொள்வனவு செய்தல்.
8. காணி உரித்து அடிப்படையில் பறிக்கப்பட்ட கொழுந்தில் இருந்து ஒரு தொகையினை உரிமைத் தொகையாக நிர்வாகத்தார் பிடித்துக் கொள்ளலாம்.
9. ஒவ்வொரு வெளியார் உற்பத்தியாளரின் கணக்கு விவரங்களை தோட்டக் காரியாலயங்கள் பேணா வேண்டும்.
10. ஒவ்வொரு வெளியார் உற்பத்தியாளரும் நியாயமான அறுவடையைப் பெறத்தக்கதாக ஒரு ஹெக் காணி அல்லது 5000 /6000 தேயிலைச் செடிகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வழிகாட்டல் குறிப்புகள் விமர்சிக்கப் படத்தக்க அம்சங்களைக் கொண்டுள்ளன.

(அடுத்த வார தொடர்...)

பீ.மரியதாஸ்



கண்டி மதீனா மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் 'மீண்டும் பாடசாலைக்கு செல்வோம்' எனும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை கல்லூரியில் அதிபர் ஏ. ரஹீம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர். இதன் போது 1998 ஆம் ஆண்டு மாணவர்களினால் பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர், ஆசிரியைகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. **படங்கள் மாவத்தகம நிருபர்**

# சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் மதீனா கவர்னருக்கு 'போகன்விளா' செடிகள் அன்பளிப்பு



சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத் மதீனா கவர்னர் இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல் அஸீஸுக்கு புனித மதீனா நகரில் நடுவதற்காக இலங்கையின் 'போகன்விளா' செடிகளை அன்பளிப்புச் செய்தார். இதன் மூலம் தூதுவர் சவுதி அரேபியாவின் 2030 இலக்குகளை அடைவதை நோக்காகக் கொண்டு முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மானால் முன்னெடுக்கப்பட்டுள்ள சவுதி அரேபியாவின் பசுமை சார் முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்குவதற்கான இலங்கையின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார். அண்மையில் மதீனா மாநகர சபை "Here It Was Planted" என்ற மகுடம் தாங்கி ஒரு மர நடுகை நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது. அதன்போது குறித்த பிராந்தியத்தின் காலநிலை மற்றும் சுற்றாடலுக்கு பொருத்தமான செடியாக 'போகன்விளா' தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியாவின் பசுமை சார் முன்னெடுப்பானது (SGI) காலநிலை மாற்றம், பச்சை வீட்டுத் தாக்கத்தை குறைத்தல் மற்றும் தூய்மையான வலுப் பயன்பாட்டை அதிகரித்தல் போன்றவற்றை மையப்படுத்தி 10 பில்லியன் மரங்களை நாடு பூராகவும் வளர்ப்பதை நோக்காகக் கொண்டிருக்கின்றது. இந்த அன்பளிப்பின் மூலம் உயிர்ப் பல்வகைமை கொண்ட ஒரு நாடு என்ற வகையில் இலங்கையின் பூரண ஆதரவை சவுதி அரேபியாவின் பசுமை சார் முன்னெடுப்புகளுக்கு வழங்க முடியும் என இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் சுட்டிக்காட்டினார்.

சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பதவியேற்ற பின்னரான தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை புனித மதீனா முனவ்வரா நகருக்கு மேற்கொண்ட தூதுவர் மதீனா மாகாண ஆளுநருடனான சிநேகபூர்வமான சந்திப்பொன்றையும் மேற்கொண்டார். மேலும் இச்சந்திப்பானது இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சவுதி அரேபியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவுகளைத் தொட்டுக்காட்டிய தூதுவர் அமீர் அஜ்வத் இரு நாடுகளுக்குமிடையிலான நவீன இராஜதந்திர உறவுகள் 1974 ஆம் ஆண்டு முதல் கட்டியெழுப்பப்பட்ட போதிலும் இரு நாடுகளுக்குமிடையிலான புராதன கால இராஜதந்திர உறவுகள் கி.பி. 7ம் நூற்றாண்டுகளிலேயே ஆரம்பித்துவிட்டது என்பதையும் நினைவு படுத்தினார். கி.பி. 7ம் நூற்றாண்டுகளில் அனுராதபுரத்தை ஆட்சி செய்த மூன்றாம் அகபோதி மன்னன் (கி.பி. 623 640) இலங்கையில் வாழ்ந்து வந்த அரேபியர்களின் வேண்டுகோளின் பேரில் மதீனாவை நோக்கி முஹம்மத் நபி (ஸல்) அவர்களது காலத்தில் இஸ்லாம் மதத்தை அறிந்து கொள்வதற்காக ஒரு தூதுவரை அனுப்பி வைத்த வரலாற்றை மதீனா கவர்னர் இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல் அஸீஸுக்கு எடுத்துரைத்தார். அக்கால அரேபியர்களால் இலங்கை 'செரண்டிப்' என அழைக்கப்பட்டது. இந்த வராற்றுப் பின்னணி கொண்ட மதீனா நகருக்கான தனது விஜயம் உணர்வுபூர்வமான பெறுமானங்களைக் கொண்டிருப்பதாகவும் தூதுவர் அமீர் அஜ்வத் சுட்டிக் காட்டினார்.

இலங்கை தூதரகம்
ரியாத்
24.07.2024

# சாதிக்கத் துடிக்கும் சாமானியன் சஹ்மியின் சாதனைப் பயணம் !!





வரலாற்றில் முதற்தடவையாக, அசாத்திய முயற்சியை மேற்கொண்டு, நடைப்பவனியாக நாட்டை சுற்றும் சஹ்மி சஹீதின் சாதனைப் பயணம் திருக்கோயிலை சென்றடைந்தது!!

நடந்தே நாட்டை சுற்றி வரும் நோக்குடன் கடந்த 13 ஆம் திகதி பேருவளையில் ஆரம்பிக்கப்பட்ட இளம் யூடியூப்பர் சஹ்மி ஷஹீதின் சாதனை நடைபவனி கடந்த 26ஆம் திகதி திருக்கோயிலை சென்றடைந்தது.

பேருவளையில் இருந்து காலி வீதி ஊடாக மாத்தறை, ஹம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனராகலை, பொத்துவில் மற்றும் அக்கரைப்பற்று வரை சென்று அக்கரைப்பற்றை சென்றடைந்துள்ளது.

தன்னம்பிக்கையுடனும், அசாத்தியத் துணிவுடனும் தன் சாதனை பயணத்தை தொடரும் இவருக்கு மாத்தறை பிக் சிட்டி குழு அங்கத்தவர்கள் மலர்க்கொத்து வழங்கி உற்சாகமளித்து வரவேற்றதோடு, ஹம்பாந்தோட்டை தனியார் வில்லா ஒன்றில், பேருவளையின் பிரபல வர்த்தகர் அல்ஹாஜ் அஹ்ஷர் தலைமையிலான குழு ஒன்றும் அமோக வரவேற்பளித்தனர். ஸஹ்மியின் தேவைகருதி பெறுமதியான கேமரா ஒன்றும் இதன்போது அன்பளிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து தன் பயணத்தை தொடர்ந்த இவர் யானைகள் அச்சுறுத்தல்கள் நிறைந்த காட்டு வழி பாதைகளில் கூட தைரியமாகவும் இறைநம்பிக்கையுடனும் தனியாக சென்றமை குறிப்பிடத்தக்கது. தனது பயணத்தின் 14 ஆவது தினமாக கடந்த வெள்ளிக் கிழமை (26) அக்கரைப்பற்று வரை சென்றடைந்த இவருக்கு பொத்துவில் பிரண்ட்ஸ் நலன்புரி அமைப்பினால் மலர் மாலையணிவித்து அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அடுத்த கட்டமாக இவரது வரலாற்றுச்சாதனை பயணம், மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பானம், மன்னார், அனுராதபுரம், புத்தளம் ஊடக கொழும்பு, களுத்துறை வந்து பேருவளையை சென்றடையவுள்ளது.

பேருவளை: பீ.எம் முக்தார்

# பிரச்சினைகளை புரிந்து கொண்ட ஒருவரை ஆயராக நியமிக்கவும்

## யாழ். கத்தோலிக்க சமூகம் கோரிக்கை

யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க சமூகம் தங்கள் மத்தியில் வாழ்ந்து தங்களது பிரச்சினைகளை நன்கு புரிந்துகொண்ட ஒரு மதகுருவே புதிய ஆயராக வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக அடுத்து வரும் ஆயர் தெரிவில் வெளிநாடுகளில் பல காலம் தங்கியிருந்து இப்போது நாடு திரும்பியுள்ள சிலரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு நியமிக்கப்பட உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ள நிலையிலேயே கத்தோலிக்க சமூகம் இத்தகைய ஒரு கோரிக்கையை முன் வைத்துள்ளது. குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து திரும்பி தனது பண பலத்தின் மூலம் சிலர் இவ்வாறு அந்த உயர்ந்த மக்கள் சேவைக்கான பதவி நிலையை அடைய முனைவதாகவும் கத்தோலிக்க சமூகம் ஒரு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளது. எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் நான்கு கத்தோலிக்க மறைமாவட்டங்கள் உள்ளன. யாழ்ப்பாண மறைமாவட்டம், மன்னார் மறைமாவட்டம்,

(18ஆம் பக்கம் பார்க்க)

## உண்மையான ஊழல் (03 ஆம் பக்கம் மிகுதி)

சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதியளித்தலின் இரண்டாவது மீளாய்வு மூலம் வழங்கப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் முழு ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பையும் வலுப்படுத்தும் திட்டத்தை இந்த நிகழ்ச்சி நிரல் முன்மொழிந்துள்ளது.

தற்போதைய ஊழல் எதிர்ப்பு முயற்சிகள், லஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவை செயற்படுத்துதல், அரச நிதி நிர்வாகம், அரச நிதி முகாமைத்துவம், அரச சொத்துகளைக் கண்காணித்தல், முகாமைத்துவம் செய்தல், பண மோசடியைத் தடுத்தல், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதை எதிர்த்தல் ஆகியவையும் அடங்குவது குறிப்பிடத்தக்கது. ஊழலைச் சரியாகக் கண்டறியாமை, வழக்குத் தொடராமை, தொடுக்கப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தண்டிக்கப்படாமை என்பன தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மீது நீண்டகாலமாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே. நிர்வாக மற்றும் சட்ட குறைபாடுகளும் அதற்கு காரணமாக அமைந்தன.

இந்நிலையில், இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக தற்போதுள்ள உள்நாட்டு பொறிமுறையை வலுப்படுத்த முன்வைக்கப்படும் மிகவும் பொருத்தமான வேலைத்திட்டம் ஜனாதிபதி ரணிலின் ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சி நிரல் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய தருணம் வந்துள்ளது. ஊழல், மோசடி மற்றும் வீண்விரயத்திற்கு எதிராக செயற்படும் முற்போக்கு சக்தி ஏதேனும் இருந்தால், ஜனாதிபதி ரணிலின் தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த இடையூறு செய்யாது முழு ஆதரவளிக்க வேண்டும். உண்மையான ஊழல் எதிர்ப்பாளர்கள் யார் என்பதை வார்த்தைகளால் அன்றி செயலிலும் நிரூபிப்பதில் ஜனாதிபதி ரணிலின் தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த இடையூறு செய்யாது முழு ஆதரவளிக்க வேண்டும்.

உண்மையான ஊழல் எதிர்ப்பாளர்கள் யார் என்பதை வார்த்தைகளால் அன்றி செயலிலும் நிரூபிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றுள்ளார் என்றே கூற வேண்டும்.

32 வயதுடைய ஆணுக்கு O+ இன சிறுநீரகமொன்று தேவை. சன்மானம் வழங்கப்படும்
**அழைக்கவும்: 071 5605687**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## கொழும்பு துறைமுகத்திற்காக வீதி சுத்திகரிக்கும் இயந்திரமொன்றை வாடகைக்கமர்த்துதல்

1. கொழும்பு துறைமுகத்திற்காக வீதி சுத்திகரிக்கும் இயந்திரமொன்றை வாடகைக்கு அமர்த்துவதற்காக **(Contract No.: EW/GEN/06/24/01)** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இதுஅ இன் தலைவரின் சார்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. விலைமனுப்பிணைத் தொகையானது 25,000 ரூபாவென்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாகவுமாகவிருத்தல் வேண்டும்.
4. வேலை நாட்களில் 2024.07.30 ஆம் திகதியிலிருந்து முப. 10 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் 2024.08.14 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் (இரு நாட்களும் அடங்கலானவை) பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 3,500 ரூபாவை செலுத்திய பின்னர் மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, லேடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, சிவில் பொறியியல் பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (சிவில்) விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் அதே அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. பாதுகாப்பாக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"Hiring of a Road Sweeper for Port of Colombo (Contract No.: EW/GEN/06/24/01)"** என அடையாளமிடப்பட்ட விலைமனு ஆவணமானது பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் பிரதான பொறியியலாளரின் (சிவில்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024.08.15 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணியளவில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் அவைகள் மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
7. எந்தவொரு மேலதிக விபரங்களையும் மேலேயுள்ள முகவரியின் பொறியியலாளர் (JCT) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2483590)

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - மிஹிந்தலை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் இந்தப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் சிற்றுண்டிச்சாலைகளை நடாத்திக்கொண்டு செல்லுதல் (காலை/பகல்/இரவு உணவு வழங்குவதற்கு இயலுமானவர்கள்) தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவத்தைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. சமூகக்கல்வி மற்றும் மானுடவியல் பீடத்தின் சிற்றுண்டிச்சாலை - மிஹிந்தலை வளாகம்
02. முகாமைத்துவ கல்விப் பீடத்தின் சிற்றுண்டிச்சாலை - மிஹிந்தலை வளாகம்
03. பிரதான மாணவர் நிலைய சிற்றுண்டிச்சாலை - மிஹிந்தலை வளாகம்
04. மருத்துவ மற்றும் சமாந்தர விஞ்ஞான பீடத்தின் சிற்றுண்டிச்சாலை - சாலியபுர வளாகம்

மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபா தொகை மற்றும் மீளளிக்கப்படும் 3000.00 கேள்விக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-07-29ஆம் திகதி முதல் பொதுவான அலுவலக நேரங்களில் பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவை பிரிவிலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல்கள் சமர்ப்பிக்கப்படும் விடயத்தை தெளிவாக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அனுபவத்தை உறுதி செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் கேள்விதாரரின் புகைப்படமொன்றை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவாளர், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

மேற்கூறிய சிற்றுண்டிச்சாலைகளுக்கு பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்படும் வசதிகள் வழங்கப்படும்.

2024-08-12ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கேள்விப் படிவங்களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்விப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மிஹிந்தலை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தில் 2024-08-12ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது தெளிவுபடுத்திக்கொள்ளல் தேவையாயின் இந்த பல்கலைக்கழகத்தின் மாணவர் சேவை பிரிவின் உதவிப் பதிவாளர் (மாணவர் சேவை) அவர்களிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 025-2266577) இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை.**
**2024-07-28.**

# ஆர்வ வெளிப்பாடு (EOI)

## லங்கா சதொச லிமிடெட்டுக்கு கட்டிட புனரமைப்புத் திட்டங்களுக்காக பட்டய கட்டிடக்கலை நிறுவனத்தை தேர்வு செய்தல்

**LSL/PRO/05/118/Consortium Architectural Service/2024**

லங்கா சதொச லிமிடெட், வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 446இற்கு மேற்பட்ட விற்பனையகங்களைக் கொண்ட பாரிய அரச விற்பனையக வலையமைப்பாகும். லங்கா சதொச லிமிடெட், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்ட கட்டிட புனரமைப்பு திட்டங்களுக்காக பட்டய கட்டிடக்கலை நிறுவனங்களிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டுக்கு (EOI) அழைப்பு விடுக்கிறது.

**வளவுகள்:**

1. நிக்ரீஸ் கட்டிட புனரமைப்பை மேற்கொள்ளல். (முகவரி: இல. 108, யோர்க் வீதி, கொழும்பு 01)
2. லங்கா சதொச லிமிடெட் தலைமை அலுவலகக் கட்டிடத்தில் புனரமைப்பை மேற்கொள்ளல் (முகவரி: இல. 27, சதொச பொதுச் செயலாளர் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02)
3. இரத்மலானை லங்கா சதொச விற்பனையகம் (முகவரி: இல. 431, காலி வீதி, இரத்மலானை)

அதன்படி மேல் குறிப்பிடப்பட்ட கட்டிடங்களுக்காக கட்டிடக்கலை சேவையை வழங்குவதற்கு விரும்பும் பட்டய கட்டிடக்கலை நிறுவனங்களை தேர்வு செய்யும்போது செலவு மற்றும் தகைமையை அடிப்படையாகக் கொண்ட, முன் தகைமை வகைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு லங்கா சதொச லிமிடெட நிறுவம் உத்தேசித்துள்ளது.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 ஒகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

**கீழுள்ள அடிப்படை நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்**

1. பட்டய கட்டிடக்கலை நிறுவனம் இலங்கை கட்டிடக்கலை நிறுவனத்தில் (SLIA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.
2. அனைத்து பட்டய கட்டிட நிர்மாண கலைஞர்களும் ஒரே நிறுவனத்தில் முழு நேர பணியாளர்களாக இருத்தல் வேண்டும்.
3. பட்டய கட்டிடக்கலை நிறுவனம் இலங்கை கட்டிடக்கலை நிறுவனம் (SLIA) நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA), நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
4. பட்டய கட்டிடக்கலை நிறுவனத்திற்கு ஒரு பில்லியன் ரூபாவுக்கு மேல் பெறுமதி கொண்ட பழைய கட்டிடங்களை புனரமைத்த அனுபவம் இருத்தல் வேண்டும்.
5. 500 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதி கொண்ட குறைந்தது 03 பழைய கட்டிடங்களின் புனரமைப்பை பூர்த்தி செய்திருத்தல்.
6. 100,000 சதுர அடிக்கு அதிகமான அலுவலக கட்டிடங்களை சீரமைத்தல் மற்றும் நிர்மாணித்தலில் அனுபவம் இருத்தல் வேண்டும்.
7. நிறுவனம் சிரேஷ்ட பட்டய கட்டிட நிர்மாண கலைஞர்களின் மேற்பார்வையின் கீழ் இருத்தல் வேண்டும் என்பதோடு (15 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம்) இந்த நிர்மாணத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு இந்தத் திட்டங்களின் சிக்கற்பாடு மற்றும் அளவை கையாள்வதற்கு தேவையான விசேட அறிவு மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.**

1. நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி, ஒருங்கிணைப்பு தொலைபேசி இலக்கங்கள் போன்றவை உள்ளடக்கிய இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் ஆர்வத்தை வெளிப்படுத்தும் கடிதம்.
2. நிறுவனத்தின் சுய விபரம்.
3. வர்த்தகப் பதிவுச் சான்றிதழ் மற்றும் வெட் சான்றிதழ்.
4. உயர் நிர்வாகக் கட்டமைப்பு
5. குறித்த துறையில் அனுபவம். (மேல் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகள் பொருந்தும்)
6. நிதி திறன். (கடந்த 03 ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்)
7. அரச அரச சாரா நிறுவனங்கள் உட்பட, சேவை வழங்கிய நிறுவனங்களின் பட்டியல் மற்றும் செயற்பட்டு வரும் பணிகளின் பட்டியல் (கடந்த 03 ஆண்டுகள்)

விண்ணப்பதாரர்களினால் தமது ஆர்வ வெளிப்பாட்டை (EOI) 2024 ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி பி.ப. 01.00 அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, தலைவர், லங்கா சதொச லிமிடெட், கவனத்திற்கு: பிரதிப் பொது முகாமையாளர், கொள்வனவு மற்றும் வழங்கல், இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம், வொக்சோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு முடியும்.

ஆர்வ வெளிப்பாட்டை (EOI) இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/118/ Consortium Architectural Service /2024"** என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆர்வ வெளிப்பாட்டை (EOI) ஏற்பது 2024 ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி பி.ப. 01.00 இற்கு நிறைவடைவதோடு, தாமதித்து சமர்ப்பிக்கப்படுகின்ற ஆர்வ வெளிப்பாடுகள் ஏற்கப்படமாட்டாது. லங்கா சதொச லிமிடெட்டினால் குறுகிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்படுவதோடு, தகுதியுடைய மற்றும் பொருத்தமான நிறுவனங்களிடம் இருந்து மாத்திரம் முன்மொழிவுகள் கோரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
தினிஷி – 070 1560428

இந்த ஆர்வ வெளிப்பாட்டின் விண்ணப்பங்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தலைவர், லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழு வசமானது.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு
லங்கா சதொச லிமிடெட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி கொழும்பு 02

# பெறுகை அறிவித்தல்

## லங்கா சதொச லிமிடெட்டுக்கு நிலையான பொருட்களை வழங்கல் மற்றும் பொருத்துதல்

**LSL/PRO/05/125/Fixed Assets/2024**

தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல்

லங்கா சதொச லிமிடெட்டுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட நிலையான பொருட்களை வழங்குவதற்கு உள்நாட்டு வழங்குநர்கள், உள்நாட்டு பிரதிநிதிகள், அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**விபரக்குறிப்பு:** விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

**தேவைகள்:**

| # | உருப்படி விபரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | பல்பொருள் அங்காடி இறாக்கை (இரட்டை பக்கம்) | 108 |
| 2 | பல்பொருள் அங்காடி இறாக்கை (End Gondola) | 47 |
| 3 | பல்பொருள் அங்காடி இறாக்கை (ஒற்றைப் பக்கம்) | 48 |
| 4 | சொக்லட் இறாக்கை (Impulse Rack) | 10 |
| 5 | களஞ்சிய இறாக்கை (Industrial Rack) | 20 |
| 6 | பண சரிபார்ப்பு மேசை | 10 |
| 7 | பொதி கருமபீடம் | 06 |
| 8 | தராசு மேசை (Scale Table) | 13 |
| 9 | 08 கூடை வெங்காயம் கிழங்கு இறாக்கை (கூடைகளுடன்) | 07 |
| 10 | பல்பொருள் அங்காடிக் கூடைகள் | 90 |
| 11 | பல்பொருள் அங்காடி தள்ளு வண்டி (Good quality -60L) | 55 |
| 12 | பல்பொருள் அங்காடி தள்ளு வண்டி (Good quality -100L) | 27 |
| 13 | மீக்குளிர் பெட்டகங்கள் (1100L) | 15 |
| 14 | போத்தல் குளிரூட்டிகள் -(1000L-1300L) இரு கதவுகள் | 09 |
| 15 | உருக்கு அலுமாரி (இரு கதவுகள்) | 05 |
| 16 | வாடிக்கையாளர் இருக்கை | 06 |
| 17 | அலுவலக கதிரை (High Back) | 03 |
| 18 | பிளாஸ்டிக் கதிரை | 19 |
| 19 | பிளாஸ்டிக் உணவு மேசை | 04 |
| 20 | அலுவலக மேசை | 06 |

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களுக்கு கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணத்தை 5,000.00 ரூபா (மீளளிக்கப்படாத) கேள்விமனு கட்டணத்தை செலுத்தி 2024 ஜூலை மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி வரையான காலத்தில் கீழுள்ள முகவரியில் இருந்து பெறுதல் வேண்டும்.

**லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி)**
**இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 ஒகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி மு.ப. 11.00க்கு மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கும் விலைமனுக்களை 2024 ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பி.ப. 01.00 அல்லது அதற்கு முன்னர், மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு கைகளால் கொண்டுவந்து இடுதல் வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "LSL/PRO/05/125/Fixed Assets/2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கைக்குள் இயங்கும் உரிமம் பெற்ற வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட நிபந்தனையற்ற சமர்ப்பிக்கும் பெறுமதியில் 1% பெறுமதியைக் கொண்ட விலைமனு பிணை ஒன்றை (மீளளிக்கப்படும்) விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை ஏற்பது 2024 ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி பி.ப. 01.00 இற்கு நிறைவடைவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
தினிஷி – 070 1560428

கேள்விமனு ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு தலைவர், லங்கா சதொச லிமிடெட் திணைக்கள பெறுகைக் குழு வசமானது.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு
லங்கா சதொச லிமிடெட், இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் .வீதி கொழும்பு 02

# தர்மம் தலை காக்கும்

i ஆம் பக்கத் தொடர்ச்சி ...

தலை அந்த இடத்திலேயே இருக்குமா? இல்லாதிருக்குமா? இல்லாதிருந்து தலையில்லாத ஆள் என்ற பேரை வாங்கிக் கொடுக்குமா என்ற பலவாறான கேள்விகள் என்னுள். சும்மாவே தாண்டவம் ஆடுவாள் கையில் வாங்கியத் தலையைக் கவனமில்லாமல் கைவிட்டு வந்ததறிந்தால் இன்றைக்கு ருத்ர தாண்டவம்தான். குழம்பி முடிவதற்குள் ஆட்டோ சந்தையை அடைந்தது. ஆட்டோவை சற்று நிற்கும்படிக் கூறிவிட்டு ஓடிச் சென்று தலையைத் தொங்க விட்ட இரும்புத் தூணை நோக்கி ஓடினேன். அங்கே எனக்காக காத்திருந்தது ஏமாற்றம். தலையைக் காணவில்லை. அதிர்ச்சியில் நாலாபுறமும் சுற்றிப்பார்த்தேன். எவருடைய கையிலும் தலையிருப்பதாக தெரியவில்லை. எவன் கையில் கிடைத்ததோ தெரியவில்லை. இந்த ஞாயிறு என் செலவில் அவர்கள் வீட்டில் தலைக்கறி. சரி போகட்டும் என்று ஆட்டோவில் ஏறினேன். எப்படியும் அவள் திட்டுவாள். திட்டட்டும். மழைக்குப் பயந்து பூமியை விட்டு ஓடியா போகிறார்கள். என்னை நானே சமாதானப்படுத்திக்கொண்டு சரி போப்பா என்கிறேன். அந்நேரம் 'ஐயா..' என்றொரு குரல். திரும்பிப் பார்த்தேன் காலையில் நான் யாசகம் செய்த அதே பிச்சைக்காரி நின்றிருந்தாள். "அதான் காலையிலே சில்லறை போட்டேனே மறுபடியும் என்ன?" " ஐயா நான் அதுக்கு வரலீங்க." " அப்புறம்.." "காலையில நீங்க அந்தத் தூண்ல தொங்கப்போட்ட தலைய கொடுக்க வந்தேங்க." "என்ன தலையா?" ஆச்சரியத்தோடும் மகிழ்ச்சியோடும் கேட்கிறேன். "ஆமாங்கய்யா.. நீங்க போனதும் அருகே இருந்த நாய் ஒன்னு மோப்பம் பிடிச்சி அத தூக்கப் பாத்துதுங்க அதுக்கிட்ட இருந்து காப்பாத்தி எடுத்து வச்சிருந்தேங்க.." தலையை நீட்டினாள். தலையைப் பார்த்தும் என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "நன்றிம்மா நன்றி" என்றவாறு அவளுக்கு ஏதாச்சும் கொடுக்க வேண்டும் என்று சட்டைப் பையைத் தடவுகிறேன். அதற்குள் என்னுடைய செயலைப் பார்த்த அவள் "அதெல்லாம் ஒன்றும் வேணாங்க ஐயா.." என்று நகர்ந்துவிட்டாள் "இது என்னாலான ஒரு சின்ன உதவிங்க உதவிக்கு பணத்தைக் கொடுத்து உதாசீனப்படுத்திவிடாதீங்க" என்பதுபோலான அவளது செயல் அவளை ஒரு பிச்சைக்காரியாய்ப் பார்க்கத் தோன்றவில்லை. எது எப்படியோ நான் அவளுக்கு வழமையாய் இடும் தர்மம் இன்று நான் வாங்கிய ஆட்டுத் தலையைக் காப்பாற்றிக் கொடுத்து "தர்மம் தலை காக்கும்" பொன்மொழிக்குப் பெருமை சேர்த்திருக்கிறது.

# A/L மாணவர்களும் A/L ஆங்கிலமும்

எனது பார்வையில் A/L மாணவர்களுக்கும் A/L ஆங்கிலத்துக்குமிடையே சுவாரஸ்யமான போட்டியொன்று முடிவின்றித் தொடர்ந்துகொண்டிருப்பதைப் போலவே தோன்றுகின்றது. அதில் மாணவர்களுக்கோ வெற்றி பெறவேண்டுமென்ற எந்தஎண்ணமும் இல்லை.

அவர்கள் வெற்றி பெறவேண்டிய போட்டியும் இல்லை. இக்காரணங்களால் மாணவர்கள் A/L ஆங்கிலம் கற்றலை ஒரு கடைமைக்குச் செய்கின்ற ஒன்றாகவே செய்துவருகின்றனர் என்பதே யதார்த்தம்இந்த நிலைமை மிகவும் கவலையளிப்பதாகும்.

A/L மாணவர்கள் Vs A/L ஆங்கிலம்!

1. நாட்டிலுள்ள் பல A/L தரம் வரையான பாடசாலைகளில் A/L ஆங்கிலம் கறிபிக்கின்ற ஆசிரியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப் படாமல் இருந்துவருகின்றன.

2. பெரும்பாலான A/L ஆங்கிலம் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், கற்பித்தலில் அதிக சிரத்தை எடுப்பதில்லை.

3. மாணவரகள் A/L ஆங்கிலத்தின் பெறுபேறானது எதற்கும் உபயோகப் படுவதில்லை என்பதை நன்கறிந்து ஆர்வத்துடன் அதனைக் கற்காது அலட்சியம் செய்கின்றனர்.

4. பெற்றோர்களைப் பொறுத்தவரையில், ஆங்கில அறிவு அற்றவர்கள் மட்டுமல்ல ஆங்கில அறிவு உள்ளவர்களும் எதுவுமே தெரியாதவர்களாக இருந்துவருகின்றனர்.

5. பல்வகை ஊடகங்களும் ஆங்கிலத்தின் பெறுபேற்றினைப் புறந்தள்ளிவிட்டே A/L பெறுபேற்றினை முக்கியப்படுத்திச் செய்திகளை வெளியிடுகின்றன. உதாரணமாக, யாழ். மாவட்டத்தில் 200 மாணவர்களுக்கு 3A என்பதாக. முதலில், 'பள்ளிக்கூட A/L ஆங்கிலம் கற்பித்தல் பற்றிய சில விடயங்களை அவதானிப்போம் :

வானொலிச் செயதிகளும் பத்திரிகைச் செய்திகளும் A/L இல் 3 பாடங்கள் மட்டுமே உள்ளன என்பதைப்போல 'கொழும்பு மாவட்டத்தில் 1000 மாணவர்களுக்கு 3A என செய்திகளை வெளியிடும் அதேவேளை பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களும் பெறுபேற்றினைக் கேட்டால் , 2ஏ, பி அல்லது 3 ஏ என்றே 4ஆவது முக்கிய பாடமான ஆங்கிலத்தை முற்றாக மறந்துவிட்டோ அல்லது மறைத்துவிட்டோ பதிலளிக்கின்றனர். அப்பாவியான பெற்றோர்களுக்கு இப்படியொரு பாரதூரமான விடயம் நடப்பது அறவே தெரியாது என்பதே அனைவரும் அறிந்திராத உண்மையாகும்.

இவ்வாறானதோர் நிலைமையில், A/L ஆங்கிலமும் A/L பரீட்சையும் அவசியமானவை தானா என்பதைச் சம்பந்தப்பட்டவர்களே ஆராய்ந்து நல்ல முடிவினை மேற்கொள்வது மாணவர்களுக்கு மட்டுமல்ல எமது நாட்டுக்கும் நிச்சயமாக நன்மை பயக்கும் என்பதே எனது கருத்து.

**ஐசக் ஜேசுநாதன்**

# பிரச்சினைகளை புரிந்து கொண்ட ஒருவரை ஆயராக நியமிக்கவும்

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மறைமாவட்டம், மட்டக்களப்பு மறைமாவட்டம் ஆகியனவே அவையாகும். இந்த மறைமாவட்டங்களின் நான்கு ஆயர்களுமே தங்களின் ஓய்வு வயதை அடைந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால் விரைவில் புதிய ஆயர்களை கத்தோலிக்கத் திருச்சபை நியமனம் செய்யவேண்டிய நிலை இருக்கிறது. புதிய ஆயர்கள் நியமனம் தொடர்பில் கத்தோலிக்க சமூகத்தின் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகள் காணப்படுகின்றன. அந்த எதிர்பார்ப்புகளை கருத்தில் எடுத்ததாக நியமனங்கள் அமையவேண்டியது அவசியம் என்பதை அந்த சமூகம் கத்தோலிக்க திருச்சபை உயர்பீடத்தின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறது.

குறிப்பாக யாழ்ப்பாண மறைமாவட்டத்திற்கான புதிய ஆயர் நியமனம் குறித்து பல்வேறு தகவல்கள் பொதுவெளியில் பரவுகின்றன. பல வருடங்களாக வெளிநாட்டில் இருந்து அண்மையில் நாடு திரும்பிய ஒரு கத்தோலிக்க மதகுரு புதிய ஆயராக நியமிக்கப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் பேசப்படுகிறது.

யாழ்ப்பாண மறைமாவட்ட கத்தோலிக்க சமூகம் தங்கள் மத்தியில் தொடர்ந்து வாழ்ந்து தங்களது பிரச்சினைகளை நன்கு புரிந்து கொண்ட ஒரு மதகுருவே புதிய ஆயராக நியமனமாக வேண்டும் என்று விரும்புகிறது. இந்த அக்கறையை கொழும்பு அதிமேற்றிராசனமும் வத்திக்கானும் கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.


## இலங்கை இராணுவம்

### விலைமனுக்கோரல்

1. 2024 ஆம் ஆண்டிற்கான, இலங்கை தேசிய பாதுகாப்பு மன்றத்திற்கு சொந்தமான ஹொரவியாவத்தை முகாமில் நிர்மாணிக்கப்படும் மற்ற தரவரிசைகளுக்கான தங்குமிட வசதிகளை கொண்ட கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான பொறியியல் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு, இலங்கை தேசிய வகைப்பாட்டின் கீழ் பொறியியல் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மனுக்களுக்கு இலங்கை தேசிய பாதுகாப்பு மன்றம் வேஹேர, குருணாகல் இராணுவ முகாம் டெண்டர் சபை (கொள்முதல்) குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழங்கலுக்கான கொள்முதல் ஆவணங்கள் காலாட்படை மையம், இலங்கை தேசிய பாதுகாப்பு மன்றம், வெஹேர, குருணாகல், இராணுவ முகாமில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் மேலும் ஆலோசனை கூடத்தில் 2024.07.27 ஆம் திகதி முதல் 2024.08.16 ஆம் திகதி வரை வார நாட்களில் 0900 மணி முதல் 1600 மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் 2024.08.16 ஆம் திகதி 1000 மணிக்கு காலாட்படை மையம், இலங்கை தேசிய பாதுகாப்பு மன்றம், வெஹேர, குருணாகல், இராணுவ முகாமில் என்ற முகவரியில் திறக்கப்படும்.
3. குறித்த பொறியியல் பொருட்கள் வகைப்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள www.promise.lk என்ற இணைய முகவரியை பார்வையிடவும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.

அ. காலாட்படை மையம் - கொள்வனவு பிரிவு - தொலைபேசி இலக்கம் - 0372230222

காலாட்படை மையம்
இலங்கை தேசிய பாதுகாப்பு மன்றம்
இராணுவ முகாம்,
வெஹேர, குருணாகல்.

## றுஹுண பல்கலைக்கழகம் – மாத்தறை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**கணனி உருப்படிகள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் – றுஹுண பல்கலைக்கழகம்**

1. றுஹுண பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை றுஹுண பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

**விலைக்கோரல் இலக்கம்**: RUH/ SUP/NCB/2024/01

| உருப்படி இல. | பண்டங்கள்/விளக்கம் | எண்ணிக்கை | மீளளிக் கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | விலைமனுப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|
| **Package No. 01- Computer Items** | | | | |
| 1.1 | Internationally Branded Desktop Computer – Intel Core i3 | 14 | 12,500.00 | 28,000.00 |
| 1.2 | Internationally Branded Desktop Computer – Intel Core i5 | 43 | | 118,250.00 |
| 1.3 | Internationally Branded Desktop Computer – Intel Core i7 | 02 | | 7,000.00 |
| 1.4 | Internationally Branded Laptop Computer – Core i3 | 16 | | 36,000.00 |
| 1.5 | Internationally Branded Laptop Computer – Core i5 | 09 | | 27,000.00 |
| 1.6 | Internationally Branded Laptop Computer – Core i7 | 14 | | 52,500.00 |
| 1.7 | Portable External Hard Drive 1TB | 20 | | 3,000.00 |
| 1.8 | Scanner Flatbed | 04 | | 1,600.00 |
| 1.9 | Internationally Branded Uninterrupted Power Supply (UPS) 3KVA | 12 | | 39,000.00 |
| 1.10 | Line Interactive Uninterrupted Power Supply 1KVA | 32 | | 24,000.00 |
| 1.11 | Line Interactive Uninterrupted Power Supply 650VA | 53 | | 18,550.00 |
| **Package No. 02 – Office Equipment** | | | | |
| 2.1 | Digital Photocopy Machine | 11 | 4,000.00 | 26,000.00 |
| 2.2 | Laser Printer | 26 | | 18,200.00 |
| 2.3 | Multifunctional Laser Printer | 05 | | 7,500.00 |
| 2.4 | Multimedia Projector (Ceiling Mount) | 05 | | 17,000.00 |
| 2.5 | Short Throw Laser Projector | 15 | | 50,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. மேற்குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு செலுத்தி அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகவும் றுஹுண பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கி, உயன்வத்த கிளையில் பேணப்படும் **101032500000121** எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்த பின் ஸ்கேன் செய்யப்பட்ட வரவுத் துண்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2024-08-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை (ஆங்கில மொழியில்) றுஹுண பல்கலைக்கழகத்தின் வெல்லமடம வளாகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. 2024-11-21ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாகும்.
5. ஒவ்வொரு உருப்படிக்கும் உருப்படி அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. விலைமனுக்களுடன் இலங்கையில் செயற்படும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஏற்புடையதான விலைமனுக்கோரல் உருப்படிகளுக்கு உரித்தான (நிபந்தனையற்ற) விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. 2024-12-21ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் ''துணைவேந்தர், றுஹுண பல்கலைக்கழம்'' எனும் முகவரிக்கான விலைமனுப்பிணையாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-08-21ஆம் திகதி மு.ப. 11.00 மணியாகும்.
9. 2024-08-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகம், பழைய பேரவை அறையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் நிகழ்நிலையின் ஊடாக இடம்பெறும். (Zoom Meeting)
10. உரிய முறையில் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை எனும் முகவரியில் கிடைக்கும் வகையில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 1ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
11. விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே மேற்கூறப்பட்ட முகவரியில் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாத்தறை, வெல்லமடம, றுஹுண பல்கலைக்கழகத்தின் பிரதி நிதியாளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 041-2227027/ 0412033263, மின்னஞ்சல்: dbs@admin.ruh.ac.lk.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**றுஹுண பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
2024 ஜூலை 28ஆம் திகதி.

## தேசிய நூதனசாலைகள் திணைக்களம்
## புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

### கேள்விக்கான அழைப்பு

**கொழும்பு தேசிய நூதனசாலையில் உணவகத்தை (Cafeteria) நடத்திச் செல்லல்**

கொழும்பு தேசிய நூதனசாலை வளாகத்திற்குள் 12,000 ச.அடி பரப்பளவைக் கொண்ட இரு மாடிக் கட்டிடத்தை மூன்று மாத தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டு 2024 முதல் ஆரம்பமாகும். மூன்று வருட கால எல்லைக்கு உயர்ந்த நிலையில் உணவகத்தை நடத்திச் செல்வதற்கு கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தற்போது நட்சத்திர தரத்தில் உணவகத்தை நடத்திச் செல்லும் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. **கேள்விதாரர்களின் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகள்**
   - தற்போது இலங்கைக்குள் குறைந்தபட்சம் மூன்று நட்சத்திர தரப்படுத்தப்பட்ட வியாபாரமொன்றை நடத்திச் செல்லும் குறைந்தபட்சம் ஐந்து வருட (05) சமமான வியாபார அனுபவம் இருத்தல் வேண்டும்.
   - அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருத்தல் வேண்டும்.
2. **கேள்வி ஆவணங்கள்**
   - கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 3000/- தொகையை தேசிய நூதனசாலைகள் திணைக்கள காசாளரிடம் காசாக செலுத்தி கேள்வி ஆவண நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் 2024.07.29 முதல் 2024.08.23 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ள முடிவதுடன் கட்டணம் செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களை பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் பரீட்சிக்கலாம்.
3. **கேள்விப் பிணை**
   - கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது கேள்விதாரர்கள் ரூ. 50,000.00 தொகையை தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டொன்றை அல்லது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த எந்த வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. **கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி**
   - கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.08.26 பி.ப. 2.00 இற்கு முடிவுறும் அந்நேரத்தின் பின்பு கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன், மேற்படி கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
5. **கேள்விக்கு முன்னரான கூட்டம்**
   - கேள்விக்கு முன்னரான கூட்டம் 2204.08.12 மு.ப. 10.00 இற்கு தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்
6. **கேள்விகளைச் சமர்ப்பித்தல்**
   - பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் அமைவதுடன் மூலப்பிரதி மற்றும் கேள்விப் பிணையை ஒரு உறையில் இட்டு 'மூலப்பிரதி' என்றும் இரண்டாம் பிரதியை வேறு உறையில் இட்டு 'நகல்பிரதி' என்றும் குறிப்பிட்டு இரு உறைகளையும் ஒரே உறையில் இட்டு பொறியிட்டு 'கொழும்பு தேசிய நூதனசாலையில் உணவகத்தை (cafeteria) நடத்திச் செல்லல்' என்று கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, தேசிய நூதனசாலைகள் திணைக்களம், இல. 53, சேர் மாகஸ் பெர்ணான்டோ மாவத்தை, கொழும்பு -07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
   - மேலதிக விபரங்களுக்கு: 011 2694767 தொ.பே. இலக்கத்தில் பெறுகை அதிகாரியை அழையுங்கள்

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய நூதனசாலைகள் திணைக்களம்,**
**இல. 53, சேர் மாகஸ் பெர்ணான்டோ மாவத்தை,**
**கொழும்பு -07.**
**தொலைபேசி - 011-2694767**

### ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு (EOI)

**வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு**

**தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக பொருத்தமான நிறுவனத்தை தேர்வு செய்தல்**

பத்து (10) ஆண்டு காலத்திற்காக தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்கு புகழ்பெற்ற உள்ளூர் அமைப்பு அல்லது கூட்டமைப்பில் இருந்து ஆர்வ வெளிப்பாடு (EoI) மற்றும் முன்மொழிவுகளுக்கான கோரிக்கைக்கு (RfP) அழைப்பு விடுக்க உணவு ஆணையாளர் திணைக்களம் சார்பில் வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு **(MOTCFS)** தீர்மானித்துள்ளது.

ஒதுக்கப்பட்ட தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சியத் தொகுதி தம்புள்ளை பொருளாதார மத்தி நிலையத்திற்கு (DEC) அருகில் அமைக்கப்பட்டிருப்பதோடு அது 1.246 ஹெக்டயார் பகுதி ஒன்றில் கட்டப்பட்டுள்ளது. அது புத்தம்புதிய விவசாய உற்பத்திகளை களஞ்சியப்படுத்த முடியுமாக சுமார் 5000 மெட்ரிக் தொண்கள் முழுமையான கொள்திறனுடன் ஆறு (06) அறைகளைக் கொண்டுள்ளது.

தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்தின் நோக்கங்கள்

**பிரதான நோக்கங்கள்**

- விவசாயிகளின் உற்பத்திகளின் பாதுகாப்பு
- விலை ஏற்ற இறக்கங்களில் இருந்து உற்பத்திகளின் பாதுகாப்பு
- விவசாய உற்பத்திகளுக்காக நுகர்வோர் தொடர்ந்து முகங்கொடுக்கும் அதிகரிக்கும் விலை மட்டத்தை கட்டுப்படுத்தல்

**இரண்டாம் நிலை நோக்கம்**

- களஞ்சிய இடத்தை வெளியாதாரங்களுக்கு வழங்குவதன் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு வாடகை வருவாயை உருவாக்கல்.

ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு முதலீட்டாளர்கள் பின்வரும் குறைந்தபட்ச தகைமை அளவுகோல்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **பொதுவான அனுபவம்:-** உணவுப் பிரிவுக்கான களஞ்சியங்களை செயற்படுத்தல் மற்றும் நிர்வகித்தலில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் அனுபவம்
- **பிரத்தியேக அனுபவம்:-** உணவுப் பிரிவுக்கான தேசிய/ சர்வதேச தட்பவெப்ப நிலை கட்டுப்பாட்டு களஞ்சியங்களின் செயற்படுத்தல் மற்றும் நிர்வகித்தலில் குறைந்தது ஓர் ஆண்டு அனுபவம்
- விவசாய அடிப்படையினால் உற்பத்திகளில் சராசரி குறைந்தபட்ச ஆண்டுப் புரள்வு 100 மில்லியன் இ. ரூபா இருத்தல் வேண்டும்.

மேலுள்ள தகைமைகளை பூர்த்தி செய்த மற்றும் ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக தமது ஆர்வ வெளிப்படுத்தல் மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை இனை சமர்ப்பித்தல் வேண்டும். ஆர்வத்தை வெளிப்படுத்தல் மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை இனை சமர்ப்பிப்பதற்கு முன், மேலும் அந்த விண்ணப்பதாரர்கள் விபரங்களைப் பெறுவதற்கு **2024 ஓகஸ்ட் 05 தொடக்கம் 07 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 01.00 வரை** குறித்த இடத்திற்கு வருகை தர முடியும். எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர்கள் MOTCFS இணையதளத்தில் இருந்து (https://www.trade.gov.lk/downloads/ministry-notifications) ஆங்கில மொழியில் ஆர்வத்தை வெளிப்படுத்தல் மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை இனை தரவிறக்கம் செய்ய முடியும்.

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் **2024 ஓகஸ்ட் 26 ஆம் திகதி பி.ப. 03.00** அல்லது அதற்கு முன்னர் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, இடைமட்ட மாடி, இல. 492, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03 என்ற முகவரிக்கு **"தம்புள்ளை தட்பவெப்ப நிலை மற்றும் ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் களஞ்சிய செயற்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக பொருத்தமான நிறுவனத்தின் தேர்வு EoI/ RfP"** என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு வெவ்வேறு கடித உறைகளில் முத்திரை பொறிக்கப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்தல மற்றும் முன்மொழிவுக் கோரிக்கை விண்ணப்பங்களை (மென் பிரதிகள், PDF வடிவம், CD) பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். இறுதி நேரம் முடிவுற்ற பின் ஆர்வ வெளிப்படுத்தல் விண்ணப்பங்கள் உடன் திறக்கப்படும் என்பதோடு ஆர்வ வெளிப்படுத்தல்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு எந்த ஒரு விண்ணப்பதாரர்/ அல்லது அவர்தம் அதிகாரம் பெற்றவர் பங்கேற்க முடியும். தகுதி பெற்ற ஆர்வ வெளிப்படுத்தல் விண்ணப்பதாரர்களின் முன்மொழிவுக் கோரிக்கை பின்னர் திறக்கப்படும் என்பதோடு அந்தத் திகதி நிறுவனங்களுக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

இந்தப் பெறுகைக்கான விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2024 ஓகஸ்ட் 07 ஆம் திகதி மு.ப. 11.30 இற்கு தம்புள்ளை பிரதேச செயலாளர் அலுவலக, கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.**

தெளிவை பெறுவதற்கு, தொ.- +94 011-2304049, மின்னஞ்சல் - **foodcommissioner@gmail.com உணவு ஆணையாளர்/ 0112 110577 தலைமை கணக்காளரை** தொடர்பு கொள்ளவும்.

அமைச்சு பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**
**வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு**
**இல. 492, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,**
**கொழும்பு 03.**
2024.07.25

## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/PT/16/057 | Software AS A Service ( SAAS) for Abandoned/ Uncleared Cargo Management System | 50,000.00 | 1,000.00 | 21-08-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 ஜூலை 29ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

## கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்

1. Data Networking at New Wing of Musical Faculty Building
2. Data Networking at Mahagamasekara Building of Visual Arts Faculty

1. கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்ட இரு செயற்றிட்டங்களுக்காக வெவ்வேறான வகையில் தகுதியுடைய நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | செயற்றிட்டம் | மதிப்பீட்டுத் தொகை வெட் இன்றி | விலைக்கோரல் பிணை முறி | ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | Data Networking at New Wing of Musical Faculty Building (UVPA/CW/01/IT/DN01) | 14.7 மில்லியன் ரூபா | 150,000.00 | 4,500.00 |
| 02 | Data Networking at Mahagamasekara Building of Visual Arts Faculty (UVPA/CW/01/IT/DN02) | 17.2 மில்லியன் ரூபா | 175,000.00 | 5,000.00 |

2. தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் மூலம் விலைக்கோரல் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு, விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   CIDA registration Specialty : Extra Low Voltage Installation (Data Telecommunication)
   CIDA Grade : EM 4 or above

4. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படைத் தகைமைகள்:
   i. இலங்கையில் இயைபுடைய துறைக்காக செல்லுபடியாகும் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ii. விலைமனுதாரர் கடந்த 05 ஆண்டு காலத்தில் இந்த செயற்றிட்ட வகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்த காலப்பகுதியினுள் விலைமனுதாரரினால் பதினைந்து (15) மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஒற்றை செயற்றிட்ட கிரயத்தில் செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த செயற்றிட்டத்தை இலங்கை நிறுவனமொன்றில் மேற்கொண்டிருத்தல் வேண்டும்.
   iii. விலைமனுதாரரிடம் இந்த செயற்றிட்டம் தொடர்பாக தகைமை வாய்ந்த குறைந்தபட்சம் இரண்டு பொறியியலாளர்கள் இருக்க வேண்டும்.
5. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை 2024.07.28ஆம் திகதி முதல் 2024.08.20ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். அதற்காக மீளளிக்கப்படாத மேற்குறிப்பிடப்பட்ட ஆவணக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் பிரதிப் பதிவாளர் / நிதிப் பிரிவிற்கு எழுத்துமூல கோரிக்கை ஒன்றை முன்வைத்தல் வேண்டும். (கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்)
6. இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களை கட்டணம் எதுவுமின்றி அலுவலக நேரத்தில் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள நிதிப் பிரிவுக்கு வந்து பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களுக்கு கொழும்பு-07, இல. 21, அல்பர்ட் கிரசன்ட், கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப நிலைய பிரிவுத் தலைவரைத் தொடர்புகொள்ளவும். (தொலைபேசி: 0112033710 நீடிப்பு 3004)
7. கொழும்பு-07, இல. 21, அல்பர்ட் கிரசன்ட், கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஊடாக பெறுகைக் குழுவின் தலைவருக்கு அனுப்பப்படும் விலைமனுக்களை 2024-08-21ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பொது நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். (ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்).
8. தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்றவுடன் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் 2024-11-19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

10 இயைபுடைய விலைமனுக்களுக்காக மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு துணை வேந்தர், கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் எனும் பெயரில் விலைமனுப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு அது 2024.12.16ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

11. விலைக்கோரலுக்கு முந்திய கூட்டம் 2022-06-28ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பல்கலைக்கழகத்தின் 5ஆம் மாடியிலுள்ள நிர்வாகக் கட்டிடத்தின் நலன்புரி கூட்ட மண்டபத்தில் இடம்பெறும்.

**பதில் பதிவாளர்**
**கட்புல, அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்**
**21, அல்பர்ட் சந்திரவங்க வளாகம்**
**கொழும்பு - 07.**
2024-07-28.

## இலங்கை இராணுவம்

## விலைமனுக்கோரல்

1. 8 வது ஆயுதப் புலனாய்வு காலாட்படை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தோட்டாக்கள் / வெடிமருந்துகள் களஞ்சியசாலை மற்றும் 6(V) படைப்பிரிவு இராணுவ புலனாய்வு முகாமில் புராதன கட்டடத்தை மாற்றும் பணி மற்றும் ஆயுதப் புலனாய்வு காலாட்படையின் நிர்மாணிக்கப்படும் இரண்டு மாடி உத்தியோக பூர்வ இல்லத்தின் 2 ஆம் கட்ட நிர்மாணப்பணிக்கு தேவையான பொறியியல் பொருட்களின் வகைப்பாட்டின் கீழ் கொள்வனவு செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மனுக்களுக்கு த.பெ.இல.01, கரந்தெனியவில் அமைந்துள்ள ஆயுதப் புலனாய்வு காலாட்படை மையத்தின் டெண்டர் சபை (கொள்முதல்) குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழங்களுக்கான கொள்முதல் ஆவணங்கள் **2024.07.28** ஆம் திகதி முதல் **2024.08.18** ஆம் திகதி வரை வார நாட்களில் **0900** மணி முதல் **1600** மணி வரை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் மேலும் மேற்கூறிய அனைத்து மனுக்களும் **2024.08.18 ஆம் திகதி 1600 மணிக்கு இராணுவ புலனாய்வு காலாட்படை மையம், த.பெ. இல. 01, கரந்தெனிய** எனும் முகவரியில் திறக்கப்படும்.
3. குறித்த பொறியியல் பொருட்கள் வகைப்பாடுகள் உட்பட அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள **www.promise.lk** என்ற இணைய முகவரியை பார்வையிடவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

அ. இராணுவ புலனாய்வு காலாட்படை மையம்,
தொலைபேசி இலக்கம் - 091 2256444
கொள்முதல் பிரிவு,
காலாட்படை மையம் (MIC),
த.பெ. இல. 01,
கரந்தெனிய

## மக்கள் வங்கி (PEOPLES BANK)

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## திருகோணமலை மற்றும் வன்னி மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகங்களின் நீர்ப்புகாப்பு வேலைகள்

1. கீழே விபரிக்கப்பட்டவாறு பின்வரும் கேள்விகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கி கட்டுமான பொறியியல் சேவைகள் தலைவர் அழைக்கின்றார்.

| கேள்வி இல. மற்றும் அடையாளம் காணல் இல. | விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு | விலைமனுப்பிணை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|
| கேள்வி இல. 018/2024 திருகோணமலையின் மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் நீர்ப்புகாப்பு வேலை | உத்தேசிக்கப்பட்டுள்ள வேலையானது பிராந்திய தலைமை அலுவலக கட்டிடத்தின் தற்போதைய சுவர்கள் மற்றும் மேல்மாடி இடப்பரப்பின் நீர்ப்புகாப்பு வேலை. வேலையின் நோக்கமானது தற்போதுள்ள கொன்கிறீட்/சீமெந்து பூசப்பட்ட தரைகள், கட்டமைப்பு/கட்டுமான வெடிப்புக்கள், மேற்பரப்பு ஆயத்தம் செய்தல், நீர்ப்புகாப்பு மற்றும் வெளியக சுவருக்கு பெயிண்ட் பூசுதல் ஆகியவற்றை அடக்குகின்றன. | 17.5 மில். ரூபா | 175,000.00 ரூபா | 10,000.00 ரூபா |
| கேள்வி இல. 022/2024 வன்னி பிரதேச மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் கிளை கட்டிட நீர்ப்புகாப்பு வேலை | உத்தேசிக்கப்பட்டுள்ள வேலையானது பிராந்திய தலைமை அலுவலக கட்டிடத்தின் தற்போதைய சுவர்கள் மற்றும் மேல்மாடி இடப்பரப்பின் நீர்ப்புகாப்பு வேலை. வேலையின் நோக்கமானது தற்போதுள்ள கொன்கிறீட்/சீமெந்து பூசப்பட்ட தரைகள், கட்டமைப்பு/கட்டுமான வெடிப்புக்கள், மேற்பரப்பு ஆயத்தம் செய்தல், நீர்ப்புகாப்பு மற்றும் வெளியக சுவருக்கு பெயிண்ட் பூசுதல் ஆகியவற்றை அடக்குகின்றன. | 14.0 மில். ரூபா | 140,000.00 ரூபா | 10,000.00 ரூபா |

2. ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் பூர்த்தி செய்வதற்கான காலமானது 60 நாட்களாகும்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
4. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, எதிர்பாக்கப்படும் விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
5. நீர்ப்புகாப்புத் துறையில் எஸ்பி3 அல்லது மேற்பட்ட தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
6. ஒப்பந்த வழங்கலின் தகைமையானது பின்வரும் தகைமைத் தேவைப்படுத்தல்களை அடக்குகின்றது.
   (அ) கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமான வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது ஆகக்குறைந்தது இருபத்தைந்து மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் (25,000,000 இ.ரூபா)
   (ஆ) கடந்த ஐந்து வருடங்களில் ஆகக்குறைந்தது 15 மில்லியன் ரூபா பெறுமதியில் செயற்றிட்டமொன்றை இயைபுள்ள தன்மை மற்றும் சிக்கல் தன்மையுடனான ஒரு கட்டுமான செயற்றிட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரராக 60 நாட்களில் வெற்றிகரமாக பூர்த்தி செய்த அனுபவம் அல்லது விகிதாசார காலத்தில் பூர்த்தி செய்யப்பட்ட கூடிய பெறுமதியிலமைந்த செயற்றிட்டமொன்று.
   (இ) குறைந்தபட்ச அளவு திரவ சொத்துக்கள் மற்றும் /அல்லது சுழலும் திட்டவட்டமான கடன் வசதிகள் (ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகள் நீங்கலாக) மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலான தொகையானது 6.0 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் தலைமையக 6 ஆம் மாடியின் பொறியியல் சேவைகள் திணைக்கள கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 0112481373. தொலைநகல்: 0112341591) 2024.07.30 ஆம் திகதியிலிருந்து 2024.08.16 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
8. 2024.07.30 ஆம் திகதியிலிருந்து 2024.08.16 ஆம் திகதி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக (பத்தாயிரம் ரூபாவை) 10,000 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலுள்ள கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
9. 2024.08.20 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரைக்குறியிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் கேள்வி பெயர்கள் மற்றும் அடையாளம் காணல் இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு மக்கள் வங்கியின் கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர், பொறியியல் சேவைகள் திணைக்களம், 6 ஆம் மாடி, மக்கள் வங்கி, இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் 2024.11.19 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து (மக்கள் வங்கி நீங்கலாக) மாத்திரம் பெறப்பட்டதும் 2024.12.17 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறான விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள மக்கள் வங்கியின் தலைமையலுவலகத்தின் 6 ஆம் மாடியின் பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் 2024.08.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**தலைவர் - கட்டிட பொறியியல் சேவைகள்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6 ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையலுவலக கட்டிடம்,**
**இல. 75, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

PEOPLE'S BANK
Pride of the Nation

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பொலிஸ் மாஅதிபரின் பணி இடைநிறுத்த....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவை மாற்றும் வகையில், இலங்கையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூன்று துறைசார்ந்தவர்கள் அடங்கிய அரசியலமைப்புச் சபைக்கு இந்த உறுதிப்படுத்தல் அதிகாரத்தை பாராளுமன்றம் வழங்கியுள்ளது. அரசியலமைப்புச் சபையின் ஒப்புதல் அதிகாரம் சட்டவாக்கச் செயல்பாடு என்பதால், அரசியலமைப்புச் சபையின் பணிகளை நீதிமன்றம் ஆராய முடியாது. பாராளுமன்றம் உச்சமானது. அரசியலமைப்பு சபையின் அதிகாரத்தை நீதிமன்றத்தால் கேள்விக்குட்படுத்த முடியாது என்பதை மீண்டும் உறுதியளிக்கிறேன். எனவே, அரசியலமைப்புச் சபையின் விவகாரங்களை விசாரிக்கவோ, உத்தரவிடவோ உயர் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. எனவே, தடை உத்தரவு சட்ட ரீதியாக செல்லுபடியற்றது. கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்புச் சபை கூடும் போது, அரசியலமைப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களில் பெரும்பாலும் முழுமையான ஒருமித்த கருத்து இருக்கும். எங்கள் மற்ற உறுப்பினரின் பெயரை நான் குறிப்பிடவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி கௌரவ நிமல் சிறிபால டி சில்வா ஆவார். மேலும் பிரதமரின் பிரதிநிதியாக எமது சாகர காரியவசம் இருக்கிறார். .கபீர் ஹாசிம் எமது எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி. இவர்கள் அனைவரும் பல்வேறு நெருக்கடி நிலைகளை அனுபவித்து நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள். மீண்டும் அரசியலமைப்பு பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பிரிவு 4(இ) இன் கீழ், பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள், அதிகாரங்கள் குறித்த அதிகாரங்கள் தவிர்ந்து பாராளுமன்றத்தினால் நீதிமன்ற அதிகாரம் நீதிமன்றத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இதன் போது மக்களுக்கான நீதிமன்ற அதிகாரத்தை பாராளுமன்றம் நிறுவப்பட்ட சட்டத்தின்படி நடைமுறைப் படுத்தலாம். எனவே, பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சபைக்கு உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களுக்கு கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை. எனவே தற்போதைய பொலிஸ் மா அதிபரை நியமிப்பதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் தொடர்பில் அரசியலமைப்பு சபை எடுத்த தீர்மானத்தை உயர் நீதிமன்றத்தால் மாற்ற முடியாது என்பதுடன் அரசியலமைப்பு சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை மீண்டும் குறிப்பிட விரும்புகின்றேன். இல்லாவிட்டால், அரசியலமைப்பு சபையின் அதிகாரத்தை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு உட்பட்ட அரசியலமைப்பு சபையை அதிகாரமற்ற நிறுவனமாக நாங்களே மாற்றிவிடுவோம். ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்பவர்கள் அரசியலமைப்பு சபையாகிய நாங்களே. சபாநாயகர் அவர்களே, நீங்கள் நாடாளுமன்றத்தின் தலைவராக இருப்பதால் தலைமை வகிக்கிறீர்கள். அந்த சிபாரிசுகளை தெரிவு செய்வது பற்றி ஜனாதிபதியின் வினவுதல்கள் குறித்து தெரிவு செய்வதற்கு அரசியலமைப்பு சபையே பரிந்துரை செய்ய வேண்டும். ஜனாதிபதிக்கு உங்களின் அறிவிப்பை விடுப்பதற்கான முடிவை எடுப்பது கௌரவ சபாநாயகரின் அதிகாரமும் பொறுப்புமாகும். அதைத்தான் நீங்கள் செய்திருக்கிறீர்கள். பல்வேறு வியாக்கியானங்களை வழங்குவதற்கு, சில அரசியல்வாதிகள் எமது பாராளுமன்றத்தையும் அரசியலமைப்புச் சபையையும் அவமதிக்கும் அபாயகரமான முயற்சியை மேற்கொண்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

அரசியல்வாதிகள் இதை நகைச்சுவையாகக் கொள்ளாமல், இலங்கை பாராளுமன்றத்தின் மேன்மைக்குரிய உத்தரவுகளை வழங்கியுள்ள, கௌரவ சபாநாயகர்களில் ஒருவரான, மறைந்த அநுர பண்டாரநாயக்கவும் மிகத் தெளிவாக நீதித்துறையின் தலையீட்டால் பாராளுமன்றம் அச்சுறுத்தப்படும் சூழ்நிலையில் பாராளுமன்றத்தின் மேன்மை குறித்து வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் எனக்கும் உங்களுக்கும் நினைவிருக்கும். அத்துடன் சமல் ராஜபக்ஷ அந்த தீர்மானத்தை அறிவித்திருந்தார். எனவே பாராளுமன்றம் என்ற வகையில் செய்ய வேண்டிய பணிகளை நிறைவேற்றும் வகையில் நாம் செயற்படுகின்றோம்.

மேலும், சபாநாயகர் அவர்களே, அரசியலமைப்பின் 4(ஆ) பிரிவின் கீழ், நாட்டின் பாதுகாப்பிற்கு ஜனாதிபதியே பொறுப்பு. பொலிஸ் மா அதிபர், பொலிஸ், முப்படைக்கு சமமான அதாவது விசேட அதிரடிப் படைகள் மற்றும் புலனாய்வு பிரிவுகளின் கட்டளை அதிகாரியாகவும் உள்ளார். இந்த இடைக்கால தடை உத்தரவு அரசியலமைப்பின் 4(ஆ) பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் தடையாக உள்ளது. அதை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். மேற்படி தடை உத்தரவில் எந்த சட்ட அடிப்படையும் குறிப்பிடப்படவில்லை எனவே எந்தவொரு சட்ட அடிப்படையும் இன்றி வெறுமனே சட்டவிரோதமானது எனத் தோன்றும் அத்தகைய தடை உத்தரவுகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் பாராளுமன்றம் இல்லை.


## வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம்

### 2024.08.24 முதல் எதிர்வரும் மூன்று வருட (03) காலத்திற்கு கௌரவ தலைவர், கௌரவ உப தலைவர், கௌரவ பொருளாளர் மற்றும் கௌரவ பணிப்பாளர்கள் எட்டுப்பேர் (08) உட்பட முழுப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பதினொரு பேரை (11) தேர்ந்தெடுப்பதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்தல்

மேற்படி சங்கத்தில் 2024.08.24 முதல் எதிர்வரும் மூன்று வருட (03) காலத்திற்கு பணிப்பாளர் சபைக்கு கௌரவ தலைவர், கௌர உப தலைவர், கௌரவ பொருளாளர் மற்றும் கௌரவ பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் எட்டுப்பேர் (08) உட்பட முழுப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பதினொரு பேர் (11)ஐ தேர்ந்தெடுப்பதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்தல் மற்றும் எதிர்ப்புக்களை ஏற்றுக் கொள்ளல் கீழ்க்காணுமாறு இடம்பெறுவதாக வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

- **மேற்படி மனுக்களை ஏற்றுக் கொள்ளல், காட்சிப்படுத்தல் மற்றும் எதிர்ப்புக்களை ஏற்றுக் கொள்ளும் இடம்**
  வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டறவுச் சங்கம், இல. 912/1, மருதானை வீதி, கொழும்பு -08
- **வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும் திகதிகள்**
  2024.08.12 மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை மற்றும் 2024.08.13 மு.ப. 10.00 முதல் பி.ப. 12.00 வரை
- **வேட்புமனுக்கள் காட்சிப்படுத்தல்**
  2024.08.13 மு.ப. 12.30 முதல் பி.ப. 2.30 வரை
- **எதிர்ப்புக்களை ஏற்றுக் கொள்ளல்**
  2024.08.13 பி.ப. 12.30 முதல் பி.ப. 2.30 வரை
- **போட்டி இலக்கங்களை காட்சிப்படுத்தல்**
  2024.08.13 பி.ப. 2.30 முதல் பி.ப. 3.00 வரை

இடைக்கால யாப்பின் பிரகாரம் பணிப்பாளர் சபை வெற்றிடங்களுக்கு மேல் அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேளையில் அங்கீகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் கிடைக்கப் பெறும் முறைமையின் பிரகாரம் வாக்கெடுப்பு போட்டி இலக்கம் விநியோகிக்கப்படும்.

- வேட்புமனுப் பத்திர தொகுதிகளை அபேட்சகர் அல்லது முன்மொழிபவர் அல்லது ஆமோதிப்பவர் ஆகியவர்களில் ஒருவரால் குறித்த தினம், வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறும் நேரத்திற்கு முன்பு ஒப்படைத்தல் வேண்டும்.
- வாக்கெடுப்பு மகா சபையில் வாக்களிப்பதற்கு உரிமையுடைய வாக்குறிமையுள்ள அங்கத்தவர் பெயர் பட்டியலை வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் வழங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்தில் 2024.07.28 முதல் 2024.08.13 பி.ப. 2.30 வரை காட்சிப்படுத்தப்படும்.
- இதனோடு தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட வேட்புமனுப் பத்திரத்தின் மூலம் (இரு தொகுதிகளாக) அல்லது சங்கத்தின் செயலாளர் (தொ.பே. இல. 011-2687476) இடம் 2024.07.28 முதல் 2024.08.12 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொண்ட வேட்புமனுப்பத்திர தொகுதியொன்றின் மூலம் தமது வேட்புமனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.
- இம்மாதிரிக்கு மாற்றமாக சமர்ப்பிக்கப்படும் அல்லது பூர்த்தியற்ற வேட்புமனுப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
- இலக்கம் 93/5 - 1974 ஜனவரி 10ம் திகதிய கூட்டுறவு சங்க விதிக் கோவையின் விதிகள் 21(1) விதி முறைகளின் பிரகாரம் மற்றும் சங்கத்தின் இடைக்கால யாப்பின் 29.1 முதல் 29.12 வரை குறிப்பிடப்படும் பிரிவுகளுக்கு உள்ளடக்கப்பட்ட தகைமையற்றவைகளில் உள்ளடங்காத நபராக இருத்தல் வேண்டும்.
- வேட்புமனுக்கள் பற்றிய எதிர்ப்புக்களைச் சமர்ப்பிப்பதாயின் அதனை எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி பதவிகளில் அளவுக்கு மேல் அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் இருப்பின் மாத்திரம் குறித்த பதவிக்காக தகைமையானவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பு

- ➢ 2024.08.24 மு.ப. 8.00 முதல் பி.ப. 4.00 வரை
- ➢ மஹிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் பொல்கொல்ல என்ற இடத்தில் நடைபெறுவதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

வாக்கெடுப்பின் போது வாக்களிப்பதற்காக வாக்குரிமையுள்ள அங்கத்தவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக கீழ்க்காணும் ஆளடையாளப் பத்திரங்களில் ஒன்றை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்
3. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
4. செல்லுபடியாகும் சேவை அடையாள அட்டை

**ஏ. ஐ. ஏ. அதிகாரி,**
**பிரதான வாக்கெடுப்பு அதிகாரி**
**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு -02.**
**(தொ.பே. இல. 011-2330705)**

வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை அங்கத்துவத்திற்கான வேட்புமனுப் பத்திரம்

(சகல பதவிக்கும் வேறு வேறாக வேட்புமனுப் பத்திரக் தொகுதிகள் இரண்டு வீதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| தொடர் இலக்கம் | |
| ஒப்படைத்த நேரம் | |
| வாக்கெடுப்பு அதிகாரி/உதவி | |
| வாக்கெடுப்பு அதிகாரியின் கையொப்பம் | |

1. வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கும் பதவி - தலைவர்/உப தலைவர்/ பொருளாளர்/ பணிப்பாளர்*
   (*பொருந்தாத பதவிகளை வெட்டிவிடவும்)
2. இடைக்கால யாப்பில் 29ம் பிரிவின் பிரகாரம் வேட்புமனுக்களை சமர்ப்பிப்பதற்கு கீழ்க்காணும் தகைமையற்றவைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.
   - சங்கத்தின் அங்கத்தவர் அல்லாதிருத்தல்
   - கடந்த மூன்று வருடத்திற்குள் ஒழுக்காற்று பற்றிய வழங்கில் குற்றவாளியாக்கப்பட்ட ஒருவராக அல்லது மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலம் சிறைத்தண்டனை பெறுவதற்கு ஆளாதல்
   - வங்குரோத்து நிலை கிடைப்பதற்கு வேண்டுதல் அல்லது வங்குரோத்துக்காரராக நீதிமன்றம் அங்கீகரித்த ஒருவராதல்
   - 21 வயதிற்குக் குறைந்திருத்தல்
   - மருத்துவ அறிக்கையின் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டதாக ஏற்றுக் கொள்ளல்
   - சங்கத்திலிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்தலை மூன்று மாதத்திற்கு அதிக காலம் தவறவிடுதல் அல்லது வேறு கூட்டுறவுச் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகையச் செலுத்தாது இருத்தல் சங்கத்தின் முன்னேற்றத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் நடவடிக்கைகளில் ஈடுபடல்
   - வேறு கூட்டுறவுச் சங்கத்தில் பணிப்பாளர் பதவியை வகித்தல்
3. அபேட்சகரின் முன்மொழிபவரின் மற்றும் ஆமோதிப்பவரின் விபரம்

| விபரம் | அபேட்சகர் | முன்மொழிபவர் | ஆமோதிப்பவர் |
|---|---|---|---|
| முழுப் பெயர் | | | |
| அங்கத்துவ இலக்கம் | | | |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் | | | |
| அலுவலக முகவரி | | | |
| சொந்த முகவரி | | | |
| கையொப்பம் | | | |

## வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கம்

### அபேட்சகரின்/ முன்மொழிபவரின் மற்றும் ஆமாதிப்பவரின் பிரகடனம்

1. **அபேட்சகரின் பிரகடனம்**
   ............................... ஆகிய நான் வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவ இலக்கம் ................ கீழ் அங்கத்துவம் பெற்றுள்ளதுடன் சங்கத்தின் தலைவர்/உப தலைவர்/ பொருளாளர்/ பணிப்பாளராக எனது வேட்புமனுவை தாக்கல் செய்வதற்கு இத்தால் விருப்பத்தைத் தெரிவிக்கிறேன். சங்கத்தின் செயற்குழுவிற்கு தேர்ந்தெடுப்பதற்காக கூட்டுறவு சட்டத்தில் குறிப்பிடப்படும் தகைமையற்றவைகள் எதுவும் என்னிடம் கிடையாதென பிரகடனம் செய்கிறேன். வேட்புமனுப் பத்திரத்தில் என்னால் கையொப்பமிட்டு உறுதி செய்யப்பட்ட விடயங்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதும் ஆகும் என உறுதி செய்கிறேன்.

திகதி:.......................   ........................................
**அபேட்சகரின் கையொப்பம்**

*பெருந்தாத பதவிகளை வெட்டி விடவும்.

2. **முன்மொழிபவரின் பிரகடனம்**
   .......................... ஆகிய நான் வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கள் பற்றிய கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவ இலா. ........... கீழ் ஒரு வருடத்திற்கு முன்பு அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதாக உறுதி செய்வதுடன் வேட்பு மனு பத்திரத்தில் என்னால் கையொப்பம் இடப்பட்டு உறுதி செய்யப்பட்ட விடயங்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதும் ஆகும் என உறுதி செய்கிறேன்.

திகதி:..................   ..................................................
**முன்மொழிபவரின் கையொப்பம்**

3. **ஆமோதிப்பவரின் பிரகடனம்**
   ............................. ஆகிய நான் வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவ இல. ........ கீழ் ஒரு வருடத்திற்கு முன்பு அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதை உறுதி செய்வதுடன், வேட்புமனுப் பத்திரத்தில் என்னால் கையொப்பம் இட்டு உறுதி செய்வதுடன் விடயங்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானதும் சரியானதும் ஆகும் என உறுதி செய்கிறேன்

திகதி: .......................   ....................................................
**ஆமோதிப்பவரின் கையொப்பம்**



## கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்

### தேயிலை ஆராய்ச்சி சபை

# வெற்றிடங்கள்

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள பின்வரும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

01. வதிவிடப் பொறியியலாளர்
    Resident Engineer
02. ஆராய்ச்சி அதிகாரி
    Research Officer
03. தொழில்நுட்ப அதிகாரி (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)
    Technical Officer (Research & Development)
04. தொழில்நுட்பவியல் அதிகாரி (சிவில்)
    Technological Officer (Civil)

### 01. வதிவிடப் பொறியியலாளர் (Resident Engineer)

**கடமை விபரம்**
சகல சிவில், மின்னியல் மற்றும் இயந்திரவியல் வேலைகளை வடிவமைத்தல் மற்றும் ஒட்டுமொத்த திட்டமிடுதல், மதிப்பீடு,நிர்மாணம், பராமரிப்பு என்பவற்றுக்கு பொறுப்பு கூறல்

**வெளிவாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பொறியியல் (சிவில்) இளமாணிப் பட்டம்.

மற்றும்

தகைமைக்குப் பின் மூன்று (03) வருடகால அனுபவம்
அல்லது

ஒரு NDT (சிவில்) சான்றிதழ் அல்லது பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES) அத்துடன் அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் சிவில் பொறியியலில் தகைமைக்குப் பின்னரான எட்டு (08) வருடகால அனுபவம்

**உள்வாரி:**
கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் (JM 1-2) பொறியியல் உதவியாளராக (சிவில்) 1ஆம் தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவை

**சம்பள அளவு:**
MM 1-2 (2016) ரூபா 54, 550/- - 10x 1, 375- 15x 1, 910 - ரூபா 96, 950/- மாதாந்தம்

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் ஊடாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

### 02. ஆராய்ச்சி அதிகாரி (Research Officer)

**கடமை விபரம்**
சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (SRO) முதன்மை ஆராய்ச்சி அதிகாரி (PRO) அல்லது பிரிவுத் தலைவர் (HOD) ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், ஆராய்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல், முடிவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் தரவை வழங்குதல் மற்றும் தரவுகளை சேகரித்து பதிவுசெய்வதற்காக தொழில்நுட்ப, பரிசோதனை மற்றும் விரிவாக்கல் அதிகாரிகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை இனங்காணுதல் மற்றும் திட்டமிடுவதற்கு சிரேஷ்ட ஆராய்ச்சி அதிகாரி (SRO) முதன்மை ஆராய்ச்சி அதிகாரி (PRO) ஆகியோருக்கு உதவுதல்.

**வெளிவாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பொருத்தமான பாடத் தெரிவுகளுடன் விவசாயம் அல்லது பொறியியல் / விஞ்ஞானத்தில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடன் நான்கு (04) வருட கால விசேட பட்டம்

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பொருத்தமான பாடக் கலவைகளுடன் விஞ்ஞானம் / விவசாயம் அல்லது பொறியியலில் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவுடன் நான்கு ஆண்டுகள் விசேட பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட (01) முதுகலைமானி தகைமை.
அல்லது

பொருத்தமான பாடக் கலவைகளுடன் விஞ்ஞானம் / விவசாயம் அல்லது பொறியியலில் ஒரு பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் இரண்டு வருட (02) முதுகலைமானி தகைமை.

**உள்வாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம் / விவசாயம் அல்லது பொறியியலில் ஒரு பட்டம் மற்றும் ஆராய்ச்சி அதிகாரியாக ஆகக் குறைந்தது ஆறு (06) வருட திருப்திகரமான சேவை.

**சம்பள அளவு:** AR 1 (2016) (I) ரூபா 53,150 – 10 x 1,375 – 15 x 1,910 – ரூபா 95,550/- (மாதாந்தம்)

**வயது :** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம்.

### 03. தொழில்நுட்ப அதிகாரி (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) Technical Officer (Research & Development)

**கடமை விபரம்:**
நிறுவனத்தின் தொழில்நுட்பவியல் வேலைகள் மற்றும் முகாமைத்துவ வேலைகளுக்கான மேலதிக உதவிகளைச் செய்தல், தொழில்நுட்பவியல் சார்பான செயற்பாடுகளுக்கு வசதியேற்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறல்.

**வெளிவாரி:**
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத விஞ்ஞானம்/ கமத்தொழில் / பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி:**
மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** MA 2-2 (2016) ரூபா 30,310 – 10x300 – 7x350 – 4x600 – 20x710 - ரூபா 52,360.00

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை:** எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

### 04. தொழில்நுட்பவியல் அதிகாரி (சிவில்) Technological Officer (Civil)

**கடமை விபரம்:**
நிறுவனத்தின் தொழில்நுட்பவியல் வேலைகள் மற்றும் முகாமைத்துவ வேலைகளுக்கான மேலதிக உதவிகளைச் செய்தல், தொழில்நுட்பவியல் சார்பான செயற்பாடுகளுக்கு வசதியேற்படுத்தல் போன்றவற்றுக்குப் பொறுப்புக் கூறல்.

**வெளிவாரி:**
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்றிறன் தகைமையில் (NVQ) 5ஆம் நிலைக்குக் குறையாத சிவில் தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி:**
மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல்.

**சம்பள அளவு:** MA 2-2 (2016) ரூபா 30,310 – 10x300 – 7x350 – 4x600 – 20x710 - ரூபா 52,360.00

**வயது :** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் வழிமுறை**: எழுத்து மூலப் பரீட்சை மற்றும்/அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

**ஏனைய நன்மைகள்:**

i. இருப்பிட வசதி (முழுமையாக தளபாடமிடப்பட்ட விடுதி) வழங்கப்படும் அல்லது இருப்பிடத்திற்கான பதிலீட்டுப் படியொன்று வழங்கப்படும்.
ii. நிறுவனத்தின் மருத்துவத் திட்டத்தின் நடைமுறையிலுள்ள மருத்துவ வசதிகள் வழங்கப்படும்.
iii. **சேமலாப நிதி:** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி சம்பளத்தின் 10%ஐ ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்யும்படி வேண்டப்படுவதுடன் நிறுவனமானது 15% (வீதத்தைச்) செலுத்தும். மேலும் நிறுவனமானது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% வீதத்தையும் பங்களிப்புச் செய்யும்.
iv. தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பதவிக்கு ஏற்புடைத்தான ஏனைய நன்மைகளும் வழங்கப்படும்.

பதவிகள் நிரந்தரமானவை. தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் www.tri.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து google படிவத்தில் கோரப்பட்டுள்ள தகவல்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்பதுடன் பிறப்புச் சான்றிதழின் பிரதி, இயைபுடைய கல்வி மற்றும் ஏனைய தொழில்சார் தகுதிகள், சேவைச் சான்றிதழ்கள் மற்றும் புதுமையான திறன்கள் ஆகியவற்றுடன் முழுமையான சுய தரவை வழங்கும் விண்ணப்பம் மற்றும் விண்ணப்பதாரரின் திறன்களை மதிப்பிடக்கூடிய உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் சகிதம் **2024 ஆகஸ்ட் 12ஆம்** திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கீழே முகவரியிடப்பட்டவருக்கு (பணிப்பாளர்) தபால் மூலம் அனுப்பவும். மேலும் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவ்வாறான நிறுவனத் தலைவருடாகவே அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறான தேவைப்பாட்டிற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு இது வழிவகுக்கும்.

**பணிப்பாளர் - பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**

# அவசரமாய் அணைந்துவிட்ட இலக்கிய தீபம் சகோதரி இஸ்மத் பாத்திமா..!!

"நிச்சயிக்கப்பட்ட மரணம் நிஜமாகவே தழுவும் கால அவகாசம் ஆளுக்காள் வேறு "இந்த கவி வரிகள் கடந்த வாரம் காலமான அதிபரும் கவிதாயினிமான எஸ். ஏ இஸ்மத் பாத்திமாவினதுதான்."இறப்பும் பிறப்பும் நிச்சயமான பதிவில் இரணமும் மரணமும் கூட நிச்சயமானவையே. தாயின் கருவறையிலேயே அவை நிச்சயிக்கப்படுகின்றன" என்று ஆரம்பிக்கும் அவரது இந்தக் கவி வரிகள் "புதையலைத் தேடி" என்ற அவரது தொகுதியில் இடம் பெற்ற கவிதையாகும். மரணம் ஒவ்வொருவருக்கும் நிச்சயம் என்ற நிதர்சனமான உண்மையை தன் கவிதையில் வடித்துவிட்டு நிரந்தரமாக எம்மை விட்டும் பிரிந்து விட்ட சகோதரி இஸ்மத் பாத்திமாவின் மறைவு இலக்கிய இதயங்களை எல்லாம் ஸ்தம்பிதப்படுத்திய நிகழ்வாகும். இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றிய எனது "மின்னும் தாரகைகள்" ஆய்வு நூலுக்காக தகவல்களை பெறுவதற்காக 2017 ஆம் ஆண்டு கொண்ட நட்பு அன்று முதல் அவர் இறக்கும் வரை நீடித்தது. 2016ஆம் ஆண்டு முதல் எழுத்துலகில் பிரவேசித்த அவர், ஒரு குறுகிய காலப்பகுதியிலேயே "இரண்டில் ஒன்று" என்ற பெயரில் கவிதை நூல் ஒன்றையும் வெளியிடும் பாக்கியம் பெற்றார். 2018 ஜனவரி ஏழாம் திகதி அவரது இந்த முதலாவது கவிதைத் தொகுதி வெளிவந்தது. அதே வேகத்தில் தனது இரண்டாவது கவிதைத் தொகுதிக்காக "புதையலைத் தேடி" புறப்பட்ட அவரது பயணமும் வெற்றி அளித்தது. ஆமாம் "புதையலைத் தேடி" என்ற அவரது இரண்டாவது கவிதை தொகுதியும் 17/2/2020 அன்று வெளிவந்தது. இந்த நூலுக்கான அணிந்துரையை வழங்குமாறு அவர் எனக்கு அன்பு கட்டளையிட்டார். அந்த அணிந்துரை குறித்து இரவெல்லாம் நாம் தொலைபேசியில் பல மணி நேரம் உரையாடிய நாட்கள் பலப் பல. அந்நாட்களை நினைக்கும் போது நெஞ்சம் கனக்கிறது.



பஸ்யால அலிகார் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் இடம்பெற்ற "புதையலைத் தேடி" நூல் வெளியீட்டு விழாவில் நானும் எனது துணைவர் நஜ்முல் ஹுசைனும் கலந்து கொண்டமையும், இஸ்மத் பாத்திமாவுக்கு நான் பொன்னாடைப் போர்த்திக் கௌரவித்தமையும் இன்றும் பசுமை நினைவுகளாக. அதை நினைக்கும் போது கண்கள் பனிக்கின்றன. பானகமுவையை பிறப்பிடமாகவும் பஸ்யாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், ஆசிரியராக பிரதி அதிபராக, அதிபராக உயர் படிகளில் ஏறி நின்றார்.



ஆங்கில மொழியிலேயே கல்வி கற்ற இவர் தமிழ் மொழியிலும் தேர்ச்சி பெற்று கவிதை வடிப்பது எமக்கு வியப்பைத் தந்தது. பத்திரிகைகள் வானொலி முகநூல் என்று எதையுமே அவர் விட்டு வைக்கவில்லை. முகநூலில் நுழைந்தால் இஸ்மத் பாத்திமா. பத்திரிகைகளை விரித்தால் இஸ்மத் பாத்திமா, வானொலியை திறந்தாலும் இஸ்மத் பாத்திமா. இப்படியாக மிகவும் வேகமாக வளர்ந்த ஒரு கவிதாயினியாகத்தான் இவரை நாம் இனம் கண்டோம். கவிதைகள் மட்டுமல்ல பாடசாலையின் முக்கிய நிகழ்வுகளை எல்லாம் முகநூலில் பதிவேற்றி எம் அகம் நிறைந்தார் சகோதரி. இன்று எமையெல்லாம் அழ வைத்து விடை பெற்றதுதான் எம்மால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது.

அவசரமாக அணையும் விளக்கு அதிகம் பிரகாசிக்கும் என்பார்கள். அதுபோலவே அதிகம் பிரகாசித்து அவசரமாக அணைந்து விட்டது இந்த இலக்கிய தீபம். ஈராண்டு காலம் புற்று நோயுடன் போராடிய சகோதரி இஸ்மத் பாத்திமா, மீண்டும் எழுவார் என்று நாம் நம்பி இருந்தோம். ஆனால் புற்றுநோயினால் தோற்றுப் போவார் என்று சற்றும் நாம் எதிர்பார்க்கவில்லை. இன்று மனதை எவ்வாறு தேற்றுவது என்று இதயம் கலங்குகிறோம்.

தனது நேசமிகு கணவர் எம்.ஏ.எம். றிப்தியையும் பாசமிகு மகன் அகில் அஹமதையும் மட்டுமல்ல இலக்கிய இதயங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மாணவர்கள் என பெரும் எண்ணிக்கையானோரை ஏங்க வைத்து, அழ வைத்துவிட்டு மீளா துயர் கொண்டு விட்டார் என் சோதரி. என்னவர் உட்பட பெருந்திரளானோர் அவரின் ஜனாஸாவில் கலந்து கொண்டமை அவர் பல இதயங்களை வென்றிருப்பதை நிருபணமாக்கியது சகோதரி இஸ்மத் பாத்திமாவின் திடீர் இழப்பு பேரிழப்புதான். அவரின் பிரிவால் நாம் துயருறுகிறோம்

எம்மை விட்டும் நிரந்தமாகவே விடை பெற்றுச் சென்ற அருமை சகோதரி இஸ்மத் பாத்திமாவுக்கு வல்ல அல்லாஹ் மறுமை வாழ்வை சிறப்பாக்கி வைக்க வேண்டும் என மனமுருகி பிரார்த்திக்கின்றோம்

**கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**




# எஸ். ஏ.கப்பாரின் 'அப்பாவின் டயரி'

## மனதில் நிற்கும் கதையம்சங்கள் நிறைந்த பிரதி

'அப்பாவின் டயரி' இம்மாதம் (ஜூலை2024) வெளிவந்திருக்கின்ற எஸ். ஏ. கப்பார் எழுதியிருக்கின்ற சிறுகதைத் தொகுப்பு. 104 பக்கங்களில் 15 சிறுகதைகளை உள்ளடக்கி மலர்ந்திருக்கின்றது.



எஸ்.ஏ. கப்பார் 1977இல் எழுத ஆரம்பித்த மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட படைப்பாளி. கவிதை, சிறுகதைப் படைப்பாளியாகத் தன்னை அடையாளப்படுத்தியிருந்த கப்பார் சில காலம் தொழில் நிமித்தம் எழுத்துத் துறையில் இருந்து ஒதுங்கியிருந்தார். இப்போது, வங்கித் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றதில் இருந்து அவரின் எழுத்துப்பணி புத்தெழுச்சி பெற்றுத் தொடர்கின்றது. பத்து வருடங்களாக இலக்கியம், எழுத்து என்று ஓய்வின்றி எழுதுகிறார் எஸ்.ஏ. கப்பார். 25 கவிதைகளை உள்ளடக்கி "நிலவு அவள்" என்ற அவரின் கவிதைத் தொகுதி 2019இல் வெளிவந்தது. 'வெண்ணிலா' என்ற காலாண்டிதழைக் காலந்தவறாமல் வெளியிடுகின்றார் வார இதழ்களில் சிறுகதைகள் எழுதுகின்றார்..

அவ்வாறு வெளிவருகின்ற சிறுகதைகளைத் தொகுத்துத் தர முயன்றதன் பயனாக வெளிவந்த கப்பாரின் முலாவது சிறுகதைத் தொகுதி இது. ஆரம்பச் சிறுகதை வாசகர்களும் விரும்பி, விளங்கி வாசிக்கும் வகையில், இலகுவான, நேர்த்தியான சொற்களில் சின்னச் சின்ன வரிகளில் கதை சொல்லி இருக்கிறார் கப்பார். வாழ்வியற் கோலங்களை, மனித மன உணர்வுகளை எழுதுகிறார். ஈனநிலை கண்டு துள்ளுபவராக, இரக்க சுபாவம் கொண்டவராக கப்பாரைக் கதைகளினூடே காண்கிறோம்.

"பொலிஸ் நிலையத்தை நெருங்க, நெருங்க.. என்மனம் பதை பதைத்தது. பாசம் பரிதவித்தது. அதேவேளை நாட்டுப்பற்று மறுதலித்தது. உடல் கனலாக கொதித்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன. குளமாகின. கால்கள் நடக்க மறுத்தன. "இப்படி சிக்கல் தராத வசன ஒழுங்கில் தான் "துரோகம்" என்ற முதல் கதை மனைவி சொல்வதாக ஆரம்பிக்கிறது.

ஆசிரியையான மனைவி, தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் கணவன், க.பொ.த சா/த பயிலும் மகள், இவர்களைச் சுற்றி வருகிறது கதை. வாழ்க்கை மகிழ்ச்சியாக கழிகிறது. 'கொரோனா' வந்து "லொக்டவுன்" ஏற்படுத்திய தாக்கத்தில் கணவன் தொழிலை இழந்து விடுகிறான். இதனால், வாழ்க்கை கஷ்டத்தில் நகர்கிறது. வேறு தொழில் தேடித் திரிகிறான். பெற்றுக் கொண்டதாகவும் கூறுகிறான்.வருமானமும் அதிகரிக்கிறது. ஆனால் தனது கணவர் நாசகாரக் கும்பலுடன் சேர்ந்து மாணவர்களின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கும் போதை மாத்திரை விநியோகத்தைச் செய்து வருவதாக அறிகிறாள். மனைவி. விட்டுவிடுமாறு கெஞ்சுகிறாள் அவன் இணங்கவில்லை .கொன்று விடுவதாகப் பயமுறுத்துகிறான். இறுதியாக, கணவரின் தேச விரோதச் செயலை எடுத்துச் சொல்ல பொலிஸ் நிலையத்தை நோக்கிச் செல்கிறாள் மனைவி.

இதுவே முதற்கதையின் சுருக்கம். அக்கதையில் சமூகப் பொறுப்புடைய ஒரு கதை சொல்லியாக கப்பாரை நாம் பார்க்க முடிகிறது.

'அப்பாவின் டயரி' கோபக்காரராகவும், பிடிவாதக் காரராகவும், காரசாரமான ஒரு மனிதராகவும் தெரிந்த அப்பாவை டயரியைப் பார்த்தபின், அன்புள்ளம் கொண்டவராக, அம்மாவின் மீது மிகுந்த பாசம் வைத்திருந்தவராக அறிய நேர்கிற கதை.

'சமூக சேவகி', க.பொ.த உ/ த உயிரியல் விஞ்ஞானம் பரீட்சை எழுதிய மாணவி பல்கலைக் கழகம் செல்வதற்குப் போதிய அடைவினை எட்ட முடியாமல் தோற்றுப் போய், பின்னர் வீட்டு நிலைமையை அறிந்து, மீண்டும் உயிரியல் துறையில் பரீட்சை எடுப்பதற்கு மறுத்து தனக்கு விரும்பிய, முடியுமான துறையை அரச சார்பு உயர்கல்வி நிறுவனமொன்றில் on line மூலம் கற்று, சமூக சேவையில் பட்டம் பெற்று "சமூக சேவகியாகி'' தனது சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவையாற்றப் புறப்படுகின்ற கதை.

'ரியூசன் மாஸ்ரர்' இலவசக் கல்வி, தற்காலத்தில் காசுக்கல்வியாக மாறி விட்டதை குத்திக்காட்டும் கதை. நல்லாசிரியனாக இருந்த சுலைமான் ஆசிரியர், சில வரட்டுக் கௌரவ பெற்றோர்கள், புலமைப் பரீட்சையில் தங்கள் பிள்ளைகள் சித்தியெய்தியமைக்காக வழங்கிய பெரிய அன்பளிப்பினாலும் பணத்தினாலும் மனம்மாறி பாடசாலையில் பாடவேளையில் கற்பிப்பதைக் குறைத்து பாடசாலைக்கு வருவதையும் குறைத்து 'ரியுசன் மாஸ்ர'ராகவே மாறி, பணம் மட்டுமே நோக்கமாக கொண்டு வாழ்வதனைக் குறிப்பிடும் கதை.

" காலப் போக்கில் சுலைமான் சேரின் மனதில் குடி கொண்டிருந்த நிம்மதி எங்கோ பறந்து போய்விட்டது. பச்சிளம் குழந்தைகளைப் பகடைக் காய்களாக உபயோகித்து ஆடம்பரமாக வாழ நினைத்தவர் தனது மனைவி மக்களின் எதிர்காலம் பற்றி எண்ண மறந்து விட்டார்.. மூத்த மகன் கெட்ட நண்பர்களின் சகவாசத்தால் போதை மாத்திரை உட்கொள்ளும் நபராக மாறி விட்டான். இளையமகன் அவருக்குத் தெரியாமல் காரை எடுத்துச் சென்று விபத்துக்குள்ளாகி வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவினால் நாலைந்து மாதங்களாக வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறான். இவற்றையெல்லாம் மனதிற் சுமந்தவளாக அவரின் மனைவியும் மனநோயாளியாக மாறிவருவது அவருக்குத் தெரியாமலில்லை." என்று படிப்பினையூட்டும் முடிவினைக் கதையில் கொண்டுவருவார் கப்பார்.

இவ்வாறு, ஒவ்வொரு கதையையும் அறிமுகக் குறிப்பாக சொல்லக் கூடிய விதமாக மனதில் நிற்கும் கதையம்சங்களைக் கொண்டதாக அமைந்திருக்கின்றது 'அப்பாவின் டயரி'.

கதை மாந்தர்கள் நமக்கு அறிமுகமானவர்கள், நிகழ்விடமும் நமக்குப் பழக்கப்பட்டவையே. நமது கதைகளைச் சொல்லும் நல்லதொரு கதை சொல்லியாக இச்சிறுகதைத் தொகுதி மூலம் கப்பார் முன்னெழுகிறார். நூலை காலம் சென்ற தனது மனைவிக்கு சமர்ப்பணம் செய்திருக்கின்ற கதைஞர்,

பத்திரிகையில் வெளிவந்த கதைகளின் முன்பக்கங்களை அவற்றிற்காக வரையப்பட்ட படங்களையும் உள்ளடக்கி, நிழற்படப் பிரதியாகச் சேர்த்து கதைகளின் ஆரம்பத்தில் தந்திருப்பது வாசிக்கும் ஆவலை இன்னும் அதிகரிக்கச் செய்வதாக அமைந்திருக்கின்றது. கப்பாரின் இலக்கிய முயற்சிகள் வெற்றி பெற வேண்டும். கதை நகர்த்தும் பாங்கில், ஒன்றுக் கொன்று வித்தியாசமான உத்திகளைக் கையாண்டு தொடர்ந்து நல்ல சிறுகதைகளை அவர் தரவேண்டும் என்பவையே இலக்கிய உலகின் எதிர்பார்ப்பாகும். அவருக்கு நமது வாழ்த்துகள்.

நூல் :–அப்பாவின் டயரி.
வெளியீடு:–வெண்ணிலா பதிப்பகம்,
378/2 ஸம் ஸம் வீதி,
மருதமுனை– 03.
விலை :– ரூபா 500/–

**பாவேந்தல் பாலமுனை பாறூக்...**

# நாற்காலியை காப்பாற்றும் பட்ஜெட்; விமர்சிக்கும் காங்கிரஸ்




வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்ல வாக்களிக்காதவர்களுக்கும் நான் தான் முதலமைச்சர். எல்லோருக்குமாகவே நான் பணியாற்றுவேன் என்று, தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பத்திரிக்கையாளர் சந்திப்பில் ஒருமுறை தெரிவித்திருந்தார். இதுதான் மக்கள் பணியாற்ற பொறுப்பான பதவிக்கு வருபவர்களின் பண்பு. தற்போது இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பா.ஜ.க. தலைமையிலான அரசு 2024/2025 ஆண்டுக்கான பட்ஜெட்டில் தங்களுக்கு வெற்றி வாய்ப்பையும், ஆட்சியில் அமர்வதற்கு துணையும் நின்ற மாநிலங்களுக்கு அதிக நிதியை வழங்கி எதிர்க்கட்சிகளின் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

மக்களவையில் பட்ஜெட் தாக்கல் செய்யும் போது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் எப்போதும் திருக்குறளிலிருந்து மேற்கோள் காட்டி, பட்ஜெட் உரை நிகழ்த்துவார், ஆனால், இந்தமுறை அப்படி எதுவும் மேற்கோள் காட்டாமல் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட குறிப்பிடாமல் உரை நிகழ்த்தியிருக்கிறார். தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் கூட தங்களுக்கு வெற்றி வாய்ப்பு இல்லாமல் 40 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணியே வெற்றி பெற்றதால் அதன் வெறுப்பைத்தான் நிதியமைச்சர் உரையில் பார்க்க முடிந்து என்று, தமிழ்நாட்டு முதலைமைச்சர் மு. க. ஸ்டாலின் தனது எதிர்ப்பை தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் நேரத்தில் பிரதமர் நரேந்திர மோடி, எட்டுமுறை தமிழ்நாட்டுக்கு வந்து பரப்புரை செய்திருக்கிறார், போகின்ற இடங்களில் எல்லாம் திருக்குறளில் இருந்து மேற்கோள் காட்டிப் பேசியிருக்கிறார், எனக்கு தமிழ் தாய்மொழியாக இல்லாமல் போய்விட்டதே என்று ஒரு முறை வருத்தமும் தெரிவித்திருந்தார், ஆனால், பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டது ஏன்? என்ற அரசியல் நோக்கர்களின் கேள்வியும் நியாயமானதே.

நிதியமைச்சர் நிர்மலா சிதாராமன் தனது பட்ஜெட் உரையில் திருக்குறளில் மேற்கோள் காட்ட விருப்பம் இல்லை என்றால் பீஹாரின் போஜ்புரி அல்லது ஆந்திராவின் தெலுக்கு மொழியில் மேற்கோள் காட்டியிருக்கலாம். ஏன் அந்த மொழியில் பொன் மொழிகள் இல்லையா என்று காங்கிரஸ் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் நகைச்சுவையாக மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார். இதை நகைச்சுவை என்று கடந்து போய். விடவும் முடியாது. ஒரு அரசை எப்படி நடத்த வேண்டும் என்பது பற்றிய வழிகாட்டல் திருக்குறளில் இருக்கிறது. அதனால் தான் இதுவரையில் தாக்கல்செய்யப்பட்ட பட்ஜெட் உரையில் திருக்குறள் மேற்கோள் காட்டப்பட்டது, தமிழ்நாட்டை புறக்கணிக்க வேண்டும் என்பதற்காகவே திருக்குறளையும் புறக்கணித்துள்ளனர்.

தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா கூட்டணி வெற்றிபெற்ற மாநிலங்களுக்கும் பட்ஜெட்டில் எந்த விதமான திட்டமும் அறிவிக்கப்படவில்லை. நாற்காலியை காப்பாற்றும் முயற்சி இந்த பட்ஜெட் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் விமர்சித்துள்ளார். அவர் மேலும் எக்ஸ் தளத்தில் குறிப்பிடும்போது கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களை திருப்திபடுத்தும் விதமாகவே இந்த பட்ஜட் உள்ளது. பிஹாருக்கு ரூ. 26 ஆயிரம் கோடியும், ஆந்திராவுக்கு 15 ஆயிரம் கோடியையும் பட்ஜெட்டில் ஒதுக்கிவிட்டு சாமானிய இந்தியர்களுக்கு எந்தவிதமான பலனும் இல்லாமல். அதானி, அம்பானிக்கு பலன் தரும் பட்ஜெட்டாக உள்ளது. மத்திய அரசுக்கு ஆதரவு அளித்து வரும் கட்சிகளை மகிழ்ச்சிப்படுத்தவே இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது என்றும் விமர்சனம் செய்துள்ளார்.

இந்த பட்ஜட் எதிர்க்காட்சிகளுக்கு சாதகமாக இல்லை என்று அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும், நாட்டு மக்களின் மீதும் நாட்டின் வளர்ச்சியிலும் அக்கறையில்லாமல் பட்ஜட் தயாரிப்பார்களா? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது, பிரதமர் நரேந்திர மோடி இந்த பட்ஜெட் குறித்து கருத்து கூறும்போது கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் 25 கோடி பேர் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பெருமையோடு அறிவித்திருக்கிறார். முந்தைய காலங்களில் கொண்டு வந்த பல புதிய திட்டங்களால் தானே இது சாத்தியமாகி இருக்கிறது. அவர் மேலும் பட்ஜெட் பற்றி கூறும்போது. தற்போதைய பட்ஜெட், நடுத்தர வர்க்க மக்களை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. பட்ஜெட் திட்டங்களால் அவர்களுக்கு புதிய உத்வேகம் கிடைக்கும். அவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்படும், இளம் தலைமுறையினரின் நலன் கருதி கல்வி, திறன்சார் மேம்பாட்டுக்கு பட்ஜெட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

பழங்குடியின மக்கள், பட்டியலின மக்கள், பிற்படுத்தப்பட்ட சமூகங்களை சேர்ந்த மக்களை முன்னேற்றும் வகையில் பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. பொருளாதாதரத்தில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் பட்ஜெட் அமைந்திருக்கிறது. சிறு, குறு நிறுவனங்கள், சிறிய வியாபாரிகள், சிறிய தொழிற்சாலைகளின் முன்னேற்றத்துக்கு புதிய பாதை அமைத்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

உற்பத்தி மற்றும் உட்கட்டைமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் அதிவேகமாக வளரும், வேலைவாய்ப்பு மற்றும் சுயவேலைவாய்ப்புகள் உருவாக்கும் வகையில் பட்ஜெட்டில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம் பெரும் வெற்றியை பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்குவிப்பு திட்டம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நாடு முழுவதும் கோடிக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்

நாடு முழுவதும் புதிதாக 12 தொழில் பூங்காக்கள் உருவாக்கப்படும். புதிய துணை நகரங்கள் உருவாக்கப்படும், 14 நகரங்களின் உங்கட்டமைப்பு மேம்படுத்தப்படும் என்பன உள்ளிட்ட முக்கிய திட்டங்களால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் வேலைவாய்ப்புகள் பெருகும் என்று இந்த பட்ஜெட்டின் மூலம் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகள் பற்றி தெளிவாக கூறியுள்ளார். எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு திட்டங்கள் இல்லை என்று பொதுவாக குற்றம் சுமத்த முடியாது. இந்த திட்டங்கள் அனைத்தும் நாடு முழுமைக்குமானது என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ்நாடு போன்று பா.ஜ.க கூட்டணிக்கு வாக்களிக்காத மாநிலங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது ஏமாற்றமானது தான். அதைப் போராடிப் பெற வேண்டிய உரிமையும் எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிறது. இப்படியான புறக்கணிப்பு மூலம் அடுத்து வரும் தேர்தல்களிலும் நாம் புறக்கணிக்கப்படலாம் என்று பா.ஜ.க. கூட்டணி மறந்துவிட்டது.



தேர்தல் வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று மெத்தனமாக இருந்தாலும் மக்கள் மறக்க மாட்டார்கள் என்பதையும் பா.ஜ.க கூட்டணியினர் அவதானிக்க வேண்டும்.

ஒரு நாட்டின் பட்ஜெட் என்பது அந்த நாட்டில் உள்ள எல்லா மாநிலங்களையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அந்த வகையில் இந்த பட்ஜெட்டில் நீதி இல்லை அநீதிதான் அதிகமாக உள்ளது. அரசியலை தேர்தல் களத்தில் பார்த்துக் கொள்ளலாம், அனைவரும் இணைந்து நாட்டுக்காக பணியாற்ற வேண்டும்.

என்று பிரதமர் கூறினார். ஆனால், அதற்கு மாறாக அவரது அரசின் பட்ஜெட் அமைந்துள்ளது. வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல வாக்களிக்காதவர்களுக்கும் நன்மைகள் செய்வதுதான் சிறந்த அரசு அப்படித்தான் தமிழக அரசின் செயல்பாடு உள்ளது.

இதைப் பார்த்தாவது மத்திய அரசு தன் போக்கை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று தமிழ் நாடு முதலைமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளதையும் புறந்தள்ளிவிட முடியாது. நாட்டின் மீதும் நாட்டு மக்களின் மீதும் விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆட்சி நடத்துவது தான் நல்லரசாக விளங்க முடியும் என்பதை ஆளும் அரசு புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.



# படித்ததும் பகர்வதும் 201





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### நாளை நமதே!



நாளைய நாளை நல்லதாக அமைத்துக் கொள்ள, நல்லெண்ணங்களோடு, நேரிய சிந்தனைகளோடு செயல்படுவதே வாழும் நாட்களை உற்சாகமாக வைத்துக்கொள்ள காரணமாக அமையும். உண்மையில் நாளை என்ன நடக்க இருக்கின்றது. அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்பன பற்றி எவருமே அறிந்திருக்க முடியாது. அவற்றை நூற்றுக்கு நூறு சரியாக ஊகித்து அறிவதும் சாத்தியப்படாத விடயமாகும். எனவே நாளை நடக்க இருப்பதை 'நல்லதாகவே நடக்கும்' என்ற நேரிய எண்ணத்தோடு செயல்படுவதன் மூலமே, இன்றைய நாளை நல்லதாக ஆக்கிக் கொள்ள முடியும்.

நாளை அல்லது எதிர்காலத்தில் நடக்க இருக்கும் ஒரு விடயத்தை 'அது தீயதாக, மோசமானதாக, பாதகமானதாக, பாதிப்பானதாக நடக்கும்' என்று எதிர் மறையாக சிந்தித்து, அது பற்றியே கவலைப்பட்டு, இன்றைய நாளை நாசமாக்கிக் கொள்வது அல்லது வீணடிப்பது பெரும் முட்டாள் தனமாகும். நாளைய தினத்தில் 'இத்தகைய பாதிப்புக்கள் ஏற்படும்', 'இத்தகைய இழப்புகள் ஏற்படும்', 'இத்தகைய எதிர் விளைவுகள் உண்டாகும்' என்றெல்லாம் வீணாக சிந்திப்பதால் இன்றைய நாளும் பொழுதும் வீணாகி விடும் என்பதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையிலேயே நாளை அல்லது எதிர்காலத்தில் அத்தகைய பாதக விளைவுகள் ஏற்பட்டாலும் கூட, அதற்காக இன்றைய நாளை காரணமின்றி வீணாக்கிக் கொள்வதில் எத்தகைய நியாயங்களும் இருக்க முடியாது. அதேபோல நாளை நடைபெறுகின்ற விடயங்கள் நாம் எதிர்மறையாக நினைத்தது போல் அல்லாமல் நல்லவையாக சிறந்தவையாக நடந்து விடுமாயின் நாம் அதனை மோசமாக நடக்கும் என எண்ணி அதற்காக இன்றைய தினத்தை வீணாக்கியது முட்டாள் தனமாக இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நல்ல எண்ணங்கள் கொள்வோரும், இறைவன் மீது நம்பிக்கை கொண்டோரும் "நாளை நல்லதே நடக்கும்" என்றே எண்ணுவார்கள் அதற்கேற்றவாறு நல்லதையே நினைத்து, நல்ல வழிகளிலே, நன்றாக செயற்படுவார்கள். இதனால் அவர்களது இன்றைய பொழுதும் நன்றாகவே கழிவதுடன், அவர்களது நேரிய சிந்தனைகளால் 'நாளைய பொழுதும் நன்றாகவே விடியும்' என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, 'நாளை நல்லதே நடக்கும்' என்ற நல்லெண்ணத்தை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்வதோடு, 'நாளை நமதே' என்று நல்லெண்ணம் கொண்டு வாழ்வதன் மூலம் நாளைய நாள் நல்லதாக அமைவதோடு, இன்றைய நாளும் மகிழ்ச்சியோடு நன்றாகவே அமையும் என்பதை உள்ளத்தால் உறுதியாக உணர்ந்து, அறிந்து, புரிந்து செயல்பட வேண்டும். அதுவே ஒவ்வொருவரது எதிர்காலத்தையும் நல்லதாக, மகிழ்ச்சி மிக்கதாக ஆக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நிச்சயம் நாளை நமதே! நம்பிக்கையோடு வாழ்வோம்!

## நெஞ்சோடு நெஞ்சம்

### வாழ்த்தியோருக்கு நன்றிகள்!

'படித்ததும் பகர்வதும்' 200வது பத்தியை வாசித்துவிட்டு அன்போடு வாழ்த்துக்கள் தெரிவித்து உற்சாகமூட்டிய அனைத்து வாசகர்களுக்கும் வளமான நன்றிகள்!

இந்தியா, தமிழ் நாடு, சென்னையில் இயங்கும் இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் மேனாள் பொதுச் செயலாளரும், "தியாகத்தின் நிறம் பச்சை", "சீக்கராப்பள்ளி தந்த செம்மல்"," இஸ்லாத்தின் மனித மதிப்பு" எனும் நூல்களின் ஆசிரியரும், பிரபல பேச்சாளரும், சீதக்காதி அறக்கட்டளையின் 'சதக்கதுல்லா அப்பா இலக்கிய விருது' பெற்றவருமான **பேராசிரியர், முனைவர் மு. அப்துல் சமது** அன்புடன் அனுப்பி வைத்த, அருமையான வாழ்த்துச் செய்தி:

### வாசிப்பில் விரியும் வானம்!



உலகப் புகழ் பெற்ற சமத்துவப் பொருளதார மேதை கார்ல் மார்க்ஸ் மறைந்தவுடன், அந்தச் செய்தியை அறிவித்த அவரது நண்பர் ஏங்கல்ஸ், கார்ல் மார்க்ஸ் மரணித்து விட்டார் என்றோ, இறந்து விட்டார் என்றோ அறிவிக்கவில்லை. மாறாக "கார்ல் மார்க்ஸ் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்!' என்றுதான் அறிவித்தார்.

ஒரு மனிதன் உயிரோடு இருக்கிறான் என்பதற்கு அத்தாட்சி, அவன் சிந்திக்கக் கூடியவனாக இருக்கிறான் என்பதுதான். அந்த சித்தனையைத் தூண்டுவதில் பெரும்பங்கு எழுத்துக்கு உண்டு. அந்த எழுத்தை வெற்றிக்கரமாக கையாளும் வித்தகர் கலாபூஷணம் ரஷீத் எம். இம்தியாஸ் தினகரன் வாரமஞ்சரியில் தன் கைவண்ணத்தில் பக்கம் விரிக்கும் 'படித்ததும் பகர்வதும்' அதற்கு அத்தாட்சி.

200ஆவது தொடர் என்பதே, வெகுஜன சஞ்சிகையில் பொது வாசகத் தளத்தில் இவரது பகிர்வுகள் மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளன என்பதற்கான அங்கீகாரம். வரலாறு, பண்பாடு, வாழ்வியல் என பன்முகத்தன்மை இவரது பக்கத்தில் விரிகிறது. தனது வாசிப்பில் உள்வாங்கிக் கொண்ட அரிய நூல்களின் அறிமுகம், கருத்துச் செறிவு மிக்க வாழ்வியல் சிந்தனைகள், சகாப்தமாக வாழ்ந்து மறைந்த ஆளுமைகள் குறித்த ஈரப் பதிவுகள், சமகால உலக நடப்புகள், சுவையான நிகழ்வுகள், இலக்கியப் பரிமாற்றங்கள் என பல்வேறு பரிமாணங்களில் இம்தியாஸின் பக்கம் வாரந்தோறும் நம் வாசிப்புக்கு வரும் பல்சுவை விருந்து!

'புலனம்' வழியாக என் வாசிப்புக்கு வரும் 'படித்ததும் பகர்வதும்' பக்கம், நம் தொப்புள் கொடி உறவான இலங்கை சொந்தங்களோடு உரையாடி, உறவாடும் மன நிறைவையும் தருகிறது.

"சில நாள் நூல் பழக்கம் உள்ளவர்களும் புரியும்படி எழுது" என்ற மகாகவி பாரதியின் வேண்டுகோள், இம்தியாஸுக்கு கைகூடி வந்துள்ளது. 'படித்ததும் பகர்வதும்' பத்தியை எல்லோரும் வாசிக்கலாம்; எண்ணங்களை செழுமைப் படுத்தலாம். தொடரட்டும் அன்பர் ரஷீத் எம். இம்தியாஸின் படித்ததைப் பகரும் பணி. (கடந்த வாரம் இவ் வாழ்த்துச் செய்தி பெயர் மாறி பிரசுரமாகியிருந்தது. தவறுக்கு வருந்துகிறோம்!)

## புது வரவு

### தூண்டில்கள் துடிக்கின்றன



பலகத்துறை கலை இலக்கிய வட்டம் வெளியிட்டுள்ள, நூறு கம்மல்துறைக் கவிஞர்களது கவிதைகளின் தொகுப்பு "தூண்டில்கள் துடிக்கின்றன" என்ற பெயரில் பிரசுரமாகியுள்ளது. 'கம்மல்துறை கவிதைகள், முதல்வீச்சு, ஆயிரத்தில் நூறு' என்ற விசேட குறிப்போடு இந்நூல் வெளிவந்துள்ளது.

'இலைமறை காய்களை இனம் கண்டு கலை, இலக்கிய விளைநிலத்தில் பயிர் செய்து, உரம் புதைத்து, உயிர் கொடுத்து பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தினை உருவாக்கிய' 'போருத்தொட்டை றிஸ்மி'க்கு என இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கலாபூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன், 'தூண்டல்கள் துளிரட்டும்' என்ற தனது முன்னுரையில் "தூண்டில்கள் துடிக்கின்றன என்ற தலைப்பில் வெளிவரும் இந்தக் கவிதை நூல் முழுக்க முழுக்க கம்மல்துறைக் கவிஞர்களின் படைப்புக்களைக் கொண்டது. பல்சுவை விருந்தாக 100 கவிதைகளை உள்ளடக்கிய இந்த நூலை வெளியிடுவதில் பலகத்துறை கலை இலக்கிய வட்டம் பூரிப்படைகிறது. மண்வாசனை கொண்ட ஆயிரம் கவிதைகளை நூலுருவில் கொண்டுவரும் எமது நீண்ட காலத்திட்டத்தின் முதல் முயற்சியே இது." என்கிறார்.

'கவிதைக்கொரு கலங்கரை விளக்கம்' எனும் தலைப்பில் மதிப்புரை வழங்கியுள்ள பன்னூலாசிரியர் அஷ்ரஃப் சிஹாப்தீன், "இந்தக் கவிதை நூல் நூறு கவிதைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. ஒரு தனி நபரினது கவிதைத் தொகுப்பு பேசும் விடயங்களை விட பலரின் கவிதைகள் கொண்ட ஒரு தொகுப்பின் கவிதைகள் பேசும் விடயங்கள் அதிகமானவை. அவற்றின் நோக்குகளும் போக்குகளும் பார்வைக் கோணங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. தனியொரு கவிஞனின் சமூக, உலகப் பார்வையை விடவும் பல கவிஞர்களின் சமூகப் பார்வை பரந்தது, விசாலமானது. இந்தத் தொகுப்பின் கவிதைகள் அதை நிரூபிக்கின்றன." என்று குறிப்பிட்டுள்ளார்.

தினகரன்/தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் அளித்துள்ள அணிந்துரையில் "இலக்கியக் காவலர்களாக பணிபுரியும் பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் தூண்டில்கள் துடிக்கின்றன என்ற இக் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகள் ஒவ்வொன்றும் பாராட்டக்கூடியனவாக உள்ளன. புதுக்கவிதையின் பாணியை ஆழமாகப் புரிந்து கொண்டவர்களால் மாத்திரமே இவ்வாறான கவிதைகளைப் புனைய முடியுமென்பது எனது நம்பிக்கையாகும். புதுக்கவிதை வரம்புகளுக்கு உட்பட்டதாகவும் ஆழமான விடயங்களை ஓரிரு வரிகளில் எடுத்துக் கூறுவதாகவும் இக்கவிதைகள் அமைந்துள்ளன. இக்கவிதைகளை ஆக்கிய இலக்கியவாதிகள் ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுகள் உரித்தாகட்டும்." எனப் பாராட்டியுள்ளார்.

வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுசைன், "ஆற்றல்மிகு கவிஞர்களின் படையெடுப்பு. அதில் தெரிகிறதே பலகத்துறையின் மிடுக்கு'! நூறு கவிதைகள் இதில் இணைக்கப்பட்டுள்ளன மிகவும் சிறப்பான கவிஞர்கள் பலகத்துறை மண்ணில் இருக்கிறார்கள் என்பதற்கு சான்றாக இத் தொகுப்பு அமைந்துள்ளது. சில கவிதைகள் என்னை ஆத்மார்த்தமாக இழுத்துச் சென்றன. அப்படியே என்னை தமக்குள்ளே புதைத்துக் கொண்டன. ஒரு கவிஞருக்கு மற்றைய கவிஞர் சளைத்தவரல்ல என்பதை நிரூபிப்பதாகவே பல கவிதைகள் இருந்தன. இது இந்த மண்ணுக்குக் கிடைத்த ஓர் அருள் என்பேன்." என்று தன் வாழ்த்துரையில் பதிவு செய்திருக்கிறார்.

நூல்: தூண்டில்கள் துடிக்கின்றன, முதற்பதிப்பு: ஜுலை 2024, பக்கங்கள்: 148, விலை: ரூபா. 600/=, வெளியீடு: பலகத்துறை கலை இலக்கிய வட்டம், தொடர்புகளுக்கு:

## வாசித்ததில் வசீகரித்தது

### வாசிப்பு வழங்கும் சில வாய்ப்புகள்



வாசிப்பு மற்றவர்களின் அனுபவங்களைப் பற்றிய புரிதலை விரிவுபடுத்துகிறது, பச்சாதாபத்தையும் இரக்கத்தை வளர்க்கிறது.

வாசிப்பு கற்பனையைத் தூண்டுகிறது, படைப்பாற்றல் மற்றும் புதிய முன்னோக்குகளைத் ஊக்குவிக்கிறது.

வாசிப்பு சமூக உணர்வை உருவாக்குகிறது, ஆக்கத்தின் ஆசிரியர்கள், கதாபாத்திரங்கள் மற்றும் சக வாசகர்களுடன் வாசிப்போரை இணைக்கிறது.

வாசிப்பு மன அழுத்தத்தையும் பதற்றத்தையும் குறைக்கிறது. மனதை அமைதிப்படுத்துகிறது.

வாசிப்பு நமது ஆர்வத்தைத் திருப்திப்படுத்துகிறது, புதிய யோசனைகள் மற்றும் புதிய விடயங்களை ஆராய ஊக்குவிக்கிறது. புதினங்கள் மீதான ஆர்வத்தை வளர்க்கிறது.

கடினமான காலங்களில் வாசிப்பு ஆறுதல் அளிக்கிறது, நோய்களை குணப்படுத்துகிறது.

மற்றும் மன வேதனைகளுக்கு ஆறுதலும், சிகிச்சையும் அளிக்கிறது.

வாசிப்பு உலகக் கண்ணோட்டத்தை விரிவுபடுத்துகிறது, நமது அனுமானங்கள் மற்றும் சார்புகளுக்கு சவால் விடுகிறது. முன்னோக்கிய, எதிர்கால பாதையை விரிவுபடுத்துகிறது

## சிந்தனை செய் மனமே

### தாயும் தனயனும்!



தனது தந்தை இறந்த பின், தன் தாயை வீட்டில் தன்னோடு வைத்து கவனிக்க முடியாமல் முதியவர் இல்லத்தில் சேர்த்து விட்டான் மகன். மாதத்திற்கு ஒரு முறை, அல்லது அவ்வப்போது அங்கு சென்று, தன் தாயை பார்த்து வந்தான்.

சில வருடங்கள் கடந்தன.

ஒருநாள் அவருடைய தாய் சுகவீனமாக இருப்பதாகவும், ரொம்பவும் கஷ்டப்படுவதாகவும் அவனுக்குத் தகவல் வந்தது. மகனும் உடனடியாக தன் தாயைப் பார்க்கச் சென்றான்.

அந்தத் தாய் தனது அந்திம நேரத்தில், சாகும் தறுவாயில் இருந்தாள். அவளிடம், "உங்களுக்கு ஏதாவது வேண்டுமா அம்மா?" என மகன் கேட்டான்.

அதற்கு அவள், "எனக்கு ஒன்றும் வேண்டாம் மகனே! இந்த முதியவர் இல்லத்தில் மின் விசிறிகள் எதுவும் இல்லை. காற்று இல்லாமலும், கொசுக் கடித்தும் நிறைய நாட்கள் நான் தூங்காமல் இருந்திருக்கிறேன். இங்கு தரும் சாப்பாடுகள் சில நேரங்களில் கெட்டுப் போய்விடுகின்றன, அதனை சாப்பிட முடியாமல் பல நாட்கள் பசியோடு தூங்கியிருக்கிறேன். எனவே இந்த இல்லத்திற்கு சில மின் விசிறிகளும், சாப்பாட்டை கெடாமல் பாதுகாத்து வைத்திருக்க ஒரு குளிர் சாதனப் பெட்டியும் வாங்கிக்கொடுப்பாயா?" என மெல்லிய குரலில் கேட்டாள்.

மகன் மிகவும் ஆச்சரியப்பட்டான். பின் கேட்டான். "இத்தனை வருடங்களாக நான் உங்களை பார்க்க வருகிறேனே. ஒருநாள் கூட இப்படி ஒரு குறையை நீங்கள் என்னிடம் சொல்லவில்லையே அம்மா. இப்போ மட்டும் ஏன் இதை கேட்கிறீர்களே. ஏன்?" எனக் கேட்டான்.

தன் மகனின் முகத்தை மெல்ல, கனிவோடு ஏறெடுத்துப் பார்த்த அந்த தாய், "மகனே இங்கு மின் விசிறி இல்லாமல், கொசுக்கடியை தாங்கிக் கொண்டு தூங்குவதற்கு நான் பழகிக்கொண்டேன். இங்குள்ள பசியையும், துன்பங்களையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால் இன்னும் சில வருடங்களில் உனது குழந்தைகள் உன்னையும் இந்த இல்லத்தில் தானே சேர்ப்பார்கள்?. அப்போது, உன்னால் இவற்றை தாங்கிக்கொள்ள முடியாதல்லவா? அதனை நினைத்துத்தான் கவலைப்படுகிறேன்.

அதனால் தான் இதனை செய்யுமாறு இப்போது கேட்கிறேன்" என்றாள்.

அந்த மகனுக்கு சுரீரென்று நெஞ்சில் ஏதோ ஆழமாகக் குத்துவது போல் இருந்தது.

அது தான் செய்து விட்ட தவறுக்காகவா? அல்லது தன் தாயின் பாசத்துக்காகவா?

வாழ்க்கையில் காயப்படுத்தும் பல விடயங்கள் நல்ல பாடங்களைக் கற்றுக் கொடுக்கவும் செய்கின்றன அல்லவா?

## கைவண்ணம் காணீர்



அழகிய ஆரணங்குகளால் ஆன ஆனை!
என்னே கலைஞனின் கற்பனை!!

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

---




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# காதலிப்பவர்களுக்கு இல்லையே வயதெல்லை! அதுதானே இப்போதிருக்கும் பெரும் தொல்லை!

இரண்டு தினங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் நிறைந்த பெட்டி ஒன்றை,

வேன் ஒன்றில் கொண்டுவந்து,

பேபி நோனாவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது

துர்காவின் உதவியுடன்,

அவை எல்லாவற்றையுமே சரிபார்த்து,

சாப்பாட்டு அறையில் இருந்த மேசைமீது அடுக்கி வைத்தாள் பேபி நோனா.

பிறகு வந்து பார்த்த போது,

ஒரு றாத்தல் பாணையும்,

ஒரு செமன்டின்னையும் காணவில்லை!

"ஏய் சின்னம்மா இங்கபாரு எங்க இங்க வச்சிருந்த பாண் றாத்தலையும் செமன் டின்னையும் காணல்லியே!" துர்காவை ஐயத்துடன் பார்த்தபடியே கேட்டாள் பேபி நோனா!

"எனக்குத் தெரியாது நான் இவ்வளவு நேரமும் அறைக்குள்தானே இருந்தேன்!" பதறியபடியே,

துர்கா சொன்னாலும்,

பேபி நோனா அதை நம்பவில்லை என்பது புரிந்தது.

இதன்பிறகு,

மேசை மீதிருந்த எல்லா பொருட்களையும்,

கபட்டுக்குள் போட்டு,

பூட்டைப் போட்டு பூட்டிவிட்டாள் பேபி நோனா!

அவளது பைத்தியக்காரத் தனத்தினால்தான் இதை எல்லாம் அவள் தான் செய்வதாக

பேபி நோனா நினைத்துக் கொண்டாள்!

ஆனாலும்,

அச்சம் மிகுதியால் ஆடிப்போயிருந்தாள் துர்கா!

உண்மையில்,

ஒரு றாத்தல் பாணுக்கும் செமன் டின்னுக்கும் என்ன நடந்தது!

இதைப் பற்றி நினைக்கும் போது,

தரையில் பிடித்துப் போட்ட மீனைப்போல்,

அவள் இதயம் துள்ளியது!

படபடவென்று நடுங்கியது!

இரத்த ஓட்டமே நின்றுவிடும் போலிருந்தது!

இதையெல்லாம்

இந்த மாமிசப் பிண்டத்திடம் எடுத்துக் கூறுவது,

நயாகரா நீர்வீழ்ச்சியை,

தென்னை மட்டையைக் கொண்டு,

தடுத்து நிறுத்த முயற்சிக்கும் செயலைப் போன்றது என்பதை,

துர்கா புரிந்து கொண்டாள்.

இதனால்,

தனது விதியை காலத்திடம் ஒப்படைத்துவிட்டு,

பேபி நோனாவுடன் சேர்ந்து செயல்படுவதற்கு அவள் முடிவு செய்தாள்!

நேரம் செல்லச் செல்ல, பாண் றாத்தலும் செமன் டின்னும் எப்படி மாயமாய் மறைந்து போனது என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்ததுதாள்.

இந்த வீட்டில் இருப்பதோ

நாங்கள் இரண்டு பேர்தான்! ஆனால்,

தான் எடுக்கவில்லையென்று துர்கா சொல்லுகிறாள்! நானும் எடுக்கவில்லை! அப்படியானால்,

பாண் றாத்தலுக்கும் செமன் டின்னுக்கும் என்ன நடந்தது!

"இந்த மாதிரியான பாழடைந்த பங்களாக்களில் பேய் இருக்குமாம் இல்லையா சின்னம்மா?" என்று பீதியைக் கிளப்பும் விதத்தில் கேட்டாள் பேபி நோனா.

அவள் இப்படிச் சொன்னதைக் கேட்டதும்,

துர்கா இன்னும் கலவரமடைந்தாள்.

அவள் எதுவும் பேசாமல்,

புருவங்களை உயர்த்தி,

பேபி நோனாவைப் பார்த்தாள்!

"ம் உன்னோட புருஷன் எப்ப வருவாருன்னே தெரியல்லியே சில சமயம் இன்று வந்தால் கூட வரலாம் இல்லையா?" என்று கேட்டு விட்டு,

துர்காவைக் கூர்ந்து பார்த்தாள்!

சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கும் மிகப் பெரிய தீச்சுவாலையை அணைக்கும் அளவுக்கு மூச்சொன்றை விட்ட துர்கா,

சாப்பாட்டுப் பீங்கானைத் தள்ளிவைத்து விட்டு,

தண்ணீர் கிளாசை எடுத்து மடமடவென்று குடித்தாள்!

அவள் மனம் எண்ணியது. எந்த நேரத்திலும் வரலாம் என்று சொல்லப்படும் அந்த சொலமனால் ஏற்படப் போகும் பிரச்சினைகளும்,

இந்த வீட்டிற்குள் நடக்கும் மர்மான சம்பவங்களும் மனத்தை வாட்டி எடுக்கும் போது எங்கே இருந்து வரப் போகிறது பசி.

வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் முடித்து விட்டு வந்த பேபி நோனா,

கிழிந்து போன சாரியை எடுத்துக் கொண்டு வந்து,

நடுஹாலில் அமர்ந்து கொண்டு,

துர்காவைத் திட்டிய படியே,

அந்த சாரியை தைக்க ஆரம்பித்தாள்!

மனத்தில் ஏற்பட்டிருந்த அச்சத்தினால்,

பேபி நோனாவின் அருகிலேயே துர்கா அமர்ந்து கொண்டாள். திடீரென்று அவளது பார்வை,

எதிரில் இருந்த யன்னல் கண்ணாடியை நோக்கிச் சென்றது. அடுத்து,

"ஆ" என்று அலறியபடியே மயங்கி விழுந்தாள்!

அவளைப் போலவே பதறிப்போன பேபி நோனா, விரைந்து எழுந்து நின்று

துர்காவின் அக்குளில் கைகளை விட்டு,

பாதிமேலும்

பாதி கீழுமான அவளை இழுத்துக் கொண்டு போய், சிரமப்பட்டு கட்டிலில் தூக்கிப் போட்டாள்,

தண்ணீரை எடுத்து,

முகத்தில் தெளித்தாள்.

மீண்டும் சுய நினைவிற்கு வந்த துர்கா,

சுற்றிலும் ஒரு முறை பார்த்து விட்டு,

முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்!

"ஏய் ஏன் இப்ப அழுகிறாய் என்ன நடந்துச்னு சொல்லு!" படபடப்புடன் கேட்டாள் பேபிநோனா.

"அந்த கண்ணாடிக்குள்ள யாரோ இருந்த மாதிரி தெரிஞ்சிச்சி அது ஒரு பயங்கர உருவம்!" சொல்லி விட்டு,

மீண்டும் முகத்தை மூடித் கொண்டு அழுதாள் துர்கா!

"அதெல்லாம் வெறும் பிரமை நீ இப்போது பேசாமல் நன்றாகத் தூங்கு!" சொல்லிய படியே,

வெளியே போவதற்குத் தயாரானாள் பேபி நோனா.

"ஐயையோ இந்த அறைக்குள் இருப்பதற்கு எனக்கு பயமாக இருக்கிறது நானும் இரவில் உங்கள் அறையில் வந்த தூங்கவா?" கரகரத்து குரலில் கேட்டாள் துர்கா.

"என்னது! எனது அறையில் வந்து என்னுடன் தூங்கப் போகிறாயா? வேண்டவே வேண்டாம் அதைப்பற்றியெல்லாம் நினைத்துக் கூடப் பார்க்காதே எனக்கு நன்றாகத் தூக்கம் போகும் என்று, இதற்கு முன்பும் பல தடவைகள் சொல்லியிருக்கிறேனல்லவா பைத்தியக்காரிகளுடன் பைத்தியக்காரிகள்தான் தூங்குவார்கள்! உன்னைப் போன்ற பைத்தியங்களிடமிருந்து நான் நிறையவே பாடம் கற்றுக் கொண்டிருக்கிறேன்!"

அப்படியானால் எனது இந்த அறையின் சாவியை மட்டுமாவது தரமுடியுமா? பரிதாபமாகக் கேட்டாள் துர்கா,

"உனது அறைக்கு சாவியே இல்லை! சொல்லிய படியே, அறையை விட்டு வெளியேறினாள் பேபி நோனா. சூரியன் மறைந்ததும், இருள் படர படர,

துர்காவின் அச்சமும் படர ஆரம்பித்தது!

அதைக் கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பிய அவள், இரவு சாப்பாட்டுக்குப் பிறகு,

அறைக்குள் வந்து, கைவிளக்கின் ஒளியை அதிகரித்து விட்டு,

தூங்காமல் இருப்பதற்கு முயற்சித்தாள்!

இன்று இரவு என்ன நடக்குமோ தெரியவில்லை என்ற அச்சத்திலேயே அவள் ஆடிப் போயிருந்தாள்! அவள் என்னதான் தூங்காமல் இருக்க முயற்சி செய்தாலும், அவளால் இயற்கையை வெல்ல முடியவில்லை! அவள் முயற்சிகள் எல்லாம்

வெள்ளத்தில் நட்ட கம்புகளாக வீணாகின!

உடுத்திருந்த ஆடைஉடையுடனேயே,

அப்படியே கட்டிலில் சாய்ந்து, எல்லா கவலைகளுக்கும், சோகங்களுக்கும்

துன்பங்களுக்கும் பரிகாரம் கொடுக்கும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்! எவ்வளவு நேரம் அவள் அப்படி தூங்கிருப்பாள் என்று தெரியவில்லை!

"துர்கா துர்கா!" என்று யாரோ கனவில் அழைப்பது போன்ற குரலொன்று கேட்டது! அதேநேரம்,

தன்னை யாரோ இழுப்பதைப் போல் உணர்ந்து கொண்ட துர்கா, கட்டிலின் மீது அமர்ந்து கொண்டு, கண்களை துடைத்துவிட்டுக் கொண்டு பார்த்தாள் அங்கே, வியர்த்து, சேர்ந்து போயிருந்த சொலமனின் முகம் அவளுக்குத் தெரிந்தது! அதேநேரம், அறைக் கதவுக்கு அருகில்,

பேபி நோனா நின்று கொண்டிருப்பதும் தெரிந்தது! "என்ன துர்கா இது கட்டியிருந்த சேலையுடனேயே தூங்கிட்டீங்களே ம் அதுவும் ஒரு வகையில் நல்லதுதான்!" என்றார் சொலமன்.

"ம் உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்?" தூக்கக் கலக்கத்திலேயே கேட்டாள் துர்கா.



"வேறு என்ன நீங்கதான் எனக்கு வேண்டும் துர்கா பாருங்களேன் உங்களுக்காக நான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் என்று!" என்று சொன்ன சொலமன், வாசலில் நின்ற பேபி நோனாவின் பக்கம் திரும்பி, "ஏய் கதவைச் சாத்தி விட்டு அங்கிருந்து போய்விடு"! என்று கத்தினார். "வேண்டாம் வேண்டாம் என்று கத்தியபடியே, கட்டிலில் இருந்து கீழே பாய்ந்து, வாசல் கதவை நோக்கி ஓடுவதற்கு முயற்சி செய்தாள் துர்கா! ஆனாலும், அவளால் ஓட முடியவில்லை! காரணம், சொலமனின் இரும்புப் பிடிக்குள் அவள் சிக்கிக் கொண்டதுதான்! அதே நேரம், கதவை 'படா'ரென்று அடித்துச் சாத்திக் கொண்டு, அங்கிருந்து வெளியேறினார் பேபி நோனா! இப்போது, தனது கைக்குள் சிக்கியிருந்த துர்காவை, அன்புடன் பார்த்த சொலமன்,

"துர்கா நான் அவர்களிடம் வசமாக சிக்கிக் கொண்டிருக்கிறேன். சிரஞ்சீவி என்னை பின் தொடர்ந்து வருகிறார் என்று நினைக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் அவர் இங்கே வந்து விடுவார்!" என்றார்.

"என்ன! நான் இங்கே இருப்பது அவருக்குத் தெரியுமா?" ஆர்வத்துடன் கேட்டாள் துர்கா.

"ஆமாம் துர்கா! அதை எப்படியோ மோப்பம் பிடித்து அவர் கண்டு பிடித்துவிட்டார்! அதனால் இனியும் தாமதித்துக் கொண்டிருக்க முடியாது! நீங்களும் உடனே கிளம்பி என்னுடன் வர வேண்டும்!" பரபரப்புடன் சொன்னார் சொலமன்!

"என்னால் வரமுடியாது சிரஞ்சீவி சேர் வரும் வரை நான் இந்த இடத்தைவிட்டு அசைய மாட்டேன்!" பிடிவாதமாகக் கூறினாள் துர்கா.

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 124

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | |
| 05 | | 06 | 07 | 08 | 09 |
| 10 | 11 | 12 | | 13 | 14 |
| 15 | | 16 | 17 | 18 | |
| | 19 | | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................
.............................. ..........................................
மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) மாணிக்கம், பவளம் போன்று இதுவும் விலையுயர்ந்த கல். சுரங்கங்களில் இருந்து பெறப்படுகின்றது. மிகவும் வன்மைத்தன்மை வாய்ந்த இக்கல் ஆபரணங்களில் பதிப்பதற்கும், செல்வந்தர் வீடுகளின் அலங்கார வேலைப்பாடுகளிலும் பயன்படுத்தப்படுகின்றது.
(6) வீட்டுக்கு காற்றோட்டமும், வெளிச்சமும் வருவதற்காக அமைக்கப்படுவது.
(10) மரங்களைத் தறிப்பதற்கும், விறகு வெட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற கூரிய உபகரணம்.
(13) கழிவுநீர் வடிந்தோடுவதற்காக வீதியின் இருமருங்கிலும் அமைக்கப்படுவது. (தலைகீழான சொல்)
(16) தானியங்கள், தேங்காய் போன்ற சமையல் பொருட்களை அரைத்துக் கொள்வதற்காக எமது முன்னோர் பயன்படுத்திய கருங்கல் உபகரணம். இன்றைய காலத்தில் இந்த உபகரணம் பயன்பாட்டில் இருந்து அகன்று விட்டது. ஆனாலும் கிராமப் பகுதிகளில் இன்றும் சிலர் இந்த உபகரணத்தை சமையலறையில் வைத்துப் பயன்படுத்துகின்றனர்.
(22) அதிர்வின் காரணமாக உருவாகி, எமது காதுகளை வந்தடைந்ததும் உணரப்படுவது.
(24) பாட்டன் அல்லது வயது முதிர்ந்த ஆணை இவ்வாறு அழைக்கலாம்.

### மேலிருந்து கீழ்

(1) நெற்கதிர்களில் இருந்து நெல் வேறாக்கப்பட்ட பின்னர், நெற்பயிரின் உலர்ந்த தாள் இப்பெயர் பெறும்.
(3) இது ஒரு கண்ணாடிக் குற்றி. சூரியஒளியிலுள்ள ஏழு நிறங்களையும் பிரித்தறிந்து பார்ப்பதற்கு இக்கண்ணாடிக் குற்றி பயன்படும். ஐந்து முகங்கள், ஆறு உச்சிகள், ஒன்பது நேர்விளிம்புகள் கொண்ட கண்ணாடிக் குற்றி. (தலைகீழான சொல்)
(4) மழைமுகில் சூழ்ந்ததும் வானில் உருவாகி அச்சம் தருவது. இது நிலத்தை வந்தடைந்தால் அனர்த்தத்தை ஏற்படுத்தி விடும். (தலைகீழான சொல்)
(9) உயிரினங்கள் பலவற்றின் இடப்பெயர்ச்சி அங்கம். (தலைகீழான சொல்)
(17) எமது உடலில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் போது உண்டாகின்ற உணர்வு. (தலைகீழான சொல்)
(19) தென்மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் ஒன்று இது.
(21) அன்னையைக் குறிக்கும் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 123

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பத்திரிகை 09. மதி 10. காது 17. பால்மா
20. ஏர் 22. நான் 24. தோணி

**மேலிருந்து கீழ்**

01. பந்து 03. திரி 05. கைதி 09. மன்னார்
11. காவலன் 12. ஓலை 17. நாம் 20. ஏணி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 122

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஆர். முஹம்மது யூசுப்**
தரம் 05A, லலித் அதுலத்முதலி கல்லூரி,
இல. 44/40, இந்திரஜோதி வீதி, இரத்மலானை.

**2. எம்.எப்.எம். மஹ்தி**
தரம் 04D, அல்முனவ்வரா ஆரம்ப பாடசாலை, மடவளை,
இல. 117/4/1, டிங்கிரியாதெனிய, கட்டுகஸ்தொட்டை.

**3. எம்.ஜே.எம். ஜிப்ரான்**
தரம் 04, தி/ கிண்ணியா தேசிய பாடசாலை,
மகாத் நகர், குறிஞ்சாக்கேனி, கிண்ணியா.

**4. லுக்மான் மின்ஹாஜ்**
தரம் 09C, மா/ ஸாஹிரா தேசிய பாடசாலை,
வறக்காமுற, உக்குவல.

**5. எம்.ஐ. இஜாஸ் அஹமட்**
தரம் 03, கமு/ இமாம் றூமி வித்தியாலயம்,
இல. 73, 3ம் குறுக்குத்தெரு, வைத்தியசாலை வீதி,
நிந்தவூர் 03.

**6. எம்.எம். ஆஹில்**
தரம் 01A, ஒக்ஸ்போர்ட் கல்லூரி,
இல. 366, நாங்கல்ல, துல்ஹிரிய.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 124
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



புகழ்: தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

*தெளிவுரை :*
ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும், அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பதே நல்லது.

# கருந்துளையின் உள்ளே என்ன இருக்கிறது?



ஒளி உட்பட எதுவுமே வெளியேற முடியாத அளவு வலுவான ஈர்ப்பு சக்தியைக் கொண்டுள்ள, அண்டவெளியின் ஒரு பகுதியே கருந்துளையாகும்.

இந்த நிகழ்வெல்லைக்குள் இருந்து பார்க்கக்கூடிய ஒளி அலைகள் போன்ற மின்காந்த அலைகள் கூடத் தப்பி வெளியேற முடியாது என்பதால் உள்ளே நடப்பவை எவற்றையுமே வெளியில் இருந்து அறிந்து கொள்ள முடியாது. இதனாலேயே இதனைக் கருங்குழி என்கின்றனர். கருங்குழிகள் பாரிய நட்சத்திரங்களின் பரிணாமத்தின் இறுதிக்கட்டமாகக் கருதப்படுகிறது. இதற்குக் கன அளவோ, மேற்பரப்போ கிடையாது. ஆனால் இதன் பிரம்மாண்டமான திணிவு காரணமாக இது முடிவிலியான அடர்த்தியைக் கொண்டுள்ளது.

ஆக்கம் என்று ஒன்று இருந்தால் நிச்சயமாக அழிவு என்பதும் இருக்கும். அந்த கோட்பாட்டின் படி நட்சத்திரங்களுக்கும் அழிவு உண்டு, சூரியனும் ஒருவகையான நட்சத்திரம் தான், ஆனால் சூரியனை விட பல மில்லியன் மடங்கான திணிவைக் கொண்ட நட்சத்திரங்கள் அதன் ஆயுள் முடியும் போது Super Nova என்ற மிகப்பெரிய ஒளியினை வெளியிட்டு தனது வாழ்நாளை முடித்துக்கொள்ளும். அவ்வாறு அது அழியும் போது ஒளியின் வேகத்தை விட அதிகமான ஈர்ப்புசக்தியை உருவாக்கும். அந்த ஈர்ப்பு சக்தியினால் அதன் அருகில் செல்லும் அனைத்து பொருட்களும் உள்வாங்கப்படும்.

ஈர்ப்பு சக்தியினால் இழுக்கப்படும் ஒரு பொருள் அந்த ஈர்ப்பு சக்தியை விட அதிகமான வேகத்தை கொண்டிருந்தால் மட்டுமே அந்தப் பொருள் அதில் இருந்து விடுபடமுடியும். அதிவேகமாக பயணம் செய்யக்கூடியது ஒளி மட்டுமே, ஆனால், கருந்துளையின் ஈர்ப்பு சக்தி ஒளியைவிட பன்மடங்கு வேமாக இருப்பதால் ஒளியை உள்வாங்கி கொள்கிறது. ஒளியானது ஒரு பொருளில் பட்டு தெரிப்பதால் மட்டுமே அந்த பொருளை நம்மால் காண முடிகிறது. ஆனால் கருந்துளை ஒளியை உள்வாங்கிக் கொள்வதால் அதனை நம்மால் காண முடியாது.

ஆனால் அதன் ஈர்ப்பு சக்திக்கு உட்படாமல் சற்றும் விலகிச்செல்லும் ஒளிகளை இலுக்க முயற்சிக்கும் போது அந்த கருந்துளையை சுற்றி ஒரு ஒளி வட்டத்தை உருவாக்கும். அதன் மூலமாக தான் கருந்துளை தென்படும்.

பல நாடுகளில் இருந்து சிறந்த எட்டு தொலைகாட்டிகளை எடுத்து வெவ்வேறு இடங்களில் வைத்து அதன் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஒன்று திரட்டி கருந்துளை உடைய படத்தை உருவாக்கினார்கள் விஞ்ஞானிகள்.

# இவ்வார மழலை



பு. கௌஷிகா
இராகலை





வி. ரிதுஷினி
தரம் 07B, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்

# நதிக் கரையில் பிரமிட் நினைவுச் சின்னம்

*கனடாவில் இருக்கும் Saguenay (செகுனேய்) நதியில் 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பலியான 10 பேரின் நினைவாக ஒரு சின்னம் நதிக்கரையில் அமைக்கப்பட்டுள்ளது.அதன் பெயர் The Pyramide des Ha! Ha! அது பிரமிட் வடிவமானது. அந்த பிரமிட்டின் பெயரே Ha!Ha! தான். Ha!Ha! என்றால் பிரெஞ்சு மொழியில் "எதிர்பாராத தடை/இடஞ்சல்கள்" என்று அர்த்தமாம். பெயர் மட்டுமல்ல பிரமிட்டும் வித்தியாசமாகத்தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வீதிகளில் விளைநிலங்களுக்கு வைக்கப்படும் சமிக்ஞை பலகைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கும் பிரமிட்டில் 3000 சமிக்ஞை பலகைகள் இருக்கின்றன.*

*பிரமிட்டின் தலைப்பகுதி வரை மக்கள் சென்று பார்வையிட படிக்கட்டுகளும், உச்சியில் மையப் புள்ளியும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஒரு வித்தியாசமான பிரமிட் அமைக்கப்பட காரணமென்ன? 1996ஆம் ஆண்டு Saguenay நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் இறந்துபோன 10 பேரின் நினைவாக அமைக்கப்பட்டிருக்கிறது இந்த பிரமிட்.*



# எறும்புகளின் புற்றுக்குள் மரியாதை

எறும்பு, தேனீ, கரையான் ஆகியவற்றின் சமூக வாழ்க்கை முறைகள், ஒழுக்கம், சுத்தம் சுகாதாரம், தமக்குள் பிரிவுகள் என மனிதர்களை விட மேம்பட்டுள்ளதாக ஏராளமான ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது.

காயப்பட்ட எறும்புகளை சிகிச்சைகளுக்காக கொண்டு செல்லுதல், மேலும் இறந்த போர்வீர எறும்புகளை புற்றுக்குள் அடக்கம் செய்தல், புற்றுக்குள் தாங்கள் வாழும் இடங்களை சுத்தமாக வைத்திருப்பது போன்றவை ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளன.



எறும்புகளுக்கும் கரையான்களுக்கும் இடையே எப்போதுமே பெரிய போர்கள் நடந்து ஒன்றையொன்று இரையாக்கிக் கொள்கின்றன. அதனால் அவை தமது புற்றுகளை எப்போதும் சுத்தமாக வைத்திருக்கும். தேவையற்றவைகளை உடனடியாக அப்புறப்படுத்தி விடும். எறும்புகள், போரில் இறந்த எறும்புகளை ஒரு இடத்தில் குவித்து மரியாதைகள் செய்து அடக்கம் செய்யுமாம். முக்கியமாக இறந்த அல்லது காயம்பட்ட எறும்புகள் ஒருவித வாசனைகளை எழுப்பும். இந்த வாசனைக்கு உதவி செய்ய பல எறும்புகள் தேடி வரும். அதனால் வீட்டுக்குள் இறந்த அல்லது காயம்பட்ட எறும்புகளை, பூச்சிகளை உடனடியாக அப்புறப்படுத்துவதை நாம் கண்டிருக்கலாம்.

இறந்த எறும்புகளை பல எறும்புகள் தூக்கி செல்வதை வீட்டில் அவதானமாக பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.



# புகை ஏன் மேல் நோக்கி செல்கிறது? – அறிவியல் கருத்து

நெருப்பினால் உருவாகும் புகையானது சிறிய அளவில் இருந்தாலும் அல்லது பெரிய அளவில் இருந்தாலும் மேல் நோக்கியே நகரும். இதற்கு பின்னணியில் அறிவியல் சார்ந்த காரணம் ஒன்று உள்ளது.

பூமியை நிரப்பியுள்ள காற்றின் அடர்த்தி, புகையின் அடர்த்தியை விட அதிகமானது. புகையும் காற்றின் ஒரு விதம் தான் என்றாலும் இரண்டின் அடர்த்தியிலும் வேறுபாடுகள் உள்ளன.

இதனால் புகையை விட காற்றின் மீது புவி ஈர்ப்பு அதிக அளவில் இருக்கும். அப்போது காற்று கீழ் நோக்கியும், புகை மேல் நோக்கியும் பயணிக்கும்.

புகையை போலதான் நீராவியும் குறைவான அடர்த்தியை உடையது. அதனால் தான், நீராவி மேல் நோக்கி சென்று மேகமாக மாறி மழையை பொழிகிறது.

# ‘பீட்சா’ உருவாக்கப்பட்ட வரலாறு

*உலகில் அனைத்து நாடுகளிலும் பீட்சா தயாரிக்கப்படுகிறது. அதேபோல அனைத்து வயதினரும் விரும்பி உண்ணும் உணவாகவும் பீட்சா காணப்படுகிறது. ஆனால் பீட்சா எவ்வாறு உருவானது, அதன் தோற்றம் பற்றி நம்மில் சிலருக்கு தெரியாத விடயமாகும்.*

*உலகில் அதிகளவு பீட்சா விற்பனை நிலையங்கள் அமெரிக்காவிலேயே அமைந்துள்ளன. மேலும் இந்த பீட்சாவை அமெரிக்கர்கள் மிகவும் விரும்பி உண்பர். ஆனால் பீட்சாவின் தாயாகம் இத்தாலி தேசமாகும். இன்று கூட பழங்கால முறையில் பீட்சா இத்தாலியில் தயாரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 9ஆம் திகதி பீட்சா தினமாக கொண்டாடப்படுகின்றது. பீட்சாவில் பல வகைகள் காணப்படுகின்றன.*

*16ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலுள்ள நேபல்ஸ் என்ற இடத்தில் உள்ள தெருக் கடைகளில் ஒரு ரொட்டி போன்ற உணவு விற்கப்பட்டது. இந்த உணவு அடிமைகளும் ஏழை மக்களும் உண்ணும் உணவாகக் காணப்பட்டது. அப்போதைய இத்தாலிய ராணியாகிய மேர்கரிடா மற்றும் அவரது கணவரான அரசர் அம்பர்டோ ஒருநாள் நகர்வலம் வந்தனர். அப்பொழுது ஏழை மக்கள் கூட்டம் கூட்டமாக ஒரு உணவை விரும்பி உண்பதை ராணி கவனித்தார். அந்த உணவை அவர்கள் ருசித்து, ருசித்து உண்பதை கண்ட ராணி அந்த உணவை உண்ண ஆசைப்பட்டார். அதை அங்கிருந்த தெருக்கடையில் வாங்கி உண்டார். அந்த உணவின் சுவை ராணியை வெகுவாகக் கவர்ந்தது. அந்த ரொட்டிக்கு அவர் பரம ரசிகையாகி விட்டார். ஆனால் ராணியாகிய தான் தினமும் தெருக் கடையில் வாங்கி உண்ண விரும்பாததால், தனது அரண்மனை சமையல் காரரை அழைத்து தனக்கு அது போன்ற தட்டையான ரொட்டியை தயாரித்து தரும்படிக் கூறினார்.*

*அந்த சமையல்காரர் சுவையான தட்டையான ரொட்டியைத் தயாரித்து அதன் மேல் தக்காளி, பாலாடைக் கட்டி மற்றும் துளசி இலை என்பற்றை இட்டு அலங்கரித்தார். அதற்கான காரணம் இத்தாலிய நாட்டின்தேசிய கொடியில் பச்சை, வெள்ளை மற்றும் சிவப்பு நிறங்கள் காணப்படும். அந்த உணவு ராணியை மிகவும் கவர்ந்தது. அவ்வுணவு அவரது அரண்மனைக்கு வரும் விருந்தினர்களுக்கும் சிறப்பு உணவாக தயாரித்து வழங்கப்பட்டது. இதனால், அது பக்கத்து நாடுகளுக்கும் பொது மக்களுக்கும் பரவியது. அந்த உணவே பீட்சாவாக பரிணமித்தது.*

*பீட்சாவின் செயன்முறையை தத்தமது நாடுகளுக்கும் கொண்டுச் சென்றனர். இவ்வாறு 2ஆம் உலகப் போர் காலக் கட்டங்களில் இந்த உணவின் புகழ் பரவலாகப் பரவியது. நாம் இப்பொழுது பார்த்தது நவீன பீட்சாவின் வரலாறு. ஆனால் உண்மையில் பண்டைய கிரேக்கர் காலங்களிலேயே பீட்சா என்னும் தட்டையான ரொட்டி உருவாக்கப்பட்டுள்ளது.*

*பண்டைய கிரேக்கர்கள் வெங்காயம், கீரை, காய்கறிகள், பூண்டு என்பவற்றை ரொட்டி மீது பரப்பி உண்டுள்ளனர். மேலும் கி.மு. 6ஆம் நூற்றாண்டில் பாரசீக மன்னன் முதலாம் டேரியஸ் தனது வீரர்களுக்கு பாலாடைக்கட்டி மற்றும் பேரீச்சம்பழம் என்பவற்றை ரொட்டி மீது பரப்பி உண்ண வழங்கியதாக ஒரு குறிப்பு உள்ளது. உலகில் ஒக்டோபர் மாதம் பீட்சா மாதமாக கொண்டாடப்படுகின்றது. 1990ஆம் ஆண்டுகளில் Domino's pizza மற்றும் Pizza Hut முதலான பீட்சா வர்த்தக நிலையங்கள் உருவாகி விட்டன.*

**கு. அவினாஷ் - வத்தளை**



# விளையாட்டு





# எல்.பி.எல். வெற்றி எதிர்காலத்தின் கையில்

லங்கா பிரீமியர் லீக் தொடரில் ஜப்னா கிங்ஸ் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி நான்காவது முறையாக சம்பியன் கிண்ணத்தை வென்றது. அதாவது ஐந்து முறை நடந்த தொடரில் நான்கு தடவைகள் கிண்ணத்தை வெல்வதென்பது சாதாரணமானதல்ல. அணியின் கட்டமைப்பு, நிர்வாகம் எல்லா தொடர்ந்து சரியாக இயங்கினாலேயே இது சாத்தியமாகும்.

கடந்த ஜூலை 1 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக், சுருக்கமாக எல்.பி.எல். தொடரில் மொத்தம் ஐந்து அணிகள் பங்கேற்றன. இந்திய பிரீமியர் லீக் பாணியில் உலகெங்கும் உருவான எச்சசொச்சங்களில் எல்.பி.எல்லும் ஒன்று.

இந்திய கிரிக்கெட்டுக்கு பொருளாதாரம் மற்றும் திறமை அடிப்படையில் ஐ.பி.எல். பெரும் உந்துதலாக இருந்து வருகிறது. அதேபோக்கு எல்.பி.எல். தொடரிலும் இருந்தாலேயே அதன் வெற்றி முழுமை பெறும். கடந்த எல்.பி.எல். தொடர்களில் அவ்வாறான போக்கை காண முடியவில்லை. தனிப்பட்ட பொருளாதார வளர்ச்சிகள், களியாட்டங்களைத் தாண்டி திறமைகளை தேடுவதில் மற்றும் இருக்கும் திறமைகளை மேம்படுத்துவதில் இந்த டி20 லீக் கிரிக்கெட் கடந்த காலத்தில் பெரிதாக உதவியதாகத் தெரியவில்லை.

என்றாலும் அதனை இம்முறையும் பொருத்திப் பார்ப்பது முன்கூட்டிய அனுமானமாக இருக்கும். இந்தியாவுக்கு எதிராக நடைபெறும் டி20 தொடருக்கான இலங்கை அணித் தேர்வில் இந்த எல்.பி.எல். தொடர் பெரிதும் தாக்கம் செலுத்தி இருக்கிறது.

டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓரங்கட்டப்பட்டிருந்த தினேஷ் சந்திமால், அதேபோன்று அதிரடி வீரராக இருந்தாலும் கடந்த உலகக் கிண்ணத்தில் கவனிக்கப்படாத குசல் ஜனித் பெரேரா, வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ அதேபோன்று புதுமுக வீரரான 21 வயது சகலதுறை ஆட்டக்காரர் சமிந்து விக்ரமசிங்க ஆகியோர் இலங்கை அணிக்கு அழைக்கப்பட்டதற்கு ஒரே காரணம் அவர்கள் எல்.பி.எல்.இல் சோபித்ததாகும்.

போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னரே தம்புள்ள தண்டர்ஸ் அணியின் உரிமையாளர் ஆட்ட நிர்ணய சர்ச்சையில் சிக்கியது, பின்னர் அந்த அணியின் உரிமை மாற்றப்பட்டது என்ற பெரும் குழப்பங்களை சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

என்றாலும் இம்முறை தொடரில் கடந்த முறைகளை விட மைதானத்தில் சில முன்னேற்றங்களை காண முடிந்தது.

கடந்த முறைகளை விடவும் இம்முறை தொடரில் ஓட்டுமொத்தமாக பெறப்பட்ட ஓட்டங்கள் முதல் முறையாக 7000ஐ கடந்தது. அதாவது மொத்தமாக 7796 ஓட்டங்கள் பெறப்பட்டதோடு அது 2020 தொடரில் பெறப்பட்ட 6739 ஓட்டங்கள் என்ற அதிகபட்ச சாதனையை முறியடித்தது.

அதேபோன்று அதிக ஓட்ட வேகத்தை பதிவு செய்த தொடராகவும் இம்முறை உள்ளது. அது 146.26 ஓட்ட வேகம் என்பதோடு இதற்கு முன்னர் 2020 தொடரில் பெறப்பட்ட 136.42 ஓட்ட வேகமே அதிகமாக இருந்தது.

கடந்த நான்கு தொடர்களையும் பார்த்தால் ஒவ்வொரு தொடர்களிலும் தலா ஒரு சதம் வீதமே பெறப்பட்டிருக்கின்றன. ஆனால் இம்முறை மொத்தம் 6 சதங்கள் பதிவாகின. லங்கா பிரீமியர் லீக் தொடர் வரலாற்றில் அதிக சிக்ஸர்கள் மற்றும் பௌண்டரிகள் பெறப்பட்ட தொடராகவும் இம்முறை தொடரை குறிப்பிடலாம்.

அதாவது 2024 எல்.பி.எல். தொடரில் மொத்தமாக 722 பௌண்டரிகள் மற்றும் 372 சிக்ஸர்கள் விளாசப்பட்டன. முன்னதாக 2020 தொடரில் அதிகபட்சமாக 672 பௌண்டரிகள் மற்றும் 276 சிக்ஸர்கள் பெறப்பட்டதே சாதனையாக இருந்தது.

இதற்கு முக்கிய காரணமாக ஆடுகளங்களை குறிப்பிடலாம். அவை துடுப்பாட்டத்திற்கு உதவியதோடு பந்துவீச்சாளர்களையும் கைவிடவில்லை. போட்டி நடைபெற்ற கடந்த 21 நாட்களில் கொழும்பு மற்றும் பல்லேகலவுக்கு அவ்வப்போது மழை குறுக்கிட்டபோதும் எந்தப் போட்டியும் பாதிக்கப்படாது 24 ஆட்டங்களும் முழுமையாக நடைபெற்றமை தொடரின் வெற்றிக்கு முக்கியமாக இருந்தது.





கடந்த எல்.பி.எல். தொடர்களை பார்க்கும்போது பங்கேற்ற வெளிநாட்டு வீரர்களில் பெரும்பாலானவர்கள் சர்வதேச தரத்தில் பெரிதாக சோபிக்காதவர்களாகவே இருந்தனர். என்றாலும் இம்முறை அந்தக் குறை கணிசமான அளவில் நீங்கி இருந்தது. உலகின் பலம் மிக்க அணிகளின் வீரர்கள் கூட இம்முறை பங்கேற்றிருந்தார்கள்.

கடந்த தொடர்களில் ஐ.சி.சி. தரவரிசையில் இலங்கைக்கு கீழ் உள்ள நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் அதிகமாக பங்கேற்றிருந்தனர். ஆனால் இம்முறை இலங்கைக்கு முன்னால் இருக்கும் முன்னணி அணிகளின் வீரர்கள் கூட கலந்து கொண்டனர்.

அதாவது இம்முறை தொடரில் மொத்தமாக பங்கேற்ற 30 வெளிநாட்டு வீரர்களும் ஒன்பது நாடுகளில் இருந்து வந்திருந்தனர். இதில் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான் நாடுகளின் தலா 4 வீரர்கள் அவுஸ்திரேலியாவின் இரு வீரர்கள் இங்கிலாந்தின் ஒருவரும் அடங்குகின்றனர். எனினும் அதிகபட்சமாக ஆப்கானிஸ்தானின் 6 வீரர்கள் பங்கேற்றிருந்தனர்.

அதாவது இலங்கையை விட முன்னிலையில் இருக்கும் அணிகளின் 18 வீரர்கள் மற்றும் இம்முறை டி20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்ற 18 வெளிநாட்டு வீரர்கள் இம்முறை தொடரில் பங்கேற்றிருந்தனர். சர்வதேச மட்டத்தில் போட்டிகள் குறைவாக இருந்ததும் முன்னணி வீரர்கைள எல்.பி.எல். ஈர்ப்பதற்கு காரணமாக இருந்தது என்று குறிப்பிடலாம்.

எல்.பி.எல். வரலாற்றில் வீரர் ஒருவர் இரண்டாவது முறையான மொத்தமாக 400 ஓட்ட இலக்கை பெறுவதற்கு இந்த முறை முடிந்தது. டி20 செய்பர்ட் தொடரில் அதிகபட்ச ஓட்டங்களால் 400 ஓட்டங்களை பெற்றார். எனினும் 2020 தொடரில் தனுஷ்க குணதிலக்க மொத்தமாக 476 ஓட்டங்களை பெற்றதே தொடர்ந்து சாதனையாக உள்ளது.

எனினும் இந்தத் தொடரில் மொத்தம் ஏழு வீரர்கள் 300க்கும் அதிகமான ஓட்டங்களை சேர்த்தனர். இவர்களில் நால்வர் வெளிநாட்டு வீரர்கள் என்பதோடு இலங்கையின் அவிஷ்க பெர்னாண்டோ (374), பத்தும் நிசங்க (333) மற்றும் குசல் மெண்டிஸ் (329) ஆகியோர் இதில் அடங்குவர்.

எல்.பி.எல். வரலாற்றில் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவிச்சாளர்களின் முதல் பத்து இடங்களில் இம்முறை தொடரில் மூன்று வீரர்கள் முன்னிலை பெற்றுள்ளனர். 2024 எல்.பி.எல். தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரராக ஷதாப் கான் மொத்தமாக 17 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு மதீஷ பதிரண மற்றும் வனிந்து ஹசரங்க தலா 15 விக்கெட்டுகளை வீழ்த்தினர். எனினும் 2023 தொடரில் வனிந்து ஹசரங்க மொத்தமாகப் பெற்ற 19 விக்கெட்டுகள் என்ற சாதனையை முறியடிக்க முடியாமல்போனது.

அதாவது இம்முறை தொடரில் பங்கேற்ற வெளிநாட்டு வீரர்களுடன் இலங்கை வீரர்கள் சரிக்கு சமமாக திறமையை வெளிக்காட்டி இருக்கிறார்கள்.

குறிப்பாக வீரர்கள் ஏலத்தில் போதுமான விலைக்கு வாங்கப்படாத பத்தும் நிசங்க மற்றும் குசல் பெரேரா தொடரில் அதிக ஓட்டங்களை பெற்ற வீரர்களில் இடம்பெற்றனர். குசல் மெண்டிஸ் தொடரின் ஆரம்பத்தில் சோபிக்கத் தவறிய போதும் கடைசிப் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டு ஒரு சதம் மற்றும் அரைச்சதத்தைப் பெற்று சோபித்தார். பானுக்க ராஜபக்ஷவும் கடைசி போட்டிகளில் தமது வழக்கமான திறமைக்குத் திருப்பினார்.

இளம் வீரர்களை கண்டறிவது மற்றும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் இம்முறை தொடரில் 23 வயதுக்கு உட்பட்ட இலங்கை வீரர் ஒருவர் பதினொரு பேர் அணியில் சேர்க்கப்பட வேண்டும் என்ற விதி கொண்டுவரப்பட்டிருந்தது.

இதில் அதிக அவதானம் பெற்ற வீரராக சமிந்து விக்ரமசிங்கவை குறிப்பிடலாம். அதிரடி வீரராக தம்மால் செயற்பட முடியும் என்றும் சகலதுறை வீரராக சோபிக்க முடியும் என்றும் இவர் நிரூபித்திருக்கிறார். இதனாலேயே அவர் தொடரில் வளர்ந்து வரும் வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு கடைசியில் இலங்கை டி20 அணிக்கும் அழைக்கப்பட்டார். தம்புள்ள அணிக்காக ஆடிய அவர் 8 போட்டிகளில் 186 ஓட்டங்களை பெற்றதோடு இரண்டு அரைச்சதங்களுடன் 62.00 ஓட்ட சராசரியை பதிவு செய்திருந்தார்.

எனினும் இந்த விதியை கச்சிதமாக பயன்படுத்தி 23 வயதுக்கு உட்பட்ட வீரர்களை கொண்ட அதிகம் பயன்பெற்ற அணியாக கொலம்போ ஸ்ட்ரைக்கர்ஸ் அணியை குறிப்பிடலாம். அவர்கள் 23 வயதுக்கு உட்பட்ட மதீஷ பதிரண மற்றும் துனித் வெள்ளாலகேவை வாங்கியதன் மூலம் பயன் பெற்றனர். இருவரும் தொடரில் சிறப்பாக செயற்பட்டனர்.

ஜப்னா அணி இளம் வீரர் விஜயகாந்த வியாஸ்காந்தை தேர்வு செய்திருந்ததோடு அவர் கடைசி இரு போட்டிகளிலும் திறமைக்கு திரும்பி இருந்தார்.

23 வயதுக்கு உட்பட்ட 14 வீரர்கள் இந்தத் தொடர் முழுவதிலும் ஆடியிருந்தனர். கண்டி அணி தவிர்த்து மற்ற நான்கு அணிகளும் இந்த இளம் வீரர்களுக்கு நியாயமான வாய்ப்புகளை வழங்கி இருந்தன. கண்டி அணி 23 வயதுக்கு உட்பட்ட வீரர்களை முறையாக பயன்படுத்தவில்லை என்பதோடு 11 வீரர்களை நிரப்பும் வகையிலேயே அவர்களை தேர்வு செய்தது.

குறிப்பாக கண்டி அணியில் இடம்பெற்றிருந்த பவன் ரத்நாயக்க, தேசிய சுப்பர் லீக் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது அதிகூடிய ஓட்டங்களை பெற்றவராவார். ஆனால் கண்டி அணியில் அவருக்கு நான்கு போட்டிகளிலேயே வாய்ப்பு வழங்கப்பட்டதோடு அதுவும் சரியான இடத்தில் அவர் ஆடுவதற்கு அவகாசம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

அதேபோன்று உள்ளூர் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியபோதும் எல்.பி.எல்.இல் போதுமான வாய்ப்புகளை பெறதா பல வீரர்களை குறிப்பிடலாம். லசித் க்ரூஸ்புள்ளே (கோல்), நிஷான் மதுஷ்க (ஜப்னா) நிபுன் தனஞ்சய (கொலம்போ), மொஹமட் ஷிராஸ் (கோல்) போன்ற வீரர்கள் முக்கியமானவர்கள்.

அதாவது, எல்.பி.எல். தொடரில் மேலும் ஒரு அணியை சேர்ப்பதற்கு போதுமான வீரர்கள் இன்னும் வெளியே இருக்கிறார்கள் என்றே குறிப்பிட முடியும். அதுவே வீரர்களின் திறமையை அதிகரிப்பதற்கு இன்னும் உதவியாக இருக்கும். அப்போதுதான் எல்.பி.எல். இன் நோக்கத்தை முழுமையாக பூர்த்தி செய்ய முடியுமாக இருக்கும்.

எப்படி இருந்தாலும் லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதி இலக்கு சர்வதேச மட்டத்தில் இலங்கை வீரர்களின் திறமையை அதிகரிப்பதாகத் தான் இருக்க வேண்டும். அது வெற்றி தருமா என்பதை எதிர்காலத்திலேயே கணிக்க முடியுமாக இருக்கும்.

எஸ்.பிர்தௌஸ்...



## அசலங்கவும் ஹசரங்கவும்



சரித் அசலங்க இலங்கை டி20 அணியின் தலைவர் என்பது உறுதியாகிவிட்டது. அவரிடம் ஒருநாள் அணித் தலைமையும் வழங்கப்படுவதற்கான வாய்ப்பும் அதிகம் உள்ளது. இத்தனைக்கும் அண்மையிலேயே டி20 அணித்தலைவராக வனிந்து ஹசரங்க மற்றும் ஒருநாள் அணித் தலைவராக குசல் மெண்டிஸ் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் ஒரு மாதத்திற்கு முன்னர் நடந்த டி20 உலகக் கிண்ணம் எல்லாவற்றையும் தலைகீழாக புரட்டிப்போட்டுவிட்டது. அணியின் மோசமான தோல்விகள் ஹசரங்கவை தலைமைப் பதவியை விட்டு விலகி ஓடும் அளவுக்கு செய்து விட்டது.

இத்தனை குறுகிய காலத்திற்குள் பெரும் அதிருப்தியை சந்தித்த தலைவர் ஒருவர் இல்லாத அளவுக்கு வனிந்து மீது விமர்சனங்கள் வலுத்திருந்தன. அது அவர் இராஜினாமா செய்யும் அளவுக்கு உச்சம் பெற்றது. மைதானத்தில் அதிரடி முடிவுகளை எடுக்கும் தைரியம் வனிந்துவுக்கு அதிகம் இருந்தாலும் அதுவே அவருக்குப் பாதகமாகவும் அமைந்துவிட்டது.

சுவாரஸ்யம் என்னவென்றால், அசலங்க மற்றும் ஹசரங்க இருவருமே நீண்ட காலமாக ஒன்றாக கிரிக்கெட் ஆடுகிறவர்கள். ரிச்மண்ட் கல்லூரியில் 15 வயதுக்கு உட்பட்ட அணியில் ஆடியது தொடக்கம் அது தொடர்கிறது. ஆனால் அப்போதெல்லாம் ஒருவர் மாத்திரமே எப்போது தலைமை பொறுப்புக்கு பொருத்தமானவராக இருத்தார். அது ஹசரங்கவல்ல அசலங்கதான்.

அவர் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்பட்டதோடு தலைமை பண்பும் அதிகமாக இருந்தது. இதனால் பாடசாலை மட்டத்தில் ஒரு தலைவராகவே அதிகம் பார்க்கப்பட்டார். பின்னர் அவர் 19 வயதுக்கு உட்பட்ட இலங்கை அணியின் தலைவரானதோடு அணித் தலைவராகவே தேசிய அணியிலும் வளர்க்கப்பட்டார். இலங்கை அணியில் நிரந்த இடத்தை உறுதி செய்த அவர் தலைமை ஏற்பதற்கான தகுதியை பெற்றிருக்கிறார். எனவே அசலங்கவிடம் எதனை எதிர்பார்க்கலாம்?

அவர் அணிக்கு இப்போது தேவைப்படும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை கொண்டுவருவதே முதன்மை பணியாக இருக்கும்.

ஹசரங்கவின் தலைமையின் கீழ் இலங்கை அணி தேவையற்ற குழப்பங்கள் சிலதை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. பங்களாதேஷில் அவர் தொடர் வெற்றிக்குப் பின்னர் செய்த நையாண்டித்தனமான கொண்டாட்டம், நடுவர்களுடனான மோதல் மற்றும் ஊடக சந்திப்புகளை எதிர்கொண்ட விதம் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

அசலங்கவின் தலைமையிலேயே நடந்து முடிந்த லங்கா பிரீமியர் லீக் தொடரில் ஜப்னா கிங்ஸ் சம்பியன் கிண்ணத்தை வென்றது. அவரது தலைமைத்துவம் புதிய நுட்பங்களை கையாள்பவர் போல் தெரிகிறது. அது அணிக்கு நல்ல செய்தியாக இருக்கும்.

என்றாலும் நுட்பங்கள், புதிய மூலோபாயங்களை கையாள்வதற்கு திறமையான மற்றும் ஸ்திரமான அணி ஒன்று தேவை. அது இல்லாமல் செய்யப்படும் அனைத்து தந்திரங்களும் விணாகிவிடும். இலங்கை அணியை பொறுத்தவரை அதில் அனுபவ வீரர்கள் இருந்ததற்கு என்ன வலுவான கட்டமைப்பு ஒன்று இல்லை. தலைவர் மற்றும் அணிக்கு இடையிலான ஒருங்கிணைப்பு சரியாக இருந்தாலேயே வலுவான அணி ஒன்றை கட்டியெழுப்புவது சாத்தியப்படும். அதனை அசலங்கவிடம் எடுத்த எடுப்பில் எதிர்பார்க்க முடியாது.



மேர்கண்டைல் கால்பந்து சம்மேளத்தின் 101 ஆவது வருடாந்த பொதுக்குழு கூட்டத்தில் தெரிவான பொறுப்பாளர்களை படத்தில் காணலாம். தலைவர் – சயப் யூசுப் (எக்போலங்கா ஹோல்டிங்ஸ்), பிரதித் தலைவர்கள் மூவர் – டனிஸ் பரிஸ் (கலதாரி ஹோட்டல்), அப்துல் ரஹ்மான் பல்லி (EXPOLANKA FREIGHT (PVT) LTD), சினெத் யாசிர் (வெலிபல் பினான்ஸ்), செயலாளர் நாயகம் ஜோர்ஜ் வீரக்கொடி (CEYLINCO GEN. INS. (VIP), உதவிச் செயலாளர் – லஹிரு செனவிரத்ன (ஹட்டன் நெஷனல் வங்கி), கௌரவ பொருளாளர் – சுராஜ் ஹெட்டியாரச்சி (சம்பத் வங்கி), உதவிப் பொருளாளர் – ருவன்ஜித் பண்டார (கொமர்ஷல் வங்கி), 07 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் – நிக்சன் பெர்னாண்டோ (AKBAR BROS.), சுசந்த மாவெல (ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்), நிஷான்த் நவாஸ் (அமானா வங்கி), எஸ்.எஸ். விக்ரமரத்ன (லேக் ஹவுஸ்), எம். அஷ்ரப் ஹுஸைன் (PHOENIX BRANDIX GROUP), உதார ஹபக்கல (WNS GLOBAL SERVICES), ஹிரோஷன் பெர்னாண்டோ (ஸ்டான்டர்ட் சாட்டர்ட் வங்கி), சிரேஷ்ட ஆலோசகர் அன்டன் அத்பத்து, அலோசகர் ரஞ்சித் மத்தியூஸ், ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.ஜி. குணசேன, ஒருங்கிணைப்பாளர் சம்பத் பெர்னாண்டோ.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# தர்மம் தலை காக்கும்

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அலுவலகம் இல்லை. சற்று தாமதித்து எழுந்திருக்கலாமென எண்ணிக்கொண்டிருக்கையிலேயே 'என்னங்க.. மணி ஏழு. நேரத்தோடு போனால்தான் நல்ல சாமான்கள் கிடைக்கும் எந்திரிங்க.. ' என்று தட்டி எழுப்பினாள் மனைவி. இன்று வாராந்த சந்தை கூடும் நாள் அல்லவா அவள் சொல்வதும் சரிதான் கொஞ்சம் தாமதித்து சென்றால் நல்ல பொருட்கள் கிடைக்காது. 'சரி சரி' என்று அலுத்துக்கொண்டே எழுந்து முகம் கழுவச் சென்றேன். ஞாயிற்றுகிழமை ஓய்வு நாள் என்றாலும் அன்றே குடும்பத் தலைவனுக்கு வேலை அதிகம். கணவன் ஓய்வு தினத்தில் செய்ய வேண்டிய வேலைகளை ஓய்வாய் இருக்கும்போது குறித்து வைத்து செயல்படுத்தும் மனைவியர் ஓய்வு நாளின் எதிரிகள் என்றால் அது மிகை இல்லை.

ஒரு கோப்பைத் தேநீரோடு வாங்க வேண்டிய பொருட்களின் சிட்டையையும் பைகளையும் கைகளில் திணித்துவிட்டுச் சென்றாள். அவள் கொடுத்த பொருட்களை வாங்குவதென்றால் காசு பைகளில் கொண்டு செல்ல வேண்டும். என்னதான் டொலரின் பெறுமதி இலங்கை நாணயத்திற்கு எதிராக வீழ்ச்சியடைந்திருந்தாலும் ஏறிய விலையும் வாங்கும் சம்பளமும் இன்னும் அதே இடத்தில் நிற்கின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரித்த வண்ணமே இருக்கிறது. வாழ்க்கைப் போராட்டம் எந்த ஒவ்வொரு குடும்பத்தையும் மேலே எழ விடாமல் மிக அவதானமாகப் பார்த்துக்கொள்கிறது. தேநீரைக் குடித்துக் கோப்பையை வைக்க முற்பட்டேன். 'சாந்தியக்கா... சாந்தியக்கா... என்று மனைவியை பக்கத்து வீட்டுக்காரி அழைக்க இதோ வாறன்.' என்றவாறு வாசலுக்குச் சென்றாள்.

திரும்பி வந்தவள் என்னிடம் காசைக் கொடுத்து இதையும் வாங்கிட்டு வந்திடுங்க என்றாள். 'இது யாருக்கு' 'அடுத்த வீட்டுக்காரிக்குத்தான்' ஏன் அவுங்க போய் வாங்கக் கூடாதோ?

நான் இன்றைக்கு சந்தைக்குப் போவேன் என்று தெரிந்து சரியாக போற நேரம் பார்த்து வந்து காசக் கொடுத்து வாங்கச் சொல்கிறாங்க. அவுங்களைப் பாரு.. காசையும் நேரத்தையும் எப்படிச் சேமிக்கிறாங்கன்னு.. 'நான் என்ன விருப்பபட்டா வாங்கி வந்தேன். அவ புருஷன் சுகமில்லாமல் இருக்கிறதுனாலதான் வாங்கிட்டு வந்தேன், சரி சரி போங்க. அவுங்கள மாதிரி கஞ்சப்பிசி நாறியா நம்மால இருக்கவா முடியும்?'

கூறிவிட்டு அவள் போக நான் புறப்பட்டேன். வீடு என்றால் அக்கம் பக்க வீட்டுக்காரர்களோடு பரஸ்பர நட்புறவோடு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் காணும்போது ஒரு சிறு புன்னகை, ஹாய்., ஹலோ.. ஏதோ ஒன்று வேண்டும். நமக்குள் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் மூடி மறைத்து அதை அடுத்தவரிடம் காட்டாமல் அயலாருடன் இயல்பாய் இருக்க வேண்டும். இதில் எதுவும் இல்லாத ஒருவன் அடுத்த வீட்டுக்காரனாய் வாய்க்கப் பெற்றால் அதைவிடக் கொடுமை வேறொன்றுமில்லை. இந்த லட்சணத்தில பார்த்தாக் கூட பாராததுபோல் சென்றுவிடும் அவருக்குப் பார்த்தசாரதின்னு பேரு வேறு. மூன்று மாதமாய் படுத்த படுக்கையாய் கிடக்கும் அவரைப் போய் பார்க்கக்கூட மனசில்லை. மனைவியின் வற்புறுத்தலால் சென்றமாதம் சென்று பார்த்தேன்.

நான் வந்து பார்ப்பேன் என எதிர்பார்த்திராத அவர், பிரிந்து சென்ற காதலி குழந்தை குட்டியோடு எதிரே வந்து நிற்கக் கண்டதைப்போல் ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் பார்த்தார். ஆள் எலும்பும் தோலுமாகக் கிடந்தார். குடற்புண்ணாம். சாப்பாடு சாப்பிட்டா ஒரே எரிச்சலாம். நேரத்திற்கு சாப்பிடாதால வந்த வினையாம். இப்போ கொஞ்சம் பரவாயில்லையாம். அரசாங்க மருத்துவமனைக்குத்தான் செல்கிறார்களாம். என்றாலும் அங்கு நிலவுகிற மருந்து தட்டுப்பாடு காரணமாக வெளியிலே வாங்கிக் குடிக்கச் சொல்லி எழுதித் தாராங்களாம். வெளியிலே வாங்கும் மருந்து விலைதான் தாங்க முடியவில்லை என்று புலம்பினார். கூடவே அவர் மனைவியும் ரெண்டு மாசமா வேலையும் இல்லாத்தால தாலிக்கொடியை அடகுவச்சு செலவு பார்க்கிறதாக பெருமூச்சு விட்டார். என்னதான் பிடிக்காத ஆளா இருந்தாலும் இந்த மாதிரி நேரத்திலே அவர் மாதிரியே இருந்துவிடக் கூடாது என்பதால் "ஒன்றும் கவலைப்படாதீங்க எல்லாம் சரியாயிடும். வாழ்க்கையில் இதெல்லாம் சகஜம். மருந்துகளை நேரத்துக்குக் குடித்து அதுக்குத் தகுந்த மாதிரி சாப்பாட்டையும் கவனமா பாத்து சாப்புடுங்க. ஏதாச்சும் உதவி தேவைப்பட்டால் எந்த நேரத்திலும் கூப்பிடுங்க".. ஆறுதல் கூறிவிட்டு வந்தேன். இப்போது உடல்நிலை சற்று தேறிவருவதாக மனைவி கூறியிருந்தாள்.

பார்த்தசாரதியின் இந்த நிலைமைக்கு அவரே காரணம். மனிதன் உயிர்வாழ்வதற்கு ஆதாரமானது உணவு அந்த உணவில் கஞ்சத்தனம் பார்த்தால் குடல் புண் வராமல் என்ன செய்யும். பணம் சேமிக்கணும் என்பதற்காக காலை ஆகாரத்தை தவிர்த்துவிட்டு பகலில் தொழில் செய்யுமிடத்தில் வழங்கப்படும் உணவை உண்டு இரவில் மட்டும் ஏதாவது வீட்டில் அதையும் தாமதமாகியே உண்டு வந்ததால் ஏற்பட்ட பரிதாப நிலை. இதுவரைக்கும் அவர்கள் வீட்டிலிருந்து ஒரு பழைய சோற்றைப் பிச்சைக் காரனுக்குக் கொடுத்துக் கண்டதில்லை. வழக்கமாகப் பிச்சை எடுக்க வரும் பிச்சைக்காரர்கள் என் வீட்டில் எதையாவது கேட்டு வாங்கிய பின்னர் அவர்கள் வீட்டைத் திரும்பிக்கூடப் பாராமல் மூன்றாவது வீட்டுக்குச் செல்வதையே பார்த்திருக்கிறேன். எச்சில் கையால் காக்கை விரட்டாத மகா கஞ்சன். அவன்தான் அப்படியென்றால், அவனுடைய மனைவியும் அதே மாதிரி. ஒரு மகன் இருக்கிறான் அவனை அக்கம் பக்கத்துக் குழந்தைகளுடன் விளையாடக்கூட விட மாட்டார்கள். அவர்களின் கஞ்சத்தனத்திற்கு இந்த நோய் ஒரு பாடம் புகட்டிவிட்டது என்றே கூறலாம். இனியாவது திருந்தினால் சரி. வாழ்க்கைக்குத் தேவையான எல்லா பாடங்களையும் பள்ளிக்கூடத்தில் கற்பித்துக் கொடுக்கமாட்டார்கள். அவரவருக்கு ஏற்படும் அனுபவம் இலவசமாகவே கற்க வைத்துவிடும் இந்தப்பாடம் பார்த்தசாரதிக்கு வாழ்வில் மறக்க முடியாத பாடம். இனி மேலாவது திருந்தினால் சரி.

ஞாயிறு சந்தை இருந்த இடம் பள்ளிக்கூட மைதானமாக்கப்பட்டதால் தூர இடங்களிலிருந்து தங்களின் விளைபொருட்களை விற்பனைக்காக கொண்டுவரும் வியாபாரிகள் பிரதான சாலையின் இருமருங்கிலும் ஞாயிறு விடுமுறைக்காக அடைக்கப்படும் கடைகளின் முன்பாக குவித்து வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள். மாதக்கடைசி என்பதால் சந்தைக்கு வருபவர்களின் எண்ணிக்கை சற்று குறைவாகவே இருந்தது. மனைவி கொடுத்த சிட்டையின் பிரகாரம் ஒவ்வொன்றாய்த் தேட ஆரம்பித்தேன். எப்போதும்போல் வீதியோரம் ஒரு மரநிழலில் அமர்ந்து யாசகம் எடுத்துக்கொண்டிருக்கும் ஒரு மூதாட்டிக்கு யாசகித்துவிட்டு அப்பால் நகர்ந்த என்னை யாரோ அஜித் ரசிகர் போலும் 'தல.. கொஞ்சம் வழிவிடு' என்று கேட்க தள்ளி நின்றேன். அவன் கடந்ததும் எனக்கு அது ஞாபகத்தில் வந்தது. முதலில் அதை வாங்கிவிட வேண்டும். இன்று ஞாயிற்றுக்கிழமை. சீக்கிரம் முடிந்துவிடும். பாவம் சுகமில்லாத ஆள். நேரத்தை வீணடிக்காமல் நேராய் அக்கடைக்குச்சென்றேன்.



அங்கு அந்தக் காலைப்பொழுதிலும் ஆட்டிறைச்சி வாங்க ஆட்கள் வரிசையில் காத்துக்கிடந்தார்கள். கடைக்காரர்கள் அப்பொழுதுதான் வண்டியிலிருந்து இறக்கிய ஆடுகளைக் கம்பியில் தொங்கப்போட்டுக் கொண்டிருந்தார்கள். அதைப்பார்த்ததும் எனக்கு சற்று ஆறுதலாக இருந்தது. எப்படியும் கால் கிடைக்கும் என்ற நம்பிக்கைப் பிறக்க காலுக்காக கால்கடுக்க நின்றேன். சொந்தக்காசில் ஒரு கஞ்சனை ஆட்டுக்கால் சூப் குடிக்கும் நிலைமைக்குத் தள்ளிய நோய், சும்மா இருந்தவனை ஆட்டிறைச்சிக் கடை வரிசையில் நிற்கவும் வைத்து விட்டதை நினைத்துப் பார்க்கிறேன். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு ஒரு நோய் வந்தால் அது அவரோடு மட்டும் முடிவதல்ல அவரைச் சார்ந்தவர்களையன்றி அக்கம்பக்கத்தாரையும் இப்படி ஏதாவது ஒரு வகையில் பாதிப்பிற்கு உள்ளாக்கும் என்ற உண்மை புரிய வந்தது. . .

முன்னால் இருந்த இருவர் தமக்கானதை வாங்கிக் கொண்டு நகர முன் சென்ற மூன்றாமவர் "ஆட்டு'க் கால் இருக்கா" "இருக்கு.. எத்தனை வேண்டும்? " "எட்டு" கேட்டு வாங்கினார். அவர் வாங்கியதைப் பார்த்ததும் எனக்குச் சற்று கலக்கமானது. எட்டையும் வாங்கிவிட்டானே.. எனக்கு இல்லாமல் போகுமோ... எண்ணிப் பார்க்கையில் மனைவியின் முகமே வந்து போனது. கால் இல்லாமல் வெறுங் கையோடு போனால். "ஊரில் எல்லோருக்கும் கிடைக்கும் உங்களுக்குத்தான் கிடைக்காது. அவன் எட்டுக்காலையும் வாங்கிட்டுப் போறான் உங்களுக்கு ஒரு கால் கூடவா கிடைக்கல. நான் வேற என் புருசன் எப்படியாவது வாங்கிட்டு வந்திடுவாரு. வாங்காம வரமாட்டாருன்னு பெருமையா அவகிட்டச் சொல்லிட்டேன். இப்படி என் மொகத்தில கரிய பூசுவீங்கன்னு தெரிஞ்சிருந்தா நான் நீயே வாங்கிக்கன்னு அவகிட்ட சொல்லியிருப்பேன்னு குதியா குதிப்பாள்.. கடவுளே எனக்கும் ரெண்டு கால் கிடைக்கக் கருணை செய்யப்பான்னு கடவுளை எதுக்குத்தான் வேண்டணும்னு ஒரு விவஸ்தை இல்லாமல் வேண்டிக்கிறேன். என் வேண்டுதலுக்காக கடவுள் என்ன ஒரு ஆட்டுக்கு எட்டுக்காலை வைத்து படைக்கப்போகிறா என்ன?

என் முறை வந்தபோது கேட்டேன். "கால் இல்லையே.. இருந்த எட்டுக் காலையும் இப்போதுதான் ஒருத்தர் வாங்கிட்டுப் போனார். இனி நாளைக்குத்தான்.. கால் வேணுமுன்னா முன்னாலேயே நீங்க சொல்லி வச்சிருக்கணும்" அவர் கால் இல்லை என்று காலை வாரியதைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பதைப்போல் அங்கே வெட்டிவைக்கப்பட்டிருந்த ஆட்டின் தலை ஒன்று பல்லைக்காட்டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் " கால் இல்லையின்னா தலை கெடச்சாலும் வாங்கிட்டு வந்திடுங்க.. தலையும் நல்லதுன்னு சொன்னாங்க.." மனைவி சொன்னது ஞாபகத்திற்கு வரவே தலையின் விலை கேட்டேன். சினிமாவில் எதிரியைப் போட்டுத்தள்ள தலைக்கு இவ்வளவு என்று வில்லன் கேட்கும் விலையைப் போன்று இருந்தது அதன் விலை. அதிர்ச்சியை வெளியே காட்டாமல் வாங்கிச் சென்றேன். பார்த்தசாரதியின் மனைவி கொடுத்தப் பணத்திலும் பார்க்க சற்று அதிகம் என்றாலும் சுகமில்லாத ஆளுக்கு என்பதால் மேலதிகமாக சொந்தப் பணத்தில் கொஞ்சம் கொடுத்துத் தலையைக் கேட்டேன். நான் சிறிது யோசித்தால் அதையும் வாங்கிவிட அடுத்த ஆள் பின்னால் இருப்பதால் விலையைப் பார்க்காமல் தலையை வாங்கினேன். தலையையும் விட்டு விட்டு வெறுங்கையோடு போனால்' கெடச்சத விட்டுட்டு வந்திருக்கீங்களே.. உங்களுக்குத் தலையே இல்ல' என்று சொன்னாலும் சொல்வாள்.

கடையில் நாலு பேருக்குப் பல்லைக் காட்டிக் கொண்டிருந்த தலை இப்போது என் கையில். சேம்பு இலையில் சுற்றி அதை ஒரு பொலித்தீன் பையில் போட்டுக் கொடுத்திருந்தார் அலி நானா.

எப்போதும் வெற்றிலைக் குதப்பித் துப்பும் அலி நானா வாயின் சிவப்பைப்போல வெள்ளைப் பொலித்தீன் பையின் வழியே கசிந்த இரத்தம் வெளியே தெரிந்ததால் நான் கொண்டு சென்ற ஒரு பையில் போட்டு மறைத்து எடுத்துக் கொண்டு நடந்தேன். அந்நேரம் என்னைக் கேலி செய்வதுபோல் சற்றுத் தொலைவில் இருந்த உணவக வானொலி "அவனிடம் சொன்னேன் என் அஞ்சுதலை அந்த அண்ணலே தந்துவைத்தான் ஆறுதலை... "பாடிக் கொண்டிருந்தது. அந்த 'ஆறுதலை' வர வேண்டிய இடத்தில் 'ஆட்டுத்தலை' வந்திருந்தால் இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும் என எண்ணிக் கொண்டேன்.

இனி சந்தையில் வேறு சாமான்கள் வாங்க வேண்டும். தலையைக் கையில் வைத்துக்கொண்டு ஏனைய மரக்கறிகளை தரம்பார்த்து வாங்கச் சிரமமாக இருந்தது. கூடவே ஆட்டின் கொம்பு வேறு காலில் குத்திக் காயப்படுத்தி வேதனை ஏற்படுத்தியது. வளர்த்து விற்றவனையும், வாங்கி வெட்டியவனையும் விட்டுவிட்டு இன்னொருத்தருக்காக வாங்கிப் போகும் என்னைக் காயப்படுத்தும் தலைக்கு என் மேல் என்ன கோபமோ தெரியவில்லை. ஒருவேளை உன்ன மாதிரி ஆட்கள் வாங்கிச் சாப்பிடுவதால்தானே எங்கள் இனத்தைக் கொன்று இப்படிக் கூறுபோடுகிறார்கள் என்ற ஆதங்கமோ தெரியவில்லை. செத்தபின் இரவில் ஆவியாக வந்து பயங்காட்டும் மனிதர்களைப்போலன்றிச் செத்தத் தலையாக வந்தேனும் பழி வாங்குவேன் என்று சபதமிட்டிருந்ததோ தெரியவில்லை.

வலது முழங்காலிற்குக் கீழ் சிறிதாய்க் கீறிவிட்டிருந்தது. தலையை ஒரு இடத்தில் வைத்துவிட்டுச் சாமான்களை வாங்குவதே சரி என்ற முடிவுடன் எங்கே வைக்கலாம் என்று பார்த்தேன். வீதியோரத்தில் ஒரு வழிப்பாதை என்ற விளம்பரம் தாங்கிய இரும்புத்தூண் கண்ணில் பட்டது.

ஒரு அளவிற்கு உரமான அந்தத் தூணில் பின்புறமாக நீட்டிக்கொண்டிருந்த கம்பி ஒன்றில் தலையைத் தொங்கவிட்டேன். தொங்கியது. குனிந்த தலை நிமிராத பருவப்பெண்போல் தரையைப் பார்க்கும் வண்ணம் தொங்கிய தலையை விட்டுவிட்டு அருகிலேயே தரையில் பொலித்தீன் சீட்டுகளை விரித்துக் காய்கறி விற்றுக் கொண்டிருந்தவர்களிடம் பேரம் பேசி வாங்கத் தொடங்கினேன்.

அதிகாலை வியாரபார பரபரப்பில் இருந்தவர்களிடம் அதிகம் பேச முடியாமல் கிடைத்தவற்றை வாங்கினேன். கடல் மட்டத்தில் விளையும் காய்கறிகளின் விலை கூட பிதுருதலாகல அளவு உயர்ந்திருந்தது. மாறாக நுவரெலிய மரக்கறிகளின் விலை கடல் மட்டமளவு தாழ்ந்துவிடவும் இல்லை. அவை அதைவிட மேல் என்று பெருமை கொள்வதுபோலிருந்தன. விலை அதிகம் என்பதால்.. வாங்காமல் இருக்க முடியுமா.. வாங்கினேன். வாங்கியவற்றிக்கு காசை நீட்டிக்கொண்டிருந்த வேளையில் கைப்பேசிச் சிணுங்கியது. அது மனைவியின் அழைப்பு. காதில் வைத்தேன் 'மறக்காமல் கிளிக்கு பழங்கள் வாங்கிட்டு வாங்க. 'சரி சரி' அழைப்பைத் துண்டித்துவிட்டு பழங்கள் எங்கு விற்கிறார்களெனப் பார்த்தேன். நான் நின்ற இடத்தில் பழங்கள் எதுவுமில்லை. வீதியின் எதிரே ஒரு சிலர் வண்டியில் வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள். கூடவே சிலர் காய்கறி விற்பதையும் கண்டு வீதியின் அடுத்தப் பக்கம் சென்றேன். பழ வியாபாரிகளிடம் நிறைய பேர் வாங்கிக் கொண்டிருந்ததால் தாமதமாகியது. தாமதித்தாலும் நல்ல பழங்கள் இருந்ததால் நின்று வாங்கிக் கொண்டு அருகருகிருந்தவர்களிடம் தேவையான பொருட்களை வாங்கியதும் கையில் பாரம் கூடியது. இப்போதைக்கு இது போதும். அதிகம் வாங்கி வைத்தாலும் இந்த காலநிலைக்கு சீக்கிரம் பழுதாகிவிடுகின்றன. இனி வீடு திரும்பலாம் என்ற முடிவுடன் எதிர் வந்த ஒரு ஆட்டோவை நிறுத்தினேன். ஏறினேன்.

போகுமிடத்தைக் கூறினேன். ஆட்டோ விரையத் தொடங்கியது. ஒரு இரு நூறு மீற்றர் தூரம் கடந்திருக்கும் பின்னால் அதிவிரைவாய் வந்து ஆட்டோவை உரசியும் உரசாத்துமாக மிக அருகில் அதிக இரைச்சலுடன் ஒரு மோட்டார் சைக்கிள் கடந்து போனது. ஆட்டோவில் இலேசாக உரசியிருந்தாலும் ஒரு பெரிய விபத்து நடந்திருக்கும். ஒரு கணம் நானும் ஆட்டோ சாரதியும் அதிர்ந்தே போனோம். அதிர்ச்சியில் ஆட்டோ சாரதியின் வாயிலிருந்து இதுவரைக் கேட்டிராத கெட்ட வார்த்தைகள் வந்து விழுந்தன. அதற்குள் மோட்டார் வண்டியில் விரைந்த அந்த பதின்ம வயதுக்காரர்கள் மின்னலாய் மறைந்து போனார்கள்.

ஆத்திரம் தீராமல் திட்டிக் கொண்டிருந்த சாரதியை 'சரி விடுப்பா' என்றேன். 'இல்ல சேர். தலையில் ஹெல்மெட் கூட இல்ல. நாதாரிகள். எங்காவது இடிபட்டா எலும்பும் மிஞ்சாது.' 'அபசகுணமா பேசாதப்பா.. வளர்ற பிள்ளைங்க' 'பேச வைக்கிறாய்ங்க சார் கொஞ்சம் லேசா பட்டிருந்தாக்கூட நம்ம தலை உருண்டிருக்குமே' அவன் நம்ம தலை என்றதும் எனக்கு சட்டென தூணில் தொங்கவிட்டத் தலையின் ஞாபகம் வந்தது.

ஐய்யய்யோ.. தலையை மறந்திட்டோமே.. ' வண்டிய மறுபடியும் சந்தைக்குத் திருப்புப்பா.' பதற்றத்துடன் சற்றே உரத்தக் குரலில் கூறினேன் 'ஏன் சார் இவ்வளவு சத்தம்? ஏதாச்சும் தல போற காரியமா?' 'தல போற காரியம்தான். கொஞ்சம் சீக்கிரம் போப்பா..' என் பதற்றத்தைக் கவனித்த ஆட்டோக்காரர் எதுவும் பேசாமல் அடுத்த சந்தியில் வண்டியைத் திருப்பினார். ஆட்டோ சந்தையை நோக்கி விரைய எனது சிந்தை தலையை நோக்கி விரைந்தது.

*18 ஆம் பக்கம் பார்க்க*

**மெய்யன் நடராஜ் ...✍**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 131

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | 05 | 06 | 07 |
| 08 | | | 09 | ■ | 10 | | |
| | ■ | 11 | | 12 | ■ | 13 | |
| ■ | 14 | | | | ■ | ■ | ■ |
| 15 | | ■ | ■ | 16 | 17 | 18 | |
| | ■ | 19 | 20 | ■ | 21 | | ■ |
| 22 | 23 | | | ■ | ■ | 24 | 25 |
| 26 | | | | ■ | 27 | | |

திரு/திருமதி.செல்வி ..............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................................

..............................................

..............................................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 131
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 131

### இடமிருந்து வலம்

1. புத்திஜீவி
4. மூச்சு
8. மகாபாரதத்தில் வரும் ஒரு கதாபாத்திரம் (குழம்பியுள்ளது)
10. உருண்டை அல்ல சமநிலையானது (திரும்பியுள்ளது)
11. ஒரு வாத்தியக் கருவி (குழம்பியுள்ளது)
13. கட்டடத்தின் மேல் தளம் (திரும்பியுள்ளது)
14. மிளகாய், தேங்காய்ப்பூ முதலானவை சேர்ந்த ஒரு துவையல்
15. மாரி காலத்து இரவில் இதுவும் பெய்யும்
16. பணி நடைபெறாதிருக்கும் காலப்பகுதி
19. சோறு சாப்பிடுவதற்கு இதுவும் தேவை
21. தரையிலும் நீரிலும் வாழும் உயிரினம்
22. மூத்த சகோதரன்
24. முன்னோக்கிச் செல்வதற்கு இடையூறு
26. விறகு எரிந்த பின்னர் கிடைக்கும் தூள் (குழம்பியுள்ளது)
27. வடபகுதியிலுள்ள ஒரு தேர்தல் மாவட்டம் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. உயர்ந்த நிலை
2. போக்குவரத்துக்கான வீதிகள் அமைக்கும்போது இதனையும் பயன்படுத்துவர்
3. சிரிப்பூட்டும் வேடிக்கைப் பேச்சு
5. குளிர் காற்றையும் குறிக்கும்
6. கறி சமைப்பதற்காக பயன்படுத்தப்படுவது
7. முப்பது நாட்கள் கொண்ட காலப்பகுதி (தலைகீழ்)
9. காசு (தலைகீழ்)
12.படித்துப் பயன்பெறும் அறிவு
14. வாரத்தில் ஒரு நாள்
15. இதுவும் ஒருவகை நாட்டியம்
17. வீட்டு வளர்ப்புப் பிராணி (தலைகீழ்)
18. முன்னுரிமை பெற்று முதலிடம் வகிப்பது (குழம்பியுள்ளது)
19. ஒருவகை மீன்
20. இதுவும் ஒருவகை விலங்குதான். இறைச்சிக்கும் பயன்படுத்துவர். (தலைகீழ்)
23. ஒருவகை தானியம் (தலைகீழ்)
25. ஒரு சிற்றுண்டி (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 130

### விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அலங்காரம்
7. பாசி
8. வசீகரம்
10. துலாபாரம்
11. கம்பளி
14. களி
15. பாதி
18. ஆறுதல்
20. சமாதி
21. கன்னி
22. மீன்
23. சங்கு

**மேலிருந்து கீழ்**

1. அபாரம்
2 சில
3. காவலாளி
4. ரசீது
5. ரகம்
6. பாம்பு
9. காரம்
12. களிறு
13. பகல்
16. சங்கதி
17. ஆதி
18. ஆசான்
19. தனிமை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 130

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **கே. குசேலர்**<br>மெதகங்கொட,<br>ரக்வான | **எம்.வை.எப். அம்ரா,**<br>**17/1 தோராகமுவ வீதி,**<br>உடத்தலவின்ன,<br>மடிகே | **வீ. பெருமாள்,**<br>36/20 சீ, கொன்வன்ட் வீதி,<br>முதலாம் ஒழுங்கை,<br>ஹெந்தல, வத்தளை |

### பாராட்டு பெறுவோர்

**1. கே.எப். மித்தானி,**
ஏறாவூர்,

**2. கே. அபிஷேக்,**
எஹெலியாகொட

**3. எம். தனுஷியன்,**
காரைதீவு

**4. கே.எம். மொஹம்மட் பாரூக்**
மாத்தளை

**5. உம். பாஸிர்**
அம்பாந்தோட்டை

**6. எம்.ஐ.ஏ. லத்தீப்,**
அக்கறைப்பற்று

**7. எம்.எம்.எம் நிஸாம்.**
காலி

**8. எஸ். நல்லம்மா,**
வந்தறுமூலை

**9. எஸ். தமிழ்மலர்,**
பாண்டிருப்பு

**10. எஸ்.எச். எம். ஜிப்ரி,**
கொழும்பு 10

# 'SME ரீ–எனர்ஜைசர்' கடனை அறிமுகப்படுத்துகிறது NDB வங்கி




NDB வங்கி இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இலங்கை முழுவதும் உள்ள சிறிய மற்றும் நடுத்தர, தொழில்முயற்சியாளர்கள் [SMEகள்] மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு [MSME கள்] அத்தியாவசிய நிதி உதவிகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட தனது புதிய 'SME ReEnergizer' கடனை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது.

இந்த முயற்சியானது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்துவதற்கும், நாட்டில் வளர்ந்து வரும் வர்த்தக செயற்பாடுகளை ஆதரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் NDB இன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

பதிவுகளுடனான சிறிய மற்றும் நடுத்தர சுயதொழில்வாண்மை வாடிக்கையாளர்களிற்கு ஆண்டுக்கு 7 சதவீதம் எனும் உச்ச போட்டித்தன்மைமிக்க வட்டி வீதத்தில் தலா 15 மில்லியன் வரையில் முதலீட்டுக் கடன்களை வழங்குகின்றது. இந்த திட்டமானது, உற்பத்தி, கட்டட நிர்மாணம், ஏற்றுமதி, சுற்றுலா, ஆடை, விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளை இலக்காகக் கொண்டுள்ளது.

அத்துடன் நெகிழ்வான மீள் கொடுப்பனவுகளுடன், ஒவ்வொரு வர்த்தக நிறுவனத்தின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப நீண்ட கால நிதி தீர்வுகளை வழங்குவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# நெஸ்லே லங்கா ஏற்பாட்டில் 'Connect@Nest'24' நிகழ்வு




'நல்லுணவு, நல்வாழ்வு' என்ற விழுமியத்தைக் கொண்டுள்ள நிறுவனமான நெஸ்லே லங்கா, பெறுமதிமிக்க தனது வணிகக் கூட்டாண்மைகளைக் கௌரவித்து, அங்கீகரிக்கும் முகமாக 'Connect@Nest'24'என்ற நிகழ்வை அண்மையில் நடாத்தியுள்ளது.

சுவையும், நலச்செழுமையும் நிறைந்த தயாரிப்புக்களை வழங்கி இலங்கையில் நுகர்வோரை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும் என்ற நெஸ்லே லங்கா நிறுவனத்தின் குறிக்கோளுக்கு பங்களித்துள்ள அதன் மதிப்புச் சங்கிலியிலுள்ள பல்வேறு வணிக கூட்டாளர்களையும் ஒரே மேடையில் ஒன்றுதிரட்டும் வகையில் இப்பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது.

115 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டில் வலுவாகக் காலூன்றியுள்ள நெஸ்லே லங்கா 'இன்றும் எதிர்வரும் தலைமுறைகளுக்கும் உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வந்து வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்' என்ற தனது நோக்கத்தினை தொடர்ந்தும் வழுவாது கடைப்பிடித்து வந்துள்ளதுடன், அதன் நம்பிக்கைமிக்க வணிக கூட்டாளர்கள் இதற்கு உறுதுணை புரிந்துள்ளனர்.

மிகப் பாரிய உணவு மற்றும் பானவகை நிறுவனம் என்ற வகையிலும், இலங்கையில் மிகவும் அபிமானம் பெற்ற வர்த்தகநாமங்கள் பலவற்றின் தாயகம் என்ற வகையிலும், நாடெங்கிலும் நுகர்வோருக்கு அதியுயர் தரம் கொண்ட தயாரிப்புக்கள் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தவாறு, இளமை முதல் முதுமை வரையில் சுவையான மற்றும் ஆரோக்கியமான தெரிவுகளை வழங்கும் தனது குறிக்கோள் மீது நெஸ்லே லங்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது.

# இலங்கையில் Tata Xenon Yodha வாகனத்தை அறிமுகப்படுத்தும் Tata Motors; Pick–up




உலகின் முன்னணி வாகன உற்பத்தியாளர்களில் ஒன்றான Tata Motors, தனது அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தரான DIMO நிறுவனத்துடன் இணைந்து, பல்துறை பயன்பாடு கொண்ட, நம்பகமான Pickup வாகனங்களுக்கான சந்தையில் அதிகரித்து வரும் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், புதிய Tata Xenon Yodha வினை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒரு வலுவான மற்றும் ஸ்டைலான செயற்பாட்டுத் திறன் மிக்க Tata Xenon Yodha வாகனமானது, சொகுசையும் பாதுகாப்பையும் உறுதியளிக்கும் அதே நேரத்தில், தினசரி நடவடிக்கைகளுக்கான சிரமமின்றிய பொருட்கள் போக்குவரத்தையும் உறுதி செய்கிறது.

இந்த வாகனத்தின் அறிமுகம் தொடர்பில் Tata Motors வணிக வாகனப் பிரிவின் சர்வதேச வணிகத் தலைவரான அநுரக் மெஹ்ரோத்ரா (Anurag Mehrotra) கருத்துத் தெரிவிக்கையில், "ஒரு முன்னணி வர்த்தக வாகனங்களுக்கான வர்த்தகநாமம் எனும் வகையில், வாடிக்கையாளர்களின் தெரிவுகளுக்கமைய அவற்றை மேம்படுத்துவது தொடர்பில் நாம் ஆழமான புரிதலைக் கொண்டுள்ளோம்.

அத்துடன் மேம்படுத்தப்பட்ட பயணம் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கான வாகன அறிமுகங்கள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்வதில் நாம் உறுதியாக இருக்கிறோம். புதிய Tata Xenon Yodha ஆனது, வாகனத்தின் உரிமையாளராவதற்கான செலவு மற்றும் அதிக இலாபத்துடன், சிறந்த வாகன செயற்றிறனை தேடும் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# நீரிழிவை கட்டுப்படுத்தும் பங்காண்மையில் யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கை நீரிழிவு சம்மேளனம்




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் (DASL) மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளது. அதனூடாக, நாட்டில் தற்போது நிலவும் உயர்ந்த நீரிழிவு நிலையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளன. சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் பிரகாரம், தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை அதிகளவு நீரிழிவு நிலை காணப்படும் இடர்நிலையை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேசிய சுகாதார இடர்நிலையை புரிந்து கொண்டு, நீரிழிவை கட்டுப்படுத்துவது தொடர்பில் நாடு முழுவதிலும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தனிநபர் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான சாதனங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சமூக ஈடுபாட்டை கட்டியெழுப்பவும் பங்களிப்பு வழங்க யூனியன் அஷ்யூரன்ஸ் முன்வந்துள்ளது.

இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் யூனியன் அஷ்யூரன்ஸ் கைகோர்த்து, நிலைபேறான தீர்வுகளை எய்தும் வகையில், இலக்கு வைக்கப்பட்ட ஆதார அடிப்படையிலான தவிர்ப்பு மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தி, நீரிழிவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை குறைப்பதிலும், அனைத்து இலங்கையர்களின் நலனை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தும். பிரசல்ஸ் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் அங்கத்துவம் பெற்ற அமைப்பாக இலங்கை நீரிழிவு சம்மேளனம் திகழ்வதுடன், 1992 ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்ட இல. 1 இன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமாகவும் திகழ்கின்றது.

# நீண்டகாலம் சேவையாற்றியோருக்கு விருது வழங்கிய Litro Gas Lanka



இலங்கையின் முன்னணி LPG வழங்குநரான Litro Gas Lanka லிமிடெட், தனது ஊழியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையை கௌரவிக்கும் வகையில் 2024ஆம் ஆண்டுக்கான நீண்ட சேவையாளர் விருது வழங்கும் விழாவைக் கொண்டாடியது.

மபிமாவில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தனது நவீனமயமாக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட லிட்ரோ சேமிப்பு மற்றும் மீள்நிரப்பு நிலையத்தில் நடைபெற்ற இவ்விழாவில் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி முதித பீரிஸ் மற்றும் தங்களது குறிப்பிடத்தக்க சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் Litro Gas Lanka நிறுவனத்தில் 10 முதல் 30 வருடங்கள் வரை தமது சேவைகளை பூர்த்தி செய்த பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு 2024ஆம் ஆண்டின் உலக எல்பிஜி தினத்தின் கருப்பொருளான "எல்பிஜிக்குப் பின்னால் உள்ள பணியாளர்களை வெளிப்படுத்தல் மற்றும் கௌரவித்தல்" என்ற கருப்பொருளுடன் ஒத்துப் போகிறது, இது லிட்ரோ கேஸின் வெற்றி மற்றும் ஆற்றல் பாதுகாப்பு, சமூக மாற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கும் ஊழியர்களின் முக்கிய பங்களிப்பை எடுத்துக்காட்டுகிறது.

Litro Gas Lanka Limited இன் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான.

முதித பீரிஸ், இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, "இன்று, எமது நிறுவனத்தின் முதுகெலும்பாக விளங்கும் எமது குழு உறுப்பினர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை நாம் கௌரவிக்கின்றோம் என்றார்.

# டிஜிட்டல் அணுகலுடன் சேவைகளை வழங்கும் CRIB



இந்த ஆண்டு ஜனவரியில் அறிவிக்கப்பட்ட டிஜிட்டல் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலின் வெற்றியைத் தொடர்ந்து, இலங்கையின் கொடுகடன் தகவல் பணியகம் (CRIB), டிஜிட்டல் வசதிகள் மற்றும் பிற வாடிக்கையாளர் சேவைகளைப் பயன்படுத்தி இலங்கையர்கள் தமது கடன் நிலையைப் பற்றி நன்கு அறிந்திருக்கவும், தனிநபர்கள் மற்றும் பெருநிறுவனங்களின் கடன் நிலைகளை நிர்வகிக்கவும் ஊக்குவிக்கிறது.

CRIB Sri Lanka கடன் வழங்குபவர்களுக்கும் கடன் வாங்குபவர்களுக்கும் இடையே உள்ள தகவல் இடைவெளியைக் குறைப்பதில் முக்கியப் பங்கு வகிப்பதோடு, ஒரு அதிநவீன கடன் தகவல் மேலாண்மை அமைப்பையும் பயன்படுத்துகிறது. இந்த அமைப்பு அனைத்து நிதி நிறுவனங்களுடனும் தடையற்ற ஒருங்கிணைப்பை உறுதி செய்கிறது, அவை தவணைக் கடன்கள், கிரெடிட் கார்டுகள், குத்தகை, தங்கக் கடன்கள், அடகு வைத்தல் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய அனைத்து கடன் தகவல்களையும் சட்டபூர்வமாக அறிவிக்கிறது.

இந்த கடன் தகவல் சேகரிப்பு, உலகளாவிய நடைமுறைகளுடன் சீரமைக்கப்பட்டது, இப்போது பாரம்பரியமற்ற தரவைச் சேர்க்கவும் நீட்டிக்கப்பட்டுள்ளது. தற்போது கடன் தரவுகள் இல்லாத விளிம்புநிலை குடிமக்களுக்கும் கடன் அணுகலை வழங்குவதே இதன் நோக்கமாகும். பயன்பாட்டுக் கொடுப்பனவுகள், தொலைத்தொடர்புகள் மற்றும் காப்புறுதிகள் பற்றிய பதிவுகளை வைத்திருப்பதுடன், இலங்கை சனத்தொகையில் கிட்டத்தட்ட பாதி பேருக்கு சிறந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் முறையான நிதித் துறையிலிருந்து கடனைப் பெறுவதற்கு ஒரு மதிப்புமிக்க வாய்ப்பையும் உருவாக்குகிறது.

தனிநபர்கள் இப்போது தங்கள் CRIB கடன் அறிக்கை மற்றும் கடன் மதிப்பெண்ணை CRIB MyReport எனப்படும் சுய விசாரணை கடன் அறிக்கை தெரிவிலிருந்து அணுகலாம்,

# தலைசிறந்த சாதனையாளர்களுக்கு பாங்கொக் நகருக்கான சுற்றுப் பயணம்



ஆயுட் காப்புறுதித் தீர்வுகளை வழங்குவதில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களில் ஒன்றாகிய ஜனசக்தி லைஃப் அதன் தலைசிறந்த சாதனையாளர்களுக்கு பாங்கொக் நகருக்கான மறக்க முடியாத சுற்றுப்பயண வாய்ப்பை வழங்கியது. 75க்கும் மேற்பட்ட விசேட சாதனையாளர்கள் இப்பிரத்தியேகமான சுற்றுப்பயணத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் வழங்கிய மகத்தான பங்களிப்பை அங்கீகரித்து உபகாரமளிக்கும் நோக்கத்துடனேயே இச் சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜனசக்தி லைஃப் அதன் சிறந்த சாதனையாளர்களுக்கு வழங்கிய இச் சுற்றுப்பயணம் கவர்ச்சிகரமான பாங்கொக் நகரில் மூன்று இரவுகளையும் நான்கு பகல்களையும் சந்தோஷமாகக் களிக்கும வாய்ப்பை உள்ளடக்கியிருந்தது. சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டவர்கள் கலாசாரச் சிறப்பு வாய்ந்த இடங்கள் மற்றும் ஆலய சுற்றுலாக்கள், புகழ்பெற்ற இடங்கள், மெய்சிலிர்க்கவைக்கும் இடங்களுக்கான விஜயங்கள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்.

கலாசார முக்கியத்துவமான இடங்களைச் சுற்றிப்பார்வையிடுதல் மற்றும் மனதிற்கினிய அனுபவங்களை பெறுதல் ஆகியவற்றின் கலவையை உறுதிப்படுத்தும் வகையில் இச் சுற்றுப்பயணத்தின் நிகழ்ச்சி நிரல் கவனமாகத் தொகுக்கப்பட்டிருந்தது. தரமுயர்ந்த செயற்பாடுகளின் கலாசாரத்தையும் ஊழியர் அணியின் வலுவான ஒற்றுமையையும் வளர்க்கும் குறிக்கோளுக்கு ஜனசக்தி லைஃப் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றது.

# 'HNB Self–onboarding'ஐ அறிமுகப்படுத்தும் HNB

நாட்டில் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய நடவடிக்கையாக, இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, வாடிக்கையாளர்கள் முழுமையாக Onlineஇல் ஒரு HNB கணக்கைத் ஆரம்பிக்க வசதியளிக்கும் ஒரு மாற்றத்தக்க டிஜிட்டல் வங்கி தீர்வான HNB SelfOnboarding ஐ அறிமுகப்படுத்தியது. "HNBஇன் SelfOnboarding வசதி என்பது ஒரு புரட்சிகரமான தீர்வாகும், இது எந்தவொரு வாடிக்கையாளரும் முக்கிய தயாரிப்புகளின் முழு வரம்பையும் முழுமையாக தொலைதூரத்திலிருந்தே அணுக அனுமதிக்கிறது. இது வங்கியின் டிஜிட்டல் பயணத்தில் மட்டுமல்ல, நாட்டின் டிஜிட்டல்



பயணத்திலும் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது, இது எதிர்பார்ப்புள்ள வாடிக்கையாளர்களுக்கு இலங்கையில் எங்கிருந்தும், உலகெங்கிலும் கூட தங்கள் சொந்த விதிமுறைகளின் அடிப்படையில் வங்கி சேவையைப் பெற வசதியளிக்கிறது.

"எங்கள் செயற்பாட்டு அமைப்பு எளிமையானது, வலுவானது, நம்பகமானது மற்றும் பாதுகாப்பானது, தற்போது சந்தையில் மிகவும் விரிவான SelfOnboarding சேவையாக உள்ளது. நீங்கள் ஒரு தொலைதூரப் பகுதியில், வெளிநாட்டில் வசிக்கும் வாடிக்கையாளராக இருந்தாலும் சரி, அல்லது நேரத்தையும் முயற்சியையும் மிச்சப்படுத்த விரும்பினாலும் சரி, இந்த புதிய சேவையானது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. HNBயுடன் ஒரு வங்கிக் கணக்கை ஆரம்பிக்க விரும்பும் அனைவரையும் நாங்கள் வரவேற்கிறோம்," என HNBஇன் பிரதம செயற்பாட்டு அதிகாரி, Sanjay Wijemanne தெரிவித்தார்.




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

எல்லா காரியங்களும் அனுகூலமாகும். மனதில் தைரியம் கூடும். சுய நம்பிக்கை உண்டாகும். எடுத்த காரியங்களை செய்து முடிப்பதில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்ற வாய்ப்புகள் எதிரில் வந்து தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முக்கிய பொறுப்பு கிடைக்கலாம். செயல்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். பிரிந்து சென்ற குடும்ப உறுப்பினர் மீண்டும் வந்து சேரலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கும். பிள்ளைகள் கல்வி பற்றிய சிந்தனை அதிகரிக்கும். பெண்களுக்கு எதிர்பாராத சந்திப்புகள் உண்டாகும். கலைத்துறையினருக்கு செலவு உண்டாகும். முக்கிய பொறுப்புகள் கிடைக்கக்கூடும். மாணவர்களுக்கு கல்வியில் திருப்தியான நிலை காணப்படும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

நினைத்த காரியத்தை செய்து முடிப்பீர்கள். தெய்வ சிந்தனை அதிகரிக்கும். வாழ்க்கையில் இருந்த அதிருப்தி நீங்கி பிடிப்பு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த லாபம் குறையலாம். புதிய ஆர்டர்களுக்காக கூடுதலாக அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் அடுத்தவர்களால் திடீர் பிரச்சினை தலை தூக்கலாம். உங்களது கருத்துக்கு மாற்று கருத்து உண்டாகலாம். கணவன், மனைவி மனம் விட்டு பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கவனமாக பேசுவது நல்லது. பெண்களுக்கு மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த தகவல் சாதகமாக வரும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண்பதில் ஆர்வம் உண்டாகும். மனதில் உற்சாகம் ஏற்படும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

பேச்சின் இனிமை சாதுர்யம் இவற்றால் எடுத்த காரியங்கள் சாதகமாக முடிய உதவும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் மந்தமான நிலையில் காணப்பட்டாலும் வருமானம் வழக்கம் போல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையிலும் முழுக் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி சிந்தனை அதிகரிக்கும். பெண்கள் எந்த காரியத்திலும் ஈடுபடும் முன்பும் திட்டமிட்டு செயல்படுவது நல்லது. கலைத்துறையினருக்கு எந்த வேலையிலும் முழு கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் இருக்கும் மந்த நிலை மாற கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எதிர்ப்புகள் விலகும். பாதியில் நின்ற காரியங்களை தொடர்ந்து செய்து முடிப்பீர்கள். தீ, இயந்திரம் ஆகியவற்றை கையாளும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் அதிகமாக உழைக்க வேண்டி இருக்கும். சரக்குகளை அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் கவனத்துடன் செயலாற்றுவது நல்லது. குடும்பத்தில் சிறு சண்டைகள் உண்டாகலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது நன்மை தரும். பெண்களுக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். சமையல் செய்யும் போதும் மின் சாதனங்களை இயக்கும் போதும் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் கை கொடுக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய மனக்கவலை ஏற்பட்டு நீங்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

சுபச்செலவுகள் அதிகரிக்கும். பயணங்கள் மூலம் வீண் அலைச்சலும், காரிய தாமதமும் உண்டாகும். பொருளாதாரத்தில் மேன்மை ஏற்படும். புதிய நட்புகள் கிடைக்கும். எடுத்த காரியங்கள் கை கூடும். அடுத்தவர் செயல்களுக்கு பொறுப்பேற்காமல் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கையால் மன உளைச்சல் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே வாக்கு வாதங்கள் உண்டாகாமல் தவிர்ப்பது நன்மை தரும். பெண்கள் மற்றவர்களுக்காக பொறுப்புக்களை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு விடா முயற்சிகளால் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

துடிப்புடன் வேகமாக செயலாற்றுவீர்கள். மன குழப்பத்தை உண்டாக்கலாம். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. காரிய தடைகள் விலகும். பயணங்கள் மூலம் நன்மை வரும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் சாத்தியமாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நிலை மாறி முன்னேற்றம் உண்டாகும் திறமையான பணியாளர்கள் அமைவார்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்பட்டு சாதகமான பலன் காண்பர். குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கலைத்துறையினருக்கு சுணங்கிக் கிடந்த காரியங்கள் மீண்டும் வேகம் பெறும். பெண்களுக்கு தொலைதூர தகவல்கள் மன மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். திறமை வெளிப்படும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

மனம் மகிழும் சம்பவங்கள் உண்டாகும். மன நிம்மதியும், மனோ திடமும் உண்டாகும். தெளிவான சிந்தனையுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உற்சாகமாக காணப்படுவீர்கள். திடீர் செலவு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். போட்டிகள் குறையும். பழைய பாக்கிகளை வசூலிப்பதில் வேகம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தெளிவாக சிந்தித்து எதனையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள்.

புதன் சஞ்சாரத்தால் புதிய பதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் காணப்படும். பெண்களுக்குளின் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். கலைத்துறையினருக்கு காரியங்களை செய்து முடிப்பதில் திறமை வெளிப்படும். மாணவர்கள் கல்வியில் நினைத்ததை விட கூடுதல் பாடங்களை படிக்க வேண்டி இருக்கும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

சமயோசிதமாக செயல்படுவீர்கள்.மன நிம்மதி அதிகரிக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகளும் கிடைக்கும். எந்த காரியத்தையும் ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சலும், பண விரயமும் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது தாமதமாகும். மனதில் வியாபாரம் பற்றிய கவலை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளை கூடுதல் கவனத்துடன் செய்வது நல்லது.

குடும்பத்தில் நிம்மதி குறையும் படியான சூழ்நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காண்பீர்கள். பெண்கள் எந்த காரியத்தில் ஈடுபடும் போதும் யோசித்து செயல்படுவது நல்லது. கலைத்துறையினருக்கு லாபம் அதிகரிக்கும். திடீர் பயணங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் உண்டாகும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

எதிலும் நிதானமாக ஈடுபடுவது நல்லது. சந்திரன் சஞ்சாரத்தால் வாக்கு வன்மை ஏற்படும். விஐபிகளின் நட்பு கிடைக்கும். பலவகை யோகம் உண்டாகும். புண்ணிய தலங்களை தரிசிக்கும் எண்ணம் ஏற்படும். சிலர் யாத்திரை செல்வார்கள். அடுத்தவர்கள் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்திசாதூரியத்துடன் நடந்து கொண்டு நன்மை அடைவார்கள். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். புதிய வீடு கட்டுவது, பழைய வீட்டை புதுப்பிப்பது போன்ற பணிகளை தொடங்குவீர்கள். பெண்கள் விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர். கலைத்துறையினருக்கு ஆன்மிக பயணம் செல்வதில் விருப்பம் உண்டாகும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை உண்டாகும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சுக்கிரன் சஞ்சாரத்தால் இடமாற்றம் ஏற்படலாம். ஆடை அணிகலன் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். வார மத்தியில் எதிர்பார்த்த பணவரவு இருக்கும். வாகன யோகம் கிடைக்கும். கூட்டு தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் பங்குதாரர்களுடன் சுமூகமான முறையில் அனுசரித்து செல்வது நல்லது. வீண் அலைச்சல் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீர் நெருக்கடிகள் ஏற்படலாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பயனற்ற பயணங்கள் உண்டாகலாம். குடும்பத்தினருடன் கவனமாக பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும். தோழிகளுடன் சுமூகமாக பேசி பழகுவது நல்லது. கலைத்துறையினருக்கு பொருளாதாரம் அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் வேகம் காணப்படும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

கடின உழைப்பின் மூலம் உன்னத நிலையை அடைவீர்கள். மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடக்கலாம். உடல் ஆரோக்கியம் ஏற்படும். எதிர்பாலினத்தாரால் லாபம் கிடைக்கக் கூடும். சமூகத்தில் மதிப்பும், அந்தஸ்தும் உயரும். தொழில் வியாபாரத்தில் கடன் பிரச்சினைகள் தீரும். போட்டிகள் குறையும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விஷயங்களை தவறாக புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும். வாக்குவன்மையால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த இடைவெளி குறையும். பெண்களுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்வதால் வீண் அலைச்சல் உண்டாகலாம். கலைத்துறையினருக்கு காரிய வெற்றி, பணவரவு எதிர்பார்த்தப்படி இருக்கும். மாணவர்கள் சாமர்த்தியமான செயல்களால் ஆசிரியர்களின் மனதில் இடம் பிடிப்பர்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

விருப்பங்கள் கைகூடும். பயன்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வாக்குவன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வாழ்க்கை துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும். வழக்கம்போல் வியாபாரம் இருந்தாலும் திடீர் பணத்தேவை ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையை செய்யும் முன்பும் அதுபற்றி அதிகம் யோசிப்பார்கள். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பெண்களுக்கு மனதிற்கு இனிமையான காரியங்கள் நடக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு தொழிற்கல்வி கற்பதில் ஆர்வம் உண்டாகும்.

---

**11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்**



அருணாசலம் லெட்சுமணன் 45

# ஏனையோருக்கு முன்மாதிரியாக அமைந்த சரவணனின் வளர்ச்சி

மலேசியாவின் அரசியலில் இந்தியத் தமிழர்களின் பிரதிநிதியாக விளங்கும் டத்தோ சரவணனின் வகிபங்கு குறிப்பிடத்தக்க தாக்கத்தினை செலுத்துகிறது. பேராக் மாநிலத்தின் தாப்பா தொகுதியின் பிரதிநிதியாக விளங்கும் சரவணன், 2008ஆம் ஆண்டு தொடக்கம் இத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார். மலேசிய நாட்டின் மனித வளத்துறை அமைச்சராகவும் பதவியில் இருந்து அனுபவம் பெற்றவராக விளங்குகிறார். 1968 பெப்ரவரி 04இல் பிறந்த சரவணனின் வளர்ச்சி மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியானதாக அமைகிறது. மலேசியா, செந்தூல் பகுதியில் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். இந்தியாவில் இருந்து மலேசியாவிற்கு புலம்பெயர்ந்த குடும்பத்தின் வழி வந்தவர். தனது தந்தையார் முருகன் இறப்பர் தோட்டத் தொழிலாளியாக இருந்த நிலையிலேயே தனது மகனை ஆளுமை மிக்க ஒருவராக வளர்த்தெடுப்பதில் மிகுந்த அக்கறையை காட்டி வந்துள்ளார். தந்தை மாத்திரம் குடும்பத்தில் வேலை செய்த நிலையிலும், தாயும் சரவணனின் கல்வியில் அக்கறை செலுத்தி வந்துள்ளார்;.

கோலாலம்பூர், பிளெட்சர் தமிழ் பாடசாலையில் தொடக்கக் கல்வியை பெற்றார். அதனைத் தொடர்ந்து கோலாலம்பூர் தித்திவங்சா கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும், மேல் நிலைக் கல்வியையும் பெறுகிறார். இந் நிலையில் தனது தந்தையின் மரணத்தை தொடர்ந்து குடும்பச் சுமையின் காரணமாக வேலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. பகலில் வேலை செய்து கொண்டு இரவில் தனது படிப்பில் கவனம் செலுத்தினார். தனியார் கல்லூரியில் இணைந்து அவரின் உயர் கல்வி கனவும் நனவாகியது. அலுவலக உதவியாளராக தொழிலில் இணைந்து குடும்பத்தையும் பராமரித்த வண்ணம் தன்னையும் ஆளுமையாக வளர்த்துக் கொள்வதில் அயராது பாடுபட்டார். மலேசியாவின் ஓல்டிங்ஸ் நிறுவனமே இவருக்கு வாய்ப்பை வழங்கிய நிறுவனமாகிறது. 1989 தொடக்கம் 1993 வரையில் இங்கிலாந்து எமர்ஸ்மித் வெஸ்ட் இலண்டன் கல்லூரியில் உயர்கல்வியை கற்றதுடன் ஈசி கால் பக்கேஜ் எனும் வணிக நிறுவனத்தில் அதிகாரமிக்க பதவியை தனதாக்கிக் கொண்டார். தொடர்ந்து ஸ்கொட்லாந்தின் மேற்கு பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொள்கிறார்.

சரவணன்; தனது அரசியல் வாழ்க்கையை 1994ஆம் ஆண்டே தொடங்குகிறார். மலேசியா இந்தியன் காங்கிரஸின் தித்திவங்சா மாவட்டக் கிளையின் செயலாளர் என்ற பதவி நிலையின் தொடக்கமாகவே அவரது அரசியல் பயணம் அமைகிறது. 2008ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவி நிலைக்கு முன்னதாகவே மலேசிய மேலவையின் செனட்டராக பதவியில் நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ் வருட தேர்தலில் மலேசிய இந்திய காங்கிரஸ் பெற்ற வாக்கில் பாரியதொரு சறுக்கல் நிலை காணப்பட்ட நிலையில் சரவணனின் வெற்றி பெரிதாக மதிக்கப்பட்டது. இதற்கு முன்னைய தேர்தல்களில் இந்திய மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய முக்கிய கட்சியாக விளங்கியது.

1946ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கட்சியாக மலேசிய இந்திய காங்கிரஸ் விளங்குகிறது. இக் கட்சியின் செயற்பாடுகள், தமிழ் மொழி அமுலாக்கத்திற்கும் பெரிதும் துணை நின்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மலேசிய அரசாங்கத்தால் தமிழ்மொழி அங்கீகரிக்கப்படுவதற்கு இக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களின் முயற்சி பெரிதும் துணை புரிந்துள்ளது. அத்தோடு தமிழ் மொழி பாடசாலைகளின் உயிர்ப்புக்கும் இக் கட்சியின் முன்னெடுப்புகள் முக்கியத்திற்குரியதாக உணரப்படுகிறது. மலேசியா இது வரையில் நான்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்தி வந்துள்ளது. 1966இல் தனிநாயகம் அடிகளார் தலைமையில் முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இடம்பெற்ற போது அக் காலத்தில் மலேசிய இந்திய காங்கிரசின் தலைமைப் பொறுப்பில் இருந்த தி. சம்மந்தன் தலைமையிலான அமைப்பின் செயற்பாட்டாளர்கள் திருப்திகரமான பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். இம் மாநாட்டை உத்தியோகபூர்வமாக அக் காலத்தில் ஆட்சியில் இருந்த பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் திறந்து வைத்துள்ளார். 1987ஆம் 2015ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மாநாடுகளையும் மலேசிய இந்திய காங்கிரசின் தலைவராக பதவி வகித்த துன் ச.சாமிவேலு முன்னின்று நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இம் மாநாட்டின் துணைத் தலைவர்களில் ஒருவராக விளங்கும் டத்தோஸ்ரீ மு.சரவணனும் இக் கட்சியின் தேசிய துணைத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசிய இந்திய காங்கிரசின் தலைவராக ச.விக்னேஸ்வரனும் செயலாளர் நாயகமாக ராஜசேகரன் தியாகராஜன் ஆகியோர் உட்பட கட்சியின் உயர்மட்ட குழுவின் சமகால செயற்பாடுகள் கவனிக்கத்தக்கதாகும். கோலாலம்பூரை தலைநகராகக் கொண்டு தேசிய ரீதியில் கட்சியின் பணிகள் முன்நகர்த்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கட்சியின் கொள்கை மற்றும் செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைகளை ம.இ.கா டைம்ஸ், தமிழ் நேசன் ஆகிய இதழ்களை வெளியிடுவதன் வாயிலாக நிறைவேற்றிக்கொள்கிறார்கள். மலேசிய இந்தியர்களின் சமூக அரசியல் நிலைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கோடு இதுவரையில் பல கூட்டணிகளில் அங்கம் வகித்துள்ளமை கவனிக்கத்தக்கது. மலேசியாவின் பழமையான கட்சிகளில் ஒன்றாக விளங்கும் இக் கட்சி மலாயா நாட்டு விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளமை கவனிக்கத்தக்கது. மலேசியா இந்திய காங்கிரஸ், ஐக்கிய மலாய் தேசிய அமைப்பு, மலேசியர் சீனர் சங்கம் ஆகிய கட்சிகள் இணைந்து உருவாக்கிய தேசிய கூட்டணியே மலேசிய சுதந்திரத்திர நடவடிக்கைகளில் அழுத்தத்தை பிரயோகித்ததுடன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஆட்சியில் அங்கம் வகிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மலேசியா இந்திய காங்கிரஸ் அமைப்பை தோற்றுவிக்கும் பணியில் ஜோன் திவியின் பங்களிப்பு மிக முக்கியத்துவம் பெற்றதாகும். ஜோன் திவி லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டம் படித்தவர். காந்தியை லண்டனில் சந்தித்து உரையாற்றியுள்ளார். காந்தியின் கொள்கை மற்றும் நேருவின் செயற்பாடுகளாலும் கவரப்பட்ட அன்னார், தன்னுள் சமூகம் சார் அரசியலை வகைப்படுத்திக் கொள்கிறார். இந்திய விடுதலைக்காக போராடுவது குறித்து தனது ஆதர்சத்தை வெளிப்படுத்தியுள்ளார். இந்திய தேசிய இயக்கங்களில் தீவிர ஈடுபாட்டு அனுபவத்துடன் மலாயாவுக்கு திரும்புகிறார். மலாயா இந்திய காங்கிரஸ் எனும் பெயரிலேயே 1946இல் நிறுவியுள்ளார். பின்னர் மலேசிய கூட்டமைப்பு உருவான பின்னர் 'மலேசிய இந்திய காங்கிரஸ்' எனும் பெயராக மாற்றம் காண்கிறது. காங்கிரஸ் என்பது இந்தியாவின் சுதந்திரத்திற்கு வழிவகுத்த சொல்லாகவும் அதற்கான முனைப்பில் தூண்டுதலை ஏற்படுத்திய சொல்லாகவும் கவனம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியர்களால் ஒப்பந்த அடிப்படையயில் தென்னிந்தியாவில் இருந்து மலேசியாவிற்கு அழைத்துவரப்பட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பான அவதானம் முனைப்பு பெற்றதாக, இவ் அமைப்பின் செயற்பாடுகள் அமையப்பெற்றன. இக் கட்சியின் தலைவராக கே.இராமநாதன் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இந்திய தமிழர்களின் அரசியல் இருப்பு தொடர்பான அவதானம் கூர்மைப்படுத்தப்பட்டமை அவதானத்திற்குரியதாகும். இந்தியர்களின் குடியுரிமை தொடர்பிலான சாதக அம்சம் கே. இராமநாதன் தலைமையிலான இவ் அமைப்பினரால் சாத்தியப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து இவ் அமைப்பின் தலைவர்களில் வீ.தீ.சம்பந்தனின் காலமும் அவதானத்திற்குரியதாகும். 1957 ஆகஸ்ட் 31இல் மலேசியாவிற்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. அச் சுதந்திர ஒப்பந்தத்தை மெர்டேகா சுதந்திர ஒப்பந்தம் என அழைப்பார்கள். அவ் ஒப்பந்தத்தில் இந்தியர்களின் சார்பில் கையொப்பமிடும் வாய்ப்பை பெற்ற தலைவராக வீ.தி. சம்பந்தனே திகழ்கிறார்.

தோட்டங்கள் துண்டாடப்படும் நடவடிக்கைகள் இந்திய தமிழர்களிடத்தே பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதற்கு எதிரான செயற்பாடுகளில் துங்கு அப்துல் ரஹ்மானின் காலத்தில் பாராளுமன்றில் 'தோட்டத் துண்டாடல் சட்டம்' நிறைவேற்றப்பட்டமை முக்கிய விடயமாகிறது. இக் காலக்கட்டத்தில் மலேசிய இந்திய காங்கிரசின் தீவிர செயற்பாடுகள் கவனிக்கத்தக்கதாகும். துன் வீ.தி. சம்மந்தன் மிகுந்த பிரயத்தனத்துடன் தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கத்தை நிறுவியுள்ளார். இந்திய தமிழர்கள் வாழ்ந்த தோட்டங்களில் வீடு வீடாகச் சென்று பத்து ரிங்கிட் பணத்தை சேகரித்துள்ளார். அவ்வாறு சேகரிக்கப்பட்ட மூலதனத்தின் ஊடாகவே மேற்படி சங்கம் அமையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. எழுபதுகளில் ஆசியாவின் மிகப் பெரிய கூட்டுறவு நிறுவனமாக இந் நிறுவனமே தடம் பதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



மலேசிய நாட்டில் துன் சம்பந்தனது வகிபாகம் முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. துன் சம்பந்தனின் தூர நோக்கான பல செயற்பாடுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றாக அவரால் உருவாக்கப்பட்ட தொழிலாளர்களின் வங்கியான மலேசியா பூரோ வங்கி உருவாவதற்கு அன்னாரின் பங்கேற்பு முக்கியத்துவம் பெறுகிறது. துன் சம்பந்தனை மலேசிய இந்தியர்கள் கர்மவீரர் காமராசராக உவமிக்கும் நிலையைப் பெறுகிறார். அவரால் உருவாக்கப்பட்ட இச் சங்கத்தின் கட்டடம் கோலாலம்பூர் நகரில் உயர்ந்த கட்டடமாக காட்சியளிக்கின்றமை கவனிக்கத்தக்கது. அக் கட்டடத்தின் உச்சியில் துன் சம்மந்தன் எனும் பெயரில் பெரிய பெயர்ப்பலகை காட்சியமைக்கப்பட்டு அவரின் பணியை கௌரவப்படுத்துகின்ற தன்மையும் காணப்படுகிறது.

மலேசியாவின் தன்னாட்சி உரிமையையும், சுதந்திரத்தையும் தற்காத்தல். மலேசிய அரசியல் சட்டத்தை கடைப்பிடித்தல், ருக்குன் நெகாரா கோட்பாடுகளை பின்பற்றுதல். மலேசிய இந்தியர்களின் சட்டபூர்வமான இலட்சியங்களுக்கு ஊக்கமளித்தல் . இனங்களுக்கிடையிலான நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் வளர்த்தல் போன்ற வரையறைகளுடன் மலேசிய வாழ் இந்தியர்களின் அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசார சமூக உரிமைகளை மேம்படுத்தலை பிரதான நோக்காகக் கொண்டு மிக நீண்ட காலமாக மலேசிய இந்திய காங்கிரசின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அக் கட்சியின் அரசியல் செயற்பாட்டாளர் என்ற வகையிலும் மு.சரவணனின் வகிபங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அக் கட்சியின் மக்கள் பகிஷ்கரிக்கும் நிலை என்பது கவனிக்கத்தக்க விடயமாகும். இவ் விடயத்தோடு இலங்கையின் மிகப் பெரும் விருட்சமாக விளங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் சரிவு நிலை பற்றிய அவதானமும் ஏற்படுகிறது.

மாநாட்டில் சரவணனின் தமிழ் மொழி தொடர்பான கருத்துக்கள் மிகுந்த அவதானத்தை பெற்றதாக விளங்கியது. அவற்றில் தமிழ் மொழி கற்றல் தொடர்பில் சமகாலத்தில் காணப்படும் விடயங்கள் கவனத்திற்குரியதாகும். தமிழ் பள்ளிகளுக்குப் பல கோடி ரிங்கிட்டுகளை செலவளிக்கும் அரசாங்கம் இடைநிலைக் கல்வி மாணவர்கள் விடயத்தில் பாதிப்பு நிலையை ஏற்படுத்தக் கூடாது. நடப்பு சூழலில் பதினைந்து மாணவர்கள் இருந்தால் மாத்திரமே தமிழ்க் கல்வி போதிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒரு மாணவன் குறைந்தால் கூட அவர்களுக்கான வாய்ப்பு இழக்கப்படுகிறது. இதற்கு ஓர் மாற்று நடவடிக்கை கொண்டுவரப்படுதல் வேண்டும். தமிழ்ப் பள்ளிகளில் இருந்து செல்லும் மாணவர்கள் எவ்வித தங்குதடையுமின்றி தமிழ்க் கல்வியை கற்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு மாணவன் விரும்பினால் கூட தமிழ்க் கல்வி போதிக்கப்படல் வேண்டும். எண்ணிக்கையை வைத்து தமிழ்க் கல்வி போதனைக்கு தடைபோடும் போக்கு இனியும் தொடரக் கூடாது என தனது உரையில் அழுத்தமாக கேட்டுக் கொண்டார். உத்தியோகபூர்வ தொடக்க நிகழ்வில் பங்கேற்ற மலேசிய நாட்டின் பிரதமர் அன்வர் இப்ராஹிம் அமர்ந்திருந்த அரங்கிலேயே இக் கோரிக்கை சரவணனால் முன்வைக்கப்பட்டமை கவனிக்கத்தக்கது. இந்திய சமூதாயத்தின் மீது அதிகப் பற்றும் பாசமும் கொண்ட பிரதமர் இக் கோரிக்கையை நிறைவேற்றுவார் என்பது எனது எதிர்பார்ப்பாகும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

*(பயணம் தொடரும்)*

## காதலும் கைபேசியும்

உன் நினைவு
தொடர் வண்டியிலும்
பேரூந்திலும்
பெரு வெளியில்
நடக்கையிலும்
உறக்கமற்ற பொழுதிலும்
சிறகடிக்கின்றது

உன்னைச் சுற்றி
கைபேசிக்குத் தெரியும்
தன்னைக் காதலிக்காத
இவன் தன்னைத்
தொட்டுப் பேசுவதெல்லாம்
உன்னிடம் என்று
கடிதம் எழுதிய காலம் போய்
குறுஞ் செய்தியில்
காதல் வளர்க்கும் ஒரு
கலை வடிவம் இது

கள்ளத் தனங்களை
காட்டிக் கொடுக்கும் கைபேசி
நான் எத்தனை முறை
உன்னிடம்
பேசுறேன் என்று
எண்ணிப் பதிவிடுகிறது
மௌனமாய்
வந்த காதல்
மொழியையும் சென்ற
அன்பு வார்த்தைகளையும்
குறியீடாய் சேர்த்து வைக்கிறது

கால நேரத்தோடு
சில இடங்களில் 'கவரேஜ்'
இல்லை என்று பேச்சுக்கு
தடை போடுகிறது மொபைல்
பொறாமையில்
தாத்தாவும் அப்பாவும்
காதலுக்கு
தடை போடுவது போல்
வளர்ந்த கை பேசி
நிறுவனங்கள் வளர
காதல் மலர வேண்டும்...

**எஸ். கிருஷ்ணன**
கேகாலை

## அணைந்ததே அன்புத்தாரகை



பாசமிகு எனதருமை
இலக்கிய மகளே !
இஸ்மத் பாத்திமாவே நீ
மறையாதிருந்தால்

நிறையவே
சாதித்திருப்பாய்
இறையவனின்
ஏற்பாடு
தக்தீர் எனும் விதி
மூஹ்மீன்களுக்கான
கட்டாய நியதி
காட்டாற்று
வெள்ளமென கரை
கடந்து வரும்
கண்ணீரையும்
அடக்கியே உனதான
மஹ்பிரத்திற்காய்
பிரார்த்திக்கின்றோம் ஆமீன்

அன்புக் கணவரோடு
அருமை மகனையும்
உற்றாரோடு
சுற்றத்தாரையும்
நட்பாய் பழகிய
இலக்கியச்
சொந்தங்களையும்
ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில்
கொண்டாய்
எனதருமை மகளே

தந்தை மகற்காற்றும்
உதவி அவையத்து
முந்தியிருப்பச்
செய்வது என்ற
பழமொழிக்கு
மாற்றமாய்
உனதான நூல்
வெளியீட்டு
விழாவில் அன்புத்
தந்தையை

அரங்கேற்றி
பொன்னாடை
போர்த்தி மனதார
வாழ்த்தியே
கௌரவித்து அவையோரின்
மனங்களை வென்ற
பாசமிகுந்த
அன்பு மகள் நீ

இலக்கியத் தமிழோடு
இணைந்திருந்தாய்
இளந்தென்றலாய்
இளவயதினிலேயே
கேடயங்களும்
நற்சான்றிதழ்களும்
உரித்தானது
உனது திறமைக்கு

அழகு தமிழில்
எளிய நடையில்
சொற்கோர்வைகளால்
பிரசவித்தாய்
பிரமிப்பூட்டும்
வகையில்
புதையலை தேடி
என்றும்
இரண்டும்
என்றென்றும்
அழகிய நாமங்களோடு

இரண்டு கவிதை
நூல்களை
வெளியிட்டே
இலக்கிய உலகிற்கு
சமர்ப்பணம்
செய்தாய்
எம்மோடு
நீயில்லை என்றாலும்
உனதான நினைவலைகளை
காலங்கடந்தாலும்
இக்கவிதைத்
தொகுதிகள்
சான்று கூறும்

அருளாளனே
அன்புடையோனே
கருணை மிகுந்தோனே
உன்னளவில்
ஏகியிருக்கும்
எங்கள் அன்பு
மகளாம்
இஸ்மத் பாத்திமாவின்
மண்ணறையை
சுவனத்து மணங்
கொண்டு மணமாக்கி வை

யா ! அல்லாஹ்
பாவங்களை போக்கியே
அர்சின் நிழலில்
ஆக்கிடுவாய்
யா! அல்லாஹ்
அன்புக் கணவரோடு
அருமை மைந்தனுக்கும்
பெற்றார் உற்றார்
உறவுகளுக்கும்
மன அமைதியையும்
ஆறுதலையும்
தந்தருள்வாய்
யா! அல்லாஹ்

**டிவங்சோ**
மலாய் கவி

## கவிதை மஞ்சரி



## ஏழைகள்



சிறுகச் சிறுகச் சேமித்து
சித்திரவதைகளால்
உடல் வெறுத்து
சிந்திய வியர்வைத்
துளிகளின் எச்சமே
ஏழைகள் எங்கள் மிச்சம்!

தினமும் தீப்பற்றி
எரிவது போல
எங்களின்
வாழ்க்கை!

ஒரு பிடி சோற்றுக்காய்
உள்ளங்கைகளை
வேகவைத்து
உதிரத்தை
உறைய வைக்கும்
நாட்டாளிகள்..
நாங்கள் பாட்டாளிகள்!

காய்ந்து போன
ரொட்டித்துண்டும்
கடைந்தெடுத்த கீரைக் கஞ்சும்
நாம் உயிர் வாழும்
உதவிக்கரங்கள்!

மண்வெட்டியும் கோடரியும்
புண்பட்ட எம்
இதயங்களுக்கு மருந்தாக

மண்ணினைப் பிளந்து
மரத்தினை நட்டு
கண்ணிமை காக்கும்
காசினி போல் வாழ்க்கை
காண்போர்க்கு
மலிவாக.
இழிவாக.!!

**கவிதாயினி. மாஜிதா தவ்பீக்**
மருதமுனை

## உள்ளத்தரசி

உள்ளத்தரசி என்று
நான் மொழிகையில்
உரித்துடை பெண்ணரசி
யாரென்பீரோ?
பள்ளத்தே வீழ்ந்திடாதெனையே
பக்குவமாய் வழிநடத்தி
பாசம் பொழிந்து
அள்ளியே அணைத்தெனை
அறவழிசென்று அன்பைப் பரிமாறி
என்னவளான இல்லத்தரசி
என்னில் பாதியாய் மாறி
இல்லறம் பேணிக் காத்தவள், அவளே!

ஒன்றாய் என்னுடன் கூடியே வாழ்ந்து
ஒருபோதும் என்மீது சினமே கொள்ளாது
கன்றாக எனையவள் தாய்ப்பசு போலவே
காத்துநிதம் காதலைப் பொழிந்திட
நன்றாக வாழ்ந்தோம்;
நன்மைகள் புரிந்திட
நலமே கூடி நமையது காத்திட
கொன்றெ பழகிய கோரப்புயல்போல்
கொடிதாம் நோய்க்கவள் இரையானாளே!

மெல்லவே உடல்மெலிந்து வருந்தினாள்
மருந்துகளே உணவுபோல் அமைந்திட
சொல்லவே முடியா
பெருந்துயர் வாட்டவே
சிதறுண்ட மணிச்சரம் போன்றவளும்
வல்லமை குறைந்த
குழந்தையாக, நான்
வாய்விட்டு அழுகையில்
பதறித்துடித்து
கிள்ளையாய் எனையவள்
அள்ளியணைத்து
காதலுக்கோர்
இலக்கணமானாள் அவளே!

இன்றோ அவள் இல்லை
என்னருகிலே
இதயம் அழுகிறது
வாய்மூடியே தென்றலாய்
வாழ்ந்தவளே புயலுக்காளாக
தெரிந்த மருத்துவம்
யாவும் புரிந்தோம்
நன்றாக எல்லாம் நடக்குமென நம்பி
நிர்க்கதிக் குள்ளாளோம்
அவள் பிரிவினால்
என்றுதான் தீருமோ எம் கவலை யாவும்
இனிதான சொர்க்கம் அவள் வீடாகுமே!

**சி.மௌநேஷ்**
மட்டக்களப்பு

## உனக்காய் என் உயிர்...!



தன்னில் தங்கியிருந்தது
என்பதற்காய் தான்
இருக்கும் வரை
இடம் கொடுக்காமல்
இலைகளை நிராகரிக்கும்
மரங்களைப் போல்
என்னை நீ
நிராகரித்துப் போனாய் ...

தெரிந்துகொள் நீ
தந்து போன
தனிமை என்பது எல்லா
போதைகளையும் விடவும்
என்னை அழிவுக்கு
கொண்டு செல்லும்
கொடியது என்பதை
ஆனாலும் நான்
அச்சப்படவில்லை

ஆய்வுகளில் ஆய்வாளர்கள்
சொல்கிறார்கள்
தனித்துப் போனவனின் ஆயுள்
அதிகம் நீள்வதில்லை என்று
இதைவிடவும் நிம்மதி
எனக்கில்லை...

எனக்குரிமை இல்லா
உன்னிடம் கேட்பது
எங்கிருந்தாலும் நீ
தனிமைபட்டு விடாதே
ஏனெனில் உனக்காய்
என் ஆயுளையும்
தந்து விடுவதே
என் இறுதி
தாகமாய் இருக்கிறது
என்பதால்... !

**சி.எம்.சங்கர்**
பண்டாரவளை

## பூவைக்குள் புனிதம்!



பூவை
பூவாய் பூத்தவள்!
பூப்போன்று ஆனவள்!
பால்மனம் கொண்டவள்!
பரவசம் கண்டவள்!
பைந்தமிழுக்குள்ளே
பாவாய் வந்தவள்!

தாய்மை தன்மையால்
வாய்மை கண்டவள்!
தூய்மை அன்பினை
தொடராய் தருபவள்!
நேர்மை உணர்வினை
நெஞ்சில் விதைத்தவள்!
வையகத்தில் வாழ
வழிகளை சமைத்தவள்!

இல்லறத்தில் இணைந்து
இன்பம் தருபவள்!
உள்ளத்தில் நுழைந்து
வாழ்வில்
உறுதுணையானவள்!
வாரிசு வம்சத்தை
அம்சமாய் தந்தவள்!

புனிதத்தை மனிதத்தை
புவியினில் வளர்ப்பவள்!
பணிவிடை செய்து
பக்குவம் பெற்றவள்!
பிணி நீக்கி பூவை
பெரும் பணி புரிபவள்!

பெண்ணில்லையென்றால்
பெரும் குலமில்லையே!
பெண்ணில்லையென்றால்
புவி வாழ்வில்லையே!
பெண்கள் என்றும்
உறவின் கண்களே!
பூவைக்குள் நாளும்
புனிதம் பூக்குமே!
பாவைக்குள் என்றும்
மனிதம் மலருமே!

**கலைமதி றபாய்தீன**
காத்தான்குடி

## ஒன்றாய் இணைவோம் !



சோம்பலைக் களைந்தே
எழுந்திடுவோம் நாமும் !
இலக்கை முயற்சித்தே
வாழ்ந்திடுவோம் நாளும் !

எதிர்காலத்தை வளமாக்க
அயராது உழைப்போம் !
புதிரை விலக்கியே
புறப்பட்டே திளைப்போம் !

இல்லாதோருக்கு உதவியே
இன்பம் காண்போம் !
நல்லோரின் வழியினைப்
பின்பற்றி வெல்வோம்

தாழ்வு மனநிலையினைத்
தகர்த்தே எறிவோம் !
முடியுமென்ற
நல்லெண்ணத்தில்
முயற்சித்து வருவோம் !

நானென்ற
ஆணவத்தை
இல்லாம லாக்குவோம் !
நாமென்ற பன்மையில்
நல்லவற்றை
விதைப்போம் !

வாழும் போதே
வாழ்க்கையை
இரசிப்போம் !
மீளும் மகிழ்வில்
ஒன்றாய் இணைவோம் !

**ஏரூர் கவிமாமணி**
**எம்.ரி.எம்.அன்ஸார்.**
ஏறாவூர்

## தொப் 'பி' யும் செருப் 'பூ' வும்



தொப்பியும்
செருப்பும்
தெருச் சந்தியில்
சந்தித்துக் கொண்டன.
தொப்பி முறைத்தது

செருப்பு பணிந்தது
'நான்
என்ன தவறு செய்தேன்
என்னை ஏன்
இப்படி முறைக்கிறீர்?'
மெதுவாய்க் கேட்டது செருப்பு.

இறுமாப்புடன் எழுந்தது தொப்பி
'கால்களுக்குக் கீழ்
மிதிபட்டுச் சாகும் உன்னை
செருப் 'பூ' என்கிறார்கள்
தலைகளுக்கு மேல்
தனித்துவமாய் அமர்ந்து
தனி ராஜ்யம்
நடாத்தும் என்னை
தொப் 'பி' என்கிறார்கள்
என்ன கொடுமை
இது மனிதக் கால்களை
நக்கி கௌரவம் வாங்கும்
உன்னை பார்க்கவே
வெறுப்பாக இருக்கிறது
பூவென்று பெயர் பெற்றதற்காய்
பெருமிதம் கொள்ளாதே
மிதிபட்டுச் சாகும்
உன் விதியை
அந்த இறைவனால் கூட
மாற்ற முடியாது'

தொப்பியின் உரைகேட்டு
உறைந்து போன செருப்பு
வந்தனம் சொல்லி தொடங்கியது
'தலையில் இருக்கிறோம்
என்பதற்காய்
தலைவனாக நினைக்காதே.
தலக்கனமும் கொள்ளாதே
தன்னைச் சுமந்த தாயையே
தள்ளி வைக்கும்
மனிதர்களுக்கு
உன்னை இறக்கி வைக்க
எவ்வளவு நேரம் ஆகும்?

உனக்கு நிகர்
யாருமே இல்லை.

நீ பிரிவினையின் சின்னம்
அதனால்தான்
உன்னை போடுவதற்கும்
கழற்றுவதற்கும்
ஒரு கூட்டம்
அடித்துக் கொள்கிறது.
தலைகளை மாற்றுவதில்
நீ பச்சோந்திகளை விட
மோசமானவன்

நாங்கள்
கால்களுக்குக் கீழ்
மிதிபட்டுச் சாவது உண்மைதான்
ஆனால்
ஒரு போதும்
கால்களை மாற்றி
களங்கப்பட மாட்டோம்

சேர்த்து வைப்பதிலும்
சேர்ந்தே இருப்பதிலும்
எங்களைப்போல்
ஒரு பிறவி
இனி பிறக்காது
நாங்கள்
இணைத்தும் வைப்போம்
இணைந்தும் இருப்போம்
இணை பிரிந்தால்
உயிர் துறப்போம்

எங்களைப் போல்
ஒரு சோடி
உயர் சாதியிலும் இல்லை
இப்போது சொல்லு
நீ பூவா
நான் பூவா?'
தொப்பி
மீண்டும் முறைத்தது
பதிலின்றி மௌனித்தது

**வரக்காமுறையூர் ராசிக்**


Senthooram
செந்தூரம்
2024 ஜூலை 28 ஞாயிற்றுக்கிழமை

# உலகையே ஆச்சரியப்படுத்திய மரதன் வீராங்கனை



அமெரிக்காவைச் சேர்ந்த ரோசி ருயீஸ், உலகின் மிகச் சிறந்த மரதன் வீராங்கனை என்று உலகையே ஏமாற்றியவர். உலகப் புகழ்பெற்ற பொஸ்டன் மரதன் போட்டியில் பங்கேற்ற அவர் 2.31.56 மணித்தியாலத்தில் போட்டியை நிறைவு செய்து புதிய சாதனை படைத்தார். அதாவது பொஸ்டன் மரதன் வரலாற்றில் பெண்கள் பிரிவில் இது சிறந்த காலமாக இருந்ததோடு, மரதன் போட்டிகளில் மூன்றாவது சிறந்த காலமாகவும் பதிவானது.

என்ன சுவாரஸ்யம் என்றால் போட்டியை நிறைவு செய்த ருயீஸுக்கு களைப்பே இருக்கவில்லை. வியர்வை கூட இல்லை. தெருவில் அவர் ஓடியதை பெரிதாக யாரும் பார்க்கவும் இல்லை. ஆனால் ஆச்சரியப்படும் வகையில் முதல் இடத்தை பிடித்துவிட்டார்.





ரோசி ருயீஸ் தனது மரதன் வாழ்வை ஆரம்பித்தது 26 வயதில். 1979 ஆம் ஆண்டு நியூயோர்க் மரதன் போட்டியில் முதல் முறை பங்கேற்றார். போட்டியின் முதல் 30 நிமிடங்களுக்குள்ளேயே களைப்பால் சோர்ந்துவிட்டார். பாதி தூரத்திலேயே லேசாக நழுவிப்போய் ரயிலைப் பிடித்தார்.

நேராக போட்டி நிறைவடையும் இடத்தில் இருந்து சில மீற்றர் தூரத்தில் இருந்து மீண்டும் ஓட ஆரம்பித்தார். யாரும் பெரிதாக அவதானிக்கவில்லை. போட்டியை 11 ஆவது வீராங்கனையாக நிறைவு செய்தார்.

அது அடுத்த ஆண்டு பொஸ்டன் மரதன் போட்டிக்கு தகுதி பெற போதுமானதாக இருந்தது. அப்போதே அவர் தனது ஏமாற்று வேலையை மிகக் கச்சிதமாக செய்ய திட்டமிட்டார். ஓட்டம் நடந்த தினத்தன்று போட்டியை முடிக்கும் இடத்திற்கு அருகில் ஒரு ஹோட்டல் அறையை பதிவு செய்து கொண்டார்.

போட்டியை ஆரம்பித்த அவர் அங்கிருந்து தழுவிக்கொண்டார். போட்டியை நிறைவு செய்யும் இடத்தில் அதிக கூட்டம் நிரம்பி இருப்பது லேசாக இருந்தது. முகத்தில் தண்ணீரை தெளித்துக் கொண்டு அதற்குள் ஊடுருவிச் சென்று முதல் வீராங்கனையாக போட்டியை நிறைவு செய்தார்.

என்றாலும் அவரது சாதனை எல்லோருக்கும் பெருத்த சந்தேகங்களை ஏற்படுத்தியது. போட்டி முடிந்த பின்னர் செய்தியாளர்கள் அவரிடம், 'இத்தனை தூரம் ஓடியும் ஏன் உங்களுக்கு களைப்பே இல்லை?' என்று கேட்டபோது 'இன்று காலை நான் அதிக உற்சாகத்துடன் எழுந்திருந்தேன்' என்று மலுப்பினார்.

போட்டியின்போது சக வீராங்கனைகள், வீதி ஓரத்தில் தண்ணீர் கொடுக்க காத்திருந்தவர்கள் எவரும் அவரை பார்க்கவில்லை என்று குறிப்பிட்டனர்.

முதலாவது ஓடிக்கொண்டிருந்த ஜக்கலின் கரியு ஓட்டத்தின் 18 ஆவது மைல் தூரத்தில் தாம் முதல் இடத்தில் இருந்ததாக கூறினார். அப்போது தாம் இரண்டாவது இடத்தில் இருந்ததாக பட்டி லயோன்ஸ் குறிப்பிட்டார். ஆனால் இவர்களை தாண்டாமலேயே ருயீஸ் முதலாம் இடத்தை பெற்றது தான் அப்போது இருந்த உலக மகா அதிசயம்.

இந்த சந்தேகங்களை அடுத்து ருயீஸ் மீது விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. அவர் நியூயோர்க் மரதன் மற்றும் பொஸ்டன் மரதன் இரண்டிலுமே ஏமாற்றியது உறுதி செய்யப்பட்டு தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இதற்குப் பின்னரும் மோசடி வேலைகளில் ஈடுபட்டு சிறைக்குக் கூட சென்ற ருயீஸ் கடைசி வரை தான் தப்புச் செய்யவில்லை என்றே கூறிவந்தது எந்தக் கணக்கில் சேர்ப்பது என்று புரியவில்லை.

2019 ஜூலை 8 ஆம் திகதி புற்றுநோயால் ருயீஸ் தனது 66ஆவது வயதில் காலமானார்.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# முகமூடி கைதி



பிரான்ஸில் 15ஆவது லுவிஸ் மன்னர் ஆட்சிக் காலத்தில் இருந்த கைதி ஒருவர் இன்றும் கூட மர்மமானவராக இருந்து வருகிறார். இரும்பு முகமூடி மனிதன் என்பது தான் அவரது அடையாளம். மற்றபடி அவர் யார் என்பது யாருக்குமே தெரியவில்லை. அவர் செய்த குற்றம் என்ன என்பது பற்றியும் எந்தப் பதிவும் இல்லை.

ஏன், சிறைக் காவலருக்குக் கூட அவரைப் பற்றி தெரியாது. இத்தனைக்கும் 1703 ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை 34 ஆண்டுகள் சிறையில் கழித்திருக்கிறார். எப்போதுமே அவர் முகமூடி அணிந்திருப்பார். அடையாளம் காண முடியாத வகையில் அவரது முகத்தில் அந்த முகமூடி நிரந்தமாக பொருத்தப்பட்டிருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அவர் இருந்த சிறைக்கூண்டுக்கு பல கதவுகள் இருந்திருக்கின்றன. எனவே, உள்ளே இருந்து எழுப்பப்படும் சத்தங்கள் வெளியே கேட்பதில்லை. அதாவது அவரது குரலைக் கூட யாராலும் அடையாளம் காணமுடியாது.

# செய்யாத தப்புக்கு 43 ஆண்டு சிறை

அமெரிக்காவின் சாண்ட்ரா ஹம்மேவுக்கு வயது 63 ஆகிறது. ஆனால் தனது வாழ்நாளில் பெரும்பங்கை சிறையில் கழித்தது தான் பரிதாபம். இத்தனைக்கும் அவர் எந்தத் தப்பும் செய்திருக்கவில்லை. அவர் குற்றம் இழைத்தார் என்று எந்த ஆதரமும் இருக்கவில்லை. தவறான தருணத்தில் அவர் கொடுத்த தவறான வாக்குமூலம் 43 ஆண்டுகள் சிறையில் கழிப்பதற்கு காரணமாயிற்று.

1980 ஆம் ஆண்டு நம்பரில் மிசௌரி, செயின்ட் ஜோசப் நகரைச் சேர்ந்த பட்ரீசியா ஜெசக் என்று நூலகப் பணியாளர் கத்தியால் குத்தி கொல்லப்பட்டார். அதற்காக ஓர் ஆண்டு கழித்து சாண்ட்ரா குற்றவாளியானார். மனநல மருத்துவமனை ஒன்றில் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தபோது, தானே கொலை செய்ததாக அவர் ஒப்புக்கொண்டது தான் ஒரே ஆதாரம்.





அதனை வைத்து 1981 இல் 20 வயதில் சிறை சென்ற சாண்ட்ரே, 2024 ஆண்டிலேயே விடுவிக்கப்பட்டார். கடைசியில் அவர் குற்றம் செய்யவில்லை என்பது எல்லோருக்கும் புரிந்துவிட்டது. அதாவது தவறாக குற்றம்சாட்டப்பட்டு அதிக காலம் சிறை அனுபவித்த அமெரிக்க பெண் என்ற வரலாற்று பதிவு மாத்திரமே அவருக்கு மிஞ்சியது.

அந்த நூலகப் பணியாளர் கொல்லப்படும் இடத்தில் மிச்சல் கோல்மன் என்பவர் இருந்துள்ளார். மற்றொரு குற்றத்திற்காக பிற்காலத்தில் சிறை சென்ற அவர் 2015 ஆம் ஆண்டு உயிரிழந்தார். சம்பவ இடத்திற்கு அருகில் அவரது டிரக் வண்டி இருந்ததோடு கொலை நடந்த இடத்தில் தடயங்கள் இல்லாதபோதும் கொல்லப்பட்ட பட்ரீசியாவின் கடன் அட்டையை அவர் பயன்படுத்தி இருக்கிறார். என்றாலும் எல்லாமே காலம் கடந்த ஆதாரங்கள்.


ஜோக்ஸ் ஜோக்ஸ் ஜோக்ஸ்
"என்ன! அந்த பாகவதர் கச்சேரிக்கு கிழிஞ்ச சட்டையை போட்டுனு வர்றாரு?" "அவரு எப்பவும் பஞ்சப்பாட்டுதான் பாடுவாரு!"
"டாக்டர் இந்த மருந்து சைட் எஃபெக்ட் இருக்காதுன்னு சொன்னீங்க, ஆனா வயிறு வீங்கிப் போச்சே?" "வயிறு நடுவுலதானே இருக்கு சைட்ல இல்லையே...."
"அந்த பாகவதருக்கு மட்டும் நெறைய கச்சேரிகள் புக்காகுதே எப்படி?" "கச்சேரிக்கு இடையிடையே குத்துப்பாட்டும் பாடுவாராம்!"
"நீ கட்டின புடவையோட வா போதும்...." "அப்ப நான் வந்த உடனே நீங்க என்னை புடவைக் கடைக்கு கூட்டினு போகணும்...."
ஆசிரியர்: உலகத்தை முதலில் சுத்தி வந்தது யாரு..?
மாணவன் : விடுங்க சார்! ஊர சுத்துன வெட்டிப் பயல பத்தி என்ன பேச்சு வேண்டி கிடக்கு..?
நீதிபதி : " கடந்த வாரங்களில் ஒருநாள் நீ உங்க வீட்டுலயே திருடினேன்னு உன் மனைவியே புகார் கொடுக்குறாங்களே... அந்த குற்றத்தை ஒப்புக்கொள்றீயா..? குற்றவாளி : "அன்றைக்கு, 'ஒர்க் ஃப்ரம் ஹோம்' கடைப்பிடித்தேன் ஐயா!"
நண்பி 1 : நாம போகும்போது பூனை குறுக்க போச்சுன்னா என்ன அர்த்தம்..? நண்பி 2: அதுவும் எங்கேயோ போகுதுன்னு அர்த்தம்..
நண்பன் : உங்க மனைவி செய்த தீபாவளி பலகாரத்தை நாய்க்கு போட்டதுக்கு உங்க மனைவியை உங்க நாய் கடிச்சிருக்குமே ஏதாவது முதலுதவி உங்க மனைவிக்கு செய்தீங்களா...?
நண்பன் 2 : சந்தோஷம் தாங்க முடியால நாய்க்கு புதுட்ரெஸ் வாங்கி குடுத்திருக்கேன்.
"ரொம்ப நாளைக்கப்பறம் இன்னிக்கிதான் என் வீட்டுக்காரர் குழந்தைகளுடன் விளையாடறார்..."
"வெளிநாடு போயிருந்தாரா...?"
"இல்லை.. நேத்திலேர்ந்து ஃபோன் ரிப்பேர்...."
அப்பா : எங்கடா டெஸ்ட் பேப்பர காமி...
மகன் : காமிப்பேன், ஆனா நீங்க சோசியல் டிஸ்ட்டன்ஸ் மெயிண்ட்டன் பண்ணனும்
ஊழியர் : பத்து ரூபாய்க்கு எப்படி சார் போட முடியும்...?
வாடிக்கையாளர் : சும்மா வண்டி மேல தெளிச்சு விடுப்பா... வண்டிய கொளுத்திட்டு இன்சூரன்ஸ் காரன் குடுக்கிறத வாங்கிட்டு போறேன்...
"ஏன்டா?"
"அப்பா...நான் படிக்கப் போகலை,"
"கம்ப்யூட்டர் படிச்சாதான் வேலை கிடைக்கும்னு சார் சொல்றார். அப்புறம் நான் எதுக்குப் படிக்கணும்...?"
மனைவி : பாயசம் ஒரு தரம், பாயசம் இரண்டு தரம், பாயசம் மூன்று தரம்,
கணவன் : என்னமா கிட்சன்ல்ல சவுண்டு போடுற?
மனைவி : சமையல் புத்தகத்துல, பாயசம் கொதித்து முடிந்தவுடன் ஏலம் போட்டு இறக்கவும்ன்னு அதாங்க நான் ஏலம் போட்டு கத்திட்டு இருக்கேன்
சார் என் கணவர் ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கப் போறாரு. நீங்கதான் அதை எப்படியாவது வந்து தடுக்கணும்...
இப்ப என்னால முடியாது. என்னோட நாலாவது சம்சாரத்துக்கு பிரசவம். அவசரமா போய்க்கிட்டு இருக்கேன்.
ஒரு ரூபாய், 2 ரூபாய் கள்ள நோட்டு எதுக்கு அடிச்சே ? சில்லறைத் தட்டுப்பாட்டுல நிறையப் பேர் கஷ்டப்படறதைப் பார்த்து மனசுக்கு கஷ்டமா இருந்துதுங்க. அதான்

# லண்டனில் களைகட்டிய கம்பன் விழா

தமிழின் கதி எனப்படும் கவிப்பேரரசன் கம்பனுக்கு ரசிகமணி டி.கே.சி. தலைமையில் காரைக்குடி நாட்டரசன் கோட்டையில் 1939 ஆண்டு கம்பன் விழாவைக் கொண்டாடினார் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்கள். அவர் ஏற்றி வைத்த அந்தத் தீபத்தை ஏந்தி, 46 ஆண்டுகளாகக் கம்பனோடு பயணித்து வருபவர் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள்.



'எமது அகில இலங்கைக் கம்பன் கழகத்தாய் ஈன்ற மகவாகவே பிரித்தானிய கம்பன் கழகத்தைக் கண்டு மகிழ்கின்றோம்' என்றுலண்டனில் இம்மாதம் 13, 14 ஆகிய இரண்டு தினங்களில் நிகழ்ந்த 'கம்பன் விழா 2024' நிகழ்ச்சியினை வாழ்த்துகிறார் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள். கற்றோர் உவக்கக் கடல் கடந்து செல்லும் கம்பன் விழா லண்டனில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

அறிவு அறக்கட்டளையினரும் கம்பன் விழாக் குழுவினரும் இணைந்து அல்பர்ட்டன் பாடசாலை மண்டபத்தில் நடத்திய கம்பன் விழா கண்கொள்ளாக் காட்சியாக நிறைவுற்றது. லண்டனில் இந்தக் கம்பன் விழாவிற்குத் திரண்ட மக்கள் கூட்டத்தை அண்மைக் காலத்தில் லண்டனில் நிகழ்ந்த எந்த இலக்கிய விழாவிலும் கண்டதில்லை. 'கம்பனைத் தொட்டவர்கள் தாழ்ந்ததில்லை. கம்பனை நாடினால் நாடிய பொருள் கைகூடும்.ஞானமும் புகழும் சேரும். தமிழ் வார்த்தைக்கு அழகு சேர்த்தவன் கம்பன். சத்தியம்தான் வார்த்தைக்கு அழகு. கம்பன் சத்தியத்தின் குரல்' என்று கம்பவாரிதி ஜெயராஜ் இவ்விழாவில் சிறப்புரையாற்றும்போது குறிப்பிட்டார். 'தமிழகத்தில் ஐம்பதிற்கும் மேலான கம்பன் கழகங்கள் கம்பனின் காப்பியத்தை மக்களிடம் எடுத்துச் செல்கின்றன. இலங்கையிலும் நாற்பத்து ஆறு ஆண்டுகளாக கம்பன் விழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது . சிங்கப்பூர், மலேசியாவிலும் கம்பன் கழகங்கள் இயங்கி வருகின்றன. ஐரோ ப்பாவில், லண்டனில் கம்பனை ஒலிக்கச் செய்யும் முயற்சி வெற்றிகரமாக நிலைபெறும்.தமிழருக்கென கம்பன் தந்த இராமகாவியம் என்னும் அமிழ்தக்கடலை உலகத்தார் அனைவரிடமும் சேர்ப்பித்தல் உண்மைத் தமிழரின் உயர்கடனாகும்' என்றும் கம்ப வாரிதி ஜெயராஜ் வாழ்த்து நல்கியுள்ளார்.

'கம்பனின் காப்பியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தும் வகையில் கம்பராமாயணத்தின் சிறப்பினை எடுத்துக்கூறி, லண்டனில் ஆங்கிலத்தில் முதல் நூலை எழுதிய இங்கிலாந்து மண்ணில் கம்பனின் விழா நடப்பது மிகப்பொருத்தமானது. 'கம்பன் என்றொரு மானிடன்' என்று பாரதி பாராட்டிய கம்பன் மானிடத்தின் அனைத்துப் பெருமைகளை எல்லாம் தனது காவியத்தில் பொதிந்து வைத்திருக்கின்றான். நாகரிகம் என்பது மானிடத்தை நேசிப்பதுதான்' என்று தமிழ்நாட்டின் நட்சத்திரப் பேச்சாளர் பாரதி பாஸ்கர் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீ டாக்டர் எம். சரவணன் உரையாற்றுகையில், 'உலகெங்கும் உள்ள கம்பன் கழகங்கள் கம்பனுக்கு விழா எடுப்பதும், கம்பராமாயணத்தைக் கொண்டாடுவதும் தமிழ் கூறும் நல்லுலகம் கம்பருக்கும், அவர் தம் தமிழுக்கும் செய்யும் நன்றிக்கடன் ஆகும்' என்று குறிப்பிட்டார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் ஸ்ரீ பிரசாந்தன், 'கம்பனை நாளைய தலைமுறைக்கு எடுத்துச் செல்ல, அக்காப்பியத்தை நடைமுறைக்கேற்ப வடித்துத்தரும் கம்பவாரிதி ஜெயராஜ் போன்றோரின் பணி பாராட்டத்தக்கது. காலங்கள் மாறுகையில், காலத்திற்கேற்ற வடிவத்தில், செவ்வியல் இலக்கியங்களைப் புதிதாய்ப் புனையும் ஆற்றல் கைவரவேண்டும்.செய்யுளில் அமைந்திருந்த பெரியபுராணத்தை, வசனநடையில் எழுதிய ஆறுமுகநாவலரின் நோக்கே காலத்திற்கேற்றது' என்று பொருள் பொதிந்த கருத்துகளை அரங்கில் முன்வைத்தார்.

பாரதி கிருஷ்ணகுமார் உரையாற்றுகையில்,'எக்காலத்திற்கும் பொருந்தும், நல்வழிகாட்டும் பண்புகளை கம்பன் தனது காவியத்தில் விட்டுச் சென்றிருக்கிறான்.

மனிதனின் உன்னத பண்புகளை எல்லாம் தனது கதைமாந்தர் வழியே உலகிற்கு எடுத்துவைத்துச் சென்றிருக்கிறார்.இந்தியாவிற்குப் பெருமை சேர்க்கும் அதிசயமான அற்புதங்களில் இராமாயணம் , மகாபாரதம் என்னும் இரண்டு இதிகாசங்களும் தமது கதைச் சிறப்பாலும் , கவித்துவ மேன்மையாலும் சிறந்து விளங்குகின்றன ' என்று கம்பன் புகழ் பாடிப் பேசினார்.







தமிழருவி சிவகுமார் உரையாற்றுகையில், 'இன்றைய சமுதாயத்திற்கு, அவர்களின் எல்லா நிலைகளிலும் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறிகளை நமது அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்வது பெற்றோரின் பெரும் பொறுப்பாகும். இன்று சமூகத்தில் அறநெறிகள் வீழ்ச்சியடைந்து சென்று கொண்டிருக்கும் நிலையில், விழுமியங்கள் சரிந்து கொண்டிருக்கும் சூழலில் கம்பன் விட்டுச் சென்றிருக்கும் வாழ்வு அறக்கருத்துகளே நமது அடுத்த சந்ததியினரை உயர் நிலைக்கு இட்டுச் செல்ல வல்லது' என்று அழுத்தமாகத் தனது கருத்தினை எடுத்துரைத்தார்.




கம்பன் விழாவில் சமூகப் பணியாற்றிய பெரியோருக்கு மாண்பளிக்கப்பெற்றமை விழாவின் பெருஞ் சிறப்பாக அமைந்தது. மருத்துவத் துறைப்பேராசிரியர் ந.ஸ்ரீஹரன், தமது மனித நேயம் அறக்கட்டளை மூலம் தமிழ் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைக் காகப்பாராட்டிக் கௌரவிக்கப் பட்டார். லண்டனில் தமிழ்ச் சிறாருக்குத் தமிழ் பயிற்றுவிக்கும் பணியில் தொடர்ந்து பாடுபட்டு வரும் மு.து.செல்வராஜா அவர்களும் சிறப்பிக்கப்பட்டார்.

கம்பன் விழாவின் பிரித்தானியக் குழுத்தலைவர் மு.குமாரநாயகம் ,'இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து சிறப்பு வாய்ந்த பேச்சாளர்களை ஒழுங்கு செய்து, இந்தப்பிரமாண்டமான விழா நிகழ்வுகளை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதில், லண்டனில் சகல மட்டத்திலிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பு மனதிற்குப் பெரும் மன நிறைவைத் தருகிறது. மண்டபம் நிறைந்து வழிய, கம்பன் விழாவிற்குத் திரண்டிருந்த மக்கள் கூட்டம் நாங்கள் நடத்திய கம்பன் விழா அடைந்த பெரும் வெற்றிக்குச் சாட்சியாக உள்ளது' என்று தெரிவித்தார்.

அறிவு அறக்கட்டளைத் தலைவரும் கம்பன் விழா அமைப்பாளருமான பதஞ்சலி நவரேந்திரன், 'பல ஆயிரம் பவுண்கள் செலவில் இத்தகைய பிரமாண்டமான விழாவை ஏற்பாடு செய்யும் பணியில் கேட்டும் கேளாமலும் உதவிகளை வாரி வழங்கிய அமைப்புகள், நல்லுள்ளம் கொண்டவர்கள் நமது நன்றிக்குரியவர்கள். தமிழ் ஆலயங்களும் தமிழ்ப் பள்ளிகளும் தமிழின் வளர்ச்சிக்கான தளத்தை இட்டிருந்தாலும் கம்பன் விழாக்கள் போன்ற இலக்கிய நிகழ்வுகளே தமிழுணர்வினை நம் சமூகத்தின் மத்தியில் எடுத்துச் செல்லக்கூடியது' என்று நன்றி கூறினார்.

கம்பன் விழாவில் வழங்கப்பட்ட விழா மலர், காத்திரமான இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கிப் பொலிவாக அமைந்திருந்தது. தமிழ் இலக்கியத்தைக் கொண்டாடுமுகமாக நிகழும் கம்பன் விழாவினைப் பாராட்டி, இந்நிகழ்வில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கூறும் மாண்பு மிகு பிரித்தானிய மன்னர் அவர்களது வாழ்த்துச் செய்தி இந்த விழா மலரில் இடம் பெற்றிருப்பது சிறப்பானது.நாட்டிய நாடகங்களும் நடனங்களும் விழாவின் சிறப்பிற்கு மெருகூட்டின என்றால் மிகையாகாது.



தொய்வு எதுவுமின்றி, சீராக விழாவினை நடத்திச் செல்வதில் திறமையைக் காட்டிய விழாக் குழுவினர் மிகவும் பாராட்டப்படவேண்டியவர்கள். உணவு வழங்கும் பிரச்னையில், எவ்வளவு பேர் கலந்து கொள்வார்கள் என்று அனுமானிக்க முடியாத நிலையில், எதிர்பார்த்ததற்கு மேலாக மக்கள் குவிந்த போது, அவற்றைச் சாதுரியமாக குறை எதுவுமின்றி நிகழ்த்தி முடித்த சாதனை விழா க்குழுவினைச் சேரும்.

எஸ். ராகவராஜ்

# அழகுக்கு அழகூட்டும் அலங்கார ஆரணங்குகளை அழகுபடுத்தும் அழகோவியமாய் திகழும் சிங்கப் பெண்

பூக்களின் நிறமும் அழகும் பூங்காவனத்தையே மங்களகரமாக ஜொலிக்க வைப்பது மாத்திரமல்ல மனதுக்கு புதுவிதத் தெம்பையும் அளிக்கும். அதுபோல் அழகை ஆராதிக்க கண்கள் துடிக்கும். அவ்வாறு அழகுக்கு அழகு ஊட்டி பெண்களை பேரும் புகழோடு பெருமை கொள்ள வைக்கும் விதத்தில் அலங்காரம் செய்து கொள்ள வழிகாட்டியாக இருக்கும் ஒரு பெண்ணைப் பற்றிய கதை இது.

பெண்களே பெருமைப்படும் விதத்தில் வாழும் இந்த மங்கை அழகில் ஒரு பேரிளம் கங்கை. மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் பூத்த இந்த காயத்ரி மனோஜ் உமா காந்த் பிள்ளை நாவலப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் வளர்ந்தது கல்வி கற்றது எல்லாம் நாவலப்பிட்டியில்தான். நாவலப்பிட்டி நல்லாயன் கல்லூரியிலும் புனித அன்றூஸ் கல்லூரியிலும் இவர் கல்வி கற்று உள்ளார். கல்விப் பொதுத் தராதர உயர்தரம் வரை கல்வி கற்று உள்ளார். இவர் லொஜிக் பாடத்தைதான் விரும்பி கற்று உள்ளார். இவர் அண்மையில் பெண்களே பொறாமை கொள்ளும் விதத்தில் பெருமையான ஒரு விடயத்தை செய்துள்ளார். Mrs. Most Photogenic Face of year அதாவது அதி சிறந்த போட்டோவுக்கே உரித்தான வதனத்துக்குரிய பட்டத்தை சுவீகரித்துக் கொண்டு அதற்கான விருதையும் வென்றுள்ளார். இந்தப் போட்டியை வட இந்தியாவில் உள்ள சர்வதேச நிறுவனமான Dazzling Diva International Beauty Pageant அமைப்பு நடத்தியுள்ளது. இந்தப் போட்டி அண்மையில் கொழும்பு பிசொப் கல்லூரியில் நடைபெற்றுள்ளது. இவர் தன்னை ஒரு அலங்காரப் பதுமையாக வைத்துக் கொண்டு மற்றைய பெண்களையும் மிகவும் எளிய இயற்கையான அழகு




சாதனப் பொருட்களைக் கொண்டு அழகுபடுத்தி வருகிறார். இவர் மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அழகு சாதனப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறார். இவர் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் இந்த அழகு சாதனப் பொருட்களால் உடலுக்கோ சருமத்திற்கோ உயிருக்கோ எந்தவித பாதிப்பும் இல்லை. உயர்தரம் வரை பயின்ற இவருக்கு திருமணம் செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதால் உயர் கல்வியை கற்கக் கூடிய வாய்ப்பு அற்றுப் போனது. திருமணம் முடித்த பத்து வருடங்களில் இவரது கணவர் கொடுத்த ஐயாயிரம் ரூபாய் பணத்தை வைத்துக் கொண்டு Powder Natural Face Pack தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தார். இன்று அது பெரும் விருட்சமாகி Avatar Herbals Pvt. Ltd ஆக வளர்ச்சி அடைந்து உள்ளது. கண்டி, சாந்தி மாவத்தையில் இவரது இந்த நிறுவனம் அமைந்துள்ளது. இவரது இந்த நிறுவனத்தில் Beauty Cosmetics, Cream, Face Cream, Shampoo, Conditioner, என இன்னோரன்ன விதவிதமான அலங்கார அழகு சாதனப் பொருட்கள் உள்ளன. இவரது வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணம் இவரது கணவரும் பிள்ளைகளும் என்று பெருமையுடன் கூறும் இவர் இவரது பெற்றோர்களும் மூதாதையர்களும் காரணம் என்றும் நினைவு கூர்ந்தார். இவரது கணவர் பொகந்தலாவ Tea Estate Senior Manager ஆக கடமையாற்றுவதாகவும் பிள்ளைகள் படிப்பதாகவும் தெரிவித்த இவர், "நீங்கள் செய்யுங்கள், எல்லாம் சரியாக வரும். வெற்றி பெறுவீங்கள் என்று கணவரும் பெற்றோரும் உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்தி வருவதாகவும் கூறினார். இவருக்கு





வர்த்தகத் துறை வரப்பிரசாதமாக அமையக் காரணம் இவரது பரம்பரையினர் வியாபாரத் துறையில் ஈடுபட்டதே ஆகும். இவரது பூட்டனார் கோவிந்தப்பிள்ளை கனகசபை கொழும்பிலே வியாபாரத் துறையில் கொடி கட்டிப் பறந்த ஒருவர். இதனால் இவரது பெற்றோர்களும் வியாபாரத்துறையில் நாட்டம் கொள்ள அடிகோலியது. இவருக்கு சமூக சேவையிலும் தீவிர ஈடுபாடு உண்டு. மக்களுக்கு உதவிகள் தேவைப்பட்ட கொரோனா காலத்தில் இவரது கணவர் பண்டாரவளை எஸ்டேட்டில் வேலை செய்து கொண்டிருந்ததால் இவருக்கும் பண்டாரவளையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளார். அதனைத்தொடர்ந்து வருடா வருடம் மலையக பாடசாலை பிள்ளைகளுக்கு பாடசாலை பைகள், பாடசாலை உபகரணங்கள் வழங்கத் தொடங்கினார். இப்போதும் பைகளையும் பாடசாலை உபகரணங்களையும் தொடர்ந்து வருடா வருடம் வழங்கி வருகிறார். இவரது இந்த சமூக சேவைப் பணிகளை பார்த்து பேராதனை இராமநாதன் கல்லூரி அண்மையில் நடத்திய விழாவொன்றில் இவரை பிரதம அதிதியாக அழைத்து கௌரவப்படுத்தியது.

இதுபோல் எதிர்வரும் செப்டெம்பர் 22ஆம் திகதி மலேசியா கோலாலம்பூரில் நடைபெறவுள்ள பெண்களின் அழகு அலங்கார விழாவொன்றுக்கு பிரதம அதிதியாக கலந்து கொள்ள அழைப்பு விடுத்துள்ளது.

அலங்கார அழகு சாதனப் பொருட்களைத் தயாரித்து ஆரணங்குகளை அழகுப்படுத்துவதில் அசத்தி வரும் இவரது திறனைக் கண்டும் இவரது அழகின் சிறப்பைக் கண்டும் இந்திய அமைப்பு இவரை இலங்கை மண்ணில் வைத்து கௌரவித்து பெருமை கண்டது. இன்றைய சூழலில் காற்றினால் சூழல் மாசுபடுவது போல் சருமங்களும் மாசுபடுவதால் இவற்றில் இருந்து பெண்கள் தங்கள் சருமங்களை பாதுகாத்துக் கொள்ள சருமத்துக்கு எந்தவிதமான தீங்கும் இல்லாத இயற்கை மூலிகைகளைக் கொண்ட அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்தத்தான் வேண்டும் என்கிறார். இவற்றை பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்ள பயன்படுத்த விட்டாலும் உடலை மாசுபடுவதில் இருந்து பாதுகாத்துக் கொள்ள பயன்படுத்த வேண்டும் என்கிறார்.





முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# ஆசிரியராக இருந்து சேவையாற்றுவது சிறப்பு –இலக்கியவாதி M.H.A ஹஸன்



பாய்ந்து வரும் மகாவலி கடலோடு சங்கமிக்கும், மருத நிலங்களும் தன்னகத்தே அமையப் பெற்ற வனப்பு மிகு கிண்ணியாவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட M.H.A ஹஸன் ஆசிரியர், உதவி அதிபர், ஆசிரிய ஆலோசகர், பேச்சாளர், நடிகர், எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர்." என் பேனா பேசியவை", "கிண்ணியாவை ஆண்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள்" ஆகிய இரு நூல்களின் சொந்தக்காரர். அவ்வப்போது பத்திரிகை, சஞ்சிகை போன்றவற்றுக்குக் கட்டுரைகள் எழுதி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது இலக்கியப் பணி தொடர வாழ்த்துகிறேன்.



**01. உங்களது பிறப்பிடம், வசிப்பிடம் குடும்ப நிலை என்பவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

நான் குட்டிக் கராச்சியில் முகம்மது கனிபா ஆமினா உம்மா தம்பதிகளுக்கு ஏழாவது பிள்ளையாக 1947.08.02ஆம் திகதி பிறந்தேன். எங்கள் குடும்பத்தின் பதின் நான்கு பிள்ளைகளில் ஏழு ஆண் பிள்ளைகள், ஏழு பெண் பிள்ளைகள். எங்கள் குடும்பம் பெரியது.

தற்போது கிண்ணியாவில் 6ஆம் வட்டாரத்தில் வசிக்கின்றேன். ஒரு சங்கீத ஆசிரியையை திருமணம் செய்து கொண்டேன். அவர் ஒரு சங்கீதப் பட்டதாரி. அத்துடன் சங்கீத வித்துவான். எங்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள். இவர்களுள் இருவர் விவசாய விஞ்ஞானத்தில் சிறப்பப் பட்டம் பெற்றவர்கள். மற்றவர் விஞ்ஞான சிறப்புப் பட்டதாரி. தற்போது மூவரும் ஆசிரியையாக கடமை புரிகின்றார்கள். எனது மனைவி இறந்துவிட்டார். நான் தற்போது பிள்ளைகளுடன் ஒன்றாக வாழ்ந்து வருகின்றேன்.

**02. நீங்கள் ஆசிரியராக, அதிபராக, ஆசிரிய ஆலோசகராக பல பதவிகளை வகித்துள்ளீர்கள். அவற்றுக்கான வேறுபாடுகளை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

ஆசிரியர் என்ற வகையில் கூறுவதனால் மாணவர்களுடன் பழகும்போது அவர்களது சூழல் அவர்களின் குடும்பப் பின்னணி அவர்களது பொருளாதார நிலை அவர்களது குடும்பத்தின் கல்வி நிலை என்பவைகளை நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு

ஏற்றவகையில் கல்வியைக் கற்பிக்க முடியும். நான் கல்விப் பொதுத் தராதர வகுப்பிற்கு சமூகக் கல்வி வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பித்துள்ளேன். க.பொ.த. உயர் தர வகுப்பிற்கு புவியியல், பொருளாதாரம் ஆகிய பாடங்களை கற்பித்து பல்கலைக்கழகங்களுக்கு அதிகமானமாணவர்களை அனுப்பியுள்ளேன். அதிபராக இருந்த போதிலும் பாடசாலைகளைப் பொறுப்பெடுத்து நடத்தவில்லை. காரணம் அரசியல். இருப்பினும் கிண்ணியா மத்திய கல்லூரியில் பிரதி அதிபராக கடமை புரிந்துள்ளேன். இதனை எனக்கு தந்தவர் கிழக்கு மாகாணத்தின் அப்போதைய கல்வி செயலாளர் தியாக ராஜா. பின்பு சமூகக் கல்வி வரலாறு ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகராக கந்தளாய் கோட்டத்திற்கு நியமித்து மாவட்டத்தின் தமிழ் மொழிப் பாடசாலைகள் எல்லாவற்றிலும் உரிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகராக நியமித்தார். இது ஆசிரியர்களுக்கு உரிய ஆலோசனை வழங்குவதுடன் மாணவர்களுக்கு மாதிரி வகுப்புக்கள் நடாத்தி அதனை ஆசிரியர்களை அவதானிக்கச் செய்வதாகும். இந்த ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் ஆகிய பணிகளை



நான் செய்த போதிலும் மாணவர்களுக்கு கற்பித்து அதன் பேறாக மாணவர்கள் சித்தியடைந்து பல்கலைக்கழகம் சென்று கற்று பட்டதாரிகளாக வெளிவரும் போது ஆசிரியராகிய நாம் பெருமிதம் அடைகின்றோம். நான் கற்பித்த மாணவர்கள் இன்று பேராசிரியர்களாக, நிருவாக அதிகாரிகளாக, திட்டமிடல் அதிகாரிகளாக இருக்கின்றார்கள். எனவே ஆசிரியராக இருந்து சேவையாற்றுவது சிறப்புடையது எனலாம்.

**03. பேச்சாளராக அறியப்பட்ட நீங்கள் நாடகத் துறையிலும் ஈடுபாடு உள்ளவராகக் காணப்படுகிறீர்கள். நீங்கள் எழுதி நடித்த முதல் நாடகம் எது?**

நான் படிக்கும் காலத்திலேயே பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்கள் பெற்றுள்ளேன். என்னை பேச்சாளனாக பேச பயிற்சி அளித்து பழக்கிவிட்டவர். ஆசிரியர் ஞு.ஆ. கனிபா க.பொ.த. சா. தரப் பரீட்சை சித்தியடைந்த பின்னர் வேலையற்று இருந்தபோது சின்ன கிண்ணியாவில் ஜனாப் ஜமால்தீன் ஆசிரியரின் தலைமையில் மறுமலர்ச்சி மன்றம் தொடங்கி பல போட்டிகளை நடாத்தினார்கள். அப்பொழுது பொது மக்களுக்கான திறந்த நாடகப் போட்டி நடாத்தினார்கள். அப்போட்டியில் 'அறியாமை' என்ற சமூக நாடகத்தை நான் எழுதினேன். அதில் பலர் நடித்தோம். நான் சமூக சேவை செய்யும் இளைஞனாக நடித்தேன். பல நாடகங்கள்



போட்டியில் பங்குபற்றின. எழுத்தாளர், இலக்கியவாதி எஸ். பொன்னுத்துரை குழுவினர் நடுவர்களாக கடமையாற்றினர். அப்போட்டியில் நான் எழுதி நடித்த 'அறியாமை' என்ற நாடகம் முதலிடத்தைப் பெற்றது. அதில் நடித்தவர்களில் நானும், முனைச்சேனை அசீஸ் மௌலவியும், ஞு.மு. மகரூபும் தற்போது உயிருடன் இருக்கின்றோம்.



**04. நீங்கள் ஆசிரியர், அதிபராக சேவையாற்றிய காலத்தில் எதிர் நோக்கிய சவால்கள் எவை? அது பற்றிக் கூற முடியுமா?**

நான் ஆசிரியராக சேவையாற்றியபோது பல சவால்களை எதிர் கொண்டுள்ளேன்.

தி / கிண் / குறிஞ்சாக்கேணி அறபா மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரம் தொடங்கப்பட்டபோது கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக காணப்படனர். நான் பொருளாதாரம், புவியியல் ஆகிய பாடங்களையும், எம். ஜமால்தீன், இஸ்லாம் பாடத்தையும் எம்.ஏ. அசீஸ் தர்க்கவியலும் கற்பித்தோம். அப்போது உரிய ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் உயர் வகுப்பை மத்திய மகா வித்தியாலயத்திற்கு அனுப்ப வேண்டும் என மூதூர் கோட்டக்கல்வி அதிகாரி வேண்டிக் கொண்டார். ஆனால் பெற்றோரும் மாணவர்களும் இதற்கு இணங்கவில்லை.

அப்போது எனது பொறுப்பில் கோட்டக்கல்வி அதிகாரி ஏ.வி. முகம்மது உயர் தர வகுப்பை விடுவதாக கூறி சென்றுவிட்டார். இரவு, பகலாக சனி, ஞாயிறு தினங்களில் கூட கற்பித்து மூன்று மாணவர்களைப் பல்கலைக்கழகம் சென்று படிக்கச் செய்தோம்.

இன்று அவர்கள் ஆசிரியர்களாகக் கடமை புரிகின்றார்கள். அதில் ஆர். நசீம் குறிஞ்சாக்கேணி கல்விப் பகுதிக்கான கல்வி அதிகாரியாகக் கடமை புரிகிறார். இவ்வாறு பல சவால்களை எதிர் நோக்கியுள்ளேன்.



தொடர் 7ஆம் பக்கத்தில்....

கிண்ணியா ஜெனீரா
தௌபீக் ஹைருல் அமான்

# லயன்ஸ் கிளப் தலைவராக கலைஞர் சுதாகர் தெரிவு





லயன்ஸ் கிளப் கொழும்பு ஓஷன் சிட்டி 306 B2வின் நிர்வாகிகள் கூட்டம் அண்மையில் கொழும்பிலுள்ள ஜப்பான் கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இதில் இவ்வாண்டுக்கான புதிய தலைவராக தொழில் அதிபரும் சினிமா கலைஞருமான பாலசுப்பிரமணியம் சுதாகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இவர் நுவரொலியா மாவட்டம் ராகலையை பிறப்பிடமாக கொண்டவர். வியாபாரத்தில் படிப்படியாக வளர்ந்து கொழும்பில் தற்போது தொழில் அதிபராகவும் சிறந்த சினிமா நடிகராகவும் திகழ்பவர்.

# சர்வதேச விருது வென்ற பாடல்







இரை தேடும் பறவைகள் பாடல், 2024 சிறந்த பாடலுக்கான மலேஷிய சர்வதேச விருதை பெற்றுக்கொண்டது. கோலாலம்பூர் பல்கலைகழக கலாசார அகடமி அதி உயர் விருதான பாரத சக்ரா கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி அழகு பார்த்து மலேஷிய சிங்கப்பூர் இந்திய கலைஞர்கள் பலரும் பல விருதுகளை பெற்றுக்கொண்டார்கள்.

## ஆசிரியராக இருந்து சேவையாற்றுவது.... (06 ஆம் பக்க தொடர்ச்சி)

***05. உங்களுடைய நாடகம் சமூகத்தில் எத்தகைய தாக்கத்தை செலுத்தியது என்பதனை இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்.***

நான் படித்து வேலையற்று இருந்தபோது எழுதி நடித்த நாடகம் 'அறியாமை' இந் நாடகம் மக்கள் மத்தியில் சிந்திக்கக்கூடிய பகுத்தறிவுப் புரட்சியை ஏற்படுத்தியது. காரணம் போடியாரின் மனைவி தன் கழுத்தில் இருக்கும் அட்டியலை குளிக்கச் செல்லும்போது அடுக்குப் பெட்டிக்குள் வைத்து விட்டுச் சென்றுவிடுகிறாள். அதே வேளை அந்த நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நடிக்கும் இளைஞனின் தலைமையில் மீலாதுன் நபி விழா நடாத்தவென பண வசூலுக்கு இளைஞர்கள் போடியாரின் வீட்டுக்கு வருகிறார்கள். வசூல் பெறுகிறார்கள். சென்றுவிட்டார்கள் போடியாரின் மனைவி சில நாட்கள் கழித்து நகையை தேடிய போது நகைகளைக் காணவில்லை.

ஆகவே வசூலுக்கு வந்தவர்கள் தான் எடுத்திருக்க வேண்டும் என எண்ணி மந்திர வாதியை நாடுகின்றார்கள் போடியார் வீட்டார். மந்திரவாதி பேயாடி வசூலுக்கு வந்த இளைஞன்தான் எடுத்துள்ளான் எனக் கூறுகின்றான். அந்த இளைஞனை பொலிஸில் ஒப்படைக்கின்றனர்.

இவையெல்லாம் நடந்த பின்பு கறிசமைக்கவென அடுக்குப் பெட்டிக்குள் உள்ள பலசரக்கு சாமான்களை எடுக்க முயன்றபோது போடியாரின் மனைவி நகையைக் காண்கின்றாள். பின்பு போடியார் இளைஞனிடம் மன்னிப்பு கேட்கின்றார். இந்த நாடகத்தை எஸ். பொன்னுத்துரை மிகவும் பாராட்டி பரிசில்களை வழங்கி சந்தோசப்பட்டார். எங்கள் நாடகமான 'அறியாமை' முதலாவது பரிசைப் பெற்றது. இந்த நாடகம் பற்றிய கதையே எங்கும் பல நாட்களாக பேசப்பட்டன.

நான் குறிஞ்சாக்கேணி அறபா மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் போது 'அழியாச் சொத்து' என்ற ஒரு நாடகத்தை எழுதி மாணவர்களைக் கொண்டு நடிக்கச் செய்தேன். இந்த நாடகம் கல்வியின் பெருமையை பறைசாட்டியது. இதன் மூலம் குறிஞ்சாக்கேணியின் கல்வியில் ஒரு விழிப்பு ஏற்பட்டது எனலாம்.

***06. இன்றைய இளந்தலை முறையினருக்கு 'கிண்ணியாவை ஆண்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் என்ற நூல் வரப் பிரசாதமாக அமைந்துள்ளது. இவர்கள் பற்றிய தகவல்களை***

தேடிப்பிடிப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்கி இருப்பவர்கள் அவை பற்றிக் கூறுங்கள்?

இதில் குறிப்பிடப்பட்ட பல தவிசாளர்கள் தற்போது உயிருடன் இல்லை அவர்கள் பற்றிய தகவல்கள் அவர்களின் புகைப்படங் கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக மாதக்கணக்கில் அவர்களின் உறவினர்களிடம் சென்ற போதிலும் பெற்றுக் கொள்வது மிகவும் சிரமமாக இருந்தது.

இதனால் சிலருடைய புகைப்படங்கள் இல்லாமலேயே அவர்கள் பற்றிஎழுத வேண்டி வந்தது. சிலர் தங்களின் தகப்பனின் விபரங்களைத் தந்து உதவிசெய்ய மறுத்து விட்டனர். ஆலங்கேணி

தவிசாளராக இருந்த ஐயூப்பின் பிள்ளைகளான மகன்மார்களிடம் மாதக் கணக்கில் சென்றும் தகவல்கள் கிடைக்கவில்லை. எனவே அதனை புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளேன்.

***07. நூல் வெளியீட்டின்போது உங்களுக்கு ஏற்பட்ட மறக்க முடியாத அனுபவங்களை நேயர்களுடன்***

***பகிர்ந்தளியுங்கள்?***

நான் 'என் பேனா பேசியவை' என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலையும் 'கிண்ணியாவை ஆண்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள்' என்ற வரலாற்று ஆவண நூலையும் எழுதி

வெளியிட்டுள்ளேன். அதன் போது பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன். நூல் வெளியீடு என்பது பிரசவ வேதனைக்கு ஒப்பானது என பொதுவில் கூறுவார்கள். இரவு பகலாக எவ்வித தூக்கமுமின்றி நேரத்திற்கு உணவு உட்கொள்ள முடியாத நிலை ஏற்படும் எப்பொழுதும் அதே சிந்தனையே உள்ளத்தில் ஊசலாடும். அதிலும் நூலை அச்சிட்டு வெளியிடுவதில் தற்காலத்தில் பெரும் கஷ்டம் பெரும் பிரச்சினையாக அமையும். இவை அனைத்தையும் தாண்டி நூல் வெளியீட்டின்போது நிம்மதி பெருமூச்சு விட்டபோது எதிர்பார்த்தளவுக்கு மக்கள் சமூகமளித்திருக்க மாட்டார்கள். புத்தகம் எழுதி அச்சிட்டு வெளியீட்டுச் செலவை பார்த்தால் சேர்ந்த பணம் மிகக் குறைவாகவே இருக்கும். எவர் புத்தகம் வெளியிட்டபோதிலும் செலவு செய்த பணத்தை கூட பெற முடியாத நிலையே காணப்படும்.

எனது இரண்டாவது புத்தகமான 'கிண்ணியாவை ஆண்ட உள்ளூராட்சித் தலைவர்கள்' என்ற நூலை வெளியிட்டபோது இறந்துபோன ஆரம்பகால தவிசாளர்களின் புகைப்படங்களைப் பெற்றுக் கொள்வதில் மிகவும் சிரமமப்பட்டேன். உரிய தகவல்களை கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணம் அவர்களின் உறவினர்களுக்கு கிஞ்சித்தும் எற்படாத நிலையை நான் கண்டேன். எடுத்த

முயற்சியை இடையில் விட்டுவிடக்கூடாது என்ற துணிவுடனேயே முயன்று புத்தக வெளியீட்டை

வெற்றிகரமாக நடாத்தி முடித்தேன். 'போற்றுவார் போற்றற்றும் புழுதிவராரி தூற்றுவோர் தூற்றற்றும் ஏற்றதொரு கொள்ளையை எடுத்துச் செல்வேன். எவர் வரினும் நில்லேன்' என்ற பாரதிதாசனின் வரிகளுக்கு ஏற்ப செயற்பட்டு புத்தக வெளியீட்டை நடாத்தி முடித்தேன். ஆகவே,

எத்தனை இடையூறுகள் வந்த போதிலும் புத்தக வெளியீடு செய்ய இருப்பவர்கள் சோர்ந்து விடாது 'துணிவே துணை' என செயற்பட்டு விறு நடை போட்டு வெற்றியடைய வேண்டும்.

***08. வாசிப்பு அருகிவரும் இக்காலத்தில் நூல் வெளியீடு பற்றிய உங்களது கருத்து என்ன?***

உண்மையிலேயே வாசிப்புப் பழக்கம் பிள்ளைகளிடத்திலும், சிறுவர்களிடத்திலும் மிகக்குறைந்து உள்ளதை நாம் நன்றாகக் காண்கின்றோம். வளர்ந்தவர்களிடத்தில் வாசிப்பு குறைந்து வருவதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் வாசித்துப் பழகி அதன் மூலம் தங்கள் அறிவையும்,

சிந்திக்கும் திறனையும் வளர்த்துக் கொண்டவர்களும் இருக்கத் தான் செய்கின்றார்கள். சிலருக்கு

ஏதாவது ஒரு புத்தகத்தை வாசிக்காவிட்டால் எதையோ வாழ்வில் இழந்துவிட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்படுவதை நாம் காண்கின்றோம். ஆகவே புதுப்புது கருத்துக்களும், சிந்தனையைத் தூண்டும் விடயங்களும் வரலாற்றை வெளிக்கொண்டுவரும் புத்தகங்களும், எழுதி வெளியாக்கும்போது வாசிக்கும் வாசகர்களை உருவாக்க முடியும் என்பது எனது கருத்தாகும்.

***09. 'என் பேனா பேசியவை' என்ற நூலின் மூலம் பல சமூக நிகழ்வுகளை ஆணித்தரமாக எடுத்தியம்பினர்கள் அடுத்த நூல் வெளியீடு பற்றி எத்தகைய கருத்தாடல்களை வெளிட***

***ஆயத்தமாகி வருகிறார்கள்?***

எமது திருமலை மாவட்ட தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் செய்த சேவைகள் எல்லாம் காலத்தால் அழிந்து போனதை நான் உணர்கிறேன். ஆகவே சுதந்திரத்திற்கு பின் மக்கள் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றம் சென்று அவர்கள் செய்த சேவைகளை நூல் வடிவில் வெளிக்கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தில் மூழ்கியவனாக சிந்திந்துக் கொண்டு இருக்கிறேன். இறைவன் நாடினால் இதனை செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

செந்தூரம்



# ரூபாய் 250 கோடி பட்ஜெட் படத்தை தயாரிக்க சிம்பு தயார்




ரூபாய் 250 கோடி பட்ஜெட் படத்தை சிம்பு தயாரிக்க இருப்பதாக தங்களை தாங்களே பத்திரிகையாளர்கள் என்று கூறிக்கொள்ளும் சில யூடியூபர்கள் கதை அளந்து விடுவது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சிம்பு நடிப்பில் தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் உருவாக இருந்த 'எஸ்டிஆர் 48' என்ற படத்தை கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிப்பதாக இருந்தது. ஆனால் சில காரணங்களால் இந்த படத்தை ராஜ் கமல் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கவில்லை என்றும் இதனை அடுத்து சிம்பு நானே இந்த படத்தை தயாரிக்கிறேன் என்று முன்வந்துள்ளதாகவும் சில யூடியூபர்கள் தெரிவித்துள்ளனர்.

250 கோடி ரூபாய் பட்ஜெட் படத்தை தயாரிக்கும் அளவுக்கு சிம்பு அவ்வளவு பெரிய சொத்து மதிப்பு உள்ளவரா? என்ற கேள்வியை திரையுலகில் உள்ளவர்களே எழுப்பி வருகின்றனர். மேலும் சிம்புவின் படம் அதிகபட்சமாக 100 கோடி ரூபாய் தான் வசூல் செய்திருக்கிறது என்றும் அந்த படம் 'மாநாடு' என்றும் அப்படி இருக்கும்போது 250 கோடி ரூபாய் சிம்பு நடிக்கும் படத்தை தயாரிக்க யார் முன்வருவார்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த நிலையில் தற்போது வந்துள்ள தகவல்படி இசைஞானி இளையராஜாவின் வாழ்க்கை வரலாறு திரைப்படத்தை தயாரிக்கும் மூன்று நிறுவனங்கள் தான் இந்த படத்தை தயாரிக்க முன் வந்திருப்பதாகவும், சிம்பு இந்த படத்தில் ஒரு பார்ட்னராக மட்டும் இணைந்து கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சிம்பு தனது சம்பளத்திற்கு பதிலாக இந்த படத்தின் பாட்னராக இணைய வாய்ப்பு இருப்பதாகவும் இதைத்தான் சில யூடிபர்கள் சிம்பு சொந்தமாக இந்த படத்தை தயாரிக்கிறார் என்று கதை அளந்து வருகிறார்கள் என்றும் விபரம் அறிந்த திரையுலக வட்டாரங்கள் கூறுகின்றன.

20 வருடங்களுக்கு முன் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் அதன் பின் சில படங்களில் நடித்த நிலையில் தற்போது ஸ்காட்லாந்தில் பட்டம் பெற்றுள்ள புகைப்படத்தை தனது சமூக வலைதளத்தில் பதிவு செய்த நிலையில் அவருக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகிறது.

விக்ரம் நடித்த 'காசி' என்ற திரைப்படம் கடந்த 2001 ஆம் ஆண்டு வெளியான நிலையில் இந்த படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடித்தவர் சனுஷா, அதன்பின் அவர் தமிழில் 'சுந்தரா டிராவல்ஸ்' 'பீமா' 'ரேணிகுண்டா' 'நாளை நமதே' 'எத்தன்' 'அலெக்ஸ் பாண்டியன்' உள்ளிட்ட படங்களில் நடித்தார். சசிகுமார் நடித்த 'கொடிவீரன்' திரைப்படத்தில் அவருடைய தங்கை கேரக்டரில் நடித்திருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் தற்போது கூட அவர் இரண்டு மலையாள படங்களில் நடித்து வரும் நிலையில் ஸ்காட்லாந்தில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் குளோபல் மென்ஸ் ஹெல்த் அண்ட் சொசைட்டி மாஸ்டர் ஆஃப் சயின்ஸ் படிப்பை இரண்டு வருடமாக அவர் படித்து வந்த நிலையில் தற்போது அவர் படிப்பை முடித்து பட்டம் பெற்றுள்ளார்.

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட புகைப்படத்தை அவர் தனது இன்ஸ்டாகிராமில் பதிவு செய்துள்ள நிலையில் அந்த புகைப்படம் வைரல் ஆகி வருகிறது. இரண்டு வருடங்களாக நான் வீட்டை மிஸ் பண்ணினேன், அழுதேன், தூக்கம் இல்லாமல் படித்தேன், சில பார்ட் டைம் வேலைகளையும் செலவுக்காக பார்த்தேன், கடினமான பணி, உடல் நல குறைவு, மன அழுத்தம் ஆகிய அனைத்தையும் கடந்து இன்று பட்டம் பெற்றுள்ளேன். எனக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி' என்று தெரிவித்துள்ளார். இந்த பதிவு தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

# 20 வருடங்களுக்கு முன் குழந்தை நட்சத்திரம்..

## இன்று ஸ்காட்லாந்தில் பட்டம்



ஷூட்டிங் ஸ்பாட்டில் குளிக்க மினரல் வாட்டர் கேட்ட பிரபல நடிகை!

இந்திய திரை உலகில் பிரபலமான நடிகையாக கலக்கிக் கொண்டிருப்பவர் தான் பிரியங்கா சோப்ரா. இவரது உறவுக்கார பெண்ணான மீரா சோப்ராவும் ஒரு நடிகை தான்.

தமிழில் எஸ்.ஜே சூர்யா இயக்கி ஹீரோவாக நடித்த அன்பே ஆருயிரே படத்தின் மூலம் மீரா சோப்ரா ஹீரோயினாக அறிமுகமானார்.

அதன் பின்பு லீ, ஜாம்பவான், காளை, ஜெகன் மோகினி, மருதமலை உள்ளிட்ட படங்களில் நடித்தார். இதில் மருதமலை படத்தைத் தவிர மத்த படங்கள் எல்லாமே பிளாப் ஆனது. இதனால் தெலுங்கு, கன்னட பக்கம் நடிக்க ஆரம்பித்து விட்டார்.

அதன் பின்பு ஒரு சில படங்களில் மட்டுமே நடித்த இவர், 41 வயதில் திருமணம் செய்தார். இவருடைய திருமணம் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. அவர் தனது காதலரான தொழில் அதிபர் ரக்ஷித் கெஜ்ரிவாலை காதலித்து கரம் பிடித்தார்.

இந்த நிலையில், அவர் தமிழ் சினிமாவில் பிஸியாக நடித்த போது அவரது குணாஅம்சம் பற்றி பிரபல இயக்குனர் ஒருவர் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளார்.

அதாவது ஜாம்பவான் படத்தில் நடித்த போது குற்றால அருவியில் அவர் குளிக்கும் படியான காட்சி ஒன்று படமாக்க முடிவு எடுத்துள்ளார்கள். அதற்காக டேங்க் ஒன்றில் தண்ணீரை நிரப்பி மீரா சோப்ராவை நடிக்க அழைத்தார்களாம்.

அங்கு வந்த பார்த்த அவர் ஐயையோ இந்த தண்ணீரில் எல்லாம் நான் குளிக்க மாட்டேன் எனக்கு மினரல் வாட்டர் வேணும் என கேட்டு அடம் பிடித்துள்ளார்.

12 ஆயிரம் லிட்டர் பிடிக்கும் அந்த டேங்கில் எப்படி மினரல் வாட்டர் நிரப்புவது என இயக்குனர் கடுப்பாகி உள்ளதோடு அந்த விஷயம் தயாரிப்பாளர் காதுக்கு சென்றுள்ளது. அவர் ஏற இறங்க பார்த்துவிட்டு அப்படியெல்லாம் பண்ண முடியாது என்று சொல்லிவிட்டாராம். இதனால் கோபித்துக் கொண்ட மீரா சோப்ரா ஷூட்டிங்கை விட்டுக்கிளம்பி சென்று விட்டாராம் என தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

# ஷூட்டிங் ஸ்பாட்டில் குளிக்க மினரல் வாட்டர் கேட்ட பிரபல நடிகை!



# தனுஷ் கெஞ்சி கேட்டும் முடியாது என சொன்ன சுதா கொங்கரா..



சுதா கொங்கரா இயக்கத்தில் உருவாக இருக்கும் அடுத்த படத்தில் நடிக்க தனக்கு வாய்ப்பளிக்கும் படி தனுஷ் கெஞ்சி கேட்டதாகவும் ஆனால் அவரது கோரிக்கையை ஏற்காமல் சிவகார்த்திகேயனை 'புறநானூறு' திரைப்படத்தில் சுதா கொங்கரா ஒப்பந்தம் செய்து விட்டதாகவும் வெளிவந்திருக்கும் தகவல் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

சுதா கொங்கரா இயக்கத்தில் சூர்யா நடிப்பில் உருவாக இருந்த 'புறநானூரு' திரைப்படத்தின் ஆரம்பகட்ட பணிகள் தொடங்கிய நிலையில் திடீரென சூர்யா இந்த படத்தில் இருந்து விலகியதாக அறிவித்தார். அதுமட்டுமின்றி அவர் செலவழித்து தொகையும் வேண்டாம் என்று சொல்லிவிட்டதாகவும் இந்த படத்தை யாரை வேண்டுமானாலும் வைத்து சுதா கொங்கரா இயக்கிக் கொள்ளலாம் என்று என்ஓசி சான்றிதழ் கொடுத்து விட்டதாகவும் செய்திகள் வெளியானது.



இந்த நிலையில் தான் சூர்யா நடிக்க இருந்த கேரக்டரில் நடிக்க தனுஷ் மற்றும் சிவகார்த்திகேயன் ஆகிய இருவரையும் சுதா கொங்கரா அணுகியதாகவும், தனுஷுக்கு இந்த படத்தில் நடிக்க மிகவும் விருப்பம் இருந்தது என்றும் ஆனால் அதே நேரத்தில் ஏற்கனவே இரண்டு வருடத்திற்கு அவர் கமிட் ஆகி விட்டதால் எனக்காக இரண்டு வருடங்கள் வெயிட் பண்ணுங்கள் இந்த படத்தை நாம் கண்டிப்பாக செய்வோம், இந்த படத்தில் நான் நடிக்க மிகுந்த ஆவலோடு இருக்கிறேன்' என்று சுதா கொங்கராவிடம் கூறியதாகவும் தெரிகிறது.

ஆனால் இரண்டு வருடங்கள் தன்னால் காத்திருக்க முடியாது என்று சொன்ன சுதா கொங்கரா இப்போது உடனே நடிப்பதாக இருந்தால் நடியுங்கள் அல்லது நான் வேறு நடிகரை பார்த்துக்கொள்கிறேன் என்றுதான் கூறியதாகவும் இதனை அடுத்து சிவகார்த்திகேயனை ஒப்பந்தம் செய்து விட்டதாக கூறப்படுகிறது.சுதா கொங்கராவிடம் இந்த படத்தில் நடிக்கிறேன் என்று தனுஷ் தானே கீழே வந்து கெஞ்சி கேட்டும் அவர் சம்மதிக்கவில்லை என்ற தகவல் கோலிவுட் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை என்றாலும் சுதா கொங்கரா திரைப்படத்தில் நடிக்காமல் போனது தனுஷூக்கு கடும் அதிருப்தி என்பது மட்டும் உறுதியாக தெரிகிறது.

# பிரபு தேவாவுடன் ஜோடி சேர்ந்த சீரியல் நடிகை!





விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் பாக்கியலட்சுமி சீரியலில் ஆரம்பத்தில் ராதிகா கேரக்டரில் நடித்து பிரபலமானவர்தான் நடிகை ஜெனிபர். இவர் தற்போது ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கார்த்திகை தீபம் என்ற சீரியலில் நடித்து வருகிறார்.

இவர் தமிழில் மட்டுமல்லாமல் தெலுங்கு, கன்னட மொழி படங்களிலும் குணச்சித்திர கேரக்டரில் நடித்து உள்ளார். இவருடைய தந்தை ஒரு பிரபலமான நடன இயக்குனர்.

ஸ்ரீகாந்த் சினேகா நடிப்பில் வெளியான பார்த்திபன் கனவு என்ற படத்தில் வாடி மச்சினிச்சி என்ற பாடலுக்கு இவர் ஆடிய குத்தாட்டம் மிகவும் வைரலானது.

அத்துடன் கலர்ஸ் தமிழில் இவர் நடிப்பில் வெளியான அம்மன் சீரியல் பெரிய அளவில் ரீச் ஆனது. அதேபோலவே பாக்கியலட்சுமி சீரியலிலும் இவரது கேரக்டர் நல்ல வரவேற்பு பெற்றது.

இந்த நிலையில், தற்போது நடிகரும், நடன இயக்குனருமான பிரபு தேவாவுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றை தனது இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட்டுள்ளார் நடிகை ஜெனிபர்.

மேலும் அதில் பிரபு தேவாவுடன் படமொன்றில் நடிப்பதற்கு அவர் கமிட்டாகி உள்ளார். இதனை தற்போது போட்டோவுடன் குறிப்பிட்டுள்ளார். இதற்கு ரசிகர்கள் பலரும் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றார்கள்.

மேலும் அவர் ஜோடியாக போட்டோ போட்டதை பார்த்து ஒரு வேளை பிரபு தேவாவுக்கு ஜோடியாக நடிக்க போறாங்களோ என கமெண்ட் பண்ணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பிரபு தேவாவுடன் ஜோடி சேர்ந்த சீரியல் நடிகை!

சுந்தர் சி நடித்து இயக்கிய 'அரண்மனை 4 ' திரைப்படம் சமீபத்தில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பு பெற்றது
என்பதும் இந்த படம் உலகம் முழுவதும் 100 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து சாதனை செய்தது என்பது தெரிந்
தது. இந்நிலையில் சுந்தர் சி அடுத்த படம் என்பது அநேகமாக 'அரண்மனை' ஐந்தாம் பாகமாக இருக்கும் அல்லது
'கலகலப்பு' படத்தின் மூன்றாம் பாகமாக இருக்கும் என்று கூறப்பட்டது. இதற்கான திரைக்கதை அமைக்கும் பணி
களையும் சுந்தர் சி தொடங்கி விட்டதாகவும் கூறப்பட்டது.
ஆனால் தற்போது சுந்தர் சி, வடிவேலுவை வைத்து ஒரு திரைப்படத்தை இயக்க இருப்பதாகவும் இந்த படத்
தில் சுந்தர் சி நாயகனாக நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. சுந்தர் சி மற்றும் வடிவேலு ஆகிய இருவருக்கும்
இடையே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் மனக்கசப்பு ஏற்பட்ட நிலையில், அதன்பின் நடந்த பேச்சுவார்த்
தையில் உடன்பாடு ஏற்படாததால் தற்போது இருவரும் பல ஆண்டுகளாக இணையவில்லை.இந்த நிலையில்
வடிவேலுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி தற்போது மீண்டும் சுந்தர் சி, வடிவேலு ஆகிய இருவரும் சேர்ந்து
ஒரு படத்தில் இணைந்துள்ளனர். இந்த படத்தின் நாயகனாக சுந்தர் சி நடித்து இயக்க உள்ளதாகவும், நாயகி
யாக தமன்னா நடிக்க இருப்பதாகவும் வடிவேலு இந்த படம் முழுவதும் வரும் ஒரு முக்கிய கேரக்டரில் நடிக்க
இருப்பதாகவும் மற்ற நடிகர் நடிகைகள் தேர்வு நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.
சுந்தர் சி அடுத்த படத்தில் தமன்னா நடித்த இருப்பதாக வெளியாக செய்தியை அடுத்து இந்த படத்திலாவது
தமன்னாவின் பாடலை ஆரம்பத்திலேயே போட்டு விடுங்கள் என்றும் 'அரண்மனை 4' படம் போல் கடைசி
யில் டைட்டிலின் போது போட வேண்டாம் என்றும் ரசிகர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.
ஏற்கனவே 'ஜெயிலர்' திரைப்படத்திலும் தமன்னாவின் பாடலை பிட்டு பிட்டாக நெல்சன் வைத்து சொதப்
பிவிட்டார் என்றும் இந்த முறையாவது தமன்னா பாடல் சொதப்பாமல் வெளிவர வேண்டும் என்றும் ரசிகர்கள்
கூறி வருகின்றனர்.

# சுந்தர் சி அடுத்த படத்திலும் தமன்னா..



# லொஸ்லியாவுக்கு ரம்பானு நினைப்பா

பிக் பாஸ் நிகழ்ச்சியில் பங்கு பற்றியதன் மூலம் பிரபலமானவர் தான் லொஸ்லியா மரியநேசன். இவர் இலங்கையை சேர்ந்தவர் என்றாலும் தனது கேரியருக்காக சென்னை வந்தார்.

பிக் பாஸ் நிகழ்ச்சிக்கு பின்னர் ஒரு சில படங்களில் நடித்த லொஸ்லியாவுக்கு அவை தோல்வி படங்களாகவே அமைந்தன. ஆனாலும் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றார்.

அடிக்கடி சமூக வலைத்தளங்களில் ஆக்டிவாக தனது புகைப்படங்களை வெளியிடும் லொஸ்லியா, பார்ப்பதற்கு மிகவும் க்யூட் ஆகவும் படு கிளாமராகவும் இருப்பார்.

இந்த நிலையில் தற்போது அழகிய ஆடையில் சற்று கவர்ச்சி காட்டி வெளியிட்ட புகைப்படங்கள் வைரல் ஆகி வருகின்றன.

இதை பார்த்த ரசிகர்கள் லொஸ்லியாவுக்கு ரம்பானு நினைப்பா என கமெண்ட் பண்ணி வருகிறார்கள்.



# பிள்ளைகளை பொறுப்புள்ளவர்களாக மாற்றும் விஷயம்

பொதுவாக, ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பழக்க வழக்கங்கள் அனைத்துமே அவர்கள் பார்க்கும் விஷயங்கள் மூலமே கற்றுக் கொள்ளப்படுகின்றன. எனவே, அவர்களை இந்த வயதுக்குள் செம்மைப்படுத்துவதுதான் சிறந்த வழி. இந்த வயதுக்குள் அவர்களிடம் நல்லொழுக்கப் பண்புகளை வளர்த்து விட வேண்டியது அவசியமும் கூட.

‘தற்கால குழந்தைகள் பெரியவர்களை மதிப்பதே இல்லை’ என்று அனைவரும் புலம்புகிறோம். இது எங்கிருந்து தொடங்குகிறது என்று கவனித்தால் குழந்தைகள் பெற்றோர்கள் பேசுவதை மட்டும் கவனிப்பதில்லை, பெற்றோர்கள் யாரிடமெல்லாம், எப்படி எல்லாம் பேசுகிறார்கள் என்பதையும் கவனிக்கிறார்கள்.

எனவே, நாம் வீட்டுப் பெரியவர்களிடம், பெற்றோர்களிடம் கோபமாகப் பேசுவது, கத்துவது, அலட்சியப்படுத்துவது, வேலையாட்களிடம் அதிகாரமாகவும், மரியாதை குறைவாகவும் நடந்துகொள்வது, பேசுவது என்று அனைத்தையும் கவனிக்கும் குழந்தைகள் எப்படி மற்றவர்களுக்கு மரியாதை கொடுப்பார்கள் என்று நினைக்க வேண்டும். எனவே, நாம் குழந்தைகள் முன்பு பண்பான வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு எதையும் சொல்லிக்கொடுத்து அவர்கள் கற்றுக்கொள்வதை விட, பார்க்கும் விஷயங்கள் மூலம்தான் அதிகம் கற்றுக்கொள்கிறார்கள் என்பதால் அவர்கள் என்ன நல்ல பழக்கவழக்கங்களை கடைபிடிக்க வேண்டும் என்று எண்ணுகின்றோமோ அவற்றை முதலில் நாம் பின்பற்ற வேண்டும்.

முற்காலத்தில் தாத்தா, பாட்டியுடன் வளர்ந்த குழந்தைகள் அவர்களிடம் நீதிக் கதைகள் கற்றும், வீட்டில் உள்ள அத்தை, சித்தப்பா, பெரியப்பா குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடியதால் விட்டுக்கொடுக்கும் குணமும், காலையில் விளையாடும்போது சண்டையிட்டுக் கொண்டு, மாலையில் சமாதானம் ஆகும் குழந்தைகளுக்கு கோபமும், ஈகோவும் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். ஆனால், இப்போதைய குடும்பங்களில் நன்றாக சம்பாதித்து குழந்தைகளை நன்றாக வளர்ப்பதாக எண்ணிக் கொண்டிருக்கும் பெற்றோர்களால் அவர்கள் குழந்தைகளுக்காக அதிக நேரம் செலவிட முடிவதில்லை.

குழந்தைகள் நன்றாக நல்ல பழக்க வழக்கங்களுடன் வளர வேண்டும் என்றால் பெற்றோர்கள் குழந்தைகளுடன் அமர்ந்து நிறைய பேசவும், அவர்களுடன் நேரத்தை செலவிடவும் தயங்கக் கூடாது. பெற்றோர்கள் வேலையிலிருந்து வந்ததும் எல்லோரும் ஹாலில் அமர்ந்து கொண்டு இன்றைய நாள் எப்படி இருந்தது, என்னவெல்லாம் நடந்தது என்று பேசிக்கொண்டால் இதைப் பார்த்து வளரும் குழந்தைகளும் நம்மிடம் எல்லா விஷயங்களையும் பகிர ஆரம்பிப்பார்கள்.

தினமும் ஒரு நாளைக்கு ஒரு முறையாவது அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்பொழுது டிவி பார்ப்பதோ, செல்போன் பார்ப்பதோ இல்லாமல் ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசியபடி உண்பதுதான் நல்லது. குழந்தைகள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுத்து நம் கஷ்டம் அவர்களுக்குத் தெரியக்கூடாது என்று நினைப்பது மிகவும் தவறு. குழந்தைகளுக்கு நம் வீட்டு நிதி நிலைமை நன்கு புரிய வேண்டும்.

அப்பொழுதுதான் அவர்கள் நம்முடைய எந்த செயலுக்கும் ஒத்து வருவார்கள். இல்லை என்றால் நம்முடைய வசதி தெரியாமல், ‘கார் வாங்கு, பைக் வாங்கு, ஸ்கூலுக்கு காரில் கொண்டு விடு’ என்று விவரம் தெரியாமல் பேசுவார்கள். எனவே, வீட்டின் நிதி நிலைமை, பொருளாதாரம் பற்றி குழந்தைகளுக்கு உணர்த்துவது நல்லது.



IVA Para Medical Campus

# பெண்ணின் சுதந்திரம்

பெண்களின் கண்ணீர் பலவீனமா!!!

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்குமாடு அல்ல மற்றையவை. (400)

விளக்கம்: "அழிவில்லாத சிறந்த செல்வம்" என்பது கல்விச் செல்வமே; மற்றைய பொன் பொருள் மண் என்னும் செல்வங்கள் ஒருவனுக்குச் சிறந்த செல்வம் ஆகா.

பெண்களின் முன்னேற்றத்தை தடுக்கும் மிகப்பெரிய ஆயுத்தமாக வறுமை இருந்தது. பெண் குழந்தைகளை படிக்க வைத்தால் கல்யாண வாழ்வில் அவளுக்கு ஏற்ற துணை தேடுவது சவாலாக இருக்கும் என்று நம்பினர். கால மாற்றம் அரசு, பல தனியார் நிறுவனங்கள் பெண்களுக்கு ஊக்குவிப்பு அளித்தப் போது வறுமை, இயலாமை என்பவற்றை தாண்டி குடும்பத்தின் தடை அல்லது குடும்பத்தை மீறி செயற்பட முடியாத மனநிலை பெண்களுக்கு சவாலாக வந்தமர்ந்தது.

குடும்பத்தை அனுசரித்து வாழும் கட்டாயத்தில் பெண்கள் இருப்பதால் பெண்கள் முடக்கப் பட்டார்கள், முடக்கப் படுகிறார்கள் அல்லது முடங்கிக் கொள்கிறார்கள். காரணம் குடும்பத்தை மீறி செயற்பட ஆரம்பிக்கும் போது சமூகப் பாதுகாப்பு என்பது பெண்களுக்கு கேள்விக் குறியாகிறது.

குடும்பத்தை மீறி செயற்படும் பெண் நடத்தையில் தவறானவளாக, தான் தோன்றித் தனமாக செயற்படுபவளாக பார்க்கும் சமூகம் அவளை ஏதோ ஒருவகையில் பயன் படுத்திக் கொள்ள முயல்கிறது.இதனால் பெண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுதல் ஏற்பட குடும்பம் என்கிற அச்சாணி அவசியம் அதை மீறி செயற்பட முடியாது என்கிற விதை தூவப்பட்ட சமூகத்தில் பெண்கள் வாழவேண்டிய அவலம் உருவாகியுள்ளது.

பல வீடுகளில் அக்கறை என்ற பெயரில் பல பெண்களின் கனவுகள் சிதைக்கப் படுகின்றன.

யாரோ விமர்சிக்கும் விமர்சனத்திற்குப் பயந்து பலமான தடைகள் எழுப்ப படுகின்றன. யார் என்ன சொன்னால் என்ன என் பிள்ளையைப் பற்றி எனக்கு தெரியும் என்று பேசுகின்ற குடும்பங்கள் வெகும் குறைவு.

சில பெண்கள் அன்பு என்கிற வரையறைக்குள் தங்களைத் திணித்து தாங்களாகவே விளக்கில் விழும் விட்டில் பூச்சிகளாய் தங்கள் திறமைக்கு தடையிட்டு முற்றுப்புள்ளி வைத்துக் கொள்ளுகின்றனர்.அதிகமான வேளைகளில் தங்களின் திறமைகள் முடக்கப் பட்டு வெறுமனாய் நடமாடும் நிலையை உணராதவர்களாக பெண்கள் பயணிப்பது மிகக் கொடுமையே!

சாதனையாளர்களாக இன்று இந்தச் சமூகத்தில் உலாவும் பெண்கள் பலரும் பிடிவாதமாய் தங்களை வளர்த்துக் கொண்டவர்களாவே இருக்கிறார்கள்.காரணம் அவர்களின் பயணத்தை முதலில் எதிர்ப்பது , தடுப்பது முட்டுக்கட்டை இடுவது அவளின் குடும்பமாகத்தான் இருக்கும். அல்லது அவளுக்கு வேண்டிய நபராக இருக்கும்.

'பாதுகாப்பு, பாதுகாப்பு' என்று சொல்லிச் சொல்லியே இந்தச் சமுதாயம் கொடுக்கும் அக்கறை ஒவ்வொரு விதமான தடையைக் கொடுக்கிறது வேதனையே!பாதுகாப்பு என்பது பெண்ணின் திறமைகளைத் தூண்டு திரியாக இருந்து ஒளிர வைக்க வேண்டுமல்லவா!இங்கு ஒளிரும் அவளை அணைத்து இருட்டுக்குள் வைக்கவே பலரும் முயலுகின்றனர். இதில் எங்கு பெண் சுதந்திரம் உள்ளது.



பெண் சுதந்திரம் பெறுவதற்கான முதல் படி.பெண் பலவீனமானவள் என்கிற மூடநம்பிக்கையே! முதலில் சமூகத்தில் இருந்து அகற்ற வேண்டியது இதுவாகும்.பிள்ளைப்பேற்றில் உயிருக்கே உத்தரவாதமில்லாத அளவுக்கு அச்சம் காட்டும் வலியைக் தாங்கிக் கடப்பவள் பெண்.தன் குழந்தையின் முகத்தைப் பார்த்த நொடியில் அத்தனை வலியையும் மறந்து புன்னகைக்கும் அவளின் வலிமை எதற்கு நிகர்?இந்த வலிமை யாருக்கு உலகில் இருக்கிறது.பெண்களின் கண்ணீர் பலவீனம் என்று சொல்லுவதற்கான காரணம் என்ன! ஆண்களின் கண்ணீரை பாசத்தின் வெளிப்பாடாக நினைக்கும் இந்த சமூகம் பெண்ணின் கண்ணீரை மட்டும் பலவீனம் என்கிறது.

அவளின் மனவலியைக் குறைக்கும் வழியாக ஏன் நினைக்க கூடாது! பெண் என்றால் பலவீனம் என்று கட்டமைத்தது இந்தச் சமூகம்தானே! எப்போது இதில் மாற்றம் வரும்?

பெண்களின் சுதந்திரம் அவர்களின் கல்வியில் தங்கியுள்ளது. கல்வியில் முன்னேறிச் செல்லும் இன்றையப் பெண்களும் கூட திருமணம் என்கிற வட்டத்திற்குள் செல்லும் போது ஏனோ முற்றுப் புள்ளி வைத்து ஒதுங்கி விடுகிறார்கள் சோகமே.காரணம் குடும்பம் நடத்த படித்த பெண் வேண்டும். குடும்பத்தை நடத்த படித்த பெண்ணால் மட்டுமே முடியும் என்றால் அது முட்டாள் எண்ணம்.நிர்வாகத் திறமை என்பது பெண்களுக்குள்ளே இருக்கின்ற ஓர் உந்து சக்தி.அவளால் இலகுவாக நிர்வாகம் செய்ய முடியும். பண்டைய காலங்களில் ஆண் வெளியில் சென்று உழைத்து வர படிதாண்டாப் பல பெண்கள் குடும்பத்தை சிறப்பாக நிர்வாகம் செய்து ஆணின் வெற்றிக்குப் பின்னே நின்றார்கள். எனவே குடும்பநிர்வாகம் சிறப்பாய் நடக்க கற்றப் பெண்களை முடக்கி வைக்காதீர்கள்.அவர்களில் கல்வி பலருக்கு பயன் தரட்டும்.

எனக்கு தெரிந்தப் பெண் ஒருத்தி வறுமையிலும் கற்று நல்ல பெறுபேறுடன் அரசின் புலமைப்பரிசைப் பெற்று பட்டதாரியாக வெளியே வருகிறாள்.பின் தன் பல்கலைகழக நண்பனை திருமணம் செய்து இல்லத்தரசியாக மாறி விட்டாள்.இவளின் கல்வி நோக்கம் என்ன. அங்கு யாரோ ஒரு ஏழைக்கு பயனுள்ள வகையில் செல்ல வேண்டிய புலமைபரீட்சை தொகை வீணாக்கப் பட்டுள்ளது என்பது கொடுமை. இதற்கு யார் பொறுப்பு.இல்லத்தரசி என்கிற பட்டம் சிறப்புதான். ஆனால் அதற்காக தன்னை, தன் கல்வியை, சுயமரியாதையை அடகு வைத்து வாழ்தல் அவள் கற்றும் அறிவு இல்லாதவள் என்றே நினைக்க தோன்றுகிறது.

திறமையான பெண்கள் சமூகத்தில் உலா வர அவர்களை சுற்றியுள்ள நபர்களோ அல்லது தனி நபரோ சுதந்திரம் கொடுக்கும் மாற்றம் வரவேண்டும்.

மாற்றம் வருமா!ஆண்களுக்கு நிகராக ஆடைகளில் மட்டுமல்ல எல்லாத் துறைகளிலும் பெண்களின் ஊடுருவல் அதிகரித்து சமூகத்தில் மாற்றம் காணும் நாள் எப்போது??? அவள் சுயசிந்தனையுடன் சுயமாக வாழ்வது எப்போது???சிந்திப்போம்!!!



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் 11 ஆவது வருடப் புலமைப் பரிசில் வழங்கும் விழா!



















*(பேருவளை : பீ.எம் முக்தார்)*

தினகரன், தினகரன் வார மஞ்சரி மற்றும் பேருவளை நியூஸ் ஊடக வலையமைப்பின் ஊடக அனுசரணையில் வெகுசிறப்பாக நடைபெற்ற பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் ,குறைந்த வருமானம் பெறும் திறமையான மாணவர்களுக்கான 11 ஆவது வருட புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை (21) பேருவளை , மஹறகொட ஐ.எல்.எம் சம்சுதீன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்வி நிலையத்தின் தவிசாளர் எம்.ஜே.எம் நிஸாமின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக ஓமான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அஹமத் பின் அலி பின் சயீத் அலி ராஷிதி மற்றும் பலஸ்தீன நாட்டின் இலங்கைக்கான பதில் தூதுவர் ஹிஷாம் அபூதாஹாவும் கலந்துகொண்டனர்.

அப்ரார் கல்வி நிலையத்தின் போசகரும், பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் கலந்துகொண்ட இந்நிகழ்வின் விசேட பேச்சாளராக ஸம் ஸம் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி முஹம்மத் ஹிஷாம் கலந்துகொண்டு விசேடஉரையாற்றினார்.

தனது விசேட உரையில் , மாணவ மாணவிகளுக்கான அறிவுபூர்வமான ஆலோசனைகளை முன்வைத்தார். தமிழ் மற்றும் சிங்கள மொழியில் தனது கருத்துகளை முன்வைத்துக் கூறியபோது, இன்று வசதி குறைந்த நிலையில் உங்கள் திறமை ஆற்றல்களை வெளிப்படுத்தி உயர்தரம் கற்க தகுதி பெற்றுள்ளீர்கள். படிப்பைத் தொடர உங்களுக்கு இன்று புலமைப் பரிசில் தரப்படுகிறது. இதன் மூலம் கல்வித்துறையில் மேலும் உயர்வடைய உங்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதேபோன்று படித்து வசதி வாய்ப்பு ஏற்படும் நிலையில் உங்களாலும் படித்து முன்வருவோருக்கு இதேபோன்று உதவவும் முடியுமாகின்றது. மூன்றாவதாக சமூக வளர்ச்சி மேம்பாடுகளுக்காக உங்களால் சாதனைகள் நிலைநாட்டி வரலாறு படைக்கவும் இயலுமாகிறது. இதற்காக இன்றே இலட்சியம் பூணுங்கள் அதற்காக நிய்யத் வையுங்கள் என்றார்.

மஹறகொட ஸாவியாவின் பிரதான இமாம் முஹம்மத் அலியினால் பலஸ்தீன தேசத்திற்காக உருக்கமான பிராத்தனை நிகழ்வொன்றும் இங்கு நடைபெற்றதோடு, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பலீல் சார்பாக அவரது மகன் ராசிக் மர்ஜான் பலீல் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

பேருவளை மஹறகொட ஐ.எல்.எம் சம்சுதீன் வித்தியாலய மற்றும் மஹறகொட அஹதியா மாணவர்களின் அழகிய கலாசார நிகழ்வுகளும் அரங்கேறிய இந்நிகழ்வில் பேருவளை முன்னாள் நகர பிதா அல்ஹாஜ் மாசாஹிம் முஹம்மத் ,முன்னாள் உப நகர பிதா அல்ஹாஜ் ஹஸன் பாஸி , அப்ரார் கல்வி நிலையத்தின் செயலாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ் ஹரி) ,பொருளாளர் அல்ஹாஜ் ஹலீம் ஏ.அஸீஸ் ,ஐ.எல்.எம் சம்சுதீன் வித்தியாலய அதிபர் திருமதி சிஹானா ,பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியர் தேசியப் பாடசாலை அதிபர் எஸ். ஏ குமார் மற்றும் இன்னும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில்,பேருவளையின் தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பாடசாலைகளில் ,தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் திறமையான சுமார் 70 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் வழங்கிவைக்கப்படதோடு, அப்ரார் கல்வி நிலையத்தின் முன்னாள் செயலாளர் இக்பால் சம்சுதீன் அவர்களால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் அப்ரார் கல்வி நிலைய அங்கத்தவர்கள், பாடசாலை மாணவ மாணவிகள்,பெற்றோர்கள் ,கல்வி நலன் விரும்பிகள்,ஊடகவியலாளர்கள், உலமாக்கள் மற்றும் இன்னும் பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா துறையில் ஈடுபட இளைஞர்களுக்கு அழைப்பு



நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்த இளைஞர் யுவதிகள் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையினூடாகவும் தங்கள் தொழில் பாதையை ஸ்திரப்படுத்த முடியும் என்று மலேசியா முகாமைத்துவ விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளர் ஏ.எம். ஷஹான் தெரிவித்தார். சாய்ந்தமருதை பிறப்பிடமாகக் கொண்ட இவர் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையில் விஷேட பட்டம் பெற்றவராவார். சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையை இளைஞர் – யுவதிகள் தெரிவு செய்து கற்பதனூடாக நாட்டுக்கு அந்நிய செலாவாணியை பெற்றுக்கொடுக்கும் அதேவேளை தனிப்பட்ட முறையிலும் இலகுவில் தொழில்களை பெற முடியும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஷஹான், உலக நாடுகளின் பொருளாதார முதுகெலும்புகளில் ஒன்றான சுற்றுலாத்துறை என்பது உலகம் முழுவதும் பல இலட்சக்கணக்கான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, பொருளாதாரத்தை வளப்படுத்துவதில் முதன்மையான துறையாகும். அந்தவகையில் இத்துறையினூடாக உலக நாடுகள் ஒவ்வொன்றும் தங்களது நாடுகளில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாத்து அவற்றை உரிய முறையில் பேணி அழகுபடுத்தி உலக சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருமானத்தை ஈட்டுகின்றன. அதுமட்டுமன்றி செயற்கையாகவும் பல வேலைத் திட்டங்களை அமுல்படுத்தி தங்களது நாட்டிற்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளை உள்ளீர்ப்பதில் வெற்றியும் கண்டுள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக நோக்குவோமாயின் அண்மையில் பாலைவன பூமியை அதிகமாகக் கொண்ட நாடுகளும் கூட சுற்றுலாத்துறையை வளப்படுத்துவதற்கான பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதை நாம் காண்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளினூடாக ஒவ்வொரு நாட்டினதும் எதிர்ப்பார்ப்பு என்னவென்றால் சுற்றுலாத்துறையினூடாக தங்களது நாட்டின் அன்னியச் செலாவணியை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்துவதற்காகும். அண்மையில் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்த எமது தாய் நாடான இலங்கையும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கையாண்ட முதல் யுக்தி சுற்றுலாத்துறையை மேம்படுத்தி அதனூடாக அன்னியச் செலாவணியை அதிகரிக்கச் செய்வதையேயாகும். அதற்கான பல வழிமுறைகளை மேற்கொண்டு தற்போது அதில் வெற்றியும் பெற்றுள்ளதை கண்கூடாக காணலாம். அந்தவகையில் இலங்கை அரசு, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையினூடாக பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டு எமது நாட்டில் பாரியதொரு தொழில் புரட்சியை உருவாக்கியுள்ளது. அதன் வெளிப்பாடாக இன்று உள்நாட்டில் பல லட்சம் தொழில் வாய்ப்பபுக்கள் கொட்டிக் கிடக்கின்ற துறையாக மட்டுமன்றி உலகளாவிய நாடுகளிலும் பல லட்சம் தொழில் வாய்ப்புக்களைக் குறுகிய காலத்திற்குள் பெற்றுத்தருகின்றன.

அதற்கமைய எமது நாட்டில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்துறை சார்ந்த தொழிற் கல்வி அமைப்புக்கள் அபிவிருத்தியடைந்துள்ளதை நாம் காண்கின்றோம். பல பயிற்றுவிப்பு தனியார் நிறுவனங்களின் செல்வாக்கு நாடு முழுவதிலும் பரவிக் காணப்படுகின்றன. அந்தவகையில் நாங்களும் எமது அரச தனியார் கல்வி நிறுவனத்தினூடாக பல இளைஞர் யுவதிகளை தொழிற் பயிற்சி வழங்கி உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்த அனுபவத்தினால் இவ்வரிய வாய்ப்புக்களை தங்களுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

இத்துறையினூடாக இத்தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டு குறுகிய காலத்தில் உங்கள் பொருளாதார அபிவிருத்தியை அதிகரித்து கொள்ளுங்கள். முக்கியமாக உலகளாவிய நாடுகளில் தொழில்பற்றாக்குறை அற்ற துறையாகவும் இது காணப்படுகின்றது.

எனவே பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தக் கூடிய மிகச் சிறந்த துறையான சுற்றுலாத்துறையை வளப்படுத்துவதோடு எமது பிராந்திய இளைஞர் யுவதிகள் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை சார்ந்த கல்வியை கற்று உங்களது வாழ்வை ஒளிமயமாக்குங்கள். அத்தோடு எமது தாய் நாட்டை உலகநாடுகளுக்கிடையில் தலைசிறந்த சுற்றுலாத்தளமாக மாற்றி தாய் நாட்டிற்கு பெருமை சேர்க்கும் நற்பிரஜையாக நாம் மாறுவோம் என்றும் ‘சிறந்த பாதையில் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம்’ என்றும் தெரிவித்தார்.

அம்பாறை மத்திய தினகரன் நிருபர்- ...✍

# சந்தக் கவிமணி அமீர் அலி தலைமையில் வகவக் கவியரங்கு

சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி தலைமையில் இடம் பெற்ற 102 ஆவது வகவக் கவியரங்கு வலம்புரி கவிதா வட்டம் தனது 102 ஆவது கவியரங்கினை வழமைப் போலவே சென்ற போயா தினம் காலை கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடாத்தியது.

வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். பொருளாளர் ஈழகணேஷ் வரவேற்புரையையும், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நன்றியுரையையும் வழங்கினர்.

எம்மை விட்டும் மூத்த இலக்கியவாதியான கவிஞர் எஸ். முத்துமீரான், கவிஞரும், பாடசாலை அதிபருமான இஸ்மத் பாத்திமா ஆகியோருக்கான பிரார்த்தனையும் இடம்பெற்றது.

சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி தலைமையில் விறுவிறுப்பாக நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் ஏ. சிவகுமார், எஹலியகொட முஸ்னி முர்ஷித், எஸ். தனபாலன், எஸ். யூ. கமர்ஜான் பீபி, வாழைத்தோட்டம் எம். வஸீர், எம்.ஏ. ரஹீமா, இ. கலைநிலா, பிறைக்கவி முஸம்மில், இறைஞானக்கவி ரமீஸ், கம்மல்துறை இக்பால், மலாய்கவி டிவாங்ஸோ, எம்.எஸ். அப்துல் லதீப், எஸ். அருணன், ரவூப் ஹஸீர், ந. தாமரைச் செல்வி, கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், அருந்தவம் அருணா, பரீஹா பாரூக் இம்தியாஸ், சிந்தனைப்பிரியன் முஸம்மில், ஆர். தங்கமணி, ஏ.கே. இளங்கோ, வெளிமடை ஜஹாங்கீர், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் ஆகியோர் கவிதை பாடினர். வலம்புரி கவிதா வட்டத்திற்கான புதிய "பெனர்"ருக்கான அனுசரணையை கவிஞரும், பொறியியலாளருமான நியாஸ் ஏ. சமத் வழங்கியிருந்தார். கவிஞரும் ஓவியருமான ராஜா நித்திலன் அதனை வடிவமைத்திருந்தார்.

எதிர்காலத்தில் வகவம் கவிதைபற்றிய உரையாடல் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு எண்ணியிருக்கிறது. அதனை தனது நூறாவது கவியரங்க விழாவிலே வெளியிட்ட "வகவக் கவிதைகள்" நூலின் நயவுரை நிகழ்வுடன் ஆரம்பிக்கவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

எம்.சி. முஹம்மத் அலி, எம். தியாகராஜா, தில்லைராஜன், அமல் பாண்டி, எம். எச்.எம். நசீர், சு. ஜெகதீஸ்வரன், நூருல் அயின் ஹுசைன், எம்.பீ.எம். சித்தீக், எம்.எம். நவாஸ்தீன், கவிதா இளங்கோ, தமிழ் இளங்கோ, நுஷ்ரத் அலி, டி.ஜே. கௌதம் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.



படங்கள் – முஹம்மத் நசார்

# அறபா பழைய மாணவர் குழுக்களிடையிலான கிரிக்கெட் போட்டி




வெலிகம அறபா தேசிய பாடசாலை தென்பகுதியிலுள்ள பழைமையான பாடசாலைகளில் ஒன்று. கல்வி,கலை. இலக்கியம்,விளையாட்டு என பல்வேறு துறைகளிலும் காலம் காலமாக சாதனை படைத்து வந்த இப்பாடசாலை 135 வருடத்தில் கால்பதித்துள்ளது. இதனை கொண்டாடும் வகையிலும் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளை முன்னேற்றும் நோக்கத்துடனும் அண்மையில் பழைய மாணவர்குழுக்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கடின பந்து கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கு நிதி திரட்டுவதும் இதன் நோக்கமாக இருந்தது.

பாடசாலை நிர்வாகமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகள் பல மாதங்களுக்கு முன்பிருந்தே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் மந்தமான நிலை காணப்பட்டாலும் போட்டி நெருக்குகையில் பழைய மாணவர் குழுக்களிடையே அதிக ஆர்வமும் உத்வேகமும் ஏற்பட்டிருந்தது.

வெலிகம நகரம் கடந்த 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் விழாக்கோலம் பூண்டிருந்தது என்றால் மிகையல்ல. 20 ஆம் திகதி காலையில் பாரிய வாகன பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு அணி வீரர்களும் ஒரே மாதிரியான ரீ சேர்ட் அணிந்து திறந்த வாகனங்களிலும் கார்,லொறி,மோட்டார் சைக்கிள் என பல்வேறு வாகனங்களில் ஊர்வலத்தில் இணைந்து கொண்டனர். அறபா அன்னையின் பெயரை கோசமிட்டவாறு கோலகலமாகமாக இந்த பேரணி இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து போட்டிகள் அறபா மைதானத்தில் ஆரம்பமாகின. முதல்நாள் பகலிரவு ஆட்டமாக நள்ளிரவு வரை விறுவிறுப்பான அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெற்றன. இதில் 32 அணிகள் பங்கேற்றன. சிரேஷ்ட பிரிவில் 1978 ஆம் ஆண்டு அணியே வயது கூடிய அணியாக விளையாடியது. கனிஷ்ட பிரிவில் 2020 ஆம் ஆண்டு அணி பங்குபற்றியது.

இரண்டாவது நாளும் போட்டிகள் தொடர்ந்ததோடு பெருந்திரளான ஊர்மக்களும் விளையாட்டு ரசிகர்களும் மைதானத்தில் நிறைந்திருந்தனர்.

கனிஷ்ட பிரிவில் 2013 மற்றும் 2002 அணிகள் மோதியதோடு இதில் 2013 அணி வெற்றி பெற்று சம்பியானது. சிரேஷ்ட பிரிவில் 1995 ஆம் ஆண்டு அணியும்1992 அணியும் மோதின. இதில் 1995 ஆம் ஆண்டு அணி சம்பியனானது.

பரிசளிப்பு விழாவில் நீர்ப்பாசன நீர்வழங்கல் சபை முன்னாள் பிரதிப் பொது முகாமையாளர் அஸ்லஹ் கலந்து கொண்டதோடு கௌரவ அதிதிகளாக டிரான்ஸ் மோபைல் உரிமையாளர் முகர்ரம் மற்றும் டிரை லங்கா உரிமையாளர் அர்ஹம் ஆகியோர் பங்கேற்றனர். அது தவிர ஒவ்வொரு அணிகள் சார்பிலும் ஒரு பிரதிநிதி இந்த இறுதி நிகழ்வில் பங்கேற்றனர்.





வெற்றி தோல்வி எதுவாக இருந்தாலும் அனைத்து பழைய மாணவர் அணிகளுக்கும் நீங்காத நினைவுகளை அள்ளித் தரும் வகையில் இந்த இருநாள் போட்டிகளும் அமைந்திருந்தன. அனைத்து அணிகளுக்கும் இது வருடாந்த ஒன்றுகூடலைப் போன்று அமைந்திருந்தன.

# 1991 Batch ஏற்பாட்டில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் செயலமர்வு



பழைய மாணவர் குழுக்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி மற்றும் 1991 பழைய மாணவர் குழுவின் வருடாந்த ஒன்று கூடல் என்பவற்றுடன் இணைந்தாக இரண்டாவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு கருந்தரங்கு அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ரி.எம். முதஹ்ஹர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

1991 பழைய மாணவர் குழு இதனை ஏற்பாடு செய்திருந்தது. அறபாவின் பழைய மாணவர்களான டொக்டர் இம்தியாஸ் மற்றம் டொக்டர் ஸிஹான் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.தரம் 10,11,12 மாணவர்கள் இதில் பங்கேற்றதோடு 1991 பழைய மாணவர் குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

'நினைவாற்றல் நுட்பங்களும் கருவிகளும்' என்ற தலைப்பில் டொக்டர் ஸிஹான் விளக்கம் அளித்ததோடு 'கண்பார்வைக் குறைபாடுகளும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் டொக்டர் இம்தியாஸ் விரிவுரையாற்றினார்.

மாணவர்களிடம் கேள்வி எழுப்பப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டதோடு *Back to school* பாடசாலை அபிவிருத்திக்காக 1991 மாணவர் குழுவினால் ஒரு தொகை நிதி உதவியும் அளிக்கப்பட்டது.







தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com
Whatsap: 0714901181

# பிரிவின் துயர்...



ஈழத்து முஸ்லிம் பெண் ஆளுமைகளுள் குறிப்பிடும்படியான மற்றொரு இலக்கிய நட்சத்திரம் உதிர்ந்திருக்கிறது.இஸ்மத் பாத்திமா என் எழுத்துப் புலத்தில் நன்கு அறியப்பட்ட இந்த நட்சத்திரத்தின் ஒளிர்வு திடீரென்று மழுங்கிவிட்டது.கல்விப்புலத்தில் ஆங்கில ஆசிரியையாகத் தன் போதனா மொழியைக் கூர்மைப்படுத்திய இஸ்மத் பாத்திமா ஆசிரிய ஆலோசகராக, வளவாளராக, மொழிபெயர்ப்பாளராக, வளர்ந்து இலங்கை அதிபர் சேவைக்குள் நுழைந்து பாடசாலைக் களத்தைத் தன் கூர்மையான தலைமைத்துப் பண்புகளால் அலங்கரித்தவர்.கலை, இலக்கியத் தளத்தில் நின்றிலங்கிய இஸ்மத் பாத்திமாவின் எழுத்து அறுவடைகளாக 'இரண்டும் ஒன்று '(2018),'புதையல் தேடி'(2020) கவிதைப் பனுவல்கள் கனதியாகி நிற்கின்றன. இலக்கியம் பேச வல்ல இனியவரிவர். வானொலிக்கவியரங்குகளை தன் இனிய கவிதைக்குரலால் நிரப்பும் செய்தவர்.

எல்லோரோடும் பழக வல்ல இளையதலைமுறைக்காரியாக கவிதையில் வளர்ந்த இஸ்மத் பாத்திமாவை கடந்தவாரம் இறைவன் அழைத்துக் கொண்டு செய்தி கல்வி மற்றும் இலக்கியம் சார்ந்த பலரின் இதயங்களையும் கனக்கச் செய்திருக்கிறது என்பதனை முகநூல் பக்கம் உணர்த்திற்று. இஸ்மத் பாத்திமாவை எல்லாம் வல்ல இறைவன் பொருந்திக் கொள்வானாக.

*இஸ்மத் பாத்திமா*

# மிக அருகிலிருக்கும் இருமொழிகளின் வெகுதூரம்




இலங்கையில் மிக அருகிலிருக்கும்தமிழ்சிங்களம் இரண்டினதும் இணைவேதேசத்தின் பண்பாட்டு எழுச்சியின்பெறுமானம்எனலாம்.

சிங்களமும், தமிழும்அரசமொழிகளாயினும், இரண்டினையும் லாவகமாக பயன்படுத்தும்சாரார் உள்ளனரெனினும், இருமொழி வழி மொழிபெயர்ப்பு முறை காணப்படுகிறதெனினும், இலக்கியம்என்கிறபரப்பில் தமிழிலிருந்து சிங்களத்திற்கும், சிங்களத்திலிருந்து தமிழுக்கும்காத்திரமான அல்லது முழுமையறாத பெயர்ப்பு இடம் பெற்றுள்ளதாஎன்கிறபெருங்கேள்வி உள்ளது.

இருமொழிமாற்றாளர்களாக குறிப்பிட்ட சிலவளவாளர்கள் உள்ளநிலையில் இப்பெரு முயற்சியின் மந்தகதியை அல்லது மாற்று மனோபாவத்தை உணரமுடிகிறது.

இலங்கையில் சிங்கள இலக்கியம் இன்று மிகஉயர்ச்சியாக எல்லாபுனைவுகளிலும் வளர்ந்திருக்கிறது.

இந்தவளர் இலக்கியப்பனுவல்களைத் தமிழ் வாசகர்வாசிக்கும் வாய்ப்பும், அதேபோல் தமிழின் புரதானம் முதலான நவீன பின்நவீன புனைவுகள் யாவற்றையும் சிங்கள மொழி வாசிப்பாளர்கள்கண்டடையும் சந்தர்ப்பமும் சமமாக உள்ளதா அல்லதுமுழுமை நிலையில் உள்ளதா என்கிற கேள்வியும் திரையாக உள்ளது.

இந்தத்திரை அல்லது இடைவெளி இலங்கையி இருமொழி இலக்கியங்களி புரிதலில் இடைவெளியையே ஏற்படுத்தும். இன்னொரு புறம்வாசகர் மனோபாவம் அல்லது தமிழிலக்கியங்களை சிங்களவாசகரும், சிங்களமொழி இலக்கியங்களைத் தமிழ்மொழிவாசகரும் எவ்வாறு புரிகிறார்கள் என்கிறகருத்தாடல் இல்லாத அல்லது குறைவாக உள்ள சூழலும் இரு அயல்மொழிகளையும் தூரப்படுத்துவதாக உள்ளது.

இந்த இடைவெளி என்பது சமூக, அரசியல், கலாசார, மனப்பாங்குகளால் மட்டுமன்றி இருமொழியியி ஆழம்நிறைந்த மொழிபெயர்ப்பாளர்களின் இல்லாமையையும் அல்லது மிகக்குறைவாக உள்ளநிலைமையையும்சுட்டுகிறது.

இரு அயல்மொழி இலக்கியங்களையும் இற்றைப்படுத்தப்பட்டவகையில் அருகருக்காகுதல் காலத்தின் தேவைமட்டுமல்ல இலங்கை இலக்கிய முழுமைப்படுத்தினர் முக்கிய அம்சமுமாகும்.

இதுகுறித்துசிந்திப்பவர்கள்யாருளர்?




# கல்முனைக்குடி நாட்களை நினைவுறும் மு.நி.காரியப்பர்




தமிழ்க்கவிதைநீண்டநெடியவரலாற்று நீரோட்டம்தான். அந்தநதியோட்டத்தில்புதிதுபுதிதாய்கவிதைகளும்கவிதையாளர்களும்கலந்துவிடுகிறார்கள்.

கவிதை நதியோட்டம் கண்டு வந்திருக்கிற பாய்ச்சல் அழகானது; அற்புதமானது; வாசகரை வசீகரிக்கத்தக்கது.

இந்த அழகியலில் அந்த கல்முனைக்குடி நாட்களும் சேர்கிறது. நிசாம் காரியப்பரென இலங்கைச்சட்டத்துறையில் அறியப்பட்ட முஸ்லிம் காங்கிரஸில் பரிச்சயமான பெயர் இப்போது கவிதைக்குள் கல்முனைக்குடி நாட்களூடாகச் சேர்ந்திருக்கிறது.

சாய்ந்தமருது றோயல் பப்ளிகேஷன் வெளியிட்டிருக்கும் இப்பனுவலின்வெளியீட்டு நிகழ்வுகடந்தவாரம் BMICH லோட்டஸ் அரங்கில் நிகழ்வுற்றது. கவிதையாளர்களைக் காட்டிலும் பிரமுகர்கள் அதிகம்வந்திருந்த நிகழ்வும் அழகானதாக இருந்தது.

எச்.ஏ.அஸீஸ், பேராசிரியர்ரமீஸ்அப்துல்லாஹ், சோலைக்கிளி, மு.கா தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றும் நூலாசிரியர் நிசாம் காரியப்பர் ஆகியோர் உரைகளால் நிகழ்வு வடிவமைந்தது.

நூலை ஆதாரம் காட்டிப்பேசும்போது புரட்டிப்பார்க்கும் வகையில் அவையில்பிரசன்னமாகியிருந்த அனைவர்கைகளுக்கும் இலவசமாக நூல் வழங்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமே. சட்டத்தரணி நிசாம் காரியப்பர் கல்வி மொழியாகச் சிங்களத்தைக்கொண்டவர், தாய்மொழி தமிழில்கவிஞராகியிருக்கிறார்.

நீண்டகாலத்திற்குப்பின்புகவிதைநீரோட்டத்தில்கலப்பதறற்குஅவரதுநினைவோட்டம்நெஞ்சுக்குள்ஊறிக்கிடந்துமொழியின்உருவமெடுத்துள்ளது.

'யாதும் புரிதல் புரிதல் அல்ல புரியாத துயாதென புரிதலேபுரிதல்' என என் குறள் பேசும் கவிஞர் கவிதைகளைப் புரியும்படி இலகுபாணியில் எழுதியிருக்கிறார்.

நிசாம்காரியப்பர் ஒருகுறுக்குவெட்டு முகமென தலைப்பிட்டு விரிவெழுதுகிறார் எச்.ஏ.அஸீஸ். அவரது அவரைப்பேச்சும் வெகுவுரையாய் அமைந்தது. நிசாம்கவிதை நீரோட்டத்தில் கலந்தவாறு குறித்து இவ்வுரையில் அறியலாம்.

தத்துவத்தின்கவிஅழகுகுறித்துபேராசிரியர்ரமீஸ் அப்துல்லாஹ் அழகு பட எழுதுகிறார். அவரது அரங்க உரையும் முதிர்ச்சியாயிருந்தது. நிசாம்காரியப்பர் கவிதையில் தத்துவச்சாயல் பெருகுவதை இனங்கண்டுரையாற்றினார். மன்சூர் ஏகாதர்பின்னட்டைக் குறிப்பில் அறிமுகம் எழுதுகிறார். சோலைக் கிளி தனக்கேயான பாணியில் கவிதை நூல் குறித்து எழுதி வந்த கட்டுரையை அதிக விளக்கங்களோடும், அனுபவ நயங்களோடும், ஊர்மொளியி அழகுததும்பக் கூறினார்.

நிசாம் காரியப்பர் கல்முனைக்குடி வானில் இன்னொரு அற்புதப்பறவையாக இணைகிறார். வானம் இவரையும் தாங்கும்.

அந்த மண் அற்புதப்பறவைகளாலானது. ஒன்றையொன்று கொத்தும் அந்தக் கொத்தலுக்குத் தாக்குப்பிடாக்கவல்ல கவியாக நிசாம் மேம்மேலெழுவதாக ரவூப் ஹக்கீம் உரை சுவாரஸ்யமாய் இருந்தது.

கவிதை நீரோட்டத்தில் கலந்துள்ள புதிய கவிஞனை இனி வாசகர் அவரது கவிதைகளால் தாகம் தணிக்கலாம் அல்லது பெருக்கலாம்.

உனக்குஒருகவிதை
மகனே...
உனக்குஒருகவிதைஎழுத
எம்மிடம்வரிகள்இல்லை
நீயே...
எமதுகவிதை
உதிரத்தால்படைத்த
அழகானகவிதைநீ
உனதுவெற்றியும்புகழும்
அதன்வரிகளாய்மலரட்டும்

*நன்றி:அந்தகல்முனைக்குடிநாட்கள்*

# ரூமியின் வைரங்கள்




இதயத்தினுள் இறைவன் இதயத்திலிருந்து இதயத்திற்கு வாசல் இருப்பதாகச் சொல்கிறார்கள் கதவினால் என்ன பயன் சுவர்கள் இல்லாத போது?

புதிய மொழி பேசு
உலகம் புத்துலகம் ஆகட்டும்
அறிவிற்கு விளங்காத
விஷயங்களைக்
கேட்பதற்கு அதற்கேயான
செவிகள் அருளப்பட்டுள்ளது
ஆன்மா பாலையில் கப்பல்
கட்டிய நூஹ்
நபியைப்போல்
அபத்தமாய்த் தெரிகின்ற
மாபெரும் திட்டமொன்றை
துவக்கு உன் சொற்களை
உயர்த்து உன் குரலை அல்ல
மலர்களை வளர்ப்பது
மழைதான் மின்னல் அல்ல
ஆயிரம் ஆசைகள்
வைத்திருந்தேன்
உன்னை அறியும்
ஒற்றை ஆசையில்
உருகி மறைந்தன எல்லாம்
கோவில்களில்
தேவாலயங்களில்
பள்ளிவாசல்களில்
தேடிப்பார்த்தேன்
இறுதியில் இறைவனைக்
கண்டு கொண்டேன்
இதயத்தின் உள்ளே
உன் முன்
ஒவ்வொரு பாதையும்
அடைபட்டுப் போனாலும்
அந்த ரகசிய நண்பன்
உனக்குக் காண்பிப்பான்
எந்தக் கண்களும்
பார்த்திராத ரகசியப்
பாதை ஒன்றை
ஓர்நாள் நீ என் இதயத்தை
முழுமையாய் ஆட்கொண்டு
யாழியினும் வலிதாக்குவாய்
உன் கண்ணிமைகளால்
என் இதயத்தில்
கவிதையொன்று
எழுதுவாய்....

எந்தக் கவிஞனின் பேனாவும் எழுத முடியாத கவிதை

*வைரங்கள் சுடரும்*

# ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்வை நடத்துபவர்களுக்கு சங்கவி பிலிம்ஸ், தினகரனின் கௌரவிப்பு



## பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில் குரல் தேர்வு இன்று










தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் கலைஞர், இலக்கியவாதி, சமூக சேவையாளர் என மாதாந்தம் ஒருவரை தேர்ந்தெடுத்து கௌரவித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த மாதம் இந்த கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மன்னாரிலுள்ள குளிரூட்டப்பட்ட நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாணத்தில் பாரிய செலவில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியை நடத்தி வருகின்ற தொழில் அதிபர்களான சிவதுஷியந்தன், S. பிரசன்னராஜ், வி. நிஷாந்தன் ஆகியோரும் பிரபல பாடகரும் இசையமைப்பாளரும் நுண்கலைமாணி பட்டதாரியுமான வெற்றி சிந்துஜனும் அவரது பாரியாரும் நுண்கலைமாணி பட்டதாரியுமான திருமதி வெற்றி சிந்துஜனும் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இவர்களை சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் கௌரவித்தார். வடமாகாண குரல் தேர்வில் அடுத்த குரல் தேர்வு இன்று பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

# டுபாய் அந்தரா கலைக் கல்லூரியின் மாபெரும் நடன நிகழ்வு





டுபாய் அந்தரா கலைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் தமது குருவான கலைக் கல்லூரியின் அதிபர் திருமதி விம்மி பகவதிஷ்வருடன் இலங்கை வந்து நடத்திய மாபெரும் நாட்டிய நடன நிகழ்ச்சி மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.